# குறவஞ்சி

1. பொய்யாமொழீசர் குறவஞ்சி
2. காங்கேயன் குறவஞ்சி
3. சிக்கல் நவநீதேசுவரர் குறவஞ்சி
4. மண்ணிப்படிக்கரை நீலகண்டர் குறவஞ்சி நாடகம்

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்
சென்னை-600 031

தமிழ்நாட்டு அரசின்
பழஞ்சுவடிப் பதிப்பு

# குறவஞ்சி

1. பொய்யாமொழியீசர் குறவஞ்சி

— தத்துவலிங்கன்

2. காங்கேயன் குறவஞ்சி

— பொன்மணி செல்லப்பன்

3. சிக்கல் நவநீதேசுவர சுவாமி குறவஞ்சி

— சொக்கலிங்கம் பிள்ளை

4. மண்ணிப்படிக்கரை
நீலகண்டர் குறவஞ்சி நாடகம்

— சாமிநாதய்யர்

பதிப்பாசிரியர்கள்

1. மு. அருணாசலம்

2-4 புலவர் இரா. இளங்குமரன்

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்
சென்னை

First Edition—1980
Number of Copies—1500
© Government of Tamilnadu

# KURAVANCHI

1. **Poyyamozhi Isar Kuravanchi**
2. **Gangeyan Kuravanchi**
3. **Sikkal Navaneetheswara Swami Kuravanchi**
4. **Mannippadikkarai Neelakantar Kuravanchi Natakam**

*Authors :*

1. Tattuvalingan
2. Ponmani Chellappan
3. Chockalingam Pillai
4. Swaminatha Iyer

**Price : Rs. 20/-**

Printed on 70 GSM imported Paper

Printed at Rex Printers, Madras-4.

# PREFACE

(Thiru **C. ARANGANAYAGAM**, Education Minister, Tamilnadu)

The Government of Tamilnadu, under a special scheme of publication of unpublished Tamil Manuscripts have come forward to undertake the printing and publishing of all the available unpublished Tamil Manuscripts in the State. Necessary funds towards the publication have been provided for the purpose. It is estimated that several huudred unpublished Tamil Manuscripts dealing with native medicines, mathematics, music, fine arts, and literary compositions of various nature, are lying unpublished in different Manuscript Libraries of this State and also in other parts of the country. Various Manuscript Libraries in the State, have been approached to make available their unpublished text for publication. The authorities of these Manuscript Libraries have come forward with interest and enthusiasm to afford necessary facilities for the same. Eminent Tamil Scholars, well-versed in the art of editing have been requested to take up the work of editing. Under the scheme the texts will be critically edited with suitable foot-notes and brief introductary analysis both in English and Tamil for the beniflt of researchers and scholars. The selection of manuscripts, copying and editing have been entrusted to the Tamilnadu State Department of Archaeology and the printing and publication of the text have been undertaken by the Tamilnadu Text-Book Society.

So far the texts of 75 manuscripts have been copied and a member of them edited and are made available in printed form in this series. Following the lead given by the Tamilnadu Government, other institutions are also coming forward to publish as many texts as possible. I am thankful to all the institutions and scholars who have come forward to join the Government in this venture. It is only a beginning and I do hope that all the available texts will be in the hands of scholars, educational institutions and public libraries, so that the contribution of the Tamils through the centuries in different fields will be available for the proper understanding and comprehension of the Tamil Language literature and Culture.

**C. ARANGANAYAGAM**

# அணிந்துரை

(திரு. **செ. அரங்கநாயகம்,** தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழ்நாட்டு அரசு இதுகாறும் அச்சில் வெளிவராத பழம் ஓலைச்சுவடிகளைப் பதிப்பித்து அச்சிட்டுப் பதிப்பிக்க ஒரு திட்டத்தை மேற்கொண்டுள்ளது. அதற்கு உரிய பண ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாட்டிலும், மற்றும் நாட்டின் பிற பகுதிகளிலும், பல்வேறு சுவடி நூலகங்களில் தமிழக மருத்துவம், கணக்கு, இசை, நாட்டியம், சிற்றிலக்கியங்கள், பேரிலக்கியங்கள் இன்ன பிற நூல்கள் அச்சிடாமல் இருப்பது கணக்கிடப் பட்டுள்ளது. நாட்டில் உள்ள பல்வேறு சுவடி நூலகங்களையும், அந் நிறுவனங்களில் உள்ள அச்சில் வராத நூல்களை அச்சிடும் பணிக்கு உதவுமாறு அரசு கேட்டுள்ளது. பல்வேறு நூலகத்தார்களும், தேவையான வசதிகளை அளிக்க மனமுவந்து முன் வந்துள்ளனர். தமிழ் துறையில் வல்லுநர்கள் இந்நூல்களை ஆராய்ச்சிக் குறிப்புடனும், முன்னுரையுடனும் பதிப்பித்துத்தர முன் வந்துள்ளனர். இந்த நூல்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் அடிக்குறிப்புகளுடன் வெளியிடப்படும். ஓலைச் சுவடிகளைத் தேர்ந்தெடுத்துப் படி எடுத்துப் பதிப்பிக்கும் பணியைத் தொல்பொருள் ஆய்வுத்துறையும், நூல்களை அச்சிட்டு வெளியிடும் பணியைத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனமும் மேற்கொண்டுள்ளன. இதுகாறும் 75 நூல்கள் படி எடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் பல அச்சாகி இந் நூல் வரிசையில் வெளி வருகின்றன. அரசின் இந்தப் பணியில் ஒத்துழைக்க முன் வந்துள்ள ஆராய்ச்சி வல்லுநர்களையும், தமிழ்ப் பெரியோர்களையும், சுவடி நூலகங்களையும் நான் வாழ்த்துகின்றேன். இது போன்று விரைவில் அச்சில் வராத அனைத்து நூல்களும் ஆராய்ச்சியாளர்களுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் மற்றும் பொது நூலகங்களுக்கும் கிடைக்கும் வகையில் வெளிவரும் என்பதில் ஐயம் இல்லை. இதன் பயனாய்க் காலந்தோறும் தமிழில் தோன்றிய பல்வேறு கருத்துக்களையும் பண்பாட்டையும், முழுமையாக அறிந்துகொள்ள இயலும் என்பதில் ஐயம் இல்லை.

**செ. அரங்கநாயகம்**

# INTRODUCTORY

The collection consists of four Kuravanchi dance dramas published for the first time. They include:

1. Poyyamozhi Isar Kuravanchi composed by Chidambaram Thattuvalingan (Manuscript D. 2338).

2. Gangeyan Kuravanchi by one Ponmani Chellappan (Manu. No. 751: A)

3. Navaneetheswaraswamy Kuravanchi by Chockalinga Pillai of Tiruvarur (Manu. No. 217)

4. Mannippadikkarai Neelakantar Kuravanchi Natakam by Swaminatha Iyer (Manu. No. 252).

The first work is edited by Thiru M. Arunachalam and the other three works by Pulavar R. Ilankumaran. All the four Kuravanchis are sung in praise of the presiding deities of the respective temples and are specially intended for enactment in the respective temples probably during festive occasions. The first one Poyyamozhi Isar Kuravanchi is from the manuscript preserved in the Government Oriental Manuscript Library, Madras and the other three are from the manuscripts collected and preserved in the Dr. U. V. Swaminatha Iyer Library, Madras. We are thankful to the authorities of the Government Oriental Manuscript Library and the Dr. U. V. Swaminatha Iyer Library for very kindly permitting us to publish these texts in the series and also we record our thanks to Thiru M. Arunachalam and Pulavar R. Ilankumaran for having taken great care in critically editing these texts. The importance of these collections will be evident from the fact that during the 18th and 19th centuries a number of such Kuravanchi works were composed by poets of no mean achievement and probably were enacted in the respective temples giving a great philip to music and dance. A point worthy of note is the importance given to kuravan and kuratti

in these compositions which have attracted the common masses to a great extent and attested to the popularity of the type of dance and drama. The collection is valuable for understanding the dance movement and also the creative field during 18th and 19th centuries. The general introduction to the Kuravanchi dance drama composition occurs in the first work, viz., Poyyamozhi Isar Kuravanchi.

**Dr. R. Nagaswamy,**
Director of Archeology Department.

# 1. பொய்யாமொழியீசர் குறவஞ்சி

தத்துவலிங்கன்

இயற்றிய

# பொய்யாமொழியீசர் குறவஞ்சி

[ ஆராய்ச்சி முன்னுரை
அருங்குறிப்புரை
முதலியவற்றுடன் ]

பதிப்பாசிரியர்

மு. அருணாசலம்

# INTRODUCTION

Minor poems, or what are called n Sanskrit **Laghu Kavya,** are known in the Tamil language as the **Prabandha** poems, The word **prabandham** simply means well constructed. The songs of the twelve Azhvars in Vaishnavism are known by the collective name of the **Divya-Prabandham,** the Divine Songs.

Prabandhams have been existing in the Tamil language from the Sangam Age. the first poem of the celebrated **Pattupattu,** The Ten Idylls, **Thiru Muruhatruppadai** is itself a prabandham and it belongs to the category, **Atrupadai,** The numbering of the prabhandhams as 96 is a later classification beginning from the 16th century. But grammatical traditions defining these prabandhams are available from the 11th century. The first such grammar is the **Panniru-pattiyal.** It mentions a **kurattip-pattu** but this is not **kuravanchi**.

**Kuravanchi** is a new type of dramatic poem or opera, where dance, music and drama have equal share. The term **kuravanchi** means a damsel of the Kuravar clan which is a kind of hunter-gipsy tribe, dwelling on the hills and occasionally roaming through the adjacent plains, hand-reading and sooth-saying to he love-sick women and obtaining handsome presents from them. The feature **kuram** had been one of the elements making up a **kalambakam** poem in the later centuries. Probably this feature, which was just one verse, developed into an elaborate poem having several verses known by the same name as **kuram**. This theme had been there in the ballad poetry on the Mahabharata stories but this seems to have taken a special form as a distinctive type of poem from the **Minakshi Ammai Kuram** of the 17th century (wrongly attributed to St. Kumaraguruparar of the middle of the century). This poem simply deals with the reading of the hand of a love-sick damsel by the kurathi and her promising damsel that the Lord of Madurai would bestow His love on her. This is a good poem written in the days of Thirumalai Nayak of Madurai. The character here is only one and that is the **kuratti**. There are also similar poems of a later day on St. Nammazhar and Vellaippillaiyar of Thanjavur.

The kuravanchi poem is much larger in scope and is more ambitious in construction. While the **kuram** is a sort of monologue, the **kuravanchi** is a regular opera, a musical drama, embracing all the elements of dance and music. The poem has a story as its core and there are five characters taking part in the story such as the heroine and her maid, the **kuratti**, her husband and his friend. Characters other than these five are rare.

The heroine and the **kuratti** are the central characters. The heroine sees the Lord of the local temple going in a procession along the streets during the temple festival and falls in love with Him. She confides her love to her maid, who brings in the **kuratti** to read her hand and console her. The **kuratti** is the most colourful character, extremely ingenuous and always performing the rustic dance so natural to her. She assures her that the Lord would return her love, gets many presents from her and departs.

Meanwhile the **kurava**, a **singa** as he is often called, who is her husband, spreads his net for catching wild birds and with his bag full, goes over to this place, along with his friend the **kuluva**, in search of his wife **singi**, the kuratti. After some wandering, he finds her but is amazed at the various jewels worn by her, got by her as presents from those to whom she had been sooth-saying. The two have a slight sulking, then an interesting talk, finally returned home and are happy.

Though there are no specific divisions of act or scene here according to the modern concept of a drama, we can have here a clear division into three separate sections or acts wherein separate characters occupy the entire stage. They are one, the heroine, who sees the Lord in procession, falls in love with Him and then gives forth various laments including the sending of her maid as a messenger in some cases to the Lord, and then the sending of the maid to fetch the **kuratti**. Her whole act is one of a superior kind of dance, unlike that of the **kuratti** in the next section. The maid also has her part in this classic dance.

The second section is the **kuratti** act where she occupies the entire stage—her arrival, dance, her description of several things

like the country, the various shrines, rivers, hills, her own tribe, the presents she had received, and then her reading the hand of the heroine and getting presents from her. The whole is one ceaseless dance.

The third section is occupied by her husband, the **kuravan,** his bird-hunt along with his comrade, his search for his missing **kuratti** or **singi,** their duet, and lastly their union. Here also the **kuraven** and **kuratti** dance, but this dance has completely degenerated in to the vulger street dances of the modern **kuravan-kuratti** familiarized by the ugly carricature of the films and copied by all the mass communication media today.

This is the general pattern and story content of the **Kuravanchi** poem. The poem has been named after the **kuratti** as she occupies the entire stage from the moment of her debut. The poem was originally sung in praise of the local deity and was enacted by the dancing girl troupe of the temple on temple festival occasions. Almost all large temples had this dance drama, enacted there in praise of the Lord, and as a form of popular entertainment. But when the dancing girl community got into disrepute from the opening years of this century, these dramas languished and got forgotten.

The kuravan-kuratti concept is not mere literary convention. The couple is a kind of real wandering type today in actual life, very much like the gipsy tribes of Europe. They do practice the arts of hand-reading and sooth-saying in the urban areas even in the modern day.

A word may be said about the probable genesis of the **Kuravanchi Natakam.** When the Vijayanagar dynasty was destroyed by the muslim onslaught and the Nayaks, as deputies under Vijayanagar, were in charge of the areas Thanjavur, Tiruchirappalli and Madurai at different periods, they had introduced many new things in the life and culture of the land. The **Yakshagana** was a popular opera in the Telugu areas having been copied from the Maratti and the Kannada areas featuring epic heroes like Bhima and Arjuna and it was a drama full of dance and music. The Nayaks helped to introduce this type of dance-play in the Tamilnadu and the result, we may take it, was the **kuravanchi**

opera. Instead of the heroes of the **Yakshagana** we have here an atmosphere of devotion to God and of God-love. The **kuravanchi** had been produced in the temples with a minimum cast of five characters and its keynote was devotion. We may even consider it as a play portraying the struggle of the soul towards a union with God through what had been called a form of bridal mysticism. It is immaterial that some poems like **Sarabhendra Kuravanchi** are in praise of mortals. Like all great poetry in Tamilnadu, the **kuravanchi** also was primarily a poem of dedication to God. Latterly degeneration sets in here also, as in every walk of humane endeavour.

Thiru-Arur, Thanjavur, Kumbakonam and Thirukkutralam are some of the temples where **kuravanchi** was enacted till recently. Many eminent poets had written classical **kuravanchi** poems. The one by Tirikuta Rajappa Kavirayar by 1718 A.D. is deservedly the most famous, although there were earlier **kuravanchi** poems. There are more than a score of such good **kuravanchi** poems now available in print.

The poem now being edited and published for the first time, occupies an honourable position in that long line of poems, published and unpublished. This poem was written by one Tattuvalingau, son of Chidambaram, probably by the middle of the 18th century. The poem is tne praise of Swami Poyyamozhi Isar of Poyhaippakkam. There are one or two other small poems on the Lord of this place, unpublished. Nothing is known about the author except that he had been patronized by two munificent gentlemen of the place by name Nallannan and Chinnannan. The poem is written in a good style, easy and simple, while at the same time not sacrificing its classicism. A few verses towards the end are missing, but otherwise the whole text is correctly and fully available.

Thiruchitrambalam
8—12—79

M. ARUNACHALAM

# பொருளடக்கம்

பக்கம்

**முன்னுரை** ... ... **1**

*பிரபந்தம் 1, குறிகேட்டல் 3, குறத்திப் பாட்டு 5, கலம்பகத்தில் குறம் 6, குறம் என்னும் பிரபந்தம் 8, அம்மானைகளில் குறம் 9, குறவஞ்சியின் தோற்றம் 9, பாத்திரங்கள் 12, சிங்கனும் சிங்கியும் 14, குறவஞ்சியின் மூன்று காட்சிகள் 16, குறவஞ்சி இலக்கணம் 17, முதல் சில குறவஞ்சி நாடகங்கள் 18, பின் வந்த குறவஞ்சிகள் 20, பாடலும் வசனமும் 22, குளுவ நாடகம் 25, பாட்டுடைத் தலைவர் 26, பிறநாடக வளர்ச்சி 28, பொய்யா மொழியீசர் குறவஞ்சி 29, நூல் அமைப்பு 30, ஆசிரியர் 32, காலம் 35, சில ஆராய்ச்சிக் குறிப்புகள் 35, இக் குறவஞ்சியின் பொருட்சுருக்கம் 37.*

**பொய்யாமொழியீசர் குறவஞ்சி நாடகம்** — மூலமும் குறிப்புரையும் ... **39**

பாடபேதங்கள் ... *86*

செய்யுள் முதற் குறிப்பு அகராதி ... *87*

இவ்வாய்விற்குப் பயன்பட்ட நூல்கள் ... *88*

இவ்வாய்விற் குறிப்பிட்ட குறவஞ்சி நூல்கள் ... *88*

# முன்னுரை

## பிரபந்தம்

வடமொழியில் **மகா காவியம், லகு காவியம்** என்று இலக்கியம் இரு வகையாகப் பாகுபாடு செய்யப்படும். மகா காவியம் என்று சொல்வதையொத்தவை தமிழில் பெருங் காப்பியங்களும் காப்பியங்களும்; லகு காவியம் என்று சொல்வதை ஒத்தவை தமிழில் **பிரபந்தங்கள்**. வடமொழி மரபில் உரைநடை நூல்கள்கூடக் காவியம் எனப்படும். உதாரணமாக, பட்டபாணர் செய்த **காதம்பரி** என்னும் காவியத்தைக் குறிப்பிடலாம். ஆனால், தமிழ் மொழியில் உரைநடை நூல்கள் ஏற்பட்ட காலம் மிகவும் பிற்காலம். பண்டைக் காலம் தொடங்கி இருந்து வந்த நூல்கள் யாவுமே செய்யுள் நூல்களாகும்.

தமிழில் செய்யுள் நூல்களுக்கு இலக்கணம் பிற்காலத்தில் எழுந்தது. பொதுவாக இலக்கியங்களைக் காப்பியங்கள் என்றும் பிரபந்தங்கள் என்றும் இரு வகையாகப் பாகுபாடு செய்யும் மரபு உள்ளது. காப்பியங்கள் பெருநூல்கள். சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, கம்ப ராமாயணம் முதலியன பெருங்காப்பியங்கள். இவை போக வேறு உள்ள சிறு நூல்கள் யாவும் பிரபந்தங்களேயாகும். மிகவும் சிறப்புடைய கலிங்கத்துப்பரணி முதல், ஒரு தலத்தின் இறைவனைத் துதிக்கின்ற சிறு பதிகங்கள் வரை, தமிழில் எல்லாமே பிரபந்தங்கள்தாம்.

சங்கப் பாடலில் பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை முதலாகவுள்ள ஐந்து ஆற்றுப்படைகளும் (திருமுருகாற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, மலைபடுகடாம் என்னும் கூத்த ராற்றுப்படை பிரபந்தங்களேயாகும். திருமுருகாற்றுப்படை முருகனைத் துதிக்கின்ற துதி நூல். கி. பி. 6—9 நூற்றாண்டு களில் ஆழ்வார் பன்னிருவரும் பாடிய நாலாயிரம் பாடல் களையும் தொகுத்து **நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்** என்று வழங்குகின்ற வழக்கு மிகவும் பிற்காலத்தில் ஏற் பட்டது. 17ஆம் நூற்றாண்டில் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாடிய துதிநூல்கள் எட்டும் **அஷ்டப் பிரபந் தங்கள்** என்று பெயர் பெறுவதும் காணத் தக்கது.

இவ்வாறு பிரபந்தம் என்னும் பெயரே நூலோடு இணைத்து ஆளப்பட்டிருக்கிறது. குமரகுருபரர் பிரபந்தத்திரட்டு என்றும் சிவப்பிரகாசர் பிரபந்தத்திரட்டு என்றும் வழங்கு கிறோம்.

இசைத்தமிழில் அகக்கூத்தின் உருக்கள் இருபத் தெட்டில் பிரபந்தவுரு சிறிது என்றும், அது அடி வரையறை யின்றிப் பல தாளத்தாற் புணர்ப்பது என்றும், சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார் கூறுகிறார். அதை இங்குக் கருதவில்லை.

இனி, இவ்வகையான லகு காவியம் என்று வடமொழியில் சொல்லத்தக்க சிறு நூல்களைத் தொகுத்துப் பிரபந்தங்கள் என்று தமிழில் வழங்குவது ஒரு புது வழக்கு. பிரபந்தம் என்னும் சொல்லுக்கு நன்கு செய்யப்பட்டது என்பது பொரு ளாகும். பிரபந்தம் என்று நாம் கருதுவதெல்லாம் ஒரு தலைவனைப் புகழ்ந்து பாடப்பட்ட நூலாகும். இஃது அளவால் சிறிதாயிருத்தலும் உண்டு, பெரிதாயிருத்தலும் உண்டு. இவ்வகை நூல்களைப் பிரபந்தம் என்று பெயரிட்டுக் கூறும் சிலவழக்கு 16ஆம் நூற்றாண்டில் எழுந்த **பிரபந்த மரபியல்** என்னும் பாட்டியல் இலக்கண நூலில்தான் முதன் முதல் காணப்படுகிறது. 'பிள்ளைக் கவி முதல் புராணம் ஈறாகத் தொண்ணூற்றாறு எனும் தொகையதான பிரபந்த மரபியல்' என்பது அதன் முதல் செய்யுள். ஆனால் 10ஆம் நூற்றாண்டில் தோன்றிய பன்னிரு பாட்டியல் என்னும் பெயரில் பாட்டியல் இலக்கணம் கூறும் தொகுப்பு நூல் முதன் முதலாகப் பிரபந்தங்களைப் பெயர் சொல்லாமல் தனித்தனி விவரித்துக் கூறுகிறது. இதன் பின்னர்த் தோன்றிய பாட்டியல் நூல்கள் முறையே **வச்சணந்தி மாலை** (12 நூ.); **நவநீதப் பாட்டியல்** (14 நூ.) என்பன. இவற்றுள் பிரபந்தங்களின் இலக்கணம் கூறப்பட்ட போதிலும், பிரபந்தம் என்னும் பெயரோ, பிரபந்தங்கள் எத்தனையென்பதோ, அவற்றின் வரையறையோ சொல்லப் படவில்லை. பிரபந்த மரபியலை அடியொற்றித் தோன்றிய சிதம்பரப் பாட்டியலும் 96 என்று குறிப்பிடவில்லை. 17ஆம் நூற்றாண்டில் தோன்றிய **சிவந்தெழுந்த பல்லவராயன் உலா** என்னும் நூல் அவனைப் புகழும்போது ''தொண்ணூற் றாறு-கோலப் பிரபந்தங்கள் கொண்ட பிரான்'' என்று போற்றுகிறது.

இந்த நிலையில் மிகவும் பழமையான பிரபந்தங்கள் சிலவே. இவை முற்குறிப்பிட்ட ஆற்றுப்படை, கோவை, இரட்டை மணிமாலை, அந்தாதி, உலா, ஊசல், எழுகூற்றிருக்கை, ஒருபா ஒருபது, இருபா இருபது, கலம்பகம், தசாங்கம், தூது, நான்மணிமாலை, பதிகம், பரணி, பிள்ளைத்தமிழ், முதுகாஞ்சி, மும்மணிக்கோவை என்பனவே.

இப்போது நாம் கருதுகின்ற குறவஞ்சி என்பது பாட்டியல் இலக்கணம் கூறுகின்ற பழமையுடைய ஒரு பிரபந்தம் அன்று.

## குறிகேட்டல்

குறவஞ்சி என்பது காதலுற்ற பெண்ணுக்குக் குறத்தி குறியுரைத்தலைச் சொல்லுகின்ற ஒரு நாடகம்.

குறிபார்த்தல் என்பது நடக்கப் போவதை அறிவதற்காக எல்லா நாடுகளிலும், எல்லாக் காலங்களிலும் பின்பற்றுகின்ற ஒரு முறை. தமிழ் இலக்கியத்தில் தொல்காப்பியம் தொடங்கிக் குறிகேட்டல் காணப்படுகிறது. இதனுள் ஒரு வகை, வேலன் வெறியாட்டு. அதில் கழங்கு பார்த்தல் என்பது செயல்முறை. தலைவிக்கு வேறுபாடு எதனால் நிகழ்ந்தது என்று செவிலி முதலியோர் அறிய விரும்புகிறார்கள். 'கட்டினும் கழங்கினும்' என்னும் தொல்காப்பியச் சூத்திரம் இதைச் சொல்லுகிறது. கட்டு என்பது கட்டுவிச்சியை அழைத்து அவளைக்கொண்டு குறிபார்த்தல். கட்டுவிச்சி கட்டுவித்தி என்றும் சொல்லப்படுவாள். அவள் நெல்லைக் கொண்டு குறி அறிந்து நிகழ்வதைச் சொல்லுகிறாள். இது சங்க நூல்களிலும் அழகாகச் சொல்லப்படுகின்றது. குறி வல்ல ஒரு பெண், புலமை பெற்றுச் சங்க நூல்களில் பாடல் பாடி (நற்றிணை 357, புறநானூறு 157) குறமகள் குறி எயினி என்று பெயர் பெற்றிருக்கிறாள். இப்படிக் குறிசொல்பவள் எப்போதும் தவறாமல் மலைநாட்டுக் குறக்குடிப் பெண்ணாகவே இருத்தல் வழக்கம். திருமங்கை ஆழ்வார் தமது சிறிய திருமடலில், கட்டுவிச்சி குறிகூறும் முறையைச் சொல்லுகிறார்.

'ஆரானு மூதறியும் அம்மனைமார் சொல்லுவார்
பாரோர் சொலப்படும் கட்டுப் படுத்திரேல்
ஆரானும் மெய்ப்படுவ னென்றார், அது கேட்டுக்
காரார் குழற்கொண்டைக் கட்டுவிச்சி கட்டேறிச்
சீரார் சுளகிற் சிலநெல் பிடித்தெறியா,
வேரா விதிர்விதிரா, மெய்சிலிராக் கைம்மோவாப்
பேரா யிரமுடையா னென்றாள், பெயர்த்தேயுங்
காரார் திருமேனி காட்டினாள்.'

இது நெல்லைக் கொண்டு குறிசொல்லும் முறையைத் தெளிவுபடுத்துகிறது. குறத்தியோடுகூடச் சிறு சுளகோ, சிறு கூடையோ தவறாமல் உடன் இருக்கிறது. குறக்குடியில் பிறந்த சிறு பிள்ளைகள்கூடக் குறி சொல்ல வல்லவர்கள் என்பதை ஐங்குறுநூற்றால் அறிகிறோம்.

கட்டுவிச்சி, சங்கப் பாடலில் அகவன் மகள் என்றும் சொல்லப்பெறுகிறாள். (அகவிக் கூறலின் அகவல்; இதுவே அழைத்தல். தெய்வங்களை இவள் அழைத்துக் கூறுகிறாள்.) தலைவியின் காமநோயை அறியமாட்டாத தாயர் அவள் வேறு பாட்டின் காரணத்தைக் கண்டறிதற் பொருட்டு அகவன் மகளாகிய கட்டுவிச்சியை அழைத்துக் குறிகேட்பது வழக்கம். இதுவே கட்டுப் பார்த்தல் என்று மேலே சொல்லப்பட்டது. இவள் முறத்தில் நெல்லையிட்டு அதனை எண்ணி அது கொண்டு சில நிமித்தங்களைக் கண்டு சொல்வாள். பின் வெறியாட்டம் எடுத்தல் உண்டு. இவ்வாறு அகவன் மகளை அழைத்துக் கட்டுப் பார்க்குங்கால் அவள் மலைவளம் கூறுதல் என்னும் பிற்காலத்து மரபு, அன்றும் இருந்தது போலும். இதனை உணர்ந்த தோழி, தலைவனுடைய குன்றத்தின் புகழைக் கேட்டால் தலைவியின் காமநோய் ஓரளவேனும் தணியுமென்பதை யூகித்து அவளை நோக்கிக் குன்றத்தைப் பாடும்படி கேட்கிறாள் :

'அகவன் மகளே அகவன் மகளே,
மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவன் மகளே, பாடுக பாட்டே,
இன்னும் பாடுக பாட்டே, அவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே'

—குறுந், 23

கட்டுவிச்சி முறத்தில் நெல்கொண்டு எண்ணிக் குறி பார்த்தலைப் பெருங்கதையும் குறிப்பிடும். கட்டுவிச்சி சில சமயம் வேலனுக்கு வெறியாட்டு எடுக்குமாறு சொல்லும் போது, வேலன் வரும் களத்தில் கள்ளும் இறைச்சியும் தூவுதலுமுண்டு. இதை முத்தொள்ளாயிரம் குறிப்பிடும்.

'காராட் டுதிரந்தூஉய் அன்னை களனிழைத்து
நீராட்டி நீங்கென்றால் நீங்குமோ ? — போராட்டு
வென்று களங்கொண்ட வெஞ்சினவேற் கோதைக்குஎன்
நெஞ்சு களங்கொண்ட நோய்.'

இம்மரபை நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் குறிப்பிடுவது வியக்கத்தக்கது. (4.6.3) :

'இதுகாண்மின் அன்னையீர் இக்கட்டு விச்சிசொற் கொண்டுநீர்
எதுவானும் செய்தங்கோர் கள்ளும் இறைச்சியும் தூவேன்மின்
மதுவார் துழாய்முடி மாயப் பிரான்கழல் வாழ்த்தினால்
இதுவே இவளுற்ற நோய்க்கும் அருமருந் தாகுமே.'

இவையெல்லாம் கட்டுப் பார்த்தல் எவ்வாறு பெருவழக்காய் உலகியலில் இருந்தது என்பதைக் காட்டுகின்றன. உலகியல் இலக்கியத்தில் ஏறி, ஒரு மரபாகவே ஆயினமையை இங்குக் காண்கிறோம். இம் மரபிலிருந்து வளர்ந்தனவே பிற்காலக் குறம், குறவஞ்சி என்னும் பிரபந்தங்கள்.

## குறத்திப் பாட்டு

17, 18ஆம் நூற்றாண்டுகளில் பாமர மக்களுக்குக் கவர்ச்சி தரத் தக்கனவாகக் குறவஞ்சி, பள்ளு என்னும் இரண்டு நாடகப் பிரபந்தங்கள் புதிதாகத் தோன்றிப் பெருவழக்கு எய்தின. இவை தோன்றிய சூழ்நிலையைப் பின்னே ஆராய்வோம். ஆராய்ச்சியாளர் சிலர், 10ஆம் நூற்றாண்டில் தோன்றிய பன்னிருபாட்டியலில் இலக்கணம் கூறப்பட்டுள்ள குறத்திப் பாட்டு, உழத்திப் பாட்டு என்னும் இரண்டுமே பிற்காலத்துக் குறவஞ்சியும் பள்ளுமாகும் என்று கருதுகின்றனர். இக் கருத்துப் பொருந்துவதன்று. இங்குக் குறத்திப் பாட்டை மட்டும் நோக்குவோம்.

'இறப்பு நிகழ்வெதிர் வென்னும்முக் காலமுந்
திறப்பட உரைப்பது குறத்திப் பாட்டே.' 336

'குறத்திப் பாட்டும் அதனோ ரற்றே.' 337

என்பன பன்னிருபாட்டியல் சூத்திரங்கள்.

முதற் சூத்திரம் கூறும் கருத்து, மூன்று காலங்களையும் உணர்ந்து அவற்றைக் குறத்தி திறம்பட எடுத்துரைப்பதைக் கூறுவது குறத்திப்பாட்டு என்பதாகும். இதற்கு முன் சூத்திரம் 'ஈரைந்து உழத்திப் பாட்டே' என்று முடிகிறது. ஆகவே, இரண்டாம் சூத்திரம் கூறுவது குறத்திப் பாட்டும் அதுபோலப் பத்துப்பாட்டுக் கொண்டது என்பதாகும். இந்த வரையறை எதுவும் நாம் கருதும் குறம், குறவஞ்சி என்னும் இருவகைப் பிற்காலப் பிரபந்தங்களுக்கும் பொருந்தாது. ஒன்று, இக் குறவஞ்சிப் பிரபந்தமெதுவும் பத்துப்பாட்டால்

முடிவது அன்று. இன்று கீர்த்தனம் என்று பல உறுப்புகளைப் பெற்று அறுபதுக்கு மேற்பட்ட பாவினங்களை ஒவ்வொன்றிலும் காண்கிறோம்.

இரண்டாவது, இன்று நாம் பார்ப்பது பெரும் பான்மையும் புது வகைகளான சிந்தும் கீர்த்தனமும். இவை பன்னிருபாட்டியலின் காலத்தில் வழங்கியதில்லை. மூன்றாவதாக, இங்கு வளர்ச்சி பெற்ற ஒரு நாடகத்தைக் காண்கிறோம். குறத்திப் பாத்திரங்கள் குறைவு; ஆனால், குறவஞ்சிப் பாத்திரங்கள் ஐந்தும் ஐந்திற்கு மேலும். இவை இரண்டும் இசைத்தமிழும் நாடகத் தமிழும் ஆம். ஆகவே, பன்னிரு பாட்டியல் கூறும் இலக்கணம் இவற்றுக்குச் சிறிதும் பொருந்தாது. குறத்தி கூறுவதை மட்டும் பன்னிருபாட்டியல் கூற, இவை சிறப்பான இசை நாட்டிய நாடகங்கள் நடத்துகின்றன. ஆகவே, இவை குறத்திப்பாட்டு ஆகா.

ஒன்று யூகிக்கலாம். பன்னிருபாட்டியலுக்குப் பின் செய்யப்பட்ட குறத்திப்பாட்டு எதுவும் இல்லை; இருந்ததாகவும் வரலாறு இல்லை. பின் ஏன் இவ்வாறு இவ்வாசிரியர் சூத்திரம் செய்தார் என்பது கேள்வி. பிற்காலத்தில் தமிழ்ப் புலவர் நூல் செய்யும்போது இந்த நெறியில் செய்யலாம் என்று இந் நூலாசிரியர் ஒரு நெறி வகுத்துக் கொடுத்தார் என்று மட்டுமே சொல்லலாம். இவர் குறிப்பிடும் பல பிரபந்தங்கள் இவ்வாறு உள்ளன. ஆனால், இவ்வழியில் பின்னர் யாருமே நூல் இயற்றவில்லை என்பதை இங்கு நாம் உணர்தல் வேண்டும்.

### கலம்பகத்தில் குறம்

இனி ஒன்பதாம் நூற்றாண்டு முதல் கலம்பகப் பிரபந்தங்கள் தோன்றியிருந்தன. முதல் பிரபந்தமாகிய நந்திக் கலம்பகத்தில் குறம் என்னும் உறுப்புக் காணப்படவில்லை. அடுத்துத் தோன்றிய ஆளுடைய பிள்ளையார் கலம்பகத்திலும் குறம் என்னும் உறுப்பு இல்லை. இங்குக் குறத்தியார் என்னும் உறுப்பு உள்ளது. இது மதங்கியார் போல வேறு ஒரு பொருளுடையது. இஃது ஒரு குறமாதைக் காமுற்ற தலைவன் அவளை நோக்கிக் கூறியது. குறத்தி கூறுவதாகிய பொருள் இங்கு இல்லை. ஆனால், மிகவும் பிற்பட்ட கலம்பகப் பிரபந்தங்களிலேயே குறம் என்னும் உறுப்புக் காணப்படுகிறது. 12ஆம் நூற்றாண்டுக்குரிய வச்சணந்தி மாலை கலம்பக உறுப்புகளில் குறம் என்னும் ஒன்று சொல்லவில்லை. ஆனால், 14ஆம் நூற்றாண்டுக்குரிய ‘நவநீதப்

பாட்டியல்' குறத்தைச் சொல்லுகிறது. பின்வந்த 16ஆம் நூற்றாண்டுக்குரிய 'பிரபந்த மரபியல், சிதம்பரப் பாட்டியல்' என்பனவும், அடுத்த நூற்றாண்டுக்குரிய 'இலக்கண விளக்கப் பாட்டிய'லும் குறத்தைக் கூறுகின்றன. இஃது இலக்கண நிலை.

இலக்கியத்தைப் பார்ப்போமானால், 14ஆம் நூற்றாண்டு முதல் தோன்றிய கலம்பகப் பிரபந்தங்கள் குறம் என்னும் உறுப்பைக் கலம்பகத்துள் அமைத்திருக்கின்றன. திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம் பாடிய தொல்காப்பியத் தேவர் குறம் என்னும் தலைப்பில் கட்டுவிச்சி கட்டெடுத்து நெல்லை வகுத்துத் தலைவியின் மையலுக்கு மருந்து, இறைவன் என்பதாகப் பாடுகிறார். (அப்பர்தம் தேவாரத்துள் பல இடங்களில் 'மருந்தவன்காண்' என்று பாடியிருப்பதை இவர் உணர்ந்து இவ்வாறு பாடியிருக்கக் கூடும்.)

அடுத்து இதே நூற்றாண்டில் உதீசித்தேவர் தாம் பாடிய திருக்கலம்பகத்தில் சைன மரபுக்குப் பொருந்தக் காதலை விலக்கி, தலைவியைப் 'பெருந்திருவே' என்று விளித்து, 'உன் நினைவு கைகூடும் ஏதிலர் சமயங்கள் அற்பமாகும்' என்று முடிக்கிறார்.

அடுத்த நூற்றாண்டில் வந்த புலவர்கள், கலம்பகத்துக்கு இரட்டையர் என்று பெயர்பெற்ற இரட்டைப் புலவர்கள். இவர்கள் தங்களுடைய தில்லை, திருவாமாத்தூர் என்னும் இரண்டு கலம்பகங்களிலும் குறம் என்னும் உறுப்பமைத்துப் பாடுகிறார்கள். எடுத்துக்காட்டாக ஒரு பாடலைக் காட்டலாம்.

'சடைமுடிக்கும் அம்பலவர் வந்தணைவர் என்றகுறி
தப்பா தம்மே!
கொடைமுடிக்கும் படிசொன்னால் குறித்தியல்ல
யானுமொரு குசத்தி கண்டாய்,
கடைதுடிக்கும் விழியிரண்டும் இடந்துடிக்கும் துடிக்கு
மிடக் கரமும் தோளும்
துடிதுடிக்கும் இடப்புருவம் தனந்துடிக்கும் துடிக்குமிடத்
தொடையும் தானே.'

—தில்லைக் கலம்பகம்

குறத்தி தன் குறி தப்பாது என்று கூறுவதை மட்டும் இது சொல்வது. இது போன்ற குறம் உறுப்புகளைப் பின்னர் வந்த கலம்பகங்கள் அனைத்திலும் பொருத்திப் பாடுவது

கலம்பக மரபாகிவிட்டது. இங்குச் சொல்லப்பட்ட கருத்து, தலைவியின் மெய்ப்பாடுகளையும் குறிகளையும் கண்டு அவள் காதல் கொண்ட இறைவன் எழுந்தருளி வந்து அருள் செய் வான் என்று குறத்தி சொல்கிறாள் என்பதாகும்.

இதே நூற்றாண்டில் வாழ்ந்த தத்துவராயர் தாம் பாடிய 'ஞானவிநோதன் கலம்பக'த்தில் குறம் என்னும் உறுப்பை அமைத்திருக்கிறார். மற்று அவரே பாடிய 'பாடுதுறை'யில் காணப்படும் இரண்டு பதிகங்கள் இங்குக் கருதத்தக்கன. ஒன்று 'குறி' என்னும் தலைப்புடையது. இது முழுமையும் அத்வைதப் பொருளை அடக்கியது. 'வேதத் தலைவன் வரும் குறியாம் இந்த வேதாந்தத் துட்குறியே' என்று சொல்வது. இதில் குறத்தியோ குறியோ இல்லை. மற்றது குறத்தி என்னும் தலைப்புடைய 136ஆவது பதிகம். இக் குறத்தி 'மற்றவர்கள் போலச் சாதி பலபேசி, பச்சை வடம்பூண்டு பசுங் குழவி அரைசேர்த்துப் பிச்சை பலகொண்டு விதிகள் பல பிதற்றிக் குத்துத் தினைகுத்திக் கொழுமரத் தேன்வாங்கி அத்திற் குழைத்துண்டு அறம் சொல்லும் குறத்தியல்லேன்' என்கிறாள். எடுத்துக்காட்டாக ஒரு பாடல்:

'கேடுபடும் உடல்தனக்குக் கீழாய கிழங்குகல்லிக்
காடுமலையும் கருதியிடும் குறத்தி யல்லேன்!
பாடு மறையிற் பரப்பிரம மும்நானுங்
கூடும் வகைதேடிக் குனித்திடும் குறத்தியேனே!'

## குறம் என்னும் பிரபந்தம்

இந்தக் கலம்பக உறுப்பிலிருந்து வளர்ந்ததே குறம் என்னும் பிரபந்த வகை. குறம் என்னும் தனிப் பிரபந்த வளர்ச்சியில் முக்கியமான அம்சம் நடனமும் இசையும். முழு மையும் குறத்தி ஒருத்தியே பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் நூலையும் கதையையும் நடத்துகிறாள். இவ்வகையில் முதல் பிரபந்தம் மீனாட்சியம்மை குறம் ஆகும்.

இது சிறு நூல், 51 பாடல்கள் உடையது. குமர குருபர சுவாமிகள் செய்ததாக வழங்கிய போதிலும், இந்நூல் அவர் செய்ததன்று. இதன் கருத்து, பொதியக் குறத்தி தோன்றி, தலைவியைக் கண்டு, தன் மலைவளம், குலப்பெருமை, தலப் பெருமை, தன் குறிப்பெருமையெல்லாம் சொல்லி மதுரைப் பெருமான் வந்து அருள் செய்வார் என்று அவளுக்கு உரைத்து முடிப்பதாக உள்ளது. இதைப் பின்பற்றிப் பின்னும் சில குறப் பிரபந்தங்கள் எழுந்துள்ளன. மகிழ்மாறன் பவனிக்குறம்

என்னும் நம்மாழ்வார் குறம், தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி, இலக்ஷணக் குறவஞ்சி என்னும் பிரபந்தங்கள் ஆகியவை. இவையிரண்டிலும் இசையும் நடனமும் (நாடகம் அன்று) பூரணமாய்ப் பொருந்தியுள்ளன.

## அம்மானைகளில் குறம்

இதற்கிடையில் எழுந்த மற்றொரு நிகழ்ச்சி குறிப்பிடத் தக்கது. தமிழில் புதுவகையான பாமர மக்களுக்கு ஏற்ற அம்மானைப் பாடல்கள் பல புதிதாய்த் தோன்றியிருந்தன. இவை பெரும் புலமையோடு செய்யப்பட்டவையல்ல. தெரிந்த கதையை—இதிகாசக் கதைகளையும், சரித்திரக் கதைகளையும்—பாமர மக்களுக்கு முன்னே பாடிக்காட்டுவதற்கென்று பல அம்மானைக் கதைப் பாடல்களாகப் பெருநூல்கள் செய்யப் பட்டன. எடுத்துக்காட்டாக 'இராமப்பையன் அம்மானை' என்னும் சரித்திரப் பாடலையும், 'அல்லி அரசாணி மாலை, 'பஞ்சபாண்டவர் வனவாசம்' முதலான ப்ாரதக் கதைப்பாடல் களையும் (இவை 17ஆம் நூற்றாண்டுத் தொடக்கம்) குறிப் பிடலாம். இவற்றுள், குறத்தி குறிசொல்வதையே பொருளாக உள்ள பல அம்மானை நூல்களும் உள்ளன. உதாரணம்—திரௌபதி குறம், விதுரன் குறம், மின்னொளியாள் குறம், சொர்க்கர் குறம் என்பவற்றைக் குறிப்பிடலாம். இவற்றில் நாடகம் இல்லை, ஆனால் நாடகப் பாங்கு உண்டு. சாமானிய மக்கள்தாம் இவற்றைப் பாடி வந்தார்கள்.

இவற்றைத் தழுவி வேதாந்தப் பொருளில் வந்தனவே வேதாந்தக் குறம், அகண்டவெளிக் குறம் முதலான சில. இவை யாவும் மிகவும் பிற்பட்ட காலத்தவை.

## குறவஞ்சியின் தோற்றம்

இனி, இக் குறம் என்பது பாட்டும் நாட்டியமும் மட்டும் கொண்டிருந்த இச் சிறுபிரபந்தம், சில நாளில், நாடக அமைப்பையும் சேர்த்துக் கொண்டு இசை, நாட்டியம், நாடகம் என்னும் மூன்றுமுடைய குறவஞ்சி நாடகமாக வளர்ச்சிபெற்றது. வளர்ச்சி பெற்ற காலம் குறம் தோன்றிய காலத்தை அடுத்த உடன்காலம் என்றே கருத இடமுண்டு. இஃது இவ்வாறு வளர்ச்சி பெற்றுத் தோன்றுவதற்கான சூழ்நிலையும் சற்றுச் சிந்திக்கத் தக்கது. இங்கு ஒன்றனை நினைவுகூர வேண்டும். பல இசைவாணர் முன்னமே ஆதர வில்லாமல் விசயநகரத்துக்கும் மைசூர் நாட்டுக்கும் பிற இடங் களுக்கும் சென்று அங்குத் தமிழ்நாட்டின் இசையையும்,

இசைத் தமிழையும் பரப்பி வந்திருக்கிறார்கள். இது நம் கருத்தில் இருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் தமிழ் மன்னர் மறைந்து சில நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. விசயநகரப் பேரரசும் முகமதியர்களால் அழிந்து நெடுங்காலம் ஆயிற்று. விசயநகர அரசின் பிரதிநிதிகளாய் இருந்த நாயக்கர் என்னும் பட்டமுடைய சிலர், மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சை ஆகிய பெருநகரங்களில், முதலில் விசயநகரத்தின் பிரதிநிதிகளாய்த் தங்கிப் பின்னர் வெவ்வேறு காலங்களில் தாங்களே தனியரசு செலுத்தும் நிலை பெற்றார்கள். இவர்கள் தெலுங்கு நாட்டிலிருந்து வந்தவர்கள்; தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். ஆதரிக்கும் தமிழ் வேந்தர்களும் இன்றி, பெருவள்ளல்களும் இன்றி, வாடிய தமிழ்ப் புலவர்களுக்கு இந் நாயக்க மன்னர்களே புகலிடம் ஆனார்கள். இது காலத்தின் நிலை. சீவைகுண்டத்திலிருந்து வடக்குநோக்கி வந்து மதுரையில் மீனாட்சியம்பிகையைத் தரிசித்த குமரகுருபர சுவாமிகளைத் திருமலை நாயக்கன் பெரிதும் போற்றி அம்பிகை மீது பிள்ளைத்தமிழும், திருக்குறளின் சாரமாக நீதிநெறி விளக்கமும் பாடுவித்தான் என்றால், இது நாயக்க மன்னனுடைய உயர்ந்த பண்பைக் காட்டுகிறது. ஆகவே, அக்காலத்துத் தமிழ்ப் புலவர்கள் நாயக்க மன்னரின் ஆதரவைத் தேடினார்கள் என்றால் அதில் ஒன்றும் தாழ்வில்லை.

இந்த நாயக்கர்கள் தெலுங்குக் கலையைத் தமிழ்நாட்டில் பரப்பக் காரணமாயிருந்தார்கள். இஃது இயல்பே, தெலுங்கு நாட்டில் அக்காலத்தில் 'யட்சகானம்' என்னும் இசை நாடகங்கள் பிரபலமாக வழங்கி வந்தன. இவ்வகை நாடகங்கள் பொதுமக்களை மகிழ்வூட்டுவதற்கென்றே ஏற்பட்டிருந்தன. இவற்றுள் பாரதம் போன்ற இதிகாசங்களில் வரும் வீர பாத்திரங்களான வீமன், அர்ச்சுனன், கர்ணன் போன்றோர் வடிவங்களை ஏற்று, அவற்றுக்குத் தக்க உடையணிந்து அரங்கில் தோன்றி இசைவல்ல நடிகர் பாடி ஆடுவர்.

இவற்றுள் முக்கியமானது பாட்டும் ஆட்டமும், பாத்திர நடிப்பு அத்துணை முக்கியமன்று. இந்த அமைப்பை தமிழ் நாட்டுக்கு வந்த நாயக்கர் பெரிதும் விரும்பியதிலும் வியப்பில்லை. தாங்கள் இந்த நாட்டின் பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தியபோது இங்கும் இசை நாடகங்களை அமைத்துத் தருமாறு புலவர்களைத் தூண்டினார்கள். இவற்றின் ஒரு விளைவே குறவஞ்சி நாடகம்.

இனி, அன்றிருந்த தமிழ்ப் புலவர் மனப்போக்கையும் சிறிது நாம் சிந்திக்க வேண்டும். பொதுவாக, பெரும் புலவர்கள் இறைவனைப் பாடியே பழகியவர்கள். ஆகவே, அவர்கள் தாங்கள் புதிதாய்ப் படைக்க மேற்கொண்ட இசை நாடகங்களையும் இறைவனுக்கே அர்ப்பணித்தார்கள். முன்பெல்லாம் அந்தாதியும், இரட்டைமணி மாலையும், மும்மணிக் கோவையும் பிறவும் பாடிய புலவர்கள் இப்போது இசை நாடகம் பாடலானார்கள்.

நாயக்க மன்னர் சிற்றின்பத்தில் ஈடுபட்டவர்கள். எனவே, இந் நிலைமைக்கு ஏற்பப் புலவர்கள் நூல் பாட எண்ணிய போதும், அவர்கள் உள்ளம் அந்தப் பாடலையும் ஆண்டவனுக்கே அர்ப்பணித்தது. கோயில்களில் எந்த நேரமும் விழாக்கள் நடந்து வந்தன ; கோயிலில் திருவிழாக்கள், அங்கு சுவாமி புறப்பாடு—இவை அன்றாட நிகழ்ச்சிகள். புலவர்கள் இந் நிகழ்ச்சிகளைப் பயன்படுத்திக்கொண்டார்கள்.

மேலும், தலந்தோறும் சிறப்புடைய உலாப் பிரபந்தங்கள் எழுந்திருந்தன. இவற்றுள் திருவிழாக் காலத்தில் பெருமான் வீதி உலா வர, அவரைக் கண்டு ஏழு பருவ மகளிரும் காதல் கொண்டார்கள் என்று பாடுவது மரபாயிருந்தது. ஆகவே, இம் மரபைப் பயன்படுத்திக்கொள்வது புலவர்களுக்கு எளிதாயிற்று. உலா வருகின்ற பெருமானை ஏழு மகளிர் அல்லாமல், மங்கைப் பருவமுடைய ஒரு பெண் கண்டு காதல் கொள்வதாகத் தங்கள் நூலை அமைத்தார்கள். முன் ஏற்பட்டிருந்த குறம் என்னும் பாடலும் இவர்களுக்குத் துணை வந்தது. காதல் கொண்ட மங்கைக்குக் குறத்தி குறிசொல்லுவதாகச் சேர்த்துக் கொண்டார்கள். இவ்வளவோடு பிரபந்தம் முடியும். இது வரையில் முழுமையும் பக்திக் காதல் மட்டுமே நிரம்பியிருந்தது.

ஆனால், புலவர்கள் பின்னும் மேற்சென்று பாமர மக்களுக்கு இதில் ஈடுபாடு அமையும்படியாகவும் இதைப் பெருக்கினார்கள். குறி சொன்ன குறத்தியைத் தேடிக் கொண்டு குறவன் வருகிறான். பாமர மக்கள் ஈடுபாட்டுக்காக, இங்குக் குறவனுடைய பறவை வேட்டை விரிக்கப்படுகிறது. அவன் வலை விரித்தல், பேசாதே எனல், பறவைகள் வந்து சாய்தல், கண்ணியில் விழுதல், பறவை வகைகள் என்பன விரிவாய் இங்குப் பேசப்படுகின்றன. பின்னர்க் குறவன் வந்து குறத்தியைக் கண்டதும், குறவனுக்கும்

குறத்திக்கும் இடையில் சுவையான பேச்சுகள் நிகழ்கின்றன. இருவரும் முடிவில் தலத்து இறைவனை வாழ்த்திவிட்டுத் தங்கள் இல்லம் செல்கிறார்கள் என்று இப் புலவர்கள் தங்கள் நூலை முடித்திருக்கிறார்கள்.

இதில் நாம் குறிப்பாய்க் காண வேண்டியது, தொடக்கத்திலிருந்து இறுதி வரையில் எல்லாப் பாத்திரங்களுடைய ஆட்டமும் பாட்டமும் ஆகும். இதுவே யட்சகானத் தன்மையை அளிக்கிறது. இன்றுகூட மக்களைப் பெரிதும் கவர்கின்ற தன்மையால், அக்காலத்து மக்கள் இதனிடத்து எவ்வளவு ஈடுபட்டிருப்பார்கள் என்று நாம் உணரலாம். இசையும் நாட்டியமுமாக மட்டும் இருந்த குறம் இப்போது பின்னும் பல பாத்திரங்களைச் சேர்த்துக்கொண்டு நாடகமாக ஆகிறது.

**பாத்திரங்கள்**

குறத்திலிருந்து வளர்ந்த குறவஞ்சி, நாடகம் என்றே எங்கும் வழங்கப்பெற்றது. குறத்தி மட்டும் தோன்றி ஆடிப் பாடியதாக இருந்த குறம், நாடகமாக வளர்ச்சி பெற்றபோது பின்னும் பல பாத்திரங்களைச் சேர்த்துக்கொண்டது இயல்பு. முக்கியப் பாத்திரங்கள் ஐவர். குறத்தியே குறவஞ்சி நாடகத்தில் முக்கியப் பாத்திரமாயிருப்பினும், அவள் தோன்றுவதற்கே காரணமாயிருப்பது ஒரு தலைவியின் காதல் நோய். இந்த நோய் தோன்றியது வீதியில் உலா வந்த ஒரு தலைவரைக் கண்டு. தலைவர் இறைவராயிருக்கும்போது, அவருடைய செப்புத் திருமேனி ஆலயத் திருவிழாவில் எழுந்தருளுவிக்கப் பெறுகிறது. இதுவே குறவஞ்சி நாடகத்தில் முதல் நிகழ்ச்சி. 'பவனி வந்தனரே' என்று இந்த நிகழ்ச்சி முதலில் நமக்கு அறிமுகப்படுத்தப்படுகிறது. ஆனால் இறைவர் உலாவரினும், சரபேந்திரர் போல ஒரு தலைவனே உலாவரினும், தலைவன் ஒரு பாத்திரமாக்கப் பெறுதல் இல்லை.

ஆனால், பவனிக்கு முன்னும் ஒரு நிகழ்ச்சி. அதுவே கட்டியங்காரன் தோற்றம். அவன் தானே தோன்றித் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு ஆடுகிறான். கட்டியங்காரன் வடமொழியில் வரும் சூத்திரதாரனைப் போல, இவனே கதையைப் பார்ப்போருக்கு அறிமுகப்படுத்துகிறான். இறைவர் பவனியையும் தலைவி வருகையையும் அறிமுகப் படுத்துகிறான்.

பின்னரே, தலைவி தோன்றுகிறாள்; தலைவனைக் கண்டு காமுறுகிறாள். தலைவியின் பெயரைக் குறவஞ்சி நாடகங்கள் ஆசிரியர் மனம் போனவாறு மிக்க அலங்காரமாக அமைத்துக் காட்டும். சில பெயர்களைக் குறிப்பிடலாம்: அதிமோகனவல்லி, அதிரூபமோகினி, அதிரூபவல்லி, காமவல்லி, சுந்தரவல்லி, சுரதமோகினி, தேவமோகினி, மதனவல்லி, மோகனாங்கி, மோகனவல்லி, ராஜமோகினி, வசந்தவல்லி, வாலகோகில மோகினி என்பன சில எடுத்துக் காட்டுகள்.

தலைவி தன் காமவிரசத்தை எடுத்துச் சொல்லி அரற்றுவதற்கு ஒரு தோழி அவசியமாகிறது. இவள் அடுத்த முக்கியப் பாத்திரம். இவளுக்குச் சகி, தோழி, பாங்கி, சேடி என்று பொதுப் பெயர் சொல்லப்பட்டிருப்பினும் சில நாடகங்கள் இவளுக்குச் சரசமோகினி, மோகனரேகை, கோமளை முதலான சிறப்புப் பெயர்கள் கொடுத்திருக்கவும் காண்கிறோம்.

பின்னர்க் குறவஞ்சி தோன்றுகிறாள். இவளைக் குறத்தி என்பது சாமானிய மரபு. பின்னால் இவளும் குறவனும் உரையாடும்போது இவளே சிங்கி என்று சொல்லப் பெறுகிறாள். வந்ததும் குறத்தி தன்னைத்தானே அறிமுகம் செய்துகொண்டு ஆடுகிறாள். சில நூல்களில் இவள் ஆட்டம் மூன்று தருக்களாகவும் சொல்லப் பெறும். குறவஞ்சியின் இயற்பெயர் சொல்வது மரபன்று.

இவளையடுத்து, நூலின் மூன்றாம் பகுதியில் குறவனையும் இவனுடைய நண்பனென்றும் ஏவலனென்றும் சொல்லப் பெறும் குளுவனையும் காண்கிறோம். குறவன் பல நூல்களில் குளுவன் என்று சொல்லப் பெறுவதுண்டு. அவனுடைய தோழனான குளுவன் பாங்கன், சின்னான், புலியன், நூவன் என்னும் பெயர்களால் வழங்குவதுண்டு. குறவனும் குறத்தியும் எல்லா நூல்களிலும் சிங்கன், சிங்கி என்று சொல்லவும் பெறுகின்றனர்.

இவ்வாறாகக் குறவஞ்சி நாடகத்தில் வருகின்ற முக்கியப் பாத்திரங்கள் கட்டியங்காரனையன்றி ஐவர் மட்டுமே இங்ஙனம் பல பாத்திரங்கள் தோன்றுகின்றமையால் நாடகம் என்னும் பெயர் பொருத்தமாகிறது. இது பொதுக் குறவஞ்சி நாடக மரபு. எனினும், சில குறவஞ்சி நூல்கள் தலைவியின் தாயையும் முதுதாதியையும் பாத்திரங்களாக அமைத்திருக்கக் காண்கிறோம். சகிக்குப் பதிலாகத் தாயே குறத்தியை அழைத்

துக் குறிபார்க்குமாறு சொல்கிறாள். பல சகிமாரையும் அவளே தலைவிக்குச் சைத்தியோபசாரம் செய்யுமாறு கூறு கிறாள். ஒரு குறவஞ்சி, தாயின் இடத்தில் முதுதாதி என்னும் பாத்திரத்தைப் படைத்திருக்கிறது. நகுலமலைக் குறவஞ்சி யில் நூலுக்குப் புறம்பாக இந்திரன், விசுவகர்மா என்னும் இரு பாத்திரங்கள் தோன்றித் தலைவர் பவனிக்கு ஏற்பாடு செய் கிறார்கள்.

**சிங்கனும் சிங்கியும்**

சிங்கனும் சிங்கியும் உரையாடும் காட்சி குறவஞ்சி நாடகத் தில் மிகவும் கவர்ச்சிகரமான ஒரு காட்சி. குளுவனோடு வேட் டையாடிக் கொண்டு வந்த சிங்கன் தன் மனைவி நினைவு வந்து அவளைத் தேடி வருகிறான். அவள் அடையாளமெல் லாம் சொல்லிப் புலம்பிக்கொண்டு வந்து அவளைக் காண் கிறான். கண்டதும் ஒரு திகைப்பு. அவள் அணிந்திருந்த அலங்கார ஆடையையும் அணிகலன்களையும் கண்டு பெரிதும் திகைப்படைகிறான். ஒரு குறவஞ்சியாசிரியர், சிங்கன் தன் மனைவியை அடையாளம் கண்டுகொள்ளவும் முடியவில்லை என்றுகூடச் சொல்கிறார். சிங்கி அணிந்திருந்த புது அணி கலன்கள் பொன்னினாலும் வெள்ளியினாலும் ஆனவை, வெறும் பாசிமணியையே கண்டிருந்த அவன் கண்ணுக்கு விசித் திரமாகத் தோன்றுகின்றன. ஒவ்வொன்றாக 'இது ஏன் இப்படி இருக்கின்றது ?' என்றெல்லாம் வினவுகின்றான். குறவஞ்சியில் இந்தப் பகுதி மிகவும் சுவையான இறுதிப் பகுதி. புதிதாக நாகரிக உடை, அணிகலன் பெற்ற சிங்கி மிகவும் தளுக்காகப் பதில் சொல்கிறாள். ஓர் உதாரணம்,

'காலுக்கு மேலே பெரிய விரியன்
கடித்துக் கிடப்பானேன் சிங்கி (கடித்து)
சேலத்து நாட்டில் குறிசொல்லிப் பெற்ற
சிலம்பு கிடக்குதடா சிங்கா — (சிலம்பு)'

— குற்றாலக் குறவஞ்சி

இது ஒரு நீண்ட வாக்குவாதம். இதில் புலவர்கள் தங்கள் கற்பனைத் திறமையையும், சொல் திறமையையும் நன்கு காட்ட வாய்ப்பளிக்கிறது.

அது மட்டுமன்று ; அணிகலன்களைச் செய்தவர்களும் ஆடைகளை நெய்தவர்களும் பாமர மக்களேயன்றி உயர் தரத்து மக்கள் அல்லர். தட்டாரும், சேணியரும் சாமானிய மக்களே. எனவே, கீழ்நிலையில் உள்ள மக்கள் இப் பொருளை

அதிகம் பெற்றிராவிட்டாலும்கூட இவற்றை நன்கு அறிந்து இருந்தார்கள். ஆகவே, இவற்றைப்பற்றிப் பேசுவதில் அவர் களுக்கு ஒரு மகிழ்ச்சி. இது குறவஞ்சிக்கு மட்டும் உரிய தன் மையன்று. இந்த அணிகலன்களையே பொருளாகக்கொண்டு இதே காலத்தில் 'சுந்தரர் வேடுபறி' என்னும் நீண்ட கலி வெண்பாப் பாட்டு செய்யப்பட்டிருக்கிறது. சேரமான் பெரு மாளிடம் அணிகலன்களைப் பெற்று மூட்டையாகக் கட்டிச் சுமந்துகொண்டு வருகின்ற சுந்தரமூர்த்தி நாயனார், திரு முருகன்பூண்டியை வந்தடைந்த போது அங்கு இறைவன் அருளால் வெஞ்சிலை வேடர்வந்து அனைத்தையும் பறித்து விடுகிறார்கள். இறைவனிடத்தில் சுந்தரமூர்த்தி முறையிடு கிறார். பறித்த பொருள்கள் மிக விரிவாக 125 கண்ணிகளில் சொல்லப்படுகின்றன. இவ்விரிவு, பெரிய புராணத்தில் இல்லை. இந்த வேடுபறிப் பிரபந்தத்தின் தோற்றமும் நம்மைச் சிந்திக்கச் செய்கிறது. இதுவும் சிங்கன், சிங்கி வாக்குவாதமும் பாமர மக்களுக்குச் சுவையான செய்திகளைச் சொல்வதற்கென்றே புனையப்பெற்றன என்று நாம் கருதுவது பிழையாகாது.

அன்றியும் குறவஞ்சி நாடகத்தின் இறுதிப்பகுதியான சிங்கன் சிங்கி உரையாடலில் சிற்றின்பச் சுவையே மிகுதி, தன் மனைவியைக் காணாது தேடி வருகிற சிங்கன் அவளைக் கண்டு அவள் அணிகலன்கள் முதலியவற்றைப் பார்த்து வியந்தபின் இல்லம் சென்று கூடிவாழ அழைக்கிறான். அவளும் இசை கிறாள். இருவரும் பாட்டுடைத் தலைவர் புகழைப் பாடிச் செல்கிறார்கள். இப் பகுதியில் காமச்சுவை மிகுதி. சில குறவஞ்சிப் பாட்டுகளில் இப்பகுதி மிக்க விரசமாயும் இருப்ப துண்டு. இதற்குக் காரணம் விளங்கிக்கொள்ளுதல் எளிது. பாமர ரஞ்சிதமாகவே நூல் செய்ய வேண்டுமென்ற எண்ணத் தால் அவர்களுக்குச் சுவையளிக்கவல்ல காமச் செய்திகள் இங்கு மிகுத்துச் சொல்லப்பெறும். தெய்வத்தின்மீது பாடப் பெற்ற குறவஞ்சிகளிலும் இச் சுவை உண்டு. பிற தலைவர் கள் மீது பாடப்பெற்றவற்றிலும் இஃது உண்டு. பிந்திய வற்றுள் இப்பகுதி காணப்படும் காரணம் நேரில் பாட்டுடைத் தலைவனை உவப்பிப்பதேயாகும்.

சிங்கன்-சிங்கி வாக்குவாதம் அல்லது உரையாடல் என்று குறிப்பிட்டோம். இது குறவஞ்சிக்கு மட்டும் உரிய சிறப் பன்று ; இதையொத்த மற்றொரு பிரபந்தமாகிய 'பள்ளுப் பாட்டு' என்னும் பள்ளு நாடகத்திலும் இதைக் காண்கிறோம்.

அங்கு மூத்தபள்ளி, இளைய பள்ளி இருவருக்குமிடையில் உரையாடல். இப் பகுதி சிறிது பொருளில் வேறுபட்டது. இருவரும் வெவ்வேறு தெய்வத்தை வழிபடுபவர்கள். ஒருத்தி மற்றவள் தெய்வத்தைப் பழிப்பதாக இது வளர்ந்து முடிவில் இருவரும் சமாதானமாகிப் பள்ளனோடு இல்லமடைந்து நன் முறையில் வாழ்வதாக நூல் முடியும்.

இந்த இருவகை உரையாடலாலும் அமைப்பினாலும் வளர்ந்ததே பலவகை ஏசல்கள். இலக்குமி பார்வதி ஏசல், வள்ளி தெய்வானை ஏசல், வள்ளி முருகன் ஏசல், தாய் மகள் ஏசல் எனப் பல முறையாகத் தெய்வங்களைச் சுட்டி ஏசிக் கொள்வதாகவும், அகப்பொருளைச் சுட்டி ஏசிக்கொள்வதாக வும், இவை வாய்மொழிப் பாடலாகவும் இலக்கியப் பாடலாக வும் வளர்ந்திருக்கின்றன.

## குறவஞ்சியின் மூன்று காட்சிகள்

குறவஞ்சிப் பாடல் மூன்று கட்டமாக அமைந்துள்ளது. முதலாவது கட்டம், தலைவியினுடைய வரலாறு. தெய்வ வணக்கத்தின்பின் தலைவி தோன்றிப் பவனிவந்த தலைவனைக் கண்டு காமுற்று அதனால் பலவாறு தன் பாங்கியுடன் புலம்பு தலும் பாங்கி குறத்தியை அழைத்து வந்து குறி சொல்ல ஏற்பாடு செய்து தலைவிக்கு ஆறுதல் செய்தலும். இப் பகுதியில் இறைவன் பவனியும் தலைவியின் நடனமும் சிறப்பு மிக்க இசை - நடனப் பகுதிகள். இங்குப் பாத்திரங்கள் தலைவி, பாங்கி.

இரண்டாவது கட்டம், குறத்தி அலங்காரமாகத் தோன்றி ஆடிப்பாடி எல்லா வளங்களையும் சொல்லித் தலைவிக்குக் குறிபார்த்துத் தலைவன் அருள் கிடைக்குமென்று கூறிப் பரிசில் பெறுதல். இது முழுமையும் குறத்தியின் ஆட்டம். தலம், நாடு, மலை, ஆறு, குலம், குறி, பரிசில் என்று விரிவாக இப் பகுதியில் குறத்தி தன் பெருமையைக் கூறுமிடத்து, பல் வகையான இசைக்கும், ஆட்டத்துக்கும் இஃது இடம் கொடுக் கிறது. பாத்திரங்கள் இங்குத் தலைவி, பாங்கி, குறத்தி.

மூன்றாவது கட்டம், குறவனும் குளுவனுமாக வேட் டைக்குப் புறப்பட்டுப் பறவைகளைப் பிடித்துக்கொண்டு வர, குறவனாகிய சிங்கன் சிங்கியைத் தேடி இங்கு வந்து கண்டு அவளோடு நீண்ட வாக்குவாதம் செய்து பின் இருவரும் தலைவனை வாழ்த்தி மகிழ்ந்து செல்லுதல். இது முழுமையும் சிங்கன் சிங்கி (குறவன் குறத்தி) இருவருடைய ஆட்டம்.

இந்த ஆட்டம் முதல் பகுதியைவிடத் தரத்தில் குறைந் திருப்பது இயல்பு.

இந்த மூன்றுமே முக்கியமான காட்சிகள். புலவர்கள் தங்கள் மனம்போல் இவற்றைப் பெருக்கியிருக்கவும் காண் கிறோம். மூன்றாம் கட்டத்தில், தலைவன் பாங்கனான குளுவன் வருவதை எல்லாப் பிரபந்தங்களிலும் காணலாம். குறவன் சில சமயம் குளுவன், சிங்கன் என்று பெயர் பெற, பாங்கன் குளுவன், புலையன், நூவன் என்றெல்லாம் பெயர் பெறுவதுண்டு. ஒரு குறவஞ்சி இறுதிக்கட்டத்தில் ஏவலர் களாகப் புலையன், நூவன், சிங்கன் என்று பலரைக் குறிப் பிடவும் காண்கிறோம்.

இப் பொதுநிலையன்றி, முதல் கட்டத்திலேயே புலவர் சில பெருக்கங்களையும் செய்திருக்க காணலாம். முதல் கட்டத்தில், மோகித்த தலைவியைச் சமாதானப்படுத்தத் தாயே வந்து முயல்கிறாள். பிற சகிமாரும் இருக்கின்றனர். குறத்தியை அழைக்குமாறு தாயே கூறுகிறாள். அடுத்த கட்டத்திலும் தாயிருந்து குறத்தியுடன் வாதம் செய்கிறாள். இப்படியெல்லாம் பெருக்கங்கள் எழுந்துள்ளன.

## குறவஞ்சி இலக்கணம்

குறவஞ்சி நாடகத்துக்குப் பண்டைய பாட்டியல் இலக்கண நூல்கள் இலக்கணங் கூறவில்லை. ஏனெனில், அவையெழுந்த காலத்தில் குறவஞ்சி நாடகங்கள் செய்யப் பெறவில்லை. இவை தோன்ற ஆரம்பித்த பிறகு, சிறப்பாகக் குற்றாலக் குறவஞ்சி பாடப்பெற்ற பிறகு, ஒரு புலவருக்கு இந்தக் குறவஞ்சியின் உறுப்புகளையெல்லாம் இலக்கணமாகத் தொகுத்து அமைத்து வைக்கலாம் எனத் தோன்றியிருக்கிறது. அவர் அவ்வாறே குற்றாலக் குறவஞ்சியின் பொருள் அமைதியை மூன்று கட்டளைக் கலித்துறைப் பாடல்களாக எழுதி அவற்றை நவநீதப்பாட்டியல் ஏட்டின்பின் சேர்த்து வைத்தார். பிற பிற்காலப் பிரபந்தங்களுக்கும் இலக்கணம் எழுதி அவர் இவ்வாறு சேர்த்து வைத்த பாடல்கள் மொத்தம் 27. இவை திரு. வையாபுரிப் பிள்ளையவர்களுடைய நவநீதப் பாட்டியல் பதிப்பு (1943) பிற்சேர்வு 1 என்று சேர்க்கப்பட்டுள்ளன. இங்குக் குறவஞ்சியைக் குறித்த மூன்று கட்டளைக் கலித்துறைப் பாடல்களும் பின்வருவனவாகும்.

தலைவன் பவனிவால்நங்கை காமமுறல் மோகினி
வரலுலாப் போந்தோ னவனைத் தெரியமா
லாய்மதித்தென்
றலுமு தலியவுவா லம்பனம் பாங்கி வினாவல்லுரைத்
தலுமவ னைப்பழித் தல்புகழ் தல்தூது வேண்டலுமே.

அவனடை யாளும் குறத்தி வரல்கல் வளம்வினாச்சொல்
உவனூர் கிளைவளஞ் சொற்குறி சொன்னமை கூறல்வினா
அவடேப் பரவல்குறி நல்வரவு பரிசி லீடு
றவன்வரல் புள்வரல் கண்ணிகுத் தற்புட் படுத்தலுமே.

குறத்தியைக் காமுற்றுத் தேடல் குறவனப் பாங்கனொடு
குறத்தி யடையாளங் கூறல் குறவன் குறத்திகாண்டல்
குறவ னணிமுதற் கண்டை யுறவினா வல்லுரைத்தல்
குறத்தி யிவையுறுப் பெஞ்சாப்பா லான்குற வஞ்சியதே.'

மூலநூலாகிய நவநீதப் பாட்டியல் செய்யப்பெற்ற காலம் கி. பி. 14ஆம் நூற்றாண்டு. அக்காலத்தே குறவஞ்சியும் இல்லை, இப் பாடல்களும் இல்லை. இப் பாடல்களின் நடை மிகவும் பிழைபட்டதாயும் பிற்காலத்ததாயும் தெரிகிறது. குற்றாலக் குறவஞ்சியைப் பார்த்துச் செய்ததென்று கருத இடமிருப்பதால் இப் பாடல்களின் காலம் 18ஆம் நூற்றாண்டின் பிற்பாதியாயிருக்கக் கூடுமென்று முடிவு செய்யலாம். குறவஞ்சியிற் கண்ட செய்திகளை இது தொகுத்து கூறுகிறதே அன்றி இது குறவஞ்சிக்கு இலக்கணம் வகுக்கும் பழம்பாடலாகாது.

## முதல் சில குறவஞ்சி நாடகங்கள்

குறவஞ்சி என்னும் சொல்லின் பொருள் குறப்பெண். வஞ்சி-கொடி போல்வாள். இந்த நாடகத்தில் தலைவி வேறு இருந்தாலும், குறத்தியின் சிறப்புநோக்கி நூலுக்கே குறவஞ்சி என்று அழகாகப் பெயர் அமைக்கப்பட்டுள்ளது. மேல் வகுப்பைப் போற்றி நூல் செய்கின்ற முன்நிலை மாறி, நூல்கள் ஜனநாயக நிலைக்கு வருவதை இது காட்டும்.

முதலாவதாக, மேலே குறிப்பிட்டபடி 'மீனாட்சியம்மை குறம்' என்னும் பிரபந்தம் 17ஆம் நூற்றாண்டில் மதுரையில் தோன்றியிருக்கிறது. இது மதுரையில் வளர்ச்சி பெறவில்லை. ஆனால், தஞ்சையிலும் குருகூரிலும் குறம் என்னும் நிலையிலேயே வளர்ந்திருக்கிறது. வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி என்பது, குறவஞ்சி என்று பெயரிடப்பட்டிருந்தபோதிலும்,

குறம் என்னும் பிரபந்த வகையைச் சார்ந்ததேயாகும். காலம் சுமார் கி. பி. 1670 ஆகலாம். இது தஞ்சையை யாண்ட நாயக்க அரசர் விசயராகவ நாயக்கர் (1633—1673) காலத்தில் தோன்றியது.

இதுபோல 18-ஆம் நூற்றாண்டில் நம்மாழ்வார் மீது 'மகிழ்மாறன் பவனிக் குறம்' என்னும் நூல் பாடப் பெற்றிருக்கிறது. இலக்குமி தேவியே குறியுரைத்ததாகச் சொல்லும் 'இலக்ஷணக் குறவஞ்சி' 19-ஆம் நூற்றாண்டில் எழுந்தது. இதுவும் குறம் என்னும் வகையே. இப் பிரபந்தங்கள் யாவும் பொதுவாய்க் குறத்தி என்ற ஒரே பாத்திரத்தின் பாட்டும் ஆட்டமும் கொண்டவை.

குறத்தினும் வளர்ச்சி பெற்ற பிரபந்தமாகிய குறவஞ்சிப் பிரபந்தம் முதல் முதலாகத் தஞ்சையை ஆண்ட ஏகோஜி மன்னன் காலத்தில் தோன்றியது. இவர் பட்டமேற்றது கி. பி. 1676. இவருடைய ஆகரவு பெற்ற சிறந்த இசைவாணராக விளங்கிய பாபநாச முதலியார் **கும்பேசர் குறவஞ்சி** பாடினார். இதில் இம் மன்னனை ஏகபதி என்று குறிப்பிடுகிறார். 'நடனமாடித் திரிந்த உனது இடக்காலும் முடமானதேதையா?' என்று நிந்தா ஸ்துதியில் அமைந்த இவருடைய கீர்த்தனம் மிக்க புகழ் வாய்ந்தது. மற்றொன்று 'முகத்தைக் காட்டித் தேகம் முழுமையும் காட்டாத மூடுமந்திரம் ஏதையா ?' என்பது திருவாரூர்த் தியாகேசப் பெருமாள்மீது பாடியது.

இதற்கடுத்த சிறப்புடைய குறவஞ்சி, சகாஜி குறவஞ்சி பாடிய முத்துக் கவிராயர் இயற்றியதென்று கருதப்பெறும் **தியாகேசர் குறவஞ்சி**. இதுவும் திருவாரூர்த் தியாகேசப் பெருமான்மீது பாடப் பெற்றது. (விரிவான சுர அமைப்போடு 1970-ல் இது பதிப்பிக்கப் பெற்றிருக்கிறது). தஞ்சையில் ஆட்சி புரிந்த இரண்டாம் சகாஜி மன்னன் (1684—1712) ஆதரவில் இந் நூல் செய்யப்பெற்றமையால், இதன் காலம் 1700 என்று கருதக் கூடும்.

மேற்குறித்த இரண்டு சிறப்புடைய நூல்களும் குறவஞ்சியமைப்பை முழுமையும் பெற்றவை. இவற்றின் உடன் காலத்திலும் இவற்றையடுத்தும் நாடெங்கும் குறவஞ்சி நாடகங்கள் பிரசித்தமடைந்தன. நாடகமே தலத்து இறைவன் மீது பாடப் பெற்றவையே. இறைவன் சந்நிதியில் ஆங்காங்கு இவை விழாக்காலத்தில் பாடி நடிக்கப் பெற்றிருந்தன. பாடி

ஆடினோர் உருத்திரகணிகையரும் தளிப்பெண்டுகளும். முன் சொன்ன இரு குறவஞ்சிகளின் பின்னர்த் தோன்றியதே சிறந்த இலக்கியச்சுவை பொதிந்த, மேலகரம் திரிகூட ராசப்பக் கவிராயர் பாடிய, திருக்குற்றாலக் குறவஞ்சி. இது தோன்றிய நாள் தொடங்கி, குறவஞ்சி என்றாலே திருக் குற்றாலக் குறவஞ்சி என்றே பொருளாகிவிட்டது. கோயிலில் இக் குறவஞ்சி நடிக்கப் பெற்றதைக் கண்டு மகிழ்ந்த மதுரை நாயக்க மன்னரான முத்து விஜயரங்க சொக்கநாத நாயக்கர் நூலாசிரியருக்கு நிலதானம் செய்து செப்புப் பட்டயம் வழங்கினார். இதன் காலம் சகம் 1640 தை 12. (கி.பி. 1718). இந்த நூலின் காலத்திலிருந்து மிகவும் சிறப்பாகச் சுமார் முப்பது குறவஞ்சிப் பிரபந்தங்கள் தோன்றி வளர்ந்திருக் கின்றன.

குறவஞ்சிப் பிரபந்தத்தைப் பெரும் புலவர் பாடியிருக் கிறார்கள் என்பதையும் நாம் உணர்தல் வேண்டும். குறவஞ்சி ஓர் எளிய பிரபந்தம். ஆகவே, பாடினோரும் சாமானியப் புலவர்கள், பெரும்புலவர் அல்லர் என்று எண்ணுதல் கூடாது. சாதாரணமாகத் திருக்குற்றாலக் குறவஞ்சி பாடிய திரிகூட ராசப்பக் கவிராயர் திருக்குற்றாலப் புராணம் என்னும் பெரு நூலும், இத் தலத்துக்கு உலா, மாலை, வெண்பா, அந்தாதி முதலான பலவகைப் பிரபந்தங்களும் பாடிய பெரும் புலவர். வருணாபுரிக் குறவஞ்சி பாடிய மாரிமுத்தாப் பிள்ளை புலியூர் வெண்பா, பல பதங்கள் பாடியவர். அழகர் குறவஞ்சி பாடிய கவி **குஞ்சர பாரதி**, கந்த புராணக் கீர்த்தனை, பேரின்பக் கீர்த்தனங்கள் முதலியவை பாடியவர்.

### பின்வந்த குறவஞ்சிகள்

மூலக்கதை எல்லாவற்றிலும் ஒன்றாக இருந்தபோதிலும் புலவர்கள் ஆங்காங்குப் புதிய கற்பனைகளைச் சேர்த்துக் கொள்கிறார்கள். தலைவி காம விரகத்தால் பலவாறு அரற்றும்போது தென்றல், சந்திரன், மன்மதன், குயில் முதலியவற்றைப் பழிக்கிறாள் என்று எல்லோரும் நூல் செய்வார்கள். கடலைப் பழிப்பதாகவும் சிலவற்றில் காணப் படும். கூடல் இழைத்தல் பின்னும் சிலவற்றில் காணப் படுவது உண்டு.

பொதுவாக அனைத்திலும் இறைவன் வீதி உலா வந்தார் என்று சுருக்கமாகத்தான் சொல்லப்படும். ஆயினும் சில பிரபந்தங்கள் இறைவனுடைய உற்சவத்தை விரித்துக் கூறும்.

தலைவி பந்தடிக்கிறாள் என்றும், பந்தடிக்கும்போது வீதி வழியே தலைவன் உலாவரக்கண்டு காமுறுகிறாள் என்றும் சிலர் பாடுகிறார்கள். அம்மானையாட்டம் சொல்வதுமுண்டு. காமுற்ற தலைவி தலைவனுடைய மாலையை வாங்கி வருமாறு தன் பாங்கியை அனுப்ப, அவள் தலைவனுடைய அருளுக்கு அடையாளமாக மாலையை வாங்கி வந்தாள் என்று சில பிரபந்தங்கள் கூறும். பின்னும் சில, சென்ற பாங்கி குறத்தியை எதிர்ப்பட்டு, அவள் குறி சொல்லுவாள் என்று தலைவியிடம் அவளை அழைத்து வருவதாகவும் சொல்லும்.

நகுலமலைக் குறவஞ்சி, நூலின் தொடக்கத்திலேயே தலைவனுக்குத் தனியே தசாங்கம் கூறுகிறது. இதனுள் கலிவெண்பாவும் உண்டு. இங்கு இரண்டாம் முறை, சிங்கன் சிங்கியைத் தேடிவரும்போது, குறவஞ்சி வந்தாள் என்று மறுபடியும் அவள் பாடியாடும் காட்சியும் உண்டு. பல கடவுளருக்கு வணக்கம் பாயிரப் பகுதியில் விரிவாகச் சொல்வதைச் சிவமலைக் குறவஞ்சியில் காணலாம். இறுதியில் சோபனம் பாடி முடிப்பதையும் சிலவற்றில் காணலாம்.

அழகர் குறவஞ்சியானது மகளின் நிலைமை கண்டு தலைவியின் தாயானவள் மிகவும் வருந்திப் பாங்கியரைக் கொண்டு அவளுக்குச் சைத்தியோபசாரம் செய்வதாகவும், தலைவி தாயைக் கோபித்துரைப்பதாகவும் நூல் செய்யும்.

இசையும் ஆட்டமும் காரணமாக, கும்பேசர் குறவஞ்சி தோன்றிய காலம் முதல் குறவஞ்சி நாடகம் வளர்ந்தது மட்டுமன்றி இருபதாம் நூற்றாண்டிலும் இது புலவர்களுடைய மனத்தை மிகவும் கவர்ந்திருக்கிறது. பலர் இக்காலத்தில் குறவஞ்சிப் பிரபந்தம் பாடியிருக்கிறார்கள். அவற்றுள் வரதநஞ்சைய பிள்ளை பாடிய **தமிழரசி குறவஞ்சி** என்பது தமிழ்ப் பற்றினாலும் இலக்கிய ஆர்வத்தினாலும் செய்யப் பெற்றது. இந்த நூற்றாண்டில் பரதநாட்டியத்துக்குப் புதிதாக ஆதரவு பெருகியபோது, குறவஞ்சி நாடகத்துக்கும் ஆதரவு உண்டாயிற்று. கலை வளர்க்கும் நிறுவனங்கள், குறவஞ்சி நாடகத்தை நவீன இசை நாடக சாதனங்களின் துணைகொண்டு விரிவாய் மேடையில் சபைகளில் நடிக்கும் நிலை பரவிற்று. இதற்கென்று தண்டபாணிப் பிள்ளை சிற்றம்பலக் குறவஞ்சி பாடி அரங்கேற்றினார். திருநெல்வேலி குறுக்குத்துறைக் குறவஞ்சி என்பது பண்டைய மரபிலேயே இக்காலத்தில் புதிதாக எழுதப் பெற்ற குறவஞ்சி; வித்துவான் ஆறுமுகன் பாடியது (1972). இதில் முதுதாதி

ஒருத்தி தோன்றி, தலைவியின் நிலையை அறிந்து, பிற ஏற்பாடுகளைச் செய்கிறாள். நெல்லைக் குறவஞ்சியில் காதல் நோயால் வருந்தும் தலைவியைத் தோழிமார் மேடைக்கு அழைத்துச்சென்று சைத்தியோபசாரம் செய்கிறார்கள்.

குறவஞ்சிப் பிரபந்தங்கள் தலப் பெயரைச் சார்த்தியும், இறைவன் பெயரைச் சார்த்தியும் வழங்குவதே பொது நியதி. மக்கள்மீது பாடப்பெற்றவை தலைவர் பெயரைச் சார்த்தி வழங்கும். இந்த இயல்புக்கு மாறாக, தமிழ்ப் பற்றால் விளைந்த தமிழரசி குறவஞ்சி, தலைவியாகிய தமிழரசியின் பெயரால் வழங்கும். இது 20ஆம் நூற்றாண்டு. இதே நூற்றாண்டில் தோன்றிய **கூட்டுறவுக் குறவஞ்சி, பாரத சுதந்தரக் குறவஞ்சி** இரண்டும் பொருளால் பெயர் பெற்றன.

மயிலைக் குறவஞ்சி என்பது சம்பிரதாய முறையில் மயிலைக் கபாலீசரைப் போற்ற எழுந்த இருபதாம் நூற்றாண்டுக் குறவஞ்சியாகும்.

பொய்கைப்பாக்கம் குறவஞ்சியும் குன்றாக்குடிக் குறவஞ்சியும் வசனத்தை அதிகம் பயன்படுத்தக் காண்கிறோம்.

**பாடலும் வசனமும்**

குறவஞ்சி நாடகம் தோன்றிய காலம் வரையில், தமிழ்ப் பிரபந்தங்களிலோ வேறு காவியங்களிலோ உரைநடை இடம் பெறவில்லை. விதி விலக்குகள் சில உள்ளன. பெருந்தேவனார் பாரத வெண்பா (9 ஆம் நூற்றாண்டு), வெண்பாவும் (சில விருத்தப் பாக்களும் சில அகவற் பாக்களும்), உரைநடையும்; உரைநடைப் பகுதி மணிப்பிரவாளம் (அதாவது தமிழ்மொழியும் வடமொழிச் சொற்களும் விரவிவரும் தமிழ் நடை). அதன் பின் இந்த மணிப்பிரவாள முறையில் அமைந்த இலக்கியங்கள் மிகவும் குறைவு. (உதாரணம் — சீவசம்போதனை என்னும் சைனத் தமிழ்க் காவியம்). குறவஞ்சி நாடகம் தோன்றிய காலம் 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்று முன்னமே காட்டினோம். இக்காலப் பகுதியில்தான் உரைநடை முறையாகத் தமிழ்ச்செய்யுள் நூலுள்ளும் இடம் பெறுகிறது; குறவஞ்சி நாடகம், நாடகத் தமிழும், இசைத் தமிழும் ஆயினும், செய்யுள் நூல் என்று சொல்லத் தடையில்லை.

குறவஞ்சி நாடகம் குறத்திலிருந்து வளர்ந்தபோது, குறத்தில் இயல்பாகவுள்ள இசையையும் நடனத்தையும் அப்படியே தழுவிக் கொண்டது. குறத்தில் குறத்தியொருத்தியே ஆடிக்கொண்டே பாடுகிறாள். ஆனால் குறவஞ்சி நாடகம் குறத்தி மட்டுமல்லாமல், தலைவி, அவளுடைய தோழி, குறத்தியின் கணவனான குறவன், அவனுடைய தோழன் ஆகிய நால்வரையும் அதிகப் பாத்திரங்களாகக் கொண்டிருக்கிறது. சொல்லும் போது இவர்களுடைய பேச்சும் செயலும், இசையும் நாடகமாக ஆக்கிக்கொண்டது. இவ்வனைவருடைய செயல்கள் முழுமையும் ஆட்டம்; சொல் முழுமையும் தரு என்று சொல்லப்படும். தருவாவது பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் உறுப்புகளோடு அமைந்த கீர்த்தனம்; சில சமயம் அனுபல்லவி இல்லாமல் இருக்கலாம். சரணங்கள் தவறாமல் மூன்று இருக்கும்; பல சமயம் மூன்றுக்கு மேலும் நான்கு இருப்பதுமுண்டு, பல்லவி அனுபல்லவி இல்லாமல் சரணங்களே இருக்கும்போது, அதை ஆசிரியர் சிந்து என்று சொல்கிறார். சிந்தும் இசைப் பாட்டுத்தான், பல குறவஞ்சிகளில் தரு, சிந்து முதலியவற்றுக்கு இராக தாளம் தருக்களிலேயே குறிப்பிட்டிருக்கும். இதனால் இவற்றின் இசைத் தன்மை சிறப்பாய்க் கருதப்பட்டது என்பது நன்கு விளங்கும். சில ஏடுகளில் இக் குறிப்பு எழுதப்பெறவில்லை.

இச் சரண உறுப்பு ஒரு வகையில் ஒத்தாழிசைக் கலிப்பா என்னும் பழைய யாப்பு வகையில் அடங்கிய தாழிசைப் பகுதியாகும். தாழிசை என்னும் பெயரே இதன் பாடல் அமைப்பை நன்குணர்த்தவல்லது. தாழிசையாவது, தாழம் பட்ட ஓசையையுடையது; அதாவது நிறுத்திச் சவுக்க காலத்தில் பாடப்படுவது என்று பொருளாகும். எனவே, குறவஞ்சி நாடகத்தில் வரும் தருக்களும் சிந்துப் பாட்டுகளும், இசைப் பாட்டுகள். இவை நிறுத்திப் பாடுவதற்கென்றே ஏற்பட்டவை. நம் காலத்துப்பாடிய ஒரு குறவஞ்சியாசிரியர் நொண்டிச் சிந்து பாடுகிறார். இது குறவஞ்சியமைப்புக்குச் சிறிதும் ஒத்ததன்று.

அபூர்வமாய்ச் சில சமயங்களில் குறத்தி சில வருணனைகளைத் தருக்களாக அல்லாமல் அகவற் பாடலாகக் கூறுதலும் உண்டு. இதைப் பொய்யாமொழியீசர் குறவஞ்சியில் பரக்கக் காணலாம். பின்னும் கவிகூற்றாகச் செய்திகள் வருவதுண்டு. இது பெரும்பாலும் கலித்துறையாகவும் கலிப்பாவாகவும் சொல்லப்பெறும். இதை எல்லாக் குறவஞ்சிகளிலும் காண

லாம். பொய்யாமொழியீசர் குறவஞ்சியில் இப் பகுதி வெண் பாவாகவும் அதிகம் அமைக்கப்பெற்றுள்ளது.

இவையன்றி, மற்றோர் அமைப்பு வசனமாக உள்ள பகுதி வினாவும் விடையுமாக உள்ள பகுதி. சில சமயம் இவ்வாறு இருக்கக் காண்கிறோம். நூலிறுதியில் உள்ள சிங்கன்—சிங்கி வாக்குவாதம். இவ்வாது உள்ள வாதம், வினா விடைப் பகுதி; ஆனால் இது கண்ணிகளாக—இசைப்பாடல்களாகவே எங்கும் இருக்கக் காண்கிறோம். மற்றும் தலைவியும் தோழியும் பேசிக் கொள்ளும் இடங்களில் பிற்கால ஆசிரியர் சிலர் வசன மாக அமைத்திருக்கிறார்கள். இதைக் குறவஞ்சியில் பரக்கக் காணலாம். கவிகூற்றாக வரும் பகுதியைச் சரபேந்திரர் குறிஞ்சி வசனமாக அமைத்துக் காட்டுகிறது. ஆனால், இது மிகவும் சுருங்கிய பகுதி ; சிதம்பரக் குறவஞ்சியில் பின்னும் சுருக்கம். பல பிரபந்தங்களில் வசனப் பகுதியே இல்லை— குற்றாலக் குறவஞ்சி, அழகர் குறவஞ்சி போன்றன.

எனவே முழுமையும் இசையும் ஆட்டமுமாக அமைந்த இந்தப் பிரபந்தத்தில், நாடகப் பாங்கிற்கேற்ப வளர்ந்து வரும் இலக்கியத்தில் வசனத்துக்குரிய இடத்தையும் அறிந்து ஆக்கி யோர் சிலர் சுருக்கமாய் ஒரு வாக்கியமாகவோ, விரிவாகப் பல வாக்கியங்களாகவோ வசனத்தையும் அமைத்துக் கொண் டிருக்கிறார்கள் என்று காண்கிறோம்.

இதையொட்டி இலக்கிய வளர்ச்சிபற்றி ஒரு கருத்து இங்குக் காணத்தகுந்தது. குறவஞ்சி நாடகம் பாமர ரஞ்சிதமாக எங்கும் பரவிய காலத்தில், வேறு நாடகங்களும் எழலாயின ; காலம் 19 ஆம் நூற்றாண்டு. இவை பெறும்பாலும் பாரதக் கதைகளைக் கொண்டமைந்தவை. இராம நாடகக் கீர்த்தனை, நந்தனார் சரித்திரக் கீர்த்தனை போன்றவை வேறு. இவை கீர்த்தனை என்றே பெயர் படைத்தவை. இங்கு நாம் சொல்பவை வேறு. இவை விலாசம் என்று பெயரிடப் பெற்றிருந்தன. இவை குறவஞ்சி நாடகப் பாணியில் அமைந் தவை. பல பாத்திரங்கள், பலவகை யாப்புகள் முக்கியமாக இசைப்பட்டதாகிய தரு என்பது; இது கீர்த்தன வடிவமே. இவ் விலாசங்கள் முழுமையும் இசை நாடகங்கள். முதலில் இவை இதிகாசச் சரித்திரங்களையொட்டி எழுந்து, பின்னால் சமூக வாழ்க்கையைப் பிரதிபலிப்பனவாகவும் மாறின. உதாரணம் டம்பாச்சாரி விலாசம், தாசில்தார் நாடகம் முதலியன. இவ்வாறு குறவஞ்சி நாடகங்கள் வேறுவகை இலக்கிய வளர்ச்சிக்கும் துணையாயின என்று அறிகிறோம்.

## குளுவ நாடகம்

குளுவ நாடகம் என்பது 19 ஆம் நூற்றாண்டில் வழக்கத்திற்கு வந்த ஒரு புதிய பிரபந்த வகை. இதில் சிறப்பாக எதுவும் இல்லை. இதனைக் குறவஞ்சி நாடகத்தின் இறுதிப் பகுதி என்று சொல்லலாம். முதல் இரு பகுதிகளாகிய தலைவன் பவனி, தலைவி காதல், குறத்திக் குறி என்பன இங்கில்லை. இங்குச் சொல்லப்பட்ட பொருள் குறவன், தன் பாங்கன் குளுவனை அழைத்துக்கொண்டு சிங்கியைத் தேடிச் செல்கின்ற ஒரே காட்சி. ஒரு வகையில் இது தொடக்கத்தில் கூறிய குறம் என்னும் பிரபந்தத்தைப் போன்ற மற்றொரு பகுதி என்று கருதலாம். குளுவ நாடகத்தின் பொருள் பின் வரும் அமைப்புடையது. குறவன், இங்குக் குளுவன் என்று பெயர் பெறுகிறான். இவன் தன் பாங்கனுடன் வேட்டையாடுகிறான். வேட்டை முடிவில் தன் சிங்கியைக் காணாது அவளை நினைத்துப் புலம்புகிறான். பாங்கன் குறத்தியின் உருவ அடையாளம் கேட்டறிந்து அவளைத் தேடுகிறான். அவளைக் கண்டறிந்து குளுவனிடம் திரும்பி வந்து சொல்கிறான். அதன்மேல் குளுவன் சென்று அவளைக் கண்டு முதலில் ஐயுற்றுப் பின் மெல்லச் சுவையாக உரையாடுகிறான். அவனுடைய ஊடல் முடிவில் நீங்கி இருவரும் ஒன்றுபட்டுத் தங்கள் இடம் சென்று சுகமே வாழ்கிறார்கள்.

செட்டிநாட்டுக் கோட்டூர் நயினார் அகத்தீசுவரர்மீது வெள்ளையப் புலவன் பாடிய கோட்டூர் நயினார் குளுவ நாடகம் (இரண்டாம் பதிப்பு) 1930இல் அச்சிடப்பட்டது. இங்குக் குறவன், குளுவன் என்று சொல்லப்பெறுகிறான். தன் பச்சிலை வல்லமை இவன் கூறுவது ஒரு சிறப்பான அம்சம். வழக்கமாயுள்ள குளுவன், இங்குப் பாங்கன் எனப் படுகிறான். குறவஞ்சி பெண்பால் பெயரை வைத்துக் குறிப்பிடப்படுகிறது. இந்தவகை நூல்கள் குறவனாகிய ஆண்பால் பெயரை வைத்துக் குறிப்பிட்ப்படுகின்றன. நூல் மலைக் குளுவன் நாடகம் என்றும் பெயர்பெறும். இந் நூல் செய்த ஆசிரியரே இத் தலத்துக்குக் 'கோட்டூர் நயினார் பள்ளு' என ஒரு பள்ளுப் பிரபந்தமும் பாடியிருக்கிறார். இங்கு சுவாமி கரத்தீசர், அம்மை அழகீசுவரி.

மற்றொரு குளுவ நாடகம் தேவகோட்டை அருணாசலம் செட்டியார்மீது, பிரசித்தி பெற்ற சரவணப் பெருமாள் கவிராயர் பாடியது. அச்சு (1914). இதன் பாயிரப் பகுதியில் விரிவாகப் பல தெய்வங்களுக்கு வணக்கம் கூறுகிறார்.

நொண்டிச் சிந்தும் இதனுள் பயில்கிறது. இக் குறவன் சிந்து, ஞானம் முதலியன கூறுகிறான்.

டாக்டர் சாமிநாதையர் நூல்நிலையத்தில் அச்சாகாத இரு குளுவநாடகப் பிரதிகள் உள்ளன. இவற்றுள் ஒன்றான சின்னமகிபன் குளுவநாடகம் என்பது அண்மையில் அச்சிடப் பெற்றுள்ளது.

## பாட்டுடைத் தலைவர்

உலா, தூது போன்ற பிரபந்தங்களை ஒப்ப, குறவஞ்சிப் பிரபந்தமும் முதன் முதலில் தெய்வத்தைச் சார்த்தியே பாடப் பட்டு வந்துள்ளது. 19ஆம் நூற்றாண்டுத் தொடக்கம்வரை யில் பாடப்பட்ட எல்லாக் குறவஞ்சி நூல்களும் இறைவனையே பாடி உள்ளன. இக் காலத்தில்தான் இவை மனிதரைச் சாத்திப் பாடும் மரபு தொடங்குகிறது. குறவஞ்சிப் பிரபந் தங்கள் பெரும்பகுதி சிவபெருமான் எழிந்தருளிய தலங்கள் பற்றியனவாகும். கும்பேசர், தியாகேசர், திருக்குற்றாலம், பொய்கைப்பாக்கப் வருணாபுரி, வண்ணவாடிக்கரை, நீலகண் டேசர், நெல்லை, திருச்செங்கோடு, அர்த்தநாரீசர், சிக்கல் நவநீதேசர் முதலியன இவ்வாறு எழுந்தவை, திருமலையாண் டவர் குறவஞ்சி விராலிமலை, சிவமலை, நகுளமலை, திருப் போரூர்க் குறவஞ்சி, குன்றாக்குடிக் குறவஞ்சி, அலகு மலை வேலவர் குறவஞ்சி போன்றன முருகன் மீது பாடப்பெற் றவை. அழகர் குறவஞ்சியும், சோலைமலைக் குறவஞ்சியும் திருமால் பரமாகப் பாடப் பெற்றவை. பெத்தலகேம் குற வஞ்சி என்பது கிறித்து பரமானது. இலங்கையில் டச்சுக்கார ரான டிமெல்லோ ஆதரவில் மருதப்பக் குறவஞ்சி செய்யப் பெற்றது.

ஞானரத்தினக் குறவஞ்சி என்பது ஒரு முகம்மதியப் புலவர் பாடியது. இது ஞானமே பொருளாக உடையது. இது பெயர் தான் குறவஞ்சியே தவிரக் குறவஞ்சிக்குரிய இலக்கணங்கள் ஒன்றும் இதனிடம் இல்லை. குறவஞ்சிப் பிரபந்தத்தின் இறுதிப் பகுதியில் குறத்தி பரிசிலாகப் பெற்று அணிந்திருக் கின்ற ஒவ்வோர் அணிகலனையும் சுட்டிக்காட்டி இஃது என்ன என்று சிங்கன் வினவ, சிங்கி இஃது இன்னது என்று விளக்கு கிறாள். அந்தப் பகுதியே இக் குறவஞ்சியாகும். அணி கலனுக்குப் பதிலாக இங்கு வேதாந்தப்பொருள் வருகிறது. ஒவ்வொரு பொருளாகச் சிங்கன் வினவ, சிங்கி விடை கூறு

கிறாள். இச்சிறு நூல் சிங்கன் சிங்கி வாதமாகிய கண்ணிகள் உடையது. இதற்கு எடுத்துக்காட்டு ஒரு பாடல் ;

'என்ன விதமாகத் தன்னை மறப்பது சிங்கி—நீ
ஒன்றைப் பொருந்தி ஒடுங்கி இருப்பது சிங்கா.'

முத்தானந்தர் குறவஞ்சி என்பது முழுமையும் ஞான மார்க்கத்தைச் சொல்லுகின்ற முழுக் குறவஞ்சி நாடகம். பூரண அமைப்பு உடையது. இங்கு எல்லாப் பாத்திரங்களும் உருவகமாய் வருகிறார்கள். இங்குத் தலைவனுக்குப் பதிலாக ஒரு சீடன், இறைவனுக்குப் பதிலாக ஞானகுரு. காதலுக்குப் பதிலாக ஞானத்தேட்டம்.

இறைவன் அல்லது மனிதர்மீது பாடப்பட்டிருந்தால் பாட்டுடைத் தலைவர் எப்போதுமே ஓர் ஆடவர். (உதாரணம் : சரபேந்திரபூபாலக் குறவஞ்சி, பாம்பண்ண கவுண்டன் குறவஞ்சி). ஆனால், அபூர்வமாய் 20ஆம் நூற்றாண்டில் தேவிபெயராலும் குறவஞ்சிகள் பாடப்பெற்றுள்ளன. திருவேற்காடு முத்துமாரியம்மன் குறவஞ்சி (அச்சு 1971) என்பது கருமாரிதாசர் பாடியது. தலைவி மதனவல்லி, இவள் தலத்து இறைவராகிய வேதபுரீசர் மீது காதல் கொள்ளுகிறாள். மாதவனே குறத்தியாக வருகிறான், குறத்தி, கருமாரி அம்மனை நினைத்துக் குறிசொல்வதால், நூலுக்குத் திருவேற்காடு கிருஷ்ணமாரி (கருமாரி) குறவஞ்சி என்று பெயர் வைக்கப் பெற்றுள்ளது.

மாத்தளை முத்து மாரியம்மன் குறவஞ்சி என்பது மரபு பிறழ்ந்தது. ஆசிரியர் நவாலியூர் சு. சொக்கநாதன், முத்து மாரியம்மன் உலா வருதல்கண்டு ஆடவர் எல்லோரும் காதல் கொள்ளுகிறார்கள். இது மிகவும் தவறான ஓர் அமைப்பு. (நூல் அச்சானது 1964, இலங்கை). இருமலச் செட்டி என்பான் காதல் நோய்தீர, குறத்தி தோன்றி முத்துமாரியம்மன் திருவடி அடையும் வழியை அவனுக்கு உணர்த்துகிறாள். இறுதியில் அவன் அம்மன் அருள் பெறுகிறான்.

மானிடத் தலைவர்மீது பாடப் பெற்றவை சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, குமாரலிங்கன் குறவஞ்சி, பாம்பண்ண கவுண்டன் குறவஞ்சி, காளியண்ணன் குறவஞ்சி எனப் பல. இவற்றுள் மணியனூர் ராசாக் கவுண்டர் குறவஞ்சி என்பது மோகனக் குறவஞ்சி எனச் சொல்லப் பெற்றிருக்கிறது. பெண்கள் வந்தாலே காதல்; காதல் வந்தால் மோகனம். இங்குக் குறவஞ்சி வருகிறாள். அவள் குறவனுக்கு மோகனமா

யிருத்தலால் நூல் மோகனக் குறவஞ்சி. இதே போலப் பள்ளுப் பிரபந்தங்களிலும், திருமால் பரமாகப் பாடப்பட்ட ஒரு பள்ளு, மன்னார் மோகனப் பள்ளு என்று பெயர் பெற்றிருப்பதும் அறியத் தக்கது.

பள்ளுப் பிரபந்தங்களில் வைசியப் பள்ளு ஆரிய வைசியர் சாதிப் பெருமை கூறியிருப்பது போல, இங்கும் சில குறவஞ்சி நூல்கள் சாதிப் பெருமை கூறும். இலக்ஷணக் குறவஞ்சி கூறுவது செங்குந்தர் பெருமை, அலகுமலை வேலவர் குறவஞ்சி கூறுவது ஓதாளர் குலப் பெருமை.

கூட்டுறவுக் குறவஞ்சி, பாரத சுதந்தரக் குறவஞ்சி போன்றன. தற்காலத்தைய சில இயக்கங்களைப் போற்றிப் பேசுவன.

**பிறநாடக வளர்ச்சி**

குறவஞ்சி நாடகத்திலிருந்து கிளைத்த இருவகை நாடக அமைப்புகளைக் குறித்து இங்குச் சில சொற்கள் சொல்லலாம். ஒன்று நொண்டி நாடகம். குறவஞ்சியில் பாத்திரங்கள் தாங்களே அரங்கில் தோன்றித் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு ஆடுகிறார்கள். கட்டியக்காரன் மாத்திரமல்லாமல், தலைவியும், தோழியும், குறத்தியும், குறவனும், தோழனும் தோன்றித் தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு ஆடுகிறார்கள்; இது போன்ற அறிமுகமே நொண்டி நாடகம். ஒருவன் காமுகனாகிப் பின் திருட்டில் ஈடுபட்டு அக்குற்றத்துக்காகக் கைகால் வெட்டப்பெற்று நொண்டியாகித் தன் வரலாற்றைத் தானே சொல்லி அரங்கில் ஆடுவான். இதுவே நொண்டி நாடகம். இதில் பாத்திரம் நொண்டி ஒருவனே. அவன் ஆட்டம் இசையோடு பாடல், நொண்டிச் சிந்து. நொண்டிச் சிந்து என்னும் பெயர் வந்த காரணம், இச் சிந்து யாப்பில் இரண்டு பாதிகளாயுள்ள ஒவ்வோர் அடியிலும், முதல் பாதியில் ஒருசீர் குறைந்து நொண்டியாயிருப்பது, இதை இங்கு விரிக்க இடமில்லை. சிலர் எழுதியுள்ள மாதிரி நொண்டி பாடுவதால் இது நொண்டிச் சிந்தாயிற்று என்று கருதுவது பிழை. முதல் நொண்டி நாடகம் மதுரகவிராயர் பாடிய திருக்கச்சூர் நொண்டி நாடகம். இதைப் பின் பற்றிப் பல எழுந்துள்ளன, இவற்றின் பொருள் காமச் சுவையை விரித்து, காமத்தால் வரும் கேட்டை உணர்த்துவது. இந் நொண்டி நாடக அமைப்பு, குறவஞ்சி நாடகத்திலிருந்து கிளைத்ததென்றே கருதவேண்டியுள்ளது.

மற்றொரு கிளைப்பு, முழுமையான இசை நாடகங்கள். 18ஆம் நூற்றாண்டின் பிற்பாதியிலிருந்து 19ஆம் நூற்றாண்டு முடிய, எண்ணிலடங்காத இசை நாடகங்கள் தமிழில் எழுந்துள்ளன. இவை யாவும் பாடி ஆடப்பெற்று வந்தன. இவற்றைச் செய்தோர் பெரும்புலவரும், சாமானியப் புலவரும். இவை வெறும் தெருக் கூத்தல்ல; இலக்கியமாய் அமைந்த கூத்து. இசை நாடகம் என்பதே பொருத்தமான பெயர். மகாபாரதக் கதைகள் யாவும் இவ்வாறு இசை நாடகமாக எழுந்து நடிக்கப் பெற்றிருந்தன. மற்றும் வியாக்கியானங்கள்—துருவ சரிதம், இரணிய சரிதம், ருக்குமாங்க சரிதம், பிரகலாத சரிதம் பப்புரவாகனன் கதை, புரூரவன் கதை முதலியன ; வரலாற்றுக் கதைகளான தேசிங்குராசன் கதை முதலியன. பின்னால் பலவேறு பிரிவுகள்—உதாரணம், வல்லாள மகாராசன் கதை போன்றன. இவற்றுக்கு விலாசம் என்றும் வாசகப்பா என்றும் பெயர்கள் வழங்கின. வாசகப்பா என்று வழங்கியதற்குக் காரணம் இவை வாசகமும் (வசனம்) பாவும் (பாட்டு) ஆக இருந்தமையே.

பிற்காலத்தார் இவற்றை 'யட்சகானம்' என்று கூடச் சொல்லியிருக்கிறார்கள். இவ்வாறு சொல்வது தமிழ் மரபன்று. இவை யட்சகானத்தை ஒத்திருக்கலாம், ஆனால், இவை யட்சகானமல்ல.

இவ்விசை நாடகங்கள் முழுமையும் பாடியும் ஆடியும் நடித்தற்குரியன. ஆனால், நாடகக் கீர்த்தனைகள் இப்படியல்ல. உதாரணம்: இராம நாடகக் கீர்த்தனை, நந்தனார் சரித்திரக் கீர்த்தனை. இவற்றில் இசையம்சமே பெரிது ; ஆட்டம் இல்லை. இவை சங்கீத காலட்சேபத்துக்குரியவை. இவை இரண்டுமல்லாமல் வளர்ந்தவை இருபதாம் நூற்றாண்டுக்குரிய வசன நாடகங்கள். இவற்றில் ஆட்டமும் இல்லை, இசையும் இல்லை.

இங்கு எடுத்துக்காட்டிய பொருள் நொண்டி நாடகத்துக்குப் பின்வந்த இசை நாடகத்துக்கும் குறவஞ்சி நாடகமே தோற்றுவாயாக இருந்திருக்கலாம் என்பது.

**பொய்யாமொழியீசர் குறவஞ்சி**

இது பொய்கைப்பாக்கம் என்னும் சிற்றூரில் அமைந்துள்ள ஆலயத்தில் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமான்மீது பாடப்பட்ட ஒரு நல்ல குறவஞ்சிப் பிரபந்தமாகும். இதைப் பாடியவர் சிதம்பரம் என்பவரின் புதல்வரான தத்துவலிங்கம் என்பவர்.

இத் தலத்தில் இறைவன் பெயர் பொய்யாமொழீயீசர். அம்பிகை: சத்திய நாயகி. இக் குறவஞ்சி எல்லா அங்கங்களும் பெற்று விளக்கமாகவே இருக்கிறது. விநாயகர் வணக்கத்தில் தொடங்கி வாழ்த்தில் முடிகிறது. வழக்கம்போல் இதில் எல்லா உறுப்புகளும் பூரணமாயுள்ளன. எல்லாத் தெய்வங் களுக்கும் இரண்டாவது பாடலில் வணக்கம் சொல்லி முருக னுக்கு மட்டும் மூன்றாவது பாடலில் வணக்கம் சொல்கிறார். முருகன் குறமாதுக்குத் தலைவனானபடியால் அவனுக்கு இக் குறவஞ்சி நூலில் தனியாக வணக்கம் சொல்வது பொருத்த மாகும் என்பது அவர் கருத்தாகும்.

இவர் காலத்தில் இவ்வூரில் நல்லண்ணன், சின்னண்ணன், குட்டையன் என்ற வள்ளல்கள் இருந்து கோயிலுக்குத் தொண்டு புரிந்தார்கள்; இவருக்கும் ஆதரவு நல்கினார்கள் என்று அறிகிறோம்.

## நூல் அமைப்பு

கற்பக விநாயகர் காப்பு, நாமகள், முருகன் முதலியோர் வணக்கத்தோடு நூல் தொடங்குகிறது. சம்பிரதாயப்படி மங்களம் முதலில் அமைந்துள்ளது. பொய்யாமொழியீசர் பவனி வருகிறார். கட்டியக்காரன் எச்சரிக்கை சொல்லிப் பாடி வருகிறான், தலைவி வருகிறாள். அவள் பெயர் வால (பால) கோகில மோகினி; அவளைக் கட்டியக்காரன் அறிமுகப்படுத்து கிறான். அவள் ஆடுகிறாள். பொதுவாக நூலில் செயல்க ளெல்லாம் தருக்களாக இருக்கும்; கவிகூற்றாக உள்ள பகுதிகள் மட்டும் வெண்பா, கலித்துறை அல்லது கொச்சகக் கலிப்பாவாக இருக்கும். தரு என்னும் பகுதி முழுமையும் ஆடுவதற்கு உரியது.

ஈசரைக் கண்டு மோகினி காதல் கொள்ளுகிறாள். மாலை நேரம், சந்திரோதயம், நிலவை நிந்தித்து தன் காதலைச் சொல்லி அவரை அழைத்து வருமாறு கூறுகிறாள். தென்றல் வீசுகிறது. அதையும் நிந்திக்கிறாள். குயில் கூவுகிறது. அதையும் கோபிக்கிறாள். பிறகு மன்மதனை விளித்து, அவனையும் நிந்திக்கிறாள். இந்த நிலையில் அவளுடைய பாங்கியான சரசசிந்தாமணி வருகிறாள். அவளுடைய ஆட்டம். அவளுடைய பற்களெல்லாம் கறுப்பு; இரண்டு மாத்திரம் வெள்ளை என்கிறார். அவளை முகமன் கூறி, இரு என்று சொல்ல, அவள் மோகினியின் சோர்வுக்குக் காரணம் கேட்கிறாள். மோகினி, தான் கொண்ட மையலைச் சொல்லி,

அவரை அழைத்து வரும்படியும், தான் வெகுமானம் தருவ தாகவும் சொல்கிறாள். பாங்கி, நல்லகுறி சொல்லவல்ல ஒரு குறத்தியை அழைத்து வருவதாகச் சொல்கிறாள். இதனோடு குறவஞ்சிப் பாடலின் முதல் கட்டம் முடிகிறது.

குறத்தி வருகிறாள். வருவதைச் சொல்லுமிடத்துப் பொய்கைப்பாக்கத்தில் திருப்பணி செய்த வள்ளல்களையும் ஈசரது தசாங்கத்தையும் மடக்கு நயம்பட ஆசிரியர் சொல்லு கிறார். குறத்தி குறிக்கூடையும் மாத்திரைக்கோலும் குழவியும் கொண்டு வருகிறாள். (குழந்தையின் பேச்சுப் பின்னர் வரவேயில்லை.) வந்த குறத்தி கசமுகன், சரவண சண்முகன், பொய்யாத நாயகி, சத்திய நாயகர் என்று வணங்கி ஆடுகிறாள். இவள் தெய்வக் குறவஞ்சி என்கிறார். மூன்று தருக்களில் இவளுடைய நடனம், பின் வாசல் தரு. ஈசர் வாசலின் பெருமை எல்லாக் குறவஞ்சிகளிலும் சிறப்பாகச் சொல்லப்படும். இது வள்ளல்களான நல்லண்ணன், சின்னண்ணன் இறைஞ்சும் வாசல், வாசலில் தண்டமிழ் மாமறை முழங்கும் என்கிறார்.

தலைவி நாட்டு வளம் கேட்கக் குறத்தி கூறியாடுகிறாள். எல்லா விடைகளும் ஆட்டமே. குறவர் குச்சு அமைக்கும் சிறப்பு, காட்டு விலங்குகள், மழை, தேனும் தினைமாவும். பின் மலைவளம் கேட்க, சொல்லுகிறாள். மலைகளைப் பிரமன் தங்கள் வசம் ஒப்புவிக்க, குறவர் கொடுக்கிறார்கள்—கந்தருக்கு வள்ளிமலை, குறுமுனிக்குப் பொதியமலை, கயிலையும் இமயமும் தங்கள் வசம். பின் மலைபடு திரவியம். சாதிப் பெருமை கேட்கிறாள். ஆமை, பூனை குத்தல், பன்றி நெய்யில் வேகவைத்தல், சாமை தினை, சங்குமணி, தேனும் கள்ளும், கணவனறியக் கொழுந்தனையும் கைபிடித்தல், கந்தரும் வால் மீகரும் எங்கள் சாதி என்கிறாள். பின் அவள் கற்ற வித்தைகள், பல சால வித்தைகள் சொல்கிறாள். பின், மோகினி, அவள் பார்த்த தேசம் வினவுகிறாள். குச்சரம், மலையாளம், சயிந்த வம், கொப்பரம் என்று சொல்கிறாள். தலங்கள்—55. தலங்கள் அடையின்றியே அடுக்கிச் சொல்லப்படுகின்றன. நதி தீர்த்த வளம் கேட்கிறாள்—25 சொல்லப்படுகின்றன. இவள் பார்த்த குறிகளைக் கேட்கிறாள். உமை, இலக்குமி, கங்கை, சரசுவதி, சந்திரமதி, இந்திராணி, அகலிகை, தமயந்தி, துரோபதை ஆகி யோருக்குச் சொன்ன குறிகளும், பெற்ற பரிசில்களும், பின்னர் மோகினிக்குக் குறியுரைக்க ஏற்பாடு செய்கிறாள். அலங்காரம், தோரணம், நிறைகுடம், நிறைநெல், நிறைவிளக்கு,

பிள்ளையார், பொரி, தேங்காய், தலைக் கெண்ணெய் (தன் குழவிக்காகலாம்); குறக்கூடை நாச்சியாருக்குச் சேலை, மாத்திரைக் கோலுக்கு வணக்கம், தட்சணை, தெய்வ வணக்கம் என்று சொல்லித் தன் இட்ட தேவதைகளைத் துதிக்கிறாள். பின் கை பார்த்துக் குறி சொல்லி, மோகினி மகிழ்ந்து தரும் பரிசில்களைப் பெற்றுப் போகிறாள். இத னோடு இரண்டாம் கட்டம் முடிகிறது.

குறத்தியின் கணவனான குறவன் தன் நண்பன் குளுவ னோடு பறவை வேட்டைக்குப் புறப்பட்டு வருகிறான். பறவைகள் கூட்டமாக நந்தவனத்தருகே, வந்து சேருகின்றன. இவர்கள் சத்தப்படாமல் கண்ணி வைக்க, அவை கண்ணியில் சிக்குகின்றன. இவற்றைப் பிடித்தபின் குறவனான சிங்கன் தன் மனைவி சிங்கியைக் காணாமல் தேடிப் புறப்படுகிறான். அவளுடைய அழகு, அவளைக் காட்டினால் என்ன தருவாய்? என்று குளுவன் கேட்க, பலவாகிய மருந்துகள் மூலிகைகள் முதலியன தருவதாகக் குறவன் கூறுகிறான். அவளைச் சிலர் காட்ட இவன் காண்கிறான்.

அவள் பரிசில் பெற்ற அலங்காரம் கண்டு அடையாளம் புரியாமல் குரல் சாடையால் அவளென்றறிந்து அவளோடு சல்லாபமாய்ப் பேசுகிறான். பெற்ற அணிகள் ஒவ்வொன் றாய்க் கேட்டு அறிந்து, பின் இருவரும் தங்கள் குச்சுக்குப் போகிறார்கள். வாழ்த்தோடு நூல் முடிகிறது.

**ஆசிரியர்**

இவர் தத்துவலிங்கன் என்னும் பெயருடையவர். இப் பெயரை நூலிறுதி வாழ்த்துப் பாடல்

'மகிதலமேற் சிதம்பரதத் துவலிங் கையன்
மதுர கவியுந் தழைத்து வாழிதானே!' —65

என்று கூறுவதாலும், நூல் இறுதியில் உள்ள ஏடெழுதினோர் குறிப்பினாலும் அறிகிறோம். 7ஆம் பாட்டிலுள்ள தத்துவ லிங்கம் என்னும் தொடர் இறைவனைக் குறிப்பது; ஆசிரியர் பெயரையும் குறிப்பதென்றும் கொள்ள இடமுண்டு. இவர் பொய்கைப்பாக்கம் என்னும் ஊரினர். இவர் தந்தை சிதம் பரம் என்ற பெயருடையவர். அக்காலத்தில் அவ்வூரில் வாழ்ந்த வேளாளர் குலத்தில் பிறந்தவர்களான நல்லண்ணன், சின்னண்ணன் என்ற வள்ளல் இருவர் இவருக்கு ஆதரவு தந்திருக்கிறார்கள். நூலில் பல பாடல்களில் இவர்களைப்

புகழ்கிறார். சின்னண்ணன் என்பவர் நாங்கூர் ஐயம் பெருமாளின் புதல்வர் என்று அறிகிறோம் (பாடல் 29)

இங்கித கேள்வி ஈகைநன் னீதி
பெற்றவர் நாளும் பிரபலம் படைத்து
உத்தமன் கருணை ஓங்கிய புருஷன்
நறைமலர்ப் பொழிலாண் நாங்கூர் தன்னிற்
பிரபல அய்யம் பெருமாள் உதவும்
சின்னண மகிபன் ........'

மற்ற வள்ளல் அரிய புத்திரன் புதல்வனாகிய நல்லண்ணன்.

'சின்னண மகிபன் சிந்தையில் மகிழ்வாய்
மன்னிய துணையாய் வந்தகெம் பீரன்
அரியபுத் திரவேள் அருளும்ஓய் யாரன்
நரபதி யான நல்லண மகிபன்.' —29

இந்த இருவரும் ஆலயத்துக்குத் திருவிளக்கு, தினசரிக்கு வேண்டிய படித்தரக் கட்டளை முதலிய அனைத்தையும் அமைத்திருக்கிறார்கள். இவர்களை இந்த நூலில் பின்னும் நான்கு இடங்களில் இவ்வாசிரியர் சிறப்பாகப் போற்றுகிறார். 'நல்லண்ணன்' சின்னணன் இறைஞ்சும் நாதனுடைய வாசலிது. (34-3); 'ஐயன் பெருமாள் சின்னணன் அகம் மகிழும் நீல மார்பன்', கலைபடைத்த் நல்லணன் குட்டையன் பணி சத்திய வாசகர் (37); நல்லணமகிபதி சின்னண மகிபதி நயதுதி பெறும் நீதா (43); 'சிந்தையில் அன்பான சின்னணன் நல்லணன் துதி கொண்டருளும் பொய்யாதவர் (59)' என்னும் இடங்கள் காகண் 37ஆம் பாடல் குட்டையன் என்பவரையும் போற்றுகிறது.

இவ்வாசிரியர் சிறந்த பத்திமான் என்பது நூலால் தெரிகிறது. தோத்திரங்கள் மிக்க நயமாக அமைந்துள்ளன. விநாயகர், நாமகள், திருமால், இலக்குமி, பார்வதி, பல கடவுளர், தவமுனிவர், முருகன் ஆகியோரை வணங்குகிறார். முன்கூறிய வள்ளல்கள் செய்த திருப்பணிகளை இவர் குறிப்பிடுவதே இவருடைய பத்தியைக் காட்டும். இறைவன் திருவுலா வருவது கும்பிட்டோர் வினையைப் போக்க என்பார் (67); அப்படியே இந்நிலத்தில் அன்பரை ஈடேற்றியாளப் பாரில் (பவனி) வரலுற்றார் என்று சொல்வதும் திருவிழாத் தத்துவத்தை நன்கு உணர்ந்து சொல்வதாகவுள்ளது (5). பூதிசாதனம் என்று திருநீற்றைப் பல இடங்களில் போற்றி உரைக்கிறார். சைவக் கருத்துகளை நூலெங்கும் காணலாம்.

'ஆணவ மாமாயைக் காமியத்தில் அழுந்தினவர்க் கரிய சோதி' என்பது ஒரு தொடர் (10). சிவ பராக்கிரமச் செயல்கள் அநேகம் குறிப்பிடுகிறார். சிவ தலங்கள் 55 அடுக்கிச் சொல்கிறார்.

இவர் செந்தமிழ் நடையிலேயே நூலைச் செய்கிறார். பேச்சு மொழிகள் பல காணப்பட்டாலும், இலக்கண வரம்பை மீறாமலும், செந்தமிழ்த் தன்மையில் குன்றாமலும் இவர் நூல் செய்திருப்பது சிறப்பு. இவருடைய குறவஞ்சி நூல், சிறந்த பிரபந்தங்களில் ஒன்றெனக் கருதத்தக்கது.

நகைச் சுவையோடு பாடுமிடங்களும் உள்ளன. குறவன் தான் 'ஏழரைக் கழுதை பரிசம் போட்டுக் குறத்தியை மணந்தான்' என்னக் குளுவன், 'ஏழுக் கழுதை அர்த்தமாகிறது' ஆனால், அரைக் கழுதை எப்படியிருக்கும்?, என அவன் அரைக் கழுதையாவது குட்டிக் கழுதை என்பது நகை விளைவிப்பது.

பாங்கியை வருணிக்கும்போது, அவள் பல்லில் இரண்டு மட்டும் வெளுப்பு, மற்றவை கறுப்பு என்று இவர் சொல்வது, அவளை அப்படியே நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறது.

குறத்தி தான் பலருக்கும் குறி உரைத்ததைக் கூறும் சில சான்றுகள் அவர்கள் வரலாற்றுக்குப் பொருத்தமாகவும் சுவையாகவும் உள்ளன. உமைக்குச் சிவன் உருவில் பாதி ஆவாய்; இலக்குமி அரியின் மார்பில் வாழ்வாய், கங்கை—கணவன் தலைமேல், சரஸ்வதி புருஷன் நாவில் பதிந்து இருப்பாய், இந்திராணி—உனக்கு வெகு புருஷன், அகலிகை—நீ கல்லாவை தமயந்தி—நளன் வருவான், திரௌபதை—கர்ணன் மீதில் உனக்குக் கோபம், அம்பு குண்டு அப்பால் விளங்கவோர் வேர் தாறேன் என்றதும் சுவையான பகுதி; இவள் காலத்தில் துப்பாக்கியும் குண்டும் வழக்கத்துக்கு வந்துவிட்டன.

இராக தாளங்களை இவர் எங்கும் குறிப்பிடவில்லை. ஆனால், நூலின் பெரும்பகுதி தருக்கள். தருக்கள் பாடவும் ஆடவுமென்றே ஏற்பட்டவை. இங்கெல்லாம் இவர் தவறாமல் பல்லவி அனுபல்லவி சரணங்கள் மூன்று என்னும் அமைப்பிலேயே பாடல்களைச் செய்கிறார். அபூர்வமாய்ச் சில சமயம் சரணங்கள் மூன்றுக்கு மேற்பட்டும் அமைந்துள்ளன. இவ்வாசிரியர் நடனக்கலையும் அறிந்தவர் என்று எண்ண இடமுண்டு. 31 ஆம் பாடலிலும் பிற இடங்களிலும் நடனத்துக்கான குறிப்புகள் அமைந்திருப்பது காணத்தக்கது.

**காலம்**

இந்நூலின் நடையைப் பார்க்கும்போது, இதுவும் ஒரு பழைய நூல் என்றே தோன்றும். மேலும் நூல் இறுதியில் எழுதப்பட்ட காலக் குறிப்பினாலும் ஏட்டின் நிலைமையினாலும், ஏட்டின் காலம் 1840 சார்வரி வருடம் என்று கருதத் தோன்றும். இதற்கு ஒரு நூற்றாண்டாவது முந்திய நூலாக இது இருத்தல் கூடும்; எனவே இந்நூல் சுமார் 1750ஐஒட்டிச் செய்யப்பட்டிருக்கலாம் என்று கருதுவது பொருந்தும்.

## சில ஆராய்ச்சிக் குறிப்புகள்

**தசாங்கம்:** இவர் குறத்தி கூற்றாகத் தசாங்கம் சொல்லியிருப்பது சிறப்புடையது. மலை, நதி, நாடு முதலியவற்றை எல்லாம் தொனியால் இரண்டடிகளில் வெவ்வேறு பொருள் படுமாறு பாடுகிறார். **மலை** — வெள்ளிமலை. **நதி** — பம்பையாறு; இது பொய்கைப்பாக்கத்தின் அருகே ஓடுவது. **நாடு** — தொண்டை நாடு. **ஊர்** — பொய்கைப்பாகை. **தார்** — கொன்றை. **குதிரை** — வான் குதிரை. **யானை** — கிரியா சக்தி. **கொடி** — விடைக்கொடி. **பறை** — நாதப்பறை. **ஆணை** — சிவா என்னும் ஆணை. இங்கு, பரியும் பறையும் திருவாசகத் திருத் தசாங்கத்தை ஒட்டி அமைக்கப்பட்டுள்ளமை இவருக்குத் திருவாசகத்திலுள்ள ஈடுபாட்டைப் புலப்படுத்தும்.

**தலங்கள்** (பாடல் பெற்றவை)**:** அச்சிறுபாக்கம் (சிறுபாகை), அதிகை, அருணை, அவினாசி, ஆரூர், ஆலங்காடு, ஆனைக்கா, இன்னம்பூர், ஏடகம், ஓத்தூர், கச்சி (காரைக்காடு போலும்), கஞ்சனூர், கடையூர், கண்டியூர், கழுக்குன்று, காஞ்சி, காளத்தி, குடவாயில், கும்பகோணம், கேதாரம், சிராப்பள்ளி, செங்காடு, தில்லை, நள்ளாறு, நாகேச்சுரம், நாகைப்பட்டினம், நாரையூர், நாவலூர், பனந்தாள், புகலூர், புத்தூர், மங்கலக்குடி, மதுரை, மருகல், மறைக்காடு, மாயூரம், முல்லைவாசல், வாஞ்சியம், வாட்போக்கி, விருத்தாசலம், வீழிமிழலை, வெண்ணெய் நல்லூர், வேதாரண்யம் (மறைக்காடு என்றும் இது இருமுறை சொல்லப்பட்டுள்ளது).

**பிறதலங்கள்:** ஓரியூர், காரிகரை, பாபநாசம், பேரளம், போரூர் (முருகன்), முகவூர், வடகாசி, வழுவூர், வில்லை.

**நதிகள்** (தீர்த்தங்கள்)**:** கங்கை, கண்டகி, கம்பை, கமலநதி, கயை, கர்ணவேணி, கௌசி, கன்னியாகுமரி,

காவேரி, கிருஷ்ணவேணி, கோமுகி, சந்திரபாகை, சரயு, சரஸ்வதி, துங்கபத்திரை, நர்மதை,பம்பை, பாலி, பிரயாகை, பினாதி, பொன்முகரி, வைகை (வேகவதி).

**மலைகள் :** இமயமலை, கயிலை, கோணமலை, செந்தில் மலை, பொதிய மலை, வங்க மலை, வேளிமலை.

**இறைவர் பெயர் :** பொய்யா மொழியீசர், பொய்யாத நாதர், சத்திய வாசகர், சத்திய நாயகர், தத்துவலிங்கம்.

**தேவி பெயர் :** சத்திய நாயகி, பொய்யாத நாயகி. அம்பிகையைப் பொதுவாக அபிராமி, ஆதிசக்தி, உமா, கவுரி, குமரி, பராபரை, வரைமகள், தாருகவிநாசினி என்னும் பெயர்களால் குறிப்பிடுகிறார்.

**பாடல்கள் :** அகவற்பா 4 ; கலித்துறை 2 ; கொச்சகக் கலிப்பா 3 ; தரு 36 ; வெண்பா 5.

**விருத்தம் :** அறுசீர் விருத்தம் 8 ; எண்சீர் விருத்தம் 4 ; பன்னிருசீர் விருத்தம் 1 ; முருகு விருத்தம் 2 ; ஆக 65, தரு என்பது கீர்த்தனை வடிவம்.

**சில சொல் வடிவங்கள் :** இவர் குறிப்பிடும் சில பேச்சு வடிவங்கள் : ஆச்சு, ஆமுடா, ஊணாமலே, ஏடா கூடங்கள், ஒ யி லா க, கண்ணாட்டி, கருக்காணி, காயக்கப் பேச்சு, கூவுனார், கெம்பாரையே, சட்டவட்டமாக, கண்ண சல்லித்தனம், சளுக்கு, சலாம், சிக்கிச்சிடையே, செம்பட்டை, தக்கிச்சு, தோலாவே பக்கி, மூணு, பொங்கி, ராவுராக்கு, வாரையிலே, வலு, வாற, வாறார் விடறி, விலாரி, விருதா.

**துரை** என்னும் சொல் ஆடவரில் சிறப்புடையவரையே குறிப்பதாக ஆட்சியிலுள்ளது. இதற்குப் பெண்பாலாக வழங்கும் வடிவங்கள் துரைசானி, துரைச்சி, துரைமகள் போன்றன. குமரகுருபர சுவாமிகள் 'மதுரைத் துரைப் பெண்ணுடன் அம்புலீ ஆடவாவே' என்று மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் பாடுகிறார். ஆனால், இக் குறவஞ்சி ஆசிரியர் துரை என்னும் சொல்லைப் பெண்பாலாகவே பயன்படுத்துவது குறிப்பிடத்தக்கது: 'வாணு தலார் துரையு மாமென்று சொலிக்கவே வால கோகில மோகினி தோன்றி னாள் (13-3); மாதர் துரையெனும் நீதமிகு சுபவஞ்சி' (32-2).

**பழமொழிகள் :** ஈசர் நம்பின பேருக்கு எளியர்; கல்லிலேயும் நார் உரிப்பேன் ; திகைப் பூண்டு மிதித்தாற் போல்; மணலைக் கயிறாகத் திரிப்பேன்; மாதம் மூன்று மழை பொழியும் ; முற்பகை செய்திடிற் பிற்பகையாக முடியும்.

## இக் குறவஞ்சியின் பொருட் சுருக்கம்

விநாயகர் காப்போடு நூல் தொடங்குகிறது. பின் நாமகள் முருகன் முதலியோருக்கு வணக்கமும் மங்களமும். பொய்யா மொழியீசர் பவனி வருகிறார். கட்டியக்காரன் வந்து ஆடிப் பவனியை அறுமுகப்படுத்துகிறான். தலைவர் பவனி வருகையில் வாலமோகினி தோன்றி அவரைக் கண்டு காமுறுகிறாள். அவளுடைய வருணனை, காதல் கொண்டவள் விரக வேதனையால் நிலவையும், தென்றலையும், மன்மதனையும், குயிலையும் பழிக்கிறாள். அப்போது அவளுடைய பாங்கியாகிய சரச சிந்தாமணி வருகிறாள். அவளுடைய வருணனை, தலைவியை வினவத் தலைவி தன் காதலைக் கூறிப் பொய்யா மொழியீசர் தன்னிடம் வரச் செய்யுமாறு வேண்டுகிறாள். பாங்கி, 'ஒரு குறத்தி வந்திருக்கிறாள், அவள் தக்ககுறி சொல்லுவாள் அழைத்து வருகிறேன்' என்கிறாள்.

குறத்தி தோன்றுகிறாள். தோன்றிப் பொய்யா மொழியீசருக்குரிய தசாங்கம் பாடி, பின் வந்து குறி சொல்லுகிறேன் என்று வருகிறாள். அவள் வருகை பல தருக்களால் விரிவாகச் சொல்லப்படும். தலைவருடைய வாசல் பெருமையை அவள் பாடுவது சிறப்பு. தலைவி அவளுடைய நாட்டுவளம், மலைவளம், அவள் சாதியின் பெருமை, அவள் கற்ற வித்தைகள், அவள் கண்டு வந்த தேசங்கள், அங்குள்ள தலங்கள், தீர்த்தங்கள் ஆகியவற்றைக் கேட்கக் குறத்தி ஒவ்வொன்றையும் கீர்த்தனமாக விரிவாய்ச் சொல்லுகிறாள். பின்னர் அவள் முன்சொன்ன குறிகளையும், குறிசொல்லிப் பெற்ற பரிசில்களையும் கேட்க, குறத்தி அவற்றையும் விளக்கமாகச் சொல்லுகிறாள். அதன் பின் தனக்குக் குறிசொல்லும்படி கேட்கக் குறத்தி சொல்லுகிறாள். குறிக்கான இடம் அலங்கரித்து வைக்கும்படியும், குறக் கூடை நாச்சியாருக்குச் சேலை தரும்படியும், மாத்திரைக் கோலை வணங்கித் தட்சணை தரும்படியும் கேட்டு, பின் இஷ்ட தெய்வங்களை வணங்கித் தனக்கு நல்ல குறி சொல்லும் ஆற்றல் அருளும்படி வேண்டுகிறாள். பின்னர்க் குறத்தி, ''நீ விருப்பமுற்ற பொய்யா மொழியீசர் உனக்கு அருள் செய்வார்'' என்று சொல்லுகிறாள். அவ்விதமே அவளுடைய அருளுக்கு அடையாளமாகப் பாங்கி அவருடைய மாலையைக் கொண்டுவந்து தருகிறாள். தலைவியும் குறத்திக்குத் தக்க பரிசில்கள் தருகிறாள்.

குறத்தி இவ்வாறு இருக்க, அவளுடைய கணவனாகிய குறவன் குளுவனோடு வேட்டைக்குப் புறப்பட்டு வருகிறான்.

கண்ணி வைக்கும் விதங்களை அவனுக்குக் கற்றுக் கொடுக்கிறான். பறவைகள் கண்ணியில் அகப்படுகின்றன. பின்னர்க் குறவன் தன் குறத்தியைத் தேடி வருகிறான். அவள் அடையாளத்தை அவன் சொல்ல, கண்டோர் அவளிருக்குமிடம் சொல்லுகிறார்கள். அடையாளப்படி அவன் அங்கு வந்த அவளைக் கண்டு அவள் பெற்ற பரிசில்களால் விளைந்த அவள் உருவ அலங்காரத்தைக் கண்டு பிரமிக்கிறான். அவள் அணிந்த அணிகளை ஒவ்வொன்றாக அவன் கேட்டு அறிந்து கொண்டு இருவரும் ஒருங்கு சேர்ந்து பொய்யா மொழியீசரை வாழ்த்தி, தங்கள் இடம் சென்று இன்பமாக வாழ்கிறார்கள்.

தத்துவலிங்கந் துணை

# பொய்யா மொழியீசர் குறவஞ்சி

## 1. கடவுள் வணக்கம்—விநாயகர்

### காப்பு

தார்கொண்ட சடையர்மழுப் படையர்ஒரு விடையர்
தையல்பார் வதிபாகர் பொய்கைப்பா கையில்வாழ்
சீர்கொண்ட பொய்யாத மொழிப்பர மர்மீது
திறமிஞ்சு குறவஞ்சிப் பிரபந்தம் பாடக்
கூர்கொண்ட கிளர்மருப்பன் வளர்பொருப்பன் அளித்த
குமரிசுதன் கமலபதன் குஞ்சரநன் முகவன்
கார்கொண்ட மெய்யன்நம தய்யன்மத கும்ப
கற்பகத்தின் பொற்பதத்தைக் கருதுவன்காத் திடவே.

## 2. நாமகள் முதலியோர்

### தோடையம்

பனிமதி நதிபொதி சடையுடை யவர்பசு
பதிவள மிகுபொய்கைப்
பாகையில் உறைதரும் ஏகன்அ நேகன்
பராபர ரூபசிவன்
மனதினில் நினைபவர் கதிபெற உதவிசெய்
வாகர்பொய் யாதவர்மேல்
மதுரித மிஞ்சிய செஞ்சொலின் நன்குற
வஞ்சி தனைப்பாட
அனுதினம் இயலிசை அறிபுல வர்கள்உளம்
அறைதல மதிலுறைவோள்.

---

**குறிப்புரை**

1. விடையர் - இடபவாகனமுடையவர்; கிளர் மருப்பன்-சிறப்புப் பொருந்திய கொம்புடையவன், விநாயகர்; பொருப்பன் - இமவான்; சுதன் - மகன் ; குஞ்சரமுகவன் - யானைமுகன் ; கார்கொண்ட மெய் யன் - கருநிற வடிவினன். இத் தலத்து விநாயகர் கற்பக விநாயகர்.

2. தோடயம் - நாடகத்தின் தொடக்கத்தில் தெய்வங்களை வேண்டிப் பாடுகிற பாட்டு. பல தெய் வங்களுக்கு ஒரு பாடலில் வணக்கங்கூறும் மரபை எல் லாக் குறவஞ்சிப் பிரபந்தங்களிலும் காணலாம்.

அம்புச நாயகி யுங்கரு மாமுகி
லாகனும் மாகனகக்

கனகிரி நிகரிரு தனவரை மகள்பல
கடவுளர் தவமுனிவோர்

கதிர்மதி திசையினர் இவர்கள்தம் இலகிய
கமல பதந்துணையே.

## 3. முருகன்

### தோடயத்தரு

பூகமுட னாகமிகு மாகமடர் சோலைதிகழ்
பொய்கைப்பா கையில்மருவு மெய்யர்மழுக் கையர்

மேகநிக ரானஅரி காணரிய தாணுமிசை
விந்தைக்குற வஞ்சிப்பிர பந்தத்தமிழ் பாட

நாகவிறை யோகசுதை நாரிகவு மாரிதரு
நாதரிரு பாதருயர் ஞானகுரு ராயர்

சேகரம தாகுங்குற மாதையணை நீதரிசை
சீலவடி வேலரிரு காலைமற வேனே.

---

2. ரூபசிவன் - உருவத்திருமேனியாகவுள்ள பெருமான், சகலத் திருமேனி; வாசர் - அழகிய வடிவினர்; மதுரிதம்- மதுரம்; உளம் அறைதலமதில் உறைவோள் - உள்ளத்தில் அமர்ந்திருக்கும் நாமகள்; அம்புயநாயகி - இலக்குமி; முகிலாகன் - திருமால்; வரைமகள் - பார்வதி; கதிர்மதி திசையினர் - சூரியன் சந்திரன் திக்குப் பாலகர்.

3. பூகம் -கமுகு; மாகம் அடர்-விசும்பு |வரை அடர்ந்த; அரி - திருமால்; நாகவிறை - இமவான்; சுதை - மகள்; கவுமாரி - இங்கும் பார்வதி; குறமாது - வள்ளி.

## 4. மங்களம்

### பல்லவி

பொய்யா மொழீசருக்கு மங்களம்—பாகைப்
புனிதநாத வேதாந்த போதருக்கு
பொய்யா மொழீசருக்கு மங்களம்.

### சரணங்கள்

1. மெய்யர்கள் மெய்யருக்கு
மினிர்மழுக் கையருக்குப்
பொய்யரானவர்க் கென்றும் பொய்யருக்குப்
பொய்யா மொழீசருக்கு மங்களம்.

2. வேதப்பிர சங்கருக்கு
வீறும்ஞான துங்கருக்குப்
பூதி சாதனம்புனை புங்கருக்குப்
பொய்யா மொழீசருக்கு மங்களம்.

3. சுப்பிர மண்ணியர்க்குத்
தூயகயற் கண்ணியர்க்குப்
புகலருங் கந்தரான புண்ணியர்க்குப்
பொய்யா மொழீசருக்கு மங்களம்.

4. மினிர்சின் மயத்தருக்கு
மிகுமதி செயத்தருக்கு
புளகித மன்னுஞ் சதுர்ப் புயத்தருக்கும்
பொய்யா மொழீசருக்கு மங்களம்.

---

4. பண்டைய நாடக நூல்களில், மங்களம் முடிவிலே பாடிய போதிலும், பாயிரத்தின் இறுதியில் அச்சிடுவதே மரபாயிருக்கிறது.

(1) பொய்யா மொழீசர் - இத் தலத்துச் சிவபிரான் திருநாமம். பூதி - விபூதி; பூதி சாதனம் - விபூதி, உருத்திராக்கம் முதலான சிவ சின்னம்; புங்கர் - மேலானவர்.

(2) சின்மயத்தர்-ஞானமயமானவர், மிகும் அதிசயத்தர் என்க.

# நூல்

## 5. பொய்யா மொழியீசர் பவனி வருதல்

### எண்சீர் ஆசிரிய விருத்தம்

அன்னவயல் புடைபரவும் பொய்கைப் பாகை
ஆதிசத்தி நாயகர்வா னவருங் கூட

மன்னவர்மால் அயன்முனிவர் பலரும் போற்ற
மணிச்சிங்கா தனத்திருந்து மனம கிழ்ந்தே.

இந்நிலத்தில் அடியரைஈ டேற்றி யாள
இதயமதி லேகருதி எழுந்து நாவாற்

பன்னரிய வெள்விடைமீ தேறி அன்பாய்ப்
பாரில்வர லுற்றார்அந்திப் பவனி தானே.

## 6. பவனித் தரு

### பல்லவி

பவனி வாறார் பாருங்கோள் — இதோ அந்திப்
பவனி வாறார் பாருங்கோள் (பவனி)

### அனுபல்லவி

பவனி வாறார் இதோ பாருங்கோள் வாருங்கோள்
புவனியோர் பணியப் பொய்யாத மொழிநாதர்
(பவனி)

### சரணங்கள்

1. மாதர் முன்னே நடக்க — வேதாமகம்
ஆதிதேவர் படிக்கக்
கோதிலால வட்டங்
குடைபோற் குடைபிடிக்கக்
கும்பிட்டோர் வினையைக்
கூடாமலே யடிக்கப் (பவனி)

---

5. பெருமாள் வீதியுலாக் கொண்டருளுவதை இவ்வாசிரியர் 'அடியாரை ஈடேற்றியான்' என்று சொல்வது மிகவும் சிறப்பு; உலாவின் தத்துவம் அருள் என்பதாகும்.

2. பவள மலையிற் சோதி — நிலாவெனப்
படிந்த தூளித பூதி
மவுன வெழில் விளங்க
மகர குண்டல நீதி
வானுடு நிகராக
வயங்கு மாளிகை வீதி (பவனி)

3. சத்திய நாயகி நேசர் — எந்நாளுமே
தழைக்கும் பாகையில் வாசர்
புத்தேளி ராதியர்
போற்றி செய்திடும் ராசர்
பொருப்பிறை மகள்பாகர்
பொய்யாத மொழியீசர் (பவனி).

## 7. எச்சரிக்கை

### சிந்து

செயசெய மகாகெவுரி செயஇமய தவநாரி
செயசத்திய அபிராமி செயபரா பரையே —
ஆ ஆ
செயசெய உமாசதித செயபர தத்துவலிங்க
செயபொய்கை யினில்வாச செய சத்திய நாதா
— ஆ ஆ
(செயசெய)

---

6. (1) பவனி - உலாப்பிரபந்தங்களில் உலா எனப்படுவதே இங்குப் பவனி எனப்படுகிறது. வாறார் - வருகிறார்.

(2) தூளிதபூதி - உத்தூளனமான திருநீறு ; உடு - நட்சத்திரம்.

(3) சத்தியநாயகி - அம்பிகை திருநாமம் ; பாகை - பொய்கைப்பாக்கம் ; புத்தேளிர் - தேவர்; பொருப்பிறை - இமவான்.

7. தவநாரி - தவக்கோலங் கொண்ட அம்மை. தத்துவலிங்கம் - இத் தலத்து இறைவன் திருநாமங் களிலொன்று ; தொனியால் ஆசிரியர் பெயரையும் குறிக்கிறது.

## 8. கட்டியக்காரன் தோன்றுதல்

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

நெட்டிலைச் சூல மேந்தும் நிமலர்நல் லடியா ருக்கே
இட்டமா கியபொய் யாமொ ழீசர்தம் புகழைப் பாடித்
தட்டிமேற் சுரிகை கட்டிச் சல்லாப மாயுல் லாசக்
கட்டியக் காரன் வந்து களரியில் தோன்றி னானே.

தெய்வத்தின் முன்னும் அரசர் முன்னும் கவனமா யிருக்க என்று பொருள்படும் எச்சரிக்கை சொல்வது ஒரு மரபு.

## 9. கட்டியத் தரு

### பல்லவி

கட்டியக் காரன் வந்தான் — சிங்காரமாகக்
கட்டியக் காரன் வந்தான் — ஒய்யாரமாகக்
கட்டியக் காரன் வந்தான் — திமிதிமெனக் (கட்டி)

### அனுபல்லவி

கட்டியக் காரனும் வந்தான்
சட்ட வட்ட மதாகவே
அட்டதிக்குப் புகழும்
பொய்யாத மொழீசர் வாசல் (கட்டி)

### சரணங்கள்

1. மந்திரப் பூதி யிலங்க
சந்தனப் பொட்டுந் துலங்க
சுந்தரத் தாடி யலுங்க
தொந்தி மெத்தவே குலுங்க (கட்டி)

2. இன்ப மாமலர் முடித்துக்
கெம்பு பெறவே நடித்துத்
தென்பு டன்துடி துடித்துப்
பொன்பிரம் புங்கைப் பிடித்து (கட்டி)

3. ஒய்யார நடைதள் ளாடிக்
கைகளை வீசிக்கொண் டாடி
மெய்யான பொருளை நாடிப்
பொய்யாத ஈசரைப் பாடி (கட்டி)

---

8. தட்டி - கேடகம்; சுரிகை - உடைவாள்; களரி - அரங்கு.

9. (1) அலுங்க - ஆட.
(2) கெம்பு - உரத்துப் பேசுதல்.

## 10. வாலகோகில மோகினி தோன்றுதல்

### எண்சீர் ஆசிரிய விருத்தம்

வலங்கொள்கரத் திகிரியினான் பணியும் பாதர்
மறைமுடிவி னிற்பொருந்தும் வன்மை யாளர்
கலங்குமனத் தினராய ஆணவமா மாயைக்
காமியத்தில் அழுந்தினவர்க் கரிய சோதி
புலன்களையெல் லாங்கடிந்த முத்தர் காணப்
பொய்யாத மொழிக்கடவுள் புவியோர் போற்றத்
துலங்குவிடை யேறிவரும் பவனி நாடிச்
சுகவால கோகிலப்பெண் தோன்றி னாளே.

## 11. கட்டியக்காரன் சொல்லுகிற கட்டியம்

### அகவல்

அகோ அதெப்படியென்றால்—
அகிலாண்ட கோடி பிர்ம்மாண்ட நாயகர்
ஆதிகா ரணர்பொய் யாத மொழீசர்
அந்திவே ளையிலோர் நந்திமே லேறி
வந்திடும் பவனி விந்தையைக் கண்டு
ஏலவார் குழலாள் வாலகோ கிலப்பெண்
மையல்லா கிரியால் மெய்யெலாம் மெலிந்து
அந்தமார் சசிபோல் வந்துதோன் றினாளே.
சுவாமி பராக்கு.

---

10. வாலகோகிலமோகினி என்பது தலைவியின் பெயர்.

இங்ஙனமே குறவஞ்சி ஒவ்வொன்றிலும் தலைவியின் பெயர் சிங்காரமான ஒரு பெயராயிருக்கும். அதிரூபவல்லி, ராஜமோகினி, காமவல்லி, மோகனவல்லி, வசந்தவல்லி, துரித மோகினி, சுரத மோகினி முதலான பெயர்கள் காண்க.

திகிரி - சக்கரம், ஏந்திய திருமால் பணியும் பாதரான சிவபிரான். இங்குச் சைவர் கூறும் மும்மலங்களையும் கூறுகிறார்; ஆணவம் - மாயை, காமியம்; காமியம் - கன்மம்.

11. நந்தி என்பது - உபசாரம்; பொருள் இடபம். ஏலவார் குழலாள் - மணம் பொருந்திய கூந்தலுடையவள் ; மையல் - லாகிரி; ஒரு பொருட் பன்மொழி, மயக்கம். அந்தம் ஆர் அழகு பொருந்திய சசி-இந்திராணி.

## 12. சிந்து

1. மருமே விதழிச் சடையார்—பொய்யாத ஈசர்
வாற பவனி நாடியே
முருகலர் அளக பின்ன—வால கோகில
மோகன மாது தோன்றினாள்.

2. மத்த கெசவுரியி னார்—பொய்யாத ஈசர்
வாற பவனி நாடியே
முத்தை நிகரும் நகையாள்—வால கோகில
மோகன மாது தோன்றினாள்.

3. மந்திர சொரூப காரணர்—பொய்யாத ஈசர்
வாற பவனி நாடியே
முந்தும் அன்னமென் நடையாள்—வால கோகில
மோகன மாது தோன்றினாள்.

4. மதியா மாரனை முனிவோர்—பொய்யாத ஈசர்
வாற பவனி நாடியே
முதிரும் மின்னலின் இடையாள்—வால கோகில
மோகன மாது தோன்றினாள்.

---

12. (1) மருமேவு இதழ்ச் சடையார் - மணம் பொருந்திய கொன்றையணிந்த சடையுடைய சிவ பிரான்; வாற - வருகிற; அளகம் - கூந்தல்.

(2) மத்தகெச உரியினார் - மதயானையின் தோலை உரித்து உடுத்த சிவபிரான்.

(4) மாரனை - மன்மதனை; முனிவோர் - கோபித்து எரித்தவர்.

## 13. சிந்து (வேறு)

### பல்லவி

வால கோகில மோகனப் பெண்
வந்து தோன்றினாள்
பால லோசனர் பொய்கைப் பாகை
நாயகர் நாட்டில்
பல பல மணியுற
இலகிய பரிபுர
வொலிபத மியலிசை
கலின்கலின் கலினெனவே (வால கோகில).

### சரணங்கள்

1. கருநீல மானவிரு கடைக்கண் பார்வை தோணவே
கண்ட முனிவர்தங்கள் கருத்தி லாசை பூணவே
திருவாய் திறந்துகொஞ்சுந் திறத்தி னிற்துளி நாணவே
சித்தச வேள்மகு
டத்தினை யிணையிரு
குத்து முலையசைய
மெத்தென ஒயிலாக (வால கோகில)

2. சந்திரோதய வதனந்தனில் திலகந் தீட்டியே
சங்கீதம் பாடிக்கொண்டு தம்புராவை மீட்டியே
விந்தையான பவனி வேடிக்கையைக் காட்டியே
மிளிர்பரி மளமலர்
களைமடு வியமுகில்
வளமுள குழல்மிசை
யளியினங் களுமாட (வால கோகில)

3. தாணு பொய்யாதஈசர் தான்கண்டால் பிரமிக்கவே
சயில குமாரிமீது தயவுசற்றுஞ் சயிக்கவே
வாணு தலார்துரையு மாமென்று சொலிக்கவே
மாக மளவிவளர்
பூக மொடுகதலி
நாக வனமருவு
பாகை நன்னாட்டில் (வால கோகில)

---

13. (1) பால லோசனர்-நெற்றிக் கண்ணுடையவர்; பரிபுரம்-காலணி; இயலிசை-இயலும் இசையுமாக ஒலி செய்ய.

(2) தோணவே - தோன்றவே ; சித்தச வேள் - மன்மதன்.

(3) தாணு-என்றும் நிலைபேறுடையவரான சிவன் ; சயிலகுமாரி - பார்வதி; துரை - தலைமைப் பெண் ; மாகம் - விசும்பு ; பூகம் - கமுகு; கதலி - வாழை; நாகம் - புன்னாகம்.

## 14. வாலகோகிலமோகினி பொய்யாமொழியீசரைக் கண்டு காதல்கொள்ளுதல்

### கலித்துறை

பண்டரிதேடும் பொய்யாத மொழீசர் பவனிவரக்
கண்டவப் போதினிலே வாலமோகினி கண்மிசையே
வண்டெனும் நாரிற் சிலைகொண்டு பூங்கணை மாரனெய்ய
மிண்டெனுங் காதலி னாலே மனது மெலிந்தனளே.

## 15. நிலவைப் பழித்தல்

### வெண்பா

பாகையில்வா மீசர் பவனிவரக் கண்டவுடன்
மோகமதாய் நின்றுழலும் மோகினிமுன்—னாகவே
வீறு மதன்குடையாய் வெண்ணிலவு காயவதின்
மாறுதெரிந் தேயுரைசெய்வாள்.

## 16. வெண்ணிலா

### தரு

1. அமுத கிரணம் பெற்றும் பெண்களுடன் பிறந்தும்
வெண்ணிலாவே—பெண்கள்
அருமையை யறியாமல் நீ அனலைஏன் வீசுகிறாய்
வெண்ணிலாவே.

எமது பரமரிடத் தரவுன்னை விழுங்காதோ
வெண்ணிலாவே—பாகை
ஈசரைச் சேரஎனக் கிக்குவே ளுறவாச்சோ
வெண்ணிலாவே.

2. பாகைச் சிவனுக்காகப் பாவிதக் கனைச்சேர்ந்து
வெண்ணிலாவே—பட்ட
பாடறி யாயோஎன்னைச் சேர்வர்பொய் யாதஈசர்
வெண்ணிலாவே

ஆகையா லவர்க்குச் சிநேகிதவே ளையில்சொன்னால்
வெண்ணிலாவே—முன்போல்
அந்தவீ ரன்வருவான் இந்தஞா யமறிவாய்
வெண்ணிலாவே.

---

14. பண்டு அரி தேடும்; அரி- திருமால்; மாரன் - மன்மதன், அவனுடைய (சிலை) வில்லுக்கு நாண் வண்டு, கணை பூ.

15. மதன் குடை - சந்திரன் மன்மதனுக்குக் குடை என்றல் இலக்கிய மரபு.

16. (1) அரவு - பெருமான் அணிந்த அரவாபரணம். இக்குவேள் - கரும்புச் சிலை பிடித்த மன்மதன்.

(2) தக்கன் வேள்வியில் சந்திரன் வீரபத்திரரால் தேய்ப்புண்டான் என்ற வரலாறு.

## 17. தென்றலைப் பழித்தல்

### வெண்பா

பொய்யாத ஈசர் புணராத வேளையிலே
ஒய்யார மாய்நிலவு ஓங்கியே—பெய்யழலை
மூட்டுதற்கோ இங்கடுத்தாய் மோதுதென்ற லேஎன்மேற்
போட்டியுனக் கேது புகல்.

## 18. தென்றல்

### தரு

1. வாசனைப் பொதிய மாமலை யுற்றும் நற்குண
வாசனை யுனக்கில்லை தென்றலே—கும்ப
மாமுனி தெரிசன மாகியும் உனக்கவ
மார்க்க சிநேகமேன் தென்றலே—அவர்
பூசலுண் டாக்கவோ பூனைபோல் வந்துநீ
புலிபோலே தாவுறாய் தென்றலே—பாகைப்
பொய்யாத மொழியீசர் புணர்ந்தாலப் போதுன்றன்
போரென்னை வெல்லுமோ தென்றலே.

2. குவலயந் தன்னிலே யாவர்க்கும் நன்றாகக்
குளிரவே வீசிடுந் தென்றலே—மோகங்
கொண்ட மின்னார்களுக் கென்றல்ல வோவாரிக்
கொட்டுறாய் நீயனல் தென்றலே
சிவனாம்பொய் யாதவர்க் காசைப் பெண் ணென்பதுந்
தெரியாமல் மோதுறாய் தென்றலே—இப்போ
சேரவரு வார் கண்டாலவர் கங்கணந்
தீண்டுமுன் னேயகல் தென்றலே.

---

17. தென்றல் முதலியன காதல் வசமுற்ற மாதருக்குப் பகை. சந்திரன் பெய்த நிழலாகிய அழலைத் தென்றல் வீசிப் பின்னும் அதிகப்படுத்து கிறது. அடுத்தாய்—வந்தாய்.

18. (1) கும்ப மாமுனி—தமிழ் தந்த அகத்தியர். தென்றல் பிறப்பது அவர் மலையாகிய பொதியிலில். தமிழும் நீயும் பொதியிலிலே பிறந்தவர்கள். தமிழ் என்றால் இனிமை. ஆனால், நீ வேறு சிநேகத்தால் இனிமைக்கு மாறாகக் கொடுமை செய்கிறாய் என்கிறாள்.

(2) குவலயம் - உலகம்; மின்னார் - பெண்கள்; கொட்டுறாய் மோதுறாய் - கொட்டுகிறாய் மோதுகிறாய்; கங்கணம்-அரவு. அரவுக்கு உணவு காற்று; அரவு உன்னை உண்டுவிடும் என்றவாறு

## 19. குயில் வரவு

### கொச்சகக் கலிப்பா

பூவுலகோர் போற்றும்நங்கள் பொய்யாத மொழியீசர்
மேவலிங்கண் வாராத வேளைதனில் வெண்ணிலவால்
தாவுதென்ற லால்மெலியும் தற்சமயத் தில்மதனைக்
கூவவந்தாய் நீயுமென்னக் கோளரைப்போல் கோகிலமே.

## 20. குயில்

### தரு

1. சூத வனந்தன்னில் வாசம தாகியே
சூதில் மிகுந்திடுங் குயிலே—உன்றன்
சொல்லுரை யாவர்க்கும் நல்லதென் றொப்புரை
சொல்லவு மேபெற்றாய் குயிலே

மாதரி லேவெகு காதல்கொண் டோருக்கு
மாத்திரந் தூறானாய் குயிலே—என்றன்
மையலெல் லாந்தீரப் பொய்யாத மொழியீசர்
வருவார்ஏன் கூவுறாய் குயிலே.

2. முற்பகை செய்திடிற் பிற்பகை யாக
முடிதலி னாலினிக் குயிலே—வலு
மோசங்கண் டாய்கருங் காகங்கண் டாலுன்
முனைக்குரல் காட்டாதே குயிலே

சிற்பர னானபொய் யாத மொழியீசர்
திருக்கோலங் கண்டப்போ குயிலே—நீயும்
சீராக வேபடைத் தாயுன்பொல் லாக்குணச்
செய்கையி னாலன்றோ குயிலே.

---

19. இங்கண் - இங்கு; கோளர் - பகைவர்; கோகிலம் - குயில்.

20. (1) சூதம் - மா, சூது - வஞ்சனை; ஒப்புரை முகமன்; உண்மையன்று; தூறு - அவதூறு.

(2) மோசங்கண்டாய் - காகத்தின் கூட்டில் குயில் முட்டை அடைகாக்கப் பெற்றுக் குயிலாய் வெளிவரவும், கண்ட காகம் பகை கொள்ளுகிற தென்ற ஐதிகக் குறிப்பு.

## 21. மன்மதனைப் பழித்தல்

### விருத்தம்

அன்பருக் கன்பாகியபொய் யாதமொழி நாதரெனை
யணையாதுன்றன்
துன்பமயக் கால்மெலியும் போதுமுன்சேனை யைவிடுத்தாய்
தொய்ய வாகம்
பின்படையைக் கொண்டிருளா னையின்மேலேறிச் சரமதனைப்
பெய்யவாறாய்
என்பவமோ நானுமுனக் கென்செய்தேன் மதனவேள்
இயம்புவாயே.

## 22. மன்மத தரு

மதன ராசனே சற்றே பொறும்
மதன ராசனே (மதன)

மதன ராசனே பொய்கைவாழ் பொய்யா மொழிநாதர்
மணக்கோலஞ் செய்யுமுன் மனக்கோலஞ் செய்யுறாய் (மதன)

1. அன்னை வீடது
தன்னைப் பிடுங்கி
என்ன காரியங்
கன்னியர் மேல்வீச (மதன)

2. ஆடவர் மேல்கணைச்
சாடுதல் வீரம்என்
னோடமர் செய்வது
தோடம்இ தோஎன்மேல் (மதன)

3. ஆதிபொய் யாதவி
நோதர்முன் னேயுன்றன்
வாதுகள் காட்டிலப்
போதது வீரமாம் (மதன)

மதன ராசனே சற்றே பொறும்
மதன ராசனே.

---

21. மன்மதன் சேனை-பெண்டிர்; தொய்ய - மெலிய; இருள் ஆனை - மன்மதனுக்கு இருளே யானை வாகனம்; சரம் - காமன்கணை; பவம் - பாவம்; மதனவேள் - மன்மதன்

22. (1) மனக்கோலம் - மனத்தில் துன்பம்.

(2) அன்னை வீடு - இலக்குமி இருப்பிடமாகிய தாமரை, மன்மதனுக்குத் தாய் இலக்குமி, தாமரையாகிய கணை காதலனை நினைத்து வருந்தச் செய்யும். 'நினைக்கும் காலந்தம்' - இரத்தினச் சுருக்கம்.

(3) மன்மதன் இவள்முன் தன் வீரத்தைக் காட்டத் துணியான் - முன் கூட்டி அவரால் எரிந்து பட்டமையால்.

## 23. தோழி தோன்றுதல்

### அறுசீர் விருத்தம்

பொய்கைப்பா கையில்வாழும் மெய்யர்பொய் யிலாதவரைப்
புணர்ந்தி டாத
மையல்வா ரியிலழுந்தி மதனரா சனைத்தூறி
மனமும் மெய்யும்
நையவே மதிமயங்கும் வாலகோ கிலமோக
நாரிக் கன்பாந்
துய்யசே டியரிலுயர் சரசசிந்தா மணிச்சேடி
தோன்றி னாளே.

## 24. சகிப்பதம்

சரசசிந் தாமணி வந்தாள் — அன்பர் பரவும்
பொய்யா தவர்பாகைநன் னாட்டில்
சரசசிந் தாமணி வந்தாள் (சரச)

1. கனகரத் தினசுட்டி மின்ன — இரு
காலிலணி சதங்கை கலின்கலி னென்ன
தனபாரப் புளகிதந் துன்ன — கண்ட
சடுதியில் மதன்கூடத் தானுஞ்சலா மென்ன
(சரச)

2. நகையாரும் பற்கறைக் குள்ளே — அதில்
நடுவே இரண்டுபல் மாத்திரம் வெள்ளை
வகைபே சலால்வன்னக் கிள்ளை — மோக
வாலகோ கிலமாது மகிழும்பெண் பிள்ளை
(சரச)

3. வானவர் மாதர்க்கு மேட்டி — மதனை
மயக்கித்தா டனஞ்செய்ய வல்லசீ மாட்டி
பானிற மதிதனைச் சூட்டிப் — பொய்கைப்
பாகைஈ சுரர்வளம் பரவுநன் னாட்டில்
(சரச)

---

23. தூறி - பழித்து ; நாரி - பெண்,

24. சரச சிந்தாமணி - பாங்கியின் பெயர்.

(1) சலாம் என்ன - வணங்கும்படியாக.

(2) பற்கறை - எல்லாப் பற்களும் கறை பிடித்திருக்க ; கிள்ளை - கிளி.

(3) மேட்டி - சிறப்புடையவள் ; தாடனம் - அடித்தல், பால் நிறமதி என்க.

## 25. தோழி வினவுதல்

### வெண்பா

பத்தர்பணி யும்பொய்கைப் பாகையிறை நன்னாட்டில்
முத்த நகைவால மோகினியே — மெத்தவுமே
நேர்ந்திளைத்துக் காமவெள்ளம் நீரழுந்தி னாற்போலச்
சோர்ந்திருக்கும் வாறேது சொல்.

## 26. மையல் தரு

### பல்லவி

மைய லானேனே — பிராணசகியே
மைய லானேனே.

### அனுபல்லவி

மைய லானேனே என்செய்குவேன் நானே
பொய்கைப் பாகையில் வாழும் புனிதனை மருவ (மையல்)

### சரணங்கள்

1. அந்தி வேளையில் ஒரு
நந்தி வாகன மீதில்ஏறி — வாற
விந்தையைக் கண்டென்றன்
சிந்தை தளர்ந்தாசை — மீறி
நொந்தது — மயலே
அந்தயன் செயலே
வந்துபோ கையிலே
விந்தைபார்க் கையிலே (மையல்)

---

25. தோழிகூற்று. நீர்; வாலகோகிலமோகினி பெயர் முன்னிலைப்படுத்துகிறாள்.

26. (1) அந்தயன் - அந்தப் பிரமன், விந்தை பார்க்கையிலே - நான் வேடிக்கை பார்த்தபோது.

(2) விருதாவில் - வீணாக; திகைப்பூண்டு மிதித்தல் - ஒரு பழமொழி.

2. விருதாவில் திகைப்பூண்டு
மிதித்தாப்போல் வருகுதே பொங்கம் — சின்னஞ்
சிறியேன்என் றனக்கேதுக்
கிவராசை வருகும்வில் லங்கம் — முன்பின்
அறியேண்டி மாதே
உறும்இனி வாதே
நெறியோ தகாதே
குறிகூறிப் போதே (மையல்)

3. கருணா கடாட்ச சத்திய
நாயகி பிராணேசர் — பூஞ்
சரணர் பஞ்சாட்சர ரூபர்
பொய்யாத மொழியீசர் — சேர
வருவதுன் பாரம்
முருகுகே யூரம்
உருவல்பொன் னாரந்
தருவேன்இந் நேரம் (மையல்)

## 27. தோழி கூற்று

### விருத்தம்

பாலலோசனர் பொய்யாத மொழிக்கடவுள் அளித்த மையல்
பாரம் பூண்ட
வாலகோகில மோகனத் திருவே! ஓர்வசனம்
வழுத்தக் கேளாய்,
கோலமாமிடற் றொருதெய்வக் குறத்தி யவரவர் வதனக்
குறிப்பு நோக்கி
ஏலவே குறியுரைப்பாள் அழைத்து வருவே னுன்மனம்
இசையத் தானே.

### வசனம்

"ஓகோ வால கோகிலா மோகினிப் பெண்ணே! ஒரு தெய்வக் குறத்தி வந்திருக்கிறாள். அவரவர் நினைத்த காரியஞ் சித்திக்கும்படிக்குக் குறி சொல்லுகிறாள். அவள் வந்தால் உன்னுடைய மனோரத மீடேறும். அவளை இந் நேரமே அழைத்துக்கொண்டு வருகிறேன்."

"ஆனால் மகா சச்தோஷமாச்சுது, அப்படியே அழைத்துக்கொண்டு வாரும், பெண்ணே,"

---

வில்லங்கம் - துன்பம்; வாது - அலர் தூற்றுதல்.

(3) உருவல்-ஒரு காதணி, கேயூரம்-தோள் வளை; இவை யாவும் அணிகலன்கள்.

27. வழுத்த - சொல்ல; வதனம் - முகம்; ஏல - பொருந்த.

## 28. நாட்டு வளம்—குறத்தி தோன்றுதல்

### அகவல்

மாவினன் கனியை மந்திகள் அருந்திக்
தாவியே லாகு தாண்டிடும் பொழுதில்
உதிர்கனி மதுக்கள் ஒதுங்கியே கால்வா
யதனிலே நிரம்பி ஆறெனப் பரவி
வயல்களிற் பாய மகிழ்ந்தெழுந் துழவர்
இயல்புடன் உழுதே எழிலுடன் நாற்று
நடக்கதிர் தோறும் நாழிநெல் வகுப்பாய்த்
திடப்பட விளையுஞ் சிறந்தமா நகரம்,
அருந்தவ முனிவர் அனுதினம் பரவத்
திருந்திய புகழ்சேர் திருப்பொய்கைப் பாகை
தங்கிய கடவுள் சடாதரன் எவர்க்கும்
புங்கவ னான பொய்யாத மொழீசன்
கங்கையங் குலத்திற் கற்பகத் தருவாய்
இங்கீத கேள்வி ஈகைநன் னீதி
பெற்றவர் நாளும் பிரபலம் படைத்து
உத்தமன் கருணை ஓங்கிய புருஷன்
நறைமலர்ப் பொழிலரன் நாங்கூர் தன்னிற்
பிரபல அய்யம் பெருமாள் உதவும்
சின்னண மகிபன் சிந்தையில் மகிழ்வாய்
மன்னிய துணையாய் வந்தகெம் பீரன்
அரியபுத் திரவேள் அருளும்ஓய் யாரன்
நரபதி யான நல்லண மகிபன்
அகந்தனில் மகிழ்வாய் ஆலய நிதமும்
பகர்ந்திடு விளக்கும் படித்தர முதலாய்
சந்ததம் நடத்தத் தயவுடன் இவர்கள்
புந்தியி லுறையும் பொய்யாத மொழீசன்

---

28. வரி 2. லாகு - லகுவாக; சடாதரன் - சடை தரித்தவன். 13. கங்கையங் குலம் - வேளாளர் குலம். 17. நாங்கூர் - திருநாங்கூர் என்னும் தலம். 19-20. ஐயம்பெருமாள் புதல்வன் சின்னணன். 21-22. அவனது நண்பன் நல்லணன்; அரிய புத்திரனது புதல்வன்.

## தசாங்கம்

கற்பமா தியினூறு கறுத்ததிண் மலையான்
வெற்பினி லுயரும் வெள்ளிமா **மலையான்;**
சரணமென் றவர்க்கே தகுந்தயா நிதியான்
பரவைநேர் பெருகும் பம்பைமா **நதி**யான்
கரவுள நெஞ்ச கருக்கெதிர் நாடான்
திரமுள வளமே சேர்தொண்டை **நாடான்**
நகந்தரு சத்திய நாயகி யிடத்தான்
பகர்ந்திடும் பொய்கைப் பாகையி **னிடத்தான்**
அன்பருக் கன்றி அடியிணை தாரான்
இன்பநல் மதுவார் இதழியந் **தாரான்** ;
சடிலநற் கங்கை தருக்கு திரையினான்
வடிவிலாக கண்ட வான்**குதி ரை**யினான் ;
மலைச்சிலைக் கரியென மதிக் **குஞ்சரத்தான்**
சலத்தடர்க் கிரியாச் சத்திக்**குஞ் சரத்**தான் ;
குலவுபுல் லறிவின் கொடியர்க்குக் கொடியான்
நலமிகு மாலாம் நரைவிடைக் **கொடி**யான் ;
தந்ததி லெனச்சந் ததமுந்தப் பறையான்
அனந்தமில் லாத நாதமாம் **பறை**யான் ;
சுரர்நரர் பசுவாய்த் தோன்றிவா ழியினான்
பிரமனா னெனுமோர் பெருஞ்சி**வா ழி**யினான் ;
நீர்கொண்ட வேணி நிருமலன், கனகச்
சீர்கொண்ட நகவிற் செங்கையிற் கொண்டோன்,
ஞாயிறு திங்கள் நாட்டமாந் தூயன்,
நேயமாம் முனிவர்க் கியம்புசெவ் வாயான்,
அனைத்தையு முணர்ந்தோர்க் கற்புதன், வளத்த
கனப்புவி யாளக் கடர்கடு களத்தன்,
மாசகல் வெள்ளி வரையன், தாருக
விநாசினி யோடுமுன் ஆடிய கடவுள்,
பலியென மின்னார் பரிசினைத் தவிர்த்துப்
புலிதொழ நடிக்கும் பொய்யாத மூர்த்தி,

---

23. இது முதல் 46 வரை பொய்யா மொழியீசர் தசாங்கம் கூறப்படுகிறது. இடையே தொனியலங்காரமும் விரவி வருகிறது. வெள்ளிமலை - கயிலாயம்; நதி - பம்பை மாநதி ; கரவு - வஞ்சம் ; நாடு - தொண்டை நாடு ; நகம் - மலை ; இடத்தான் - இடப்பாகத்திலுடையான்.

கோலமே கண்டு குவளைநேர் விழியாள்
மாலுமே கொண்ட வாலகோ கிலப்பெண்
சேடியாம் சரச சிந்தா மணிதான்
தேடியே எங்குந் திரிந்துவீ தியினில்
வரும்பொழு தெதிரே மலைக்குற வஞ்சி
தனைக்கண் டருகிற் சார்ந்துமுன் நின்றிங்கு
'எனக்கோர் குறிசொல்' என்னவே பார்த்து
நீயுமோர் மாது நேசமாம் பாங்கி
ஞாயமாய்த் தேடி நாடிவந் ததுவும்,
என்னையே உன்னை யிங்கனுப் பினவள்
தன்னையும் அவள்தன் தலைவா சலையும்
குறக்கூடை யம்மாள் கொடுத்திடும் வரத்தால்
திறப்பட அறிந்தேன் சேடிவா' வென்றே

---

36. இதழியந்தாரான் - கொன்றை மாலையுடையான்; தருக்கு திரை - பெருகிய அலை; வான் குதிரை - ஆகாயமாகிய பரி, 'வான் புரவி ஊரும் மகிழ்ந்து' என்னும் திருவாசகத் திருத்தசாங்கம் (6) காண்க.

39. மலைச்சிலைக்கு அரியென - மேருமலையை வில்லாகவும் திருமாலை அம்பாகவும் கொண்ட திரிபுராந்தக நிலை, கிரியா சத்தியாகிய யானை; குஞ்சரம் - யானை. மாலாம் நரை விடைக்கொடியான் - திருமாலாகிய இடபக் கொடியான்.

43. தப்பறை - ஒலிக்கும் பறை: நாதம் பறை - 'பேரின்பத்து ஓங்கும் பருமிக்க நாதம் பறை' என்பது திருவாசகத் தசாங்கம் (8).

46. சிவாழி - சிவ ஆழி, ஆணை.

47. நீர் கொண்ட வேணி - கங்கையைத் தரித்த சடை.

48. நகவில் - மேருமலையாகிய வில்.

49. நாட்டமாம் - இரண்டு கண்களாக,

50. முனிவர் - சனகாதி நால்வர்.

53. வெள்ளிவரை - கயிலை மலை, தாருக விநாசினி - காளி.

56. புலி - வியாக்கிரபாதர்.

வாலகோ கிலப்பெண் வாசலைக் குறித்துக்
காலணி சதங்கை கலகல கலென
பனிமதி வதனம் பளபள பளென
தனகிரி யிரண்டுந் தளதள தளென
குலவிய களபம் குமுகுமு குமெனக்
கலவமேல் வாடைக் கமகம கமெனக்
குன்றிமா மணியுங் கொஞ்சிமா மணியுந்
துன்றிய மெய்தோய் அக்கர மணியும்
கோதறுமா ராப்புங் குழவியு மிடுப்பிற்
சேர்த்தகூ டையுஞ்சீர் செங்கைமாத் திரையும்
இலக்கண மாக இலங்கவே தெய்வ
மலைக்குற வஞ்சி வந்துதோன் றினளே.

அடி : 1-10-நகர்வலம், 11-25-திருப்பணி செய்வோர் சிறப்பு, 26-46 தசாங்கம்; 47-61 வாலமோகினி மாலுற்று அனுப்பிய பாங்கி குறவஞ்சியைக் காணுதல், 62-3. பாங்கி கூறுதல், 64-69. குறத்தி கூற்று, 70-81. அவள் வருணனை.

## 29. குறத்தியின் தெய்வ வணக்கம்

### தரு

சரணம் சரணம் கெசமுக ஐங்கர
சரணம் சரவண சண்முகா சரணம்
சரணம் பொய்யாத நாயகி சரணம்
சத்திய நாயகா சரணம் சரணம்

## 30. குறவஞ்சி தோன்றுதல்

மதிமுக செக மோகினி வந்தாள்—நவரச வபிநய
மதிமுக செக மோகினி வந்தாள்
நவரச வபிநய மிகு மழகிய (மதிமுக)

துதிபெறு மதரதி பரவிய
சுரதத்தினில் வெகு விதரணமுள
சததன யிவளததன—
தாச்செனுந் தக தகந்த
தீச்செனுந் தகத்த திலத்த
தில்லானா திரிநாதிரிரி தில்லானா (மதிமுக)

---

29. குறத்தி விநாயகர், முருகன், ஈசன், சக்தி ஆகிய நால்வரையும் வணங்குகிறாள்.

## 31. இதுவுமது

வஞ்சி வந்தாள்—குற
வஞ்சி வந்தாள்

1. இளகு பரிமள மிளகு மிருமுலை
இறைவி மகிழ்தரு மணவனார்
அளகை யிணையெழிற் பரவு பாகைபொய்
யாத ஈசர்நன் னாட்டினில்
குளிரு மதுரித மொழிக ளிசைகலு
குலுகு கலுகுலு வென்னவே
வளமு மிகுபரி மளமு மருவிய
வஞ்சித ரஞ்சித மாகவே
வஞ்சி வந்தாள்—குற
வஞ்சி வந்தாள்.

2. பாதி மதியணி சோதி யடியரு
பாதி தவிரவு மோதியாள்
ஆதியெங் கும்பிரக் கியாதி யாகும்பொய்
யாத ஈசர்நன் னாட்டினில்
காதி லணிகுழை யாத வனைநிகர்
காண ரதிமுதல் நாணவே
மாதர் துரையெனும் நீத மிகுசுப
வஞ்சி ரஞ்சித மாகவே
வஞ்சி வந்தாள்—குற
வஞ்சி வந்தாள்.

## 32. வேறு தரு

### பல்லவி

தெய்வ மலைக்குற வஞ்சி தோன்றினாள்—இங்கிதமாகத்
தெய்வ மலைக்குற வஞ்சி தோன்றினாள்—தந்தானத்தின
தெய்வ மலைக்குற வஞ்சி தோன்றினாள்.

---

31. (1) மணவனார் - மணாளவார்; அளகை யிணை - குபேரனது அளகாபுரியொத்த

(2) உபாதி தவிரவும் ஓதியாள் - வினைகள் தீரும்படி கற்றவள்; பிரக்கியாதி - புகழ்; ஆதவனை நிகர் - குழையினது ஒளி அத்தகையது. துரை - முன்னரும் சொன்னார்; துரை என்று ஆடவரையே சொல்வது போக இவர் பெண்ணைத் தலைவி என்று குறிப்பிடத் துரை என்கிறார்.

## அநுபல்லவி

ஐவருக்கும் பொருளாகி நின்றவா—பொய்யாதமொழீசர்
அன்புட னுறையும் பாகை நாட்டினில் — தந்தானத்தின
அன்ப ரகத்தினில் இன்பம் விளைத்திடும் (தெய்வ)

## சரணங்கள்

1. காலில் விருதுதண்டை பூட்டியே — பிறைநுதற்கிடை
கமழுங் களபத்திலகந் தீட்டியே — தந்தானத்தின
வாலிப ருடல்மனதை வாட்டியே — பொய்யாத மொழீசர்
வரையின்மோ கனமாலைதச் சாட்டியே —
தந்தானத்தின
வாச மார்பொடி
பூசி யேநயம்
பேசி யேமக
ராசி யாகிய (தெய்வ)

2. இரதி மங்கையர் தனிலுந் தோணவே — நடையு
முடையும்
இடையும் வடிவமாகக் காணவே — தந்தானத்தின
பரவி முனிவர் சரணம் பூணவே — பொய்யாத தற்பரன்
பாவைக்குச் சொற்குறி மனதி லூணவே —
தந்தானத்தின
பார முலைமேல்
ஆர மிலக
ஆர பாரஒய்
யார மாக (தெய்வ)

3. கன்னற் சிலையை வளைத்து விஞ்சவே — மீறப்
பொருங்கை
காம ராசனுங் கண்டு கெஞ்சவே
வன்னக் கிளிபோல் வார்த்தை கொஞ்சவே —
பொய்யாத மொழீசர்
வாரயிலே ஒயிலானது மிஞ்சவே.
வம்பல ரளகக்
கொம்பினி லளிகள்
ரொம்பவு மேவெகு
சம்பிரத மாக
தெய்வ மலைக்குற வஞ்சி தோன்றினாள் — இங்கிதமாக
தெய்வ மலைக்குற வஞ்சி தோன்றினாள்.

---

32 (1) தோணவே - தோன்றவே; ஊணவே - ஊன்றவே.

(2) கன்னல்சிலை-கரும்புவில்; காமராசன்- மன்மதன் ; வாரையிலே - வருகையில்; வம்பு அலர் அளகம் - மணம் பொருந்திய மலர் சூடிய கூந்தல்.

## 33. வாசல் தரு

1. வாசலிது அம்மே வாசலிது
மலைராசன் வாசலிது
வாசவனுங் கேசவனும் — அம்மே
வந்திறைஞ்சும் வாசலிது

2. கொண்டலுல களவிவிடை — அம்மே
கொடியாடும் வாசலிது
தண்டமிழ்மா மறைமுழங்க — அம்மே
தழைத்தமணி வாசலிது

3. நல்லணன்சின் னணன்இறைஞ்சும் — அம்மே
நாதனுட வாசலிது
கல்லின்இபங் கரும்புதின்ன — அம்மே
காட்சி செய்தோன் வாசலிது.

4. தேவருமூ வரும்அறியா — அம்மே
சிற்சொரூபன் வாசலிது
பாவனையுங் கடந்தசித்த — அம்மே
பரஞ்சோதி வாசலிது.

5. அடிமுடிமா லயன்தேடி — அம்மே
அறிவரியோன் வாசலிது.
படிமிசையில் அடியருளம் — அம்மே
பதிந்துநின்றோன் வாசலிது

6. மெய்தனிலோர் பாதிமின்னாள் — அம்மே
மேவநின்றோன் வாசலிது
பொய்கைதனில் பொய்யாத — அம்மே
புனிதன்வரும் வாசலிது

7. சத்தியநா யகிபாகர் — அம்மே
தற்பரமர் வாசலிது
முத்திதனில் பொய்யாத — அம்மே
மொழியீசர் வாசலிது. **(வாசலிது)**

---

33. எல்லாக் குறவஞ்சிப் பிரபந்தங்களுமே பாட்டுடைத் தலைவனது வாயில் முற்றச் சிறப்பை அழகுடன் பாடும்.

(1) வாசவன்-இந்திரன்; கேசவன் - திருமால்.

(2) கொண்டல் உலகு - மேகலோகம் வரை; விடைக் கொடி - சிவபிரானுக்குரிய இடபக்கொடி, கல்லின் இபம் கரும்பு தின்ன - மதுரையில் சோமசுந்தரக் கடவுள் பாண்டியன் முன் எல்லாம் வல்ல சித்தராய்த் தோன்றிக் கல்லானை கரும்பு தின்னச் செய்த திருவிளையாடற் புராண வரலாறு, இபம் - யானை; சிற்சொரூபன் - ஞானவடிவானவன், அடிமுடி - திருவண்ணாமலையில் பிரமனும் திருமாலும் சோதியின் முடியும் அடியும் தேடிய வரலாறு.

(4) மேவ நின்றோன்-அர்த்தநாரீசுர வடிவம்.

## 34. தலைவி வினவுதல்

### முருகு விருத்தம்

தேசதுலாவிய அன்பர கத்திடைத் திவ்வியமா யுறைவோன்
மாசதிலாத பொய்யாத மொழீசர்நல் வரைவரு குறமாதே
நேசமதாமுன் னினங்களும் உங்கள்தம் நேர்மையும் வாய்மையுமே
வாசமதாகிய நாடுமந் நாட்டுள வண்மையும் நவில்வாயே.

## 35. குறத்தி நாட்டு வளம் கூறுதல்

''நானறிந்த நாட்டுவளப்பம் சொல்லென்றல்லோ கேட்கிறாய், ஆனால், சொல்லுகிறேன் கேளடியம்மே.''

### நாட்டுப்பதம்

நாடு மெங்கள் நாட்டில்
நாகரிகமுஞ் சொல்ல வாராய்—அளி
பாடுஞ் சோலைப் பொய்கைப்பாகைப்
பதியில் வரும் பாவையே (நாடுமெங்கள்)

1. கழிமரங் கலைக்கொம்பு கரிக்கொம்பு
மாக அமைச்சு—மேலே
கதித்த ஆமை யோட்டினா லேமறைய
மூடி வைச்சு
மெழுகினாற் சுவர்செய்து மாணிக்க
முத்தைப் பதிச்சு—புழுகால்
மெழுகித் தீற்றிக் கோலமிட்
டிருக்கும் எங்கள் குச்சு. (நாடுமெங்கள்)

2. காடுஞ் செடியு மாகக்கலந்
திருக்கும் எங்கள் தேசம்—புலி
காட்டானை சிங்கங் கரடி
யுடன் நாங்கள் வாசம்
ஆடுமாடு போலெண்ணு வோமதைப்
பாரோம்சங் கோசம்—மந்திரம்
அவிழ்த்த முடுக் கெங்களுக் குங்களுக்
கதுபிர யாசம் (நாடுமெங்கள்)

---

34. தேசது - ஒளி; தேஜஸ் - ஒளி, வரை - மலை.

3. மாத மூணு மழைபொழிய
விளையுங் கருந்தினையே—அந்த
மாவுந் தேனுமாகப் பொசிப்போம்
எங்களெப் பனையே
பாதிமதி தரித்த பரமன்
பொய்யாத ஈசனையே—போற்றும்
பாவையே உங்கள் நாடுபார்க்க
வந்தேன் இங்கனையே. (நாடுமெங்கள்)

## 36. தலைவி மலைவளம் கேட்டல்

### அருசீர் விருத்தம்

நிலைபடைத்த புகழையம் பெருமாள் சின்னண்ணன் அகமகிழும்
நீல மார்பன்
கலைபடைத்த நல்லணன்குட் டையன்பணி சத்தியவாசகர் கனத்த வெற்பிற்
சிலைபடைத்த இருபுருவக் குறமாதே நாடுரைத்த திறம்போல் உன்றன்
மலைபடைத்த வளப்ப மெல்லாம் தெரியவுரைத் திடுவாய்நீ
மகிழ்ந்து தானே.

### வசனம்

''அகோ வாரும் பெண்ணே! ரஞ்சிதக் குறவஞ்சி மோகினியே! நீ சொன்ன காட்டு வளப்பம் கேட்டு மகா சந்தோஷ மாச்சுது. நீயறிந்த மலை வளப்பஞ் சொல்லடி குறத்தி.''

''அம்மம்சா அம்மம்மா எங்க அம்மம்மா, நானறிந்த மலைவளப்பஞ் சொல்லென்றல்லோ கேட்கின்றாய். ஆனால் சொல்லுறேன் கேளடியம்மே.''

---

35. (1) கலைக் கொம்பு - மான் கொம்பு. புலி சிங்கம் காட்டானை கரடி முதலிய கொடிய விலங்குகள் எங்களுக்கு ஆடு மாடு போல; சங்கோசம்; அச்சம். முடுக்கு - எளிது; பிரயாசம்-கடினம். இங்குக் கூறப்பட்ட பொருள்கள் யாவும் மிகவும் விலை உயர்ந்த பொருள்கள்; ஆனால், இவை காட்டில் வாழ் குறவருக்கு எளிதாகவும், இயல்பாகவும், கிடைப்பவை.

(2) பொசிப்போம் - புசிப்போம், இங்கு அனையே; அனை - அன்னை,

## 37. மலைப்பதம்

எங்கள் மலையும் மலையின் வளப்பமும்
இப்போது நானுரைப் பேனே — மலை
நங்கை பங்காளர் பொய்யாத மொழீயீசர்
நாட்டின் மின்னே — இனித்தானே (எங்கள்)

**சரணங்கள்**

1. உலகில் மலைகளை யுண்டாக்கி நான்முகன்
ஒப்பித்தா னெங்கள்பா ரிசமே — அதில்
ஓங்கிய செந்தியைக் கந்தர்வள் ளிக்கென்று
உதவி செய்தோம் — இது நிசமே
மலையிற் பொதிய மலையைக் குறுமுனி
மாதவ ரென்றவர் வசமே — ஆக
வைத்தோம் கயிலை இமையமும் எங்கள்
மலையினு டையவங் கிசமே (எங்கள்)

2. எங்கள் வேளிமலை மீதிற் சஞ்சீவி
இரசக் கிணறும்சந் தனமே — அதில்
ஏலம் லவங்கம் பலாமரம் புன்னை
எரிமர மும்வெகு வனமே
வங்க மலைதனிற் சித்தர் முனிவர்கள்
வந்திருப் பார்அனு தினமே — கோண
மாமலையிற் கெம்பு வச்சிர முத்து
மரகத ராசியாம் தனமே (எங்கள்)

3. சந்தன வெற்பிற் கருந்தினை நெல்லிவெண்
சாரை கற்பூரங் கத்தூரி — ரச
தாளிகதலி வெள்ளானைக் கருங்கிளி
சாதக மூங்கிற்புல் லூரி
விந்தைசேர் மாமரை மேதியாலின்கீழால்
மிச்சமா யுண்டுவி லாரி — மலை
மீதிலே வேணமுத்துண்டு பொய்யாத மொழியீசர்
மேவும்நன் னாட்டுறை நாரி (எங்கள்)

---

37. (1) பாரிசம் - வசம்; செந்தி - திருச்செந்தூர் மலையை; மாதவர் - மா முனிவர் வங்கிசம் - வமிசம்.

(2) வேளி மலை - வள்ளி மலை; எரிமரம் - முருக்கு மரம், கெம்பு, வயிரம், முத்து, மரகதம் முதலான மாணிக்க வகைகள்.

(3) சந்தனமலையிலுள்ள கருந்தினை முதலான விளைபொருள்கள், ரசதாளி - ரஸ்தாளி வாழை. மரை - மான். மேதி - எருமை. விலாரி - வெள்ளைக் கடம்பு. நாரி - பெண்ணே.

## 38. தலைவி குறத்தியின் சாதிமார்க்கம் வினவுதல்

**கலித்துறை**

பூதியில் மேனியர் பொய்யாத நாதர் பொருப்பில்வளர்
நீதியில் மேவுங் குறக்கொடி யேஇந்த நீணிலத்தில்
தாதவிழ் சோலை மலைவளஞ் சொன்ன சதிரெனவுன்
சாதியின் மார்க்கங்க ளெல்லாம் அறிந்திடச் சாற்றுவையே.

"அகோ வாரும் பெண்ணே! ரஞ்சித குறவஞ்சி மோகினியே! நீ சொன்ன மலை வளப்பம் கேட்டு மகா சந்தோச மாச்சுது. நீயறிந்த சாதியின் மார்க்கங்களெல்லாம் சொல்லடி குறத்தி."

"அம்மம்மா அம்மம்மா எங்க அம்மம்மா, நானறிந்த சாதி மார்க்கங்களெல்லாம் சொல்லென்றல்லோ கேட்கின்றாய், ஆனால், சொல்லுகிறேன் கேளடியம்மே."

## 39. சாதி மார்க்கப் பதம்

**பல்லவி**

சாதி மார்க்கஞ் சொல்லக் கேள் அம்மம்மே
சாதி மார்க்கஞ் சொல்லக் கேள் (சாதி)

**அனுபல்லவி**

பூதிபூச மெய்யர் பொய்யாத மொழியீசர்
கோதில்லாத நாட்டிற் குயிலே பெண்மயிலே (சாதி)

**சரணங்கள்**

1. ஆமைபூனை குத்திக் கொண்டுவந் துரிப்போம்
அதனைப் பன்றிநெய்யி லேவேகப் பொரிப்போம்
சாமைதினை யைப்பொங்கி யுண்டுசஞ் சரிப்போம்
சங்குமணிப் பணிதிதரிப் போம்பொன் னரிப்போம் (சாதி)

2. கன்னிப்பெண் கள்கூடி யேசிங்கி யடிப்போம்
கணவனறி யக்கொழுந் தனையுங்கை பிடிப்போம்
கொன்னிக்கொன் னிசிந்து பாடிக்கை நொடிப்போம்
குறிஞ்சித் தேனுடன்கள் குடிப்போம் பின்துடிப்போம் (சாதி)

3. கந்தர்வால் மீகருமாம் எங்கள் சாதி
கானக்குறவர்க் கெல்லாம் பெரிதெங்கள் நீதி
இந்து வேணிப் பொய்யாமொழிப் பரஞ்சோதிக்
இனியவுற வாமிது பிரக் கியாதி (சாதி)

---

38. தாது அவிழ் - மலரிதழ் விரிகின்ற.

39. சாதி மார்க்கம் - சாதியின் வகையும் பெருமையும். (1) பணிதி - ஆபரணம். (2) சிங்கி - ஒருவகைக் கூத்து. கொன்னி - குழறி.

(3) கந்தர் - முருகன் - வால்மீகர் - முன் வேடராயிருந்து ராமநாம சபத்தால் முனிவரானவர்; இந்துவேணி - சந்திரனைச் சடையிலணிந்த; பிரக்கியாதி - புகழ்.

## 40. குறத்தியின் வித்தை கேட்டல்

### விருத்தம்

தனக்குவமை ஒருவரில்லாப் பொய்யாத மொழிநாதர் தனது நாட்டில்
மனக்கவலை முடிக்க வந்த குறமாதே யான்புகலும் வசனங் கேளாய்
நினைக்கஉசி தமதான சாதியின்மார்க் கம்புகன்ற நேர்மையாக
உனக்குவந்த வித்தைஎல்லாம் எனக்குநீ விவரமதாய் உரைசெய் வாயே.

"அகோ வாரும் பெண்ணே ரஞ்சித குறவஞ்சி மோகினியே! நீ சொன்ன சாதி மார்க்கங் கேட்டு மகா சந்தோச மாச்சுது, நீயறிந்த வித்தை யெல்லாம் சொல்லடி குறத்தி."

"அம்மம்மா அம்மம்மா எங்க அம்மம்மா, நானறிந்த வித்தையெல்லாஞ் சொல்லென்றல்லோ கேட்கிறாய் ஆனால், சொல்லுகிறேன் கேளடியம்மே."

## 41. குறத்தி தானறிந்த வித்தை கூறுதல்

### வித்தைப் பதம்

### பல்லவி

வித்தை நீதி சொல்ல வாராய் — அந்த
வித்தை வேணு மென்றால் பாராய் (வித்தை)

### அனுபல்லவி

முக்தி தனக்கொரு வித்தான பொய்யாத
மொழியீசர் நாட்டில் அழகிய மானே (வித்தை)

### சரணங்கள்

1. அக்கினியைச் சலமாக்குவேன் — காரடம்
அஸ்த லாகையும் நோக்குவேன்
சிக்கெனக் கலப்பசுவைக் கட்டிக் கறப்பேன்
செப்பட்டை கட்டிஆகா சத்தில் பறப்பேன்
சலத்தம்பன முடன்வாயுவும்
நிலத்தம்பன மறிவேன்
செனங்க ளிருக்கக் கண்ணில்
தெரியாமல் திரிவேன் (வித்தை)

---

41. (1) காரடம் - சாலவித்தை; அஸ்தலாகை - கை ரேகை, அஸ்தம் - கை, இலாகை - அமைப்பு; செப்பட்டை - சப்பட்டை, சிறகு.

2. கல்லிலேயும் நாருரிப் பேன்மணற்
கயிறாகவே கையால் திரிப்பேன்
நல்ல மலைகளை யும்பேர்த்தெடுப்பேன்
நானூறு பேரெதிர்த் தாலுந்தடுப்பேன்
நன்றாக என்கையினில் வைகுண்ட முங்காட்டி
நான்மறைப் பேனவ தானமும் பாராட்டி
(வித்தை)

3. சகல வித்தையும் வந்திருக்கும் — எங்கள்
சாகசந் தெரியா தொருவருக்கும்
பகலவ னிந்துகண் ணாக வுடையார்
படிக சொரூப மதாகிய விடையார்
பாகைப் பொய்யாத மொழீசர்தன் வரையில்
பாவையே யறிந்துகொள் பகருமென் னுரையை
(வித்தை)

## 42. குறத்தி பார்த்த தேசம் வினவுதல்

நல்லண மகிபதி சின்னண மகிபதி நயதுதி பெறும்நீதா
வல்லவ ராகிய பொய்யா தவருறை வரைவரு குறமாதே
மெல்லென் நீயறி வித்தை விளம்பிய விபரமெ னப்புவியிற்
புல்லிய தேச மறிந்து மதனுள் புதுமையும் நவில்வாயே

**வசனம்**

"அகோ வாரும் பெண்ணே ரஞ்சித குறவஞ்சி மோகினியே நீ சொன்ன வித்தை கேட்டு மகா சந்தோஷமாச்சுது. நீயறிந்த தேசப் புதுமையைச் சொல்லடி குறத்தி."

"அம்மம்மா அம்மம்மா எங்க அம்மம்மா! நானறிந்த தேசப்புதுமையைச் சொல்லென்றல்லோ கேட்கிறாய், ஆனால், சொல்லுகிறேன் கேளடியம்மே."

---

41. (2) அவதானம் - பல காரியங்களை ஒரே சமயத்தில் செய்தல்.

(3) பகலவன் இந்து - சூரிய சந்திரர்; விடையார் - இடபவாகனமுடையவர்; வரை - மலை.

## 43. குறத்தி தானறிந்த தேசவளம் கூறுதல்

### தேசப்பதம்

#### பல்லவி

பார்த்து வந்த தேசமெல்லாம் பகர்வேனிப் போதே
ஏத்தும் புகழ்ப் பொய்யாத ஈசர்வரை மாதே (பார்த்து)

#### சரணங்கள்

1. கொண்ட புருஷனுமே யிருக்கக் குச்சரத்திலே துணிந்து
கண்ட புருஷரைக் கூடிக் களிப்பர் கனிந்து
மிண்டுமலை யாளந்தன்னில் மிகுமான மெனக்கலையை
மண்டியெடுத் திடைதவிர மறைப்பர் முலையை
(பார்த்து)

2. சயிந்துவ தேசத்திற் கள்ளைத் தண்ணீர் போலே குடிப்பர்
குயந்தனையு மறைப்பர் உச்சிக் கொண்டை முடிப்பர்
நயந்த கொப்பரத்தின் மதனன் நாணக் கவிபாடுவர்
உயர்ந்த கோபுரக் கழுதையுடன் கூடுவார் (பார்த்து)

3. படிதனி லின்னந் தேசம் பலபல வுண்டதில் நேசம்
அடர வுரைத்திடப் போனால் அதில் விநோதம்
விடையவர் பொய்யாத மொழிவிமலர் மேவும்
பொய்கையிற்
குடியாக மருவும் நல்லகுணத் தோகையே (பார்த்து)

## 44. தேசங்களிலுள்ள தலங்களை வினவுதல்

### வெண்பா

செஞ்சடைப் பொய்யாத சிவன்வெற்பில் மேவுகுற
வஞ்சி மயிலே வழுத்தக்கேள்—சஞ்சரிக்குந்
தேசவளஞ் சொன்னதுபோல் தேசத்தி லுள்ளதலம்
மாசகல வேபுகலு வாய்.

---

43. (1) குச்சரம் - கூர்ச்சரம் என்னும் நாடு; மலையாளப் பெண்டிர் ஆடையணியும் வகை கூறிய வாறு.

(2) சயிந்துவ தேசம் - சிந்து தேசம்; குயம் - மார்பு; கொப்பரம் - கொப்பம், ஒருதேசம்; மதனன் - மன்மதன்.

## 45. குறத்தி தலங்களை யுரைத்தல்

### தலத்தரு

1. தில்லை காளத்தி அருணை
திருச்செங்கா டவநாசி
முல்லை பேரளம் வேதாரண்யம்
முகவூர் வடகாசி

2. குடவாசல் நள்ளாறு கும்ப
கோணம் திருவோத்தூர்
கடையூர் திருப்பனந் தாள்திருக்
கரைஏ டகம்புத்தூர்

3. மதுரை திருவானைக் காகச்சி
மங்கை திருவாரூர்
அதிகை திருவழு வூர்திரு
ஆலங்காடு நற்போரூர்

4. வாஞ்சியந் திருமரு கல்திரு
மறைக்காடு மாயூரம்
காஞ்சி இன்னம்பூர் விருத்தாசலம்
கழுக்குன்றம் கேதாரம்

5. வீழி ரத்தினகிரி சிராப்பள்ளி
வில்லைகஞ்ச னூர்கோயில்
காழிகண்டி நாகே சுரந்திருக்
கலையனூர் திருநாவல்.

6. ஓரியூர் பாபநா சம்புக
லூர்சிறு பாகை
நாரையூர் திருப்பனந் தாள்வெண்ணெய்
நல்லூர் கடல்நாகை.

---

45. (1) முல்லை - திருமுல்லைவாயில்; முகவூர் - இராமநாதபுரம் ; திருக்கரை - திருக்காரி கரை போலும்.

(2) மங்கை - திருமங்கலக்குடி ; போரூர் - திருப்போரூர் என்னும் முருகன்தலம்.

(3) இரத்தினகிரி-திருவாட்போக்கி ; வீழ் - திருவீழிமிழலை ; வில்லை - வில்லியனூர்; காழி - சீகாழி ; கண்டி - திருக்கண்டியூர் ; கலையனூர் - கலயநல்லூர்; நாவல் - நாவலூர்.

(6) ஓரியூர்-திருவாசகத்தில் குறிப்பிட்டதலம் ; சிறு பாகை - அச்சிறுபாக்கம். இங்கு ஆசிரியர் தலப் பெயர்களை அடையில்லாமலே எதுகைமோனைக்குள் வைத்துப் பாடியிருப்பது பாராட்டத்தக்கது. இங்குப் பதிகம் பெற்ற தலங்கள் 46 ; பிற தலங்கள் 9.

## 46. குறத்தி தான் வந்த காரியம் கூறுதல்

தையலே பலதல முண்டது
தனிலுண் டுயர்வண்மையே.
பொய்கைப் பாகை நற்றலங் காணஇப்
போது வந்தனன் உண்மையே

## 47. குறத்தியை நதிவளங் கேட்டல்

### கொச்சகக் கலிப்பா

ஏடவிழு மலரோனும் இரும்புவியை அளந்தோனும்
நாடரிய பொய்யாத நாதர்வரைக் குறமாதே
நீடுதல வளமைசொன்ன நேர்மைஎன்னப் புவிதனில் நீ
ஆடிவந்த நதிகளையான் அறியும்வகை புகல்வாயே.

### வசனம்

" அகோ வாரும் பெண்ணே, ரஞ்சித குறவஞ்சி மோகினியே! நீசொன்ன தலம் சகலமும் கேட்டு மகா சந்தோசமாச்சுது. நீ யறிந்த நதிகளின் சிறப்பைச் சொல்லடி குறத்தி."

" அம்மம்மா அம்மம்மா எங்க அம்மம்மா, நானறிந்த நதிச்சிறப்பைச் சொல்லென்றல்லோ கேட்கின்றாய், ஆனால், சொல்லுகிறேன் கேளடி யம்மே."

## 48. குறத்தி நதிகளின் சிறப்புக் கூறுதல்

### நதிப்பதம்

1. நானாடி வந்த நதியாவுங் கேளாய்—மிகு
நன்மை பெறவே கூடி வெகு நாளாய்
பூநீர்கொண் டன்பர்தினம் பணிதாளார்—நாளும்
பொய்யா தவருறு
செய்யா பதிவரு
மொய்யார் அளிதிகழ்
மையார் குழலே (நானாடி)

---

47. மலரோன் - பிரமன்; அளந்தோன் - அளந்த திருவிக்கிரமனாகிய திருமால்.

48. நதி என்ற போதிலும் இங்குத் தீர்த்தங் களும் சொல்லப்படும்.

(1) ஆடிவந்த - நீராடி வந்த.

2. கம்பை யமுனை கிருட்டிணை பிரயாகை—நல்ல
கர்ண வேணிபொன் முகரி கவுசிகயை
பம்பை சேது கோமுதி சந்திரபாகை—மூவர்
பாவினு மிலகிய
காவிரி நதிசேர்
தாவிரி சரணம்வி
தேவியி னுடனே (நானாடி)

3. கங்கை சரசுவதி பாலிநதி செய்கை—வளர்
கன்னியா குமரி கமலநதி பொய்கை
துங்க பத்திரி நிருமதை சரயு வைகை—பாப
சோகமது தவிரும்
வேகவதி கனபி
னாகி நதியுடன்அ நேகமதாக (நானாடி)

4. கண்டகி முதலான நதிகோடி—நான்
கண்டதுண் டங்கங்கு மிகக் கொண்டாடி
அண்டர் போற்றும் பொய்கை யிதென்றேதேடி—மிகும்
ஆவலுட னேவந்து
மேவினேன் எனக்கு நீ
யாவியா கையினாற்சு
பாவிகமே சொன்னேன் (நானாடி)

---

48. (2) கம்பை-பொய்கைப்பாக்கத்திற்குரிய நதி; பிரயாகை - கங்கையும் யமுனையும் கூடும் இடம்; கர்ணவேணி - ஓர் ஆறு; பொன்முகரி - காளத்தியில் ஓடும் நதி; கவுசி - ஒரு தீர்த்தம்; கயை - கயாதீர்த்த மாகிய பால்குன நதி; பம்பை - பம்பாநதி; சேது- தீர்த்தம்; கோமுகி - மணிபல்லவத்துள்ளதொரு பொய்கை என்று மணிமேகலை கூறும்; இமய மலையில் கங்கையிலுள்ள ஒரு பொய்கைக்கும் இப் பெயருண்டு. சந்திரபாகை - பஞ்சாப்பிலுள்ள சீனப் என்னும் நதிக்கு இப் பெயருண்டு.

(3) பாலி - பாலாறு: செய்கை — செய்யூரில் உள்ள தீர்த்தம்; கமலநதி - தாமரை படர்ந்துள்ள தீர்த்தம்; வேகவதி - வைகை; பினாகி - பெண்ணை.

(4) கண்டகி - சாளக்கிராமம் தருகின்ற கங்கை யின் உபநதி; ஆவி - உயிர் போன்றவள்; சுபாவிகமே- இயல்பாகவே.

## 49. குறத்தியுரைத்த குறிகளைக் கேட்டல்

### வெண்பா

மூர்த்திநம்பொய் யாத மொழியீசர் நன்னாட்டில்
தீர்த்த வளமுரைத்த சேதிபோல்—ஆர்த்தபுக
ழாருங் குறமாதே ஆராருக் கேகுறிவிண்
பாரி லுரைத்தாய் பகரி.

## 50. குறத்தி கூறுதல்

### வசனம்

''அகோ வாரும் பெண்ணே, ரஞ்சித குறவஞ்சி மோகினியே! நீ சொன்ன நதிச் சிறப்புக் கேட்டு மகா சந்தோசமாச்சுது. நீ யார் யார்க்குக் குறி சொன்னாய்! சொல்லடி குறத்தி.''

''அம்மம்மா அம்மம்மா எங்க அம்மம்மா, நான் இது வரை குறி சொன்னவர்களைச் சொல்லென்றல்லோ கேட்கிறாய், ஆனால், சொல்லுகிறேன் கேளடியம்மே.''

### குறிசொன்ன தரு

1. ஆதி யுமைகேட்கப் பரிந்தே சிவனை மேயபாதி
   யாகுவா யென்றேன் நான் தெரிந்தே
   மாது பொன்பின் கேட்க முன்னின்று சொன்னேன் அரிதன்
   மார்பதனில் வாழ்குவா யென்று

2. கங்கை குறிஎன்று தொடுத்தாள் சொன்னேன் நேயமாய்க்
   கணவன் தலைமே லென்றேன் நகைத்தாள்
   பங்கயன் மாதுக்குக் குறிசொன்னேன் புருஷன் நாவிற்
   பதிந்திருப்பா யென்றுநான் முன்னே.

3. இந்திராணி சொல்லெனக் கண்டு வெகுபுருஷன்
   என்றன னவளுக் இன்ன துண்டு
   வந்த கலிகை சொல்லடியென்னக் கல்லாவை யென்றேன்
   மனமவளுக் கங்கனே கண்ண.

---

50. (1) பொன் - இலக்குமி; (2) கணவன் தலைமேல் - சிவபிரான் சடாபாரத்தில் இருத்தலால். பங்கயன் - பிரமன் மாது - சரசுவதி. (3) வந்து அகலிகை, மாது - சரசுவதி கண்ண - வருந்த, கன்ற

4. பாரினிற் தமயந்தி கேட்க நளன்வருவான்
பாரெனச் சொன்னே னாசை மீட்க.

.. .. .. .. .. .. ..

.. .. .. .. .. .. ..

5. துரோபதை குறிசொல் லென்றாள் தோணவே — கர்ணன்
தன்மீதில் கோபமுனக் கென்றேன் நாணவே
அராவணி பொய்யாத மொழியீசர் நாட்டிலுன்றனுக்கு
அறைன் வந்தேன்குறி யன்னமே.

## 51. குறத்தி பெற்ற பரிசுகளை வினவுதல்

### கொச்சகம்

அளகைநிகர் பொய்கைப் பொய்யாத மொழியீசர் வெற்பில்
இளகிப் பணைத்து விம்மி இறுகுமுலைக் குறமாதே
தெளிவுபெறக் குறியுரைத்த சேதியினால் அவரவர்கள்
உளமகிழ்ந்து பரிசுதந்த துள்ளபடி சொல்வாயே.

## 52. குறத்தி தான்பெற்ற வெகுமானம் கூறுதல்

''அகோ வாரும் பெண்ணே, ரஞ்சித குறவஞ்சி மோகினியே! நீ சொன்ன குறியுரைத்த சேதி கேட்டு மகா சந்தோசமாச்சுது. நீயறிந்து பெற்ற பரிசுகளைச் சொல்லடி குறத்தி.''

''அம்மம்மா அம்மம்மா எங்க அம்மம்மா, நான் பெற்ற பரிசுகளைச் சொல்லென்றல்லோ கேட்கின்றாய். ஆனால் சொல்லுகிறேன் கேளடியம்மே.''

### வெகுமானம் வாங்கின தரு

1. நாமகட் கும்மணப் பூமகட் கும்மலை
மாமகட் கும்குறி சொன்னேன்
ராவு ராக்குஞ் சிந்தாக் கும்நல்ல
வாக்கு மெனக்க ளித்தாள்.

---

50. (4) இதில் ஓரடி காணப்படவில்லை.
(5) அறைய - சொல்ல.

51. அளகை - குபேரன் நகர்.

2. கங்கைக் குஞ்சசி மங்கைக் குங்கண்டு
செங்கைக் குள்குறி சொன்னேன்
கங்கண மும்வெடு பொன்பணமும் அந்தச்
செணமே எனக்க ளித்தாள்.

3. மாகத தேசத்திற் தோகைய ரானவர்க்
காக முடன்குறி சொன்னேன்
வயிர மணியுஞ் சரப்பணி யும்எனக்
கணியும் படியவர் தந்தார்.

4. கோசல தேசத்து ராசமின் னாருக்கு
நேச முடன்குறி சொன்னேன் — குறிக்
கூடையும் பட்டின் ஆடையும் பூசல்
ஆடையு மெனக்க ளித்தார்.

## 53. குறத்தி தலைவியைக் கேட்டல்

வாசர்தென் பாகையில் ஈசர்நன் னாட்டுறை
ராச மின்னே சொல்லக் கேளாய் — வெகு
மான முன்கையில் நானு மேபெறத்
தானே வந்தேனடி யம்மே.

## 54. குறத்தி குறி சொல்லுதல்

### வசனம்

''அப்படியே சந்தோஷமாச்சுது. எனக்குக் குறி சொல்லடி குறத்தி.''

''ஆனால் சொல்லுகிறேன், கேளடி அம்மே.''

### குறி சொல்லுகிற அகவல்

நல்லது குறிதான் நானுனக் கன்பாய்ச்
சொல்லுகிறேன், இங்கே சுத்தமாய் மெழுகு;
நாலுமூ லையிலே நற்பவ ளத்தால்
காலுமே நாட்டிக் கைவளை பரப்பு;

---

52. ராவுராக்கு - கழுத்திலணியும் அணிவகை; சிந்தாக்கு - அட்டிகை; வாக்கு - சொல்வன்மை.

(2) சசிமங்கை - இந்திராணி

(3) மாகததேசம் - மகத தேசம்

(4) ராச மின்னார் - அரச குலப் பெண்டிர்.

தோரண மாலை தொடுத்துமுன் பாகச்
சீருட னேநீ சிங்கா ரித்திரு ;
நிறைகுட முடனே நிறைமரக் கால்நெல்
நிறையவே வைத்து நிறைவிளக் கேற்று ;
பிள்ளையார் தன்னைப் பிடித்துவை நடுவே ;
கொள்ளுடன் மொச்சை குளப்பதம் பொரித்து
இரண்டு தேங்காய் இயல்புடன் உடைத்தே
திரண்டதன் பாலே சீருடன் படைத்துத்
தோத்திரம் பண்ணு, தொழுதுமுன் நின்று ;
சாத்திர முண்டு, தவறல்ல, கண்டாய்!
இந்தக் குஞ்சிக் கெண்ணெயுன் கையால்
கொஞ்சங் குத்து,இந்தக் குறக்கூடை நாச்சி
தனக்கொரு சேலை தாதா என்கிறாள் —
கனக்கவோர் சேலை கடுகவே கொண்டுவா ;
மாத்திரைக் கோலை வாங்கிநீ கண்ணாற்
பார்த்துக்கும் பிட்டோர் பணந்தெட் சணைவை; உன்
குலதெய் வங்களைக் கோரிக்கொள் மனதில் ;
இலகுமென் னுடைய இட்டதே வதையைக்
கோரிக் குறேனிதோ; குறக்கூடை யம்மாள்
மாரி மகமாயி மகாபத்திர காளி
சண்டிப் பிடாரி சரசோதி யம்மாள்
மந்திர சொரூபி மகாபர மேசுவரி
கணபதி யப்பா கந்தா கடம்பா
மணமலி கூந்தல் வள்ளிநாச் சியாரே
சொன்னபடியே தொட்டதொட் டிடமெலாம்
நன்மை யுடன்குறி நாளுமே பலிக்க
வரந்தர வேணும் வாக்குமுன் வேணும்
கருந்தடக் கண்ணே கைதாஅம்மே கைதா.

---

54. அடி 8; நிறை விளக்கு - நிரம்ப நெய் பெய்து பெருந்திரி போட்டு எப்போதும் எரியும் அகல் விளக்கு.

(10) குளபதம் - நெல் வகை. (21) கோரிக் கொள் - வேண்டிக்கொள். 23-28 வேண்டுகின்ற தெய்வங்கள்.

## 55. கைபார்க்கிற தரு

### சிந்து

பெண்ணமரும் கண்மணியே பெண்கள் பெருமாளே
பெண்கள் சிகாமணியே—உன்—கைதனைத் தாராய்
வண்ண மணிரேகைச் சங்கரேகை விளங்குதா பாராய்

1. மச்சரேகை நயம் பாராய்
மகிழ்ந்து களி தாராய்—இந்தக்
கும்பரேகை யினால் உனக்கு
வலுயோகம் இனிப் பிரபல
பாக்கியம் இருக்குதடி யம்மே.

2. அந்தப் பத்ம ரேகையினால்
ஆண் பிள்ளை பனி ரெண்டு
அழகு பெண்கள் நாலும்—உனக்கு
அதிர்ஷ்ட மச்ச மம்மே.

3. கோதும்ப ரேகை கையெடுத்துக்
குடரேகையாலே குவலயத்தின்
கோலுக்குள் ளிருக்கு தம்மே
மாதந் தனிலொன்று சொல்லேன்
றோத நின்றா யாதலினால்
மாலை என்றா யாதலினால்
வாசி கண்டா யம்மே.

4. கேந்தச் சத்தி ரேகை யந்தப்
பூந்திருவுக் கல்லால்—
செகத்தி லெங்கும் காணேன்
உனக்கிருக்கு தம்மே.
சார்ந்த கொடிரேகை ரதிதேவி
தன்கையிற் கண்டிருப்பேன்
தருக்குடன் இப்புவியு லுன்றன்
கரத்தில் கண்டேனம்மே.

5. இனியுனது மனதி லெண்ணி
இருப்பதுநான் சொல்லக்கேள்—இந்த
மூலையி லொருவன் தந்திருக்கும் மையல்சேர்
கப்பணத்தில் வேணாப்பன் கன்னக்
கதுப்பன் பச்சைக் கலிப்பன்
தேவருலகும் மூவருக்கும்
யாவருக்கும் துரைகாண்
கதித்தகுரல் வேணு முன்லான்
முழக்கும்குரல் காட்சி காணும்—பொய்யா
மொழிசர் புனல்வரையி லணங்கே.

---

55. (5) இதன் பொருள் தெளிவாகவில்லை.

## 56. விருத்தப்பா

நீலநேர் மொழிக்குறமா திப்படியே
குறியதனை நிகழ்த்தி நின்றாள்
பாலலோ சனர்பொய்யா மொழிக்கடவுள்
எங்கும்நிறை யன்பி னாலே.
சாலவும் அன்பர்கள் நினைப்பதனை ஈபவரா
தலினாலே தயவாய் வந்து
வால கோகில மனையில் மங்களமா
யிருந்து மருவி னாரே.

## 57. இதுவுமது

மருவியித ழேமருகி நயந்து பொய்யா
மொழியீசர் அருகி ருக்க
அரிவை யர்நா யகமான வாலகோ
கிலமாதங் கன்ப தாகி
முருகன்மூக் குத்தி சரப்பணி முதலா
கியதளிக்க முகம லர்ந்தே
பருவரையின் குறமாது செல்ல நினைத்
தாள்தனது பதிக்குத் தானே.

## 58. சிங்கன் தோன்றுதல்

### விருத்தம்

.............................அடியவற்கு
உளத்திருந்து பேச லான
முறைமுடிக்கும் பொய்யாத மொழியீசர்
வரைமீது மோக மான
திறங்குறத்தி குறமாதைக் கருதி அஷ்டத்
திசைமுழுதும் தோன்றி னானே.

---

56. பாலலோசனர் - நெற்றிக் கண்ணுடையவர்; மருவினார் - தலைவிக்கு அருள் செய்தார் என்பது கருத்து.

57. பரிசில் பெற்றுக் குறவஞ்சி தன் இருப்பிடம் நோக்கிப் போகிறாள்; பருவரையின் குறமாது - மலையிலிருந்து வந்த குறமாது.

58. இப் பாடலில் சிறுபகுதி ஏட்டில் விடுபட்டுள்ளது. உள்ள வாசகம் ''பிறை மும்மதச் சடைமுடியிடு அடியவற்கு'' என்பதே. அஷ்டத்திசை - எட்டுத் திசைகளிலும் தேடினான் என்பது குறிப்பு.

## 59. சிங்கன் வருகிற தரு

### பல்லவி

சிங்கன் வந்தானே—இதோ மலைச்
சிங்கனும் வந்தானே. (சிங்கன்)

### அனுபல்லவி

புங்க வேதபர சங்க ராகிய
பொய்யா மொழியீசர் செய்யாரும் நாட்டினில்
(சிங்கன்)

### சரணம்

தலைக்குக் கோக்கிற கதணை முடித்துத்
தலைச்சிக்கம் வலைதனைக் கைபிடித்து
துடியாய்த் துடித்து (சிங்கன்)

பானை வயிறுங் கறுத்த தோலும்
கையிற் பல்லும் தொண்டிக் காலும்
பூனைகுத் தும்கையில் சில்லாக் கோலும்
பொருந்த வேமதக் குரங்கு போலும் (சிங்கன்)

திருந்தும் வளப்ப மான வயலில்
சிறந்த கண்ணுமை யாள்தன் மயலில்
பொருந்தும் இறைவர் தூத ரியலில்
பொய்யா மொழீசர் நாட்டு வயலில்
சிங்கன் வந்தானே — இதோ மலைச்
சிங்கனும் வந்தானே.

### வசனம்

இப்படி அதிக ஒப்பனைகளையுடைய சிங்கன் வந்தவன் அங்கணே நின்று பார்த்துப் பக்கிகள் ஆர்ப்பாரமுடனே வருவது கண்டு உருகி நின்றானே.

---

59. ஆர்ப்பாரம் - ஆரவாரம்.

## 60. பறவைகள் வருதல்

**தரு**

வருகுதையே — பறவைகள்
வருகுதையே (பறவைகள்)

கங்கா குலஇங்கிதன் மன்னவன்
சின்னண்ணன் நல்லண்ணன் போற்றிடக்

கருணை செய்யும் பொய்யா மொழியீசுரர்
காவளஞ்சேர் பொய்கைப் பாகைநன் னாட்டினில்
விசும்பதனில் எழுந்து பரந்து

நாரை யுள்ளான் கொக்கு வக்காவும்
குருகு காடை புறாமடையான் சிட்டுக்

கோரை யுள்ளானிவை சாரைசாரை யாகச்
சேருதையே பறவைகள் சேருதையே.

## 61. கெம்பாதே எனல்

சேருதையே பரத்துவ லிங்கம் சின்மய
சிற்குண சிற்பரன் நாளும்அம்

போரு கன்பணி பொய்யாத மொழியீசர்
பூங்கா வனந்திகழ் பாகைநன் னாட்டில்

கூருலவு நாக்கை முன்னாக வேநீட்டிக்
கொண்டு 'கீக்கீ' யென்று கூவியே தாரையும்

நாரையும் கொக்கும் நமுடும்ஆள் காட்டியும்
நந்த வனத்தண்டை வந்து குமுக்காகக்

கெம்பாரையே — பொறு பொறு
கெம்பாரையே.

---

60. கங்காகுல இங்கிதன் - வேளாள குலத்தவரான வள்ளல்; பாட்டு 29 முதலியன பார்க்க. காவளம் - சோலை வளம்; நாரை முதல் உள்ளான் வரை - பறவை இனங்கள், சேருது ஐயே என்க.

61. அம்போருகன்-பிரமன்; தாரை முதல் ஆள் காட்டி வரை பறவை இனங்கள்; நமுடு - ஒரு கொக்கு வகை; ஆள்காட்டி-ஒரு நாட்டுப் பறவை, மனிதரைக் கண்டால் ஆரவாரித்துக் கூவும்; குமுக்காக - கூட்டமாக; கெம்பாரையே - கெம்பாதே, அடஐயே என்பதைக் குறவர் கூறும் மரூஉமொழி கெம்புதல் - உரத்துப் பேசுதல், இதுபோலவே இப் பகுதியில், பின்னும் பல சொற்கள் குறவர் சொற்களாகவே குறவஞ்சி பாடினோர் அமைத்திருக்கக் காணலாம்.

## 62. பறவை சிக்குதல்

கெம்பாரை யேதிரி யம்பகன் வாசவன்
  கேசவ னும்பணி ஈசர்சரு வேசுரர்
நம்பின பேருக் கெளியர்பொய் யாமொழி
  நாதர மர்ந்திடும் பாகைநன் னாட்டில்
பம்பா நதிக்கரை தன்னிலே குத்தின
  பாரக்கண் ணிக்குள்ளே சேரச் சொக்கரடை
உம்பர் நிறக்கொக்கு வக்கா மடையா
  னுடன்கவு தாரியு மொக்கப்பட் டுக்கொண்டு
  சிக்கிச் சிடைய்யே — பறவைகள்
  சிக்கிச் சிடைய்யே.

## 63. பறவைகளை அடைத்தல்

சிக்கிச் சிடைய்யே கெவுரி பிராணேசர்
  சிந்தையி லன்பான சின்னணன் நல்லணன்
தக்கத் துதிகொண் டருளும்பொய் யாதவர்
  தாணு மருவிய பாகைநன் னாட்டில்
பத்திக ளெல்லாம் வகைவகை யாய்முன்பு
  பண்ணின பூசா பலத்தால்கண் ணிக்குள்ளே
தக்கிக்சுச் சிக்கைத் தடைத்துக்கொண் டேனித்
  தாளிச் சிறக்கயிவ் வேளைக்கு (சிக்கிச்சிடையே)

## 64. சிங்கன் சிங்கியைத் தேடுதல்

**தரு**

**பல்லவி**

சிங்கியைக் காணேனே — என் வங்கணச்
சிங்கியைக் காணேனே. (சிங்கி)

---

62. வாசவனும் கேசவனும் பணி திரியம்பகனும், ஈசனும் ஆன சர்வேசுவரர் எனக் கூட்டுக. திரியம்பகன் - முக்கண்ணனான சிவன்; வக்கா - கொக்கு வகை; உம்பர் நிறம் - நீல நிறம்; சிக்கிச் சிடையே - சிக்கிற்று அட ஐயே, கண்ணியில் பறவைகள் சிக்கிக்கொண்டன.

63. பக்கிகள் - பறவைகள்; தக்கிச்சு - தக்கிற்று, அகப்பட்டுக் கொண்டது; சிக்கு - கண்ணி; தடைத்துக் கொண்டேன் - தப்பாமல் பிடித்துக்கொண்டேன்; தாளிச்சு இறக்க - நெருப்பில் வதக்கி எடுக்க.

### அனுபல்லவி

மங்களஞ்சேர் பொய்கைப் பாகைநன் னாட்டினில்
வந்துங்கண் டேனில்லை வண்மைசேர் சிங்காரச்
சிங்கியைக் காணேனே.

### சரணங்கள்

வேணுமென் றேழரைக் கழுதையு மிட்டு
மெத்தவும் நான்பிள்ளை போலே வளர்த்தேன்
காணாமல் வங்கணக் காற்ப சப்பதன்
கைக்குள்ளா யென்னைவிட் டிப்படிப் போவாளோ
சிங்கியைக் காணேனே.

2. தொடையி லழகும் உடையி லழகும்
துலங்கி யதிரு முகத்தி லழகும்
இடையி லழகும் வடிவி லழகும்
எண்ணிஎண் ணிமனம் புண்ணாகு தேசும்மா
சிங்கியைக் காணேனே.

3. அரைநிமி ஷம்எனைக் காணா திருக்காள்
அருக்கா ணிஎனக் காசைக்கண் ணாட்டி
பரமர் பொய்யாத மொழீசர்தன் னாட்டினில்
பார்த்துமென் கண்ணுக்குத் தோற்றமா யில்லை
சிங்கியைக் காணேனே—என் வங்கணச்
சிங்கியைக் காணேனே.

## சிங்கனும் தோழனாகிய குளுவனும்

### வசனம்

இந்தச் சிங்கன் போன்ற பிரதாபத்தையும் இந்தச் சிங்கன் பேச்சையும் வழியிலே வாறபேர் போறபேர் கேட்டு,

''ஏழரைக் கழுதை பரிச மிட்டே னென்கிறாயே, ஏழு கழுதைதானாச்சே! அரைக் கழுதை எப்படியிருக்குமடா சிங்கா?''

''குட்டிக் கழுதை தாண்டா அடய்யே, அதுக்குப்பேரு அரைக் கழுதை யடய்யே.''

''அப்படிப் பரிசமிட்டுக் கொண்ட சிங்கியைக் காணோ மெண்ணா தேடுகிறாய்?''

''ஆமுடா அய்யே.''

''அவளைக் காட்டினாலென்ன தாறாயடா சிங்கா?''

---

64. வங்கணம் - காதல் கொண்ட (1) ஏழரைக் கழுதையும்? இட்டு - ஏழரைக் கழுதை பரிசமிட்டு; காற்பசப்பு - கால் நொடி நேரம்.

## 65. சிங்கியைக் காட்டுமாறு கேட்டல்

### பல்லவி

காட்டி டைய்யே—என் சிங்கியைக்
. காட்டி டைய்யே. (என் சிங்கி)

### சரணங்கள்

1. நல்லநல்ல நரிக்கொம்பு யிருக்குது தாறேன்
நாயகச் சிங்கியைக் காட்டி டைய்யே
வல்லவர்தம்மை மயக்குங் கிரிகை தாறேன்
மாணிக்கச் சிங்கியைக் காட்டி டைய்யே (என் சிங்கி)

2. அம்பு குண்டப்பால் விலங்கவோர் வேர்தாறேன்
ஆசைப்பெண் சிங்கியைக் காட்டி டைய்யே
பம்புபில் லிக்கொரு மந்திரஞ் சொல்லுறேன்
பார்ப்போம்என் சிங்கியைக் காட்டி டைய்யே.

3. துரைகள் வசியக் குளியமொன் றீயுறேன்
சொகுசான சிங்கியைக் காட்டி டைய்யே
ஒருசாமம் போகம் பொசியாமல் வேர்தாறேன்
உண்மைஎன் சிங்கியைக் காட்டி டைய்யே

4. முக்காத நாழியில் போய்வரத் தாறேன்ஓர்
மூலிகை சிங்கியைக் காட்டி டைய்யே.
பொக்கிஷம் புதையல் எடுக்கவோர் மைதாறேன்என்
பூம்பாவை சிங்கியைக் காட்டி டைய்யே. (என் சிங்கி)

5. வேணவேண கிரிகை யுண்டது சொல்லுறேன்
மேட்டிமைச் சிங்கியைக் காட்டி டைய்யே
தாணுபொய் யாத மொழியீசர்தன் னாட்டினில்
சம்பிரமச் சிங்கியைக் காட்டி டைய்யே
அய்யய்யே காட்டிடைய்யே.

---

65. (1) காட்டிடு அய்யே என்க; கிறிகை - குளிகை.

(2) அம்பு குண்டு - படைக்கலங்கள். விலங்க - தைக்காமல் விலகிப்போக; பம்பு - நெருங்கி வருகிற; பில்லி - சூனிய வித்தை.

(3) அருக்காணி - அருமையுள்ள (பேச்சு மொழி).

(4) குளியம்-குளிகை. பொசியாமல்-சோராமல்.

(5) மேட்டிமை - சிறப்புடைய

## 66. சிங்கன் சிங்கியைக் காணல்

### விருத்தம்

நாற்றிசையும் புகழ்பொய்கைப் பொய்யாத மொழியீசர்
நாட்டிற் சிங்கன்
பார்த்துரையாய் இவள்தானோ உன்தன் சிங்கிப்
பாவையென்றே
யவரவர்கள் பகரக்கண்டான்
வேற்றுமுகம் போலஒரு பெரும்பூதம் போல்விடறி யெதிரே
தனித்து நின்று மேவக் கண்டான்.
பேர்த்து நடுங்கித் திகைத்துக் குரலின் சாடைப் பிடித்தருகி
லேகிட்டிப் பேசினானே.

## 67. சிங்கனும் சிங்கியும் ஏசல்

### ஏசல் தரு

1. தனிவழி யாகநீ போன கொழுப்பேது
சங்கையில் லாமலே சிங்கி—எக்கச்
சக்கம்பே சாதேஉன் னாண்டச்சி யார்சித்தம்
சரிய மனம்போன படிபோவேன் சிங்கா

2. எதிர்த்துநீ பேசினத்துக் குன்னைத் தாடையில்
எட்டிநா னடித்தாலோ சிங்கி—இந்த
ஏடா கூடங்கள் பேசாதே சண்ணப் போறேன்
ஏதிந்த வார்த்தைகள் சிங்கா.

3. சண்ணப்போ றேனென்று தாண்டித் தாண்டி வாறாய்
சாதிக் கடுக்குமோடி சிங்கி
சல்லித் தனமெல்லாம் பேசாதே போடாவுன்
சளுக்கைநா னறியேனோ சிங்கா.

4. கள்ளைக் குடித்த மயக்கமோ பேசவுங்
காரிய மேதடி சிங்கி—அந்தக்

---

66. அவரவர்கள் - கண்டோர் பலரும்; சிங்கியைக் காட்டுகிறார்கள். பெரும் பூதம்போல் - சிங்கி பெற்ற பரிசில்களின் சிறப்பினால் சிங்கன் அவளை அடையாளம் கண்டு கொள்ளமுடியாமல். விடறி - நடுங்கி. குரலின் சாடை பிடித்து - அவளுடைய உருவத்தைக் கண்டு தன்னுடைய சிங்கி என்று அறியமுடியாமல் குரலைக் கொண்டே அறிந்து கொள்கிறான்.

67. (1) ஆண்டச்சியார்-உன் காதலியாகிய நான் என்பது பொருள்.

(2) ஏடாகூடம் - தாறுமாறான சொல். சண்ண - தாக்க

(3) சல்லித்தனம் - கீழ்மை. சளுக்கு - செருக்கு.

(4) காயக்கப் பேச்சு - மயக்கத்தால் வந்த பேச்சு,

கள்ளைக் குடிப்பதுங் காயக்கப் பேச்சும்உன்
காரண மல்லவோ சிங்கா.

**வசனம்**

''அம்மம்மா சிங்கம்மா, கோவிச்சுக் கொள்ளாதே, உன் காலுக்குக் கும்பிடுகிறேண்டி சிங்கம்மா,''

''ஏதடா அம்மா என்குறாய், அம்மக் கள்ளா ! முறைமை கெட்ட சிங்கா !''

''அப்படியுஞ் சொல்லப் போகாதோ ? கோவிச்சுக் கொள்ளாதே, சற்றே பேசிக் கொள்ளுவோம் வாடிசிங்கி.''

## 68. சிங்கனும் சிங்கியும் வாக்குவாதம்

**தரு**

1. ஆனையுன் நெற்றியில் தானே துடுப்புப்போல்
ஆடுவ தேதடி சிங்கி — அல்ல
அடுக்கினைக் கேதத் துடுப்பல்ல டாவிலை
அன்பது பொன்சுட்டி சிங்கா.

2. வளரும் கழுத்திலே நெருஞ்சிமுள் ளைக்கோத்து
மாட்டிக்கொள் வானேண்டி சிங்கி — ராச
கன்னி மாரிடும் பொன்னின் வளையல் நீ
கண்டறி யாயோடா சிங்கா.

3. என்னைக்கண் டஞ்சிமுக் காடிட்டுத் தான்மறைந்
திருப்பானேன் சொல்மொங்கி சிங்கி — நல்ல
இங்கித மாதர்கள் தங்களுட கொங்கைக்
கேற்ற ரவிக்கைகாண் சிங்கா.

4. வாயெல் லாம்ரத்தம் போலே சிகப்பாக
வழியுற தேதடி சிங்கி — எழில்
வாய்ந்தமின்னார் தந்த தாம்பூலச் சாரத்தின்
வண்மைகண் டாயடா சிங்கா.

5. பாரிலிந் தக்கோல மாலையெல் லாமெங்கே
பண்ணிக் கொண்டுவந்தாய் சிங்கி — பொய்கைப்
பாகையி லீசுரன் மோகினி தந்தபொற்
பணிகள்கண் டாயடா சிங்கா.

6. ஏதுக்கிங் கேவார்த்தை நம்மிட குச்சிற்போய்
இருப்போம்வா முன்போலே சிங்கி — அதுக்
கென்ன தடையா சுகமாகக் கூடி
இருப்போம் வாடா அடா — சிங்கா.

---

68. (1) சுட்டி - நெற்றியில் அணியும் ஆபரணம்;
(2) மொங்கி - ஏமாற்றுபவள் ;
(3) பணிகள் - ஆபரணங்கள்.

## 69. வாழ்த்து

### விருத்தம்

பகரரிய மறைவாழி வளஞ்சேர் பொய்கைப்
பாகையிறை வாழியவர் பரிவி னாலே
சகமதனில் வருணமொரு நான்கும் வாழி
சந்ததமன் னவர்செங்கோல் தழைத்து வாழி
நகமருவு புயன்கங்கை குலத்துள் வந்த
நல்லணன்சின் னணன்றன் நாளும் வாழி
மகிதலமேற் சிதம்பரதத் துவலிங் கையன்
மதுரகவி யுந்தழைத்து வாழி தானே.

பொய்கைப்பாக்கம் பொய்யாத மொழியீசுவரர் |பேரில் குறவஞ்சி எழுதி நிறைந்தது. முற்றும்.

தத்துவலிங்கந்துணையாகவும்
சிதம்பரேசுரர் கிருபையுண்டாகவும்

சார்வரி ௵ ஆவணிமீ 2ம் நாள் செவ்வாய்க்கிழமை.

இறை - சிவபெருமான்; நகமருவு புயன் - மலை போன்ற தோளான்; கங்கை குலம்-வேளாளர் குலம்; மகிதலம் - உலகம்; சிதம்பரதத்துவலிங்கன் - சிதம்பரம் என்பவருடைய புதல்வனாகிய தத்துவலிங்கன், இந்நூல் செய்தவர். மதுரகவி - அவர் செய்த இந்த நூல்.

இந்த சார்வரி ௵ கி.பி. 1840-க்குச் சரியானது. இது ஏடெழுதிய காலம். நூல் செய்த காலம் இதற்கு முன்னதாக இருந்திருக்கும். உடன்காலமாகத் தோன்றவில்லை. உத்தேசம் கி.பி. 1750 என்று கருதலாம்.

# பாடபேதங்கள்

இக் குறவஞ்சி ஏடு, அபூர்த்தியான மற்றோர் ஏட்டுடன் ஒப்புநோக்கப்பட்டது. கண்ட முக்கியப் பாடபேதங்கள் பின்னே தரப்பட்டுள்ளன. பொய்யாமொழியீசர் என்னும் பெயர் பல இடங்களில் பொய்யாமொழிநாதர் என்று காணப் படுகிறது.

1. பார்வதிநாதர் கற்பகத்தைப் பொற்பகத்தில் முதற் பாடலின் பின் கீழ்வரும் அபூர்த்தியான பாடல் காணப் படுகிறது.

தனனதன தனதனன தனதனதனன தனதனதனனனா
உரகமணி நிகழ்சரண பரிபுரஒலிகள் கலகலகலெனவே
இரதியுரு வசியிவளை நிகரினைஎனமி டைநிறநிறெனவே
அரியய னிருவர்அறி வரியபொய்யா மொழீசர்நல்
நாட்டினில்.

தனனதன

2. உளமகிதலமதில்
திசையினிலிவர்கள்

5. வெள்ளிவிடை
நந்திப்பவனி

9. வந்தான் - சொகுசுடனே, அழகுடனே, நடையுடனே.

13. ஒலிபதமிசைகலின்

24. பற்கறைக் கொள்ளை

26-1. 6. கடைசி இருவரிகளுக்குப் பதிலாக, பின்வருவது:
நைந்திடவுயலே - நிந்தை பார்க்கையிலே

28. வரி 14. இசைய நன்னீதி
வரி 64. நீயுமோர்
வரி 74. குலவளகத்தார்

36. சிலைபடைத்த விற்புருவக்.

38. தாஇவர்.

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி

## (எண் - செய்யுளெண்)


| | | | |
|---|---|---|---|
| அகிலாண்ட கோடி | 11 | நாற்றிசையும் | 66 |
| அடியவற்கு | 58 | நானாடி வந்த | 48 |
| அமுதகிரணம் | 16 | நிலை படைத்த | 36 |
| அளகை நிகர் | 51 | நீலநேர் | 56. |
| அன்பருக்கன் | 21 | நெட்டிலைச்சூல | 8 |
| அன்னவயல் | 5 | பகரரிய | 69 |
| ஆதியுமை | 50 | பண்டரி தேடும் | 14 |
| ஆனையுன் | 68 | பத்தர் பணியும் | 25 |
| எங்கள் மலை | 37 | பவனிவாறார் | 6 |
| ஏடவிழும் | 47 | பனிமதிநதி | 2 |
| கட்டியக்காரன் | 9 | பாகையில் | 15 |
| காட்டிடையே | 65 | பார்த்து வந்த | 43 |
| கெம்பாரையே | 62 | பாலலோச | 27 |
| சரசசிந்தா | 24 | பூகமுடனாக | 3 |
| சரணம் சர | 29 | பூதியில் மேனி | 38 |
| சாதிமார்க்கம் | 39 | பூவுலகோர் | 19 |
| சிக்கிச்சிடை | 63 | பெண்ணமரும் | 55 |
| சிங்கன் வந்தானே | 59 | பொய்கைப்பா | 23 |
| சிங்கியை | 64 | பொய்யாத ஈசர் | 17 |
| சூதவனந் | 20 | பொய்யா மொழி | 4 |
| செஞ்சடை | 44 | மதனராசனே | 22 |
| செம்பிட்ட | 25 | மதிமுகசெக | 30 |
| செய செய | 7 | மருமேவிதழி | 12 |
| சேருதையே | 61 | மருவியித | 57 |
| தனக்குவமை | 40 | மாவினன் | 28 |
| தனிவழியாக | 67 | மூர்த்திநம் | 49 |
| தார்கொண்ட | 1 | மையலானே | 26 |
| தில்லை | 45 | வஞ்சி வந்தாள் | 31 |
| தெய்வமலை | 32 | வருகுதையே | 60 |
| தேசதுலாவி | 34 | வலங்கொள் | 10 |
| தையலே பல | 46 | வாசர்தென் | 53 |
| நல்லண மகி | 42 | வாசலிது | 33 |
| நல்லது குறி | 54 | வாசனைப்பொ | 18 |
| நாடுமெங்கள் | 35 | வாலகோகில | 13 |
| நாமகட்கு | 52 | வித்தை நீதி | 41 |

## இவ்வாய்விற்குப் பயன்பட்ட நூல்கள்

அல்லியரசாணிமாலை
அஷ்டப் பிரபந்தம்
ஆளுடைய பிள்ளையார் கலம்பகம்
இலக்கண விளக்கம்
ஐங்குறு நூறு
கந்தபுராணக் கீர்த்தனை
கம்பராமாயணம்
கலிங்கத்துப் பரணி
குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு
குறுந்தொகை
சிதம்பரப் பாட்டியல்
சிலப்பதிகாரம்
சிவந்தெழுந்த பல்லவராயன் உலா
சிவப்பிரகாசர் பிரபந்தத் திரட்டு
சிறிய திருமடல்
சுந்தரர் வேடுபறி
ஞான விநோதன் கலம்பகம்
திருக்கலம்பகம்
திருக்குற்றாலக் குறவஞ்சி
திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகம்
திருவாமாத்தூர்க் கலம்பகம்
திருவாய்மொழி
தில்லைக் கலம்பகம்
நந்திக் கலம்பகம்
நவநீதப் பாட்டியல்
நாலாயிரப் பிரபந்தம்
பஞ்சபாண்டவர் வனவாசம்
பன்னிருபாட்டியல்
பிரபந்த மரபியல்
புலியூர் வெண்பா
பெரியபுராணம்
பெருங்கதை
பேரின்பக் கீர்த்தனங்கள்
மணிமேகலை
முத்தொள்ளாயிரம்
வச்சணநிதி மாலை

## இவ்வாய்விற் குறிப்பிட்ட குறவஞ்சி நூல்கள்

### அ. குறம்—பிரபந்தம்

இலக்ஷணக் குறவஞ்சி
மகிழ்மாறன் பவனிக்குறம்
மீனாட்சியம்மை குறம்
வெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சி

### ஆ. குறம்—அம்மானைப் பாடல்

சொர்க்கக் குறம்
திரௌபதி குறம்
மின்னொளியாள் குறம்
விதுரன் குறம்

### இ. வேதாந்தக் குறம்

அகண்டவெளிக் குறம்
ஞானரத்தினக் குறவஞ்சி
தருமாம்பாள் குறம்
வேதாந்தாக் குறம்

## ஈ. குறவஞ்சி நாடகங்கள்

அர்த்தநாரீசர் குறவஞ்சி (திருச்செங்கோடு)[1]
அலகுமலைக் குறவஞ்சி (ஓதாளர் குறவஞ்சி என்றும் பெயர்)[2,4]
அழகர் குறவஞ்சி (அழகர்கோயில்)[3]
காளியண்ணன் குறவஞ்சி [1, 5]
கிருஷ்ணமாரி குறவஞ்சி (திருவேற்காடு)[6]
கும்பேசர் குறவஞ்சி (குடந்தை)
குமாரலிங்கர் குறவஞ்சி [1, 5]
குறுக்குத்துறைக் குறவஞ்சி[2]
குன்றாக்குடிக் குறவஞ்சி[2]
கூட்டுறவுக் குறவஞ்சி[6]
சகாஜி குறவஞ்சி (தெலுங்கில்)[1]
சரபேந்திர பூபாலக் குறவஞ்சி[5]
சிதம்பரக் குறவஞ்சி
சிவகிரிக் குறவஞ்சி
சோலைமலைக் குறவஞ்சி (அழகர்கோயில்)[3]
சிற்றம்பலக் குறவஞ்சி
தமிழரசி குறவஞ்சி[6]
தியாகேசர் குறவஞ்சி (திருவாரூர்)
திருக்குற்றாலக் குறவஞ்சி
திருப்போரூர்க் குறவஞ்சி[2]
திருமலையாண்டவர் குறவஞ்சி[2]
நகுலமலைக் குறவஞ்சி
நவநீதேசுவரர் குறவஞ்சி (திருச்சிக்கல்)[7]
நீலகண்டர் குறவஞ்சி நாடகம் (மண்ணிப் படிக்கரை)[7]
நெல்லைக் குறவஞ்சி[1]
பாம்பண்ண கவுண்டன் குறவஞ்சி[5]
பாரத சுதந்திரக் குறவஞ்சி[6]
பெத்லகேம் குறவஞ்சி
பொய்யா மொழியீசர் குறவஞ்சி (பொய்கைப்பாக்கம்)[7]
மலையனூர் ராசாக் கவுண்டன் குறவஞ்சி[1, 5]
மருதப்பக் குறவஞ்சி (பிலிப் டிமெல்லோ என்ற டச்சுக்காரர் ஆதரவில், இலங்கை)[5]
மாத்தளை முத்துமாரியம்மன் குறவஞ்சி[6]
முத்தானந்தர் குறவஞ்சி[1]
வருணாபுரிக் குறவஞ்சி (தில்லைவிடங்கன் ஆதிமூலேசர்)
விராலிமலைக் குறவஞ்சி[2]
வெங்களப்ப நாயக்கர் குறவஞ்சி[1]
ரிஷிவந்தியம் குறவஞ்சி

மேற்குறிப்பிட்டவற்றுள் நகுலமலைக் குறவஞ்சியும், மருதப்பக் குறவஞ்சியும், மாத்தளை முத்து மாரியம்மன் குறவஞ்சியும் இலங்கைக் குரியவை. இவையன்றிப் பின் வரும் சிலவும் இலங்கைக்குரியனவாகச் சொல்லப்பட்டுள்ளன. அனலைத்தீவு ஐயனார் குறவஞ்சி - முத்துக்குமாரப் புலவர், கச்சால் குறவஞ்சி - மாம்பாண முதலியார், கதிரைமலைக் குறவஞ்சி - சதுமலைப் புலவர் விநாயகர், காரைக் குறவஞ்சி- சஞ்சித சுப்பையர், சந்திரசேகரக் குறவஞ்சி—ஆசிரியர் பெயர் தெரியவில்லை, தத்துவக் குறவஞ்சி - முருகேச பண்டிதர், வண்ணைக்குறவஞ்சி - விசுவநாத சாத்திரியார், நல்லை நகர்க் குறவஞ்சி - கந்தப்பிள்ளை, மல்வில் குறவஞ்சியும் வள்ளிக் குறவஞ்சியும் - வெற்றிவேலுப் புலவர், முத்துக்கிருட்டினர் குறவஞ்சி - இன்பகனி, வண்ணைவைத்திலிங்கர் குறவஞ்சி - கணபதி ஐயர்.

1. அச்சில் வாராதவை
2. முருகன் மீது
3. திருமால் மீது
4. சாதிப் பெருமை
5. தலைவர் மீது
6. இருபதாம் நூற்றாண்டு
7. இப்போது அச்சாகின்றவை.

# 2. காங்கேயன் குறவஞ்சி

பொன்மணி செல்லப்பன்

இயற்றிய

# காங்கேயன் குறவஞ்சி

பதிப்பாசிரியர்,

கழக இலக்கியச் செம்மல்

**புலவர் இரா. இளங்குமரன்,**

திருநகர், மதுரை-6.

# GANGEYAN KURAVANCHI

*By*

PONMANI CHELLAPPAN

Gangeyan Kuravanchi is preserved as a manuscript in the Dr. U. V. Swaminatha Iyer Library. It is in praise of Lord 'Sirayili Nathar' in the village of Ponmari, which is said to have been under one Gangeya Rajan. The work is also referred to as 'Mari Natakam' obviously after the village name Ponmari." The patron of the poem is one Narayana Gangeyan who is praised for his benevolence to the poet. He is referred to as belonging to the solar race and Malava Vamsa. His gotra was Mavirari. His proper name seems to have been Narayana Gangeyan From the titles Kandan, Gangeyan and Marinadudaiyan he seems to be a chieftain in Pandinadu and ruling a part of modern Ramnad District. There is also a reference to Vijaya Muthu Ragunatha Sethupathy. A number of Sethupathis had this name Vijaya Muthu Ragunatha Sethupathy. It is therefore difficult to precisely assign the patron of this poem, to any particular date. If he is identical with Vijaya Muthu Ragunatha Sethupathy who flourished during the first half of 18th century, then the work may be assigned to that period.

The presiding deity of Ponmari is called 'Mari Isar' and Sirayili Nathar and Kasiviswanatha. It is said that the Nambimars of the 30 day circle, offered regular worship in the temple of Marinayaka. The name of the Goddess is given in the text as Piriya Udaiyal. A certain Arunachalamuni is also referred to in the text about whose identity we have at present very little reference. From the text it is seen that the Author of this work was named as one Ponmani Chellappan, a resident of Ponmari.

One of the verses refers to the boundaries of the land held by Gangeya Chieftain, according to which the land was situated South of Vellaru, East of Peruvazhi, North of Kanya River and West of Eastern Ocean, which is obviously a reference to the Pandimandalam. The work seems to be much earlier to the

well-known and popular Kuravanchi Natakas and might probably belong to the first part of the 18th century. There is a reference to the serpant issuing out of the ant hill and depositing Rathnas.

There are a number of chieftains in the Ramnad area who were functioning under the Pandya rulers and had the title Gangeyas. Particularly one chieftain who is frequently referred to was named Udayan Seithan Kandan Gangeyan. There is another chieftain Rama Veera Perumal Gangeyan who is mentioned in 16th century inscription of Kunrakudi in the same region. The patron of the present work Kandan Narayana Gangeyan after whom the work is named as 'Gangeyan Kuravanchi', probably belonged to this family. It is also interesting to mention that in the inscriptions of Siruvayal in Thirupathur Taluk, a family of chieftains who bore the title 'Malava Chakravarthy' are mentioned. The name of the Vamsa of the patron of the poem under reference is mentioned as Malava Vamsa. It is for further study whether the Gangeya referred to in the 13th century records and the Malava Chakravarti occurring in Siruvayal epigraphs have any matirmonial alliance belong to the same clan. The work is published for the first time with critical notes.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| ஆராய்ச்சி முன்னுரை | | 1 |
| காங்கேயன் குறவஞ்சி மூலமும், குறிப்புரையும் | .. | 9 |
| செய்யுள் முதற் குறிப்பு அகராதி | .. | 35 |

# ஆராய்ச்சி முன்னுரை

## காங்கேயன் குறவஞ்சி

ஓர் ஏடு எவ்வளவு சிதைவுக்கு ஆட்பட முடியுமோ அவ்வளவுக்கும் ஆட்பட்டு 'அகத்ததோ புறத்ததோ' என அல்லாடிக்கொண்டு அரிதின் ஆருயிர் தாங்கி நின்றும், தன் பெயரை உலகத்தில் நிலைநிறுத்திக் கொள்ளமுடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குவது இக் காங்கேயன் குறவஞ்சியாகும்.

'முதல் இடை ஈறு' என்னும் எப்பகுதியும் சிதைவுக்குத் தப்பாத இந் நூலின் பெயரானே, இதன் பாட்டுடைத் தலைவன் **காங்கேயன்** என்பது வெளிப்படும். ஆனால், இக் காங்கேயனைப் பற்றிய மிகுதியான குறிப்புகள் இந் நூலில் இருந்ததற்கு உரிய அடையாளங்கள் குறிப்பாகப் புலப்பட்டும், அவையெல்லாம் ஆய்வுக்கு முழுமையாகப் பயன்படாவண்ணம் பழுதுபட்டுள்ளமையால் திட்ட வட்டமாகப் பல செய்திகளை விளங்கிக் கொள்ள முடியவில்லை. எனினும் கிடைக்கும் குறிப்புகளைக் கொண்டு ஆராய்வோம்.

காங்கேயன் என்பான் காங்கயன் எனவும் வழங்கப் பெறுகிறான். அவன் நாடு, **மாரிநாடு** என்பது. அது **பொன்மாரி** என்றும், **செம்பொன்மாரி** என்றும், **உஞ்சைமாரி** என்றும் **குணதிசைமாரி** என்றும் வழங்கப் பெறுகின்றது.

மாரி நாட்டின் தலைநகர் **மாரியூர்**. அம் மாரியூரின் இறையாய் அமர்ந்தவர் **சிறையிலி நாதர்**; ஆதலால், மாரி நாடு 'சிறையிலி நாதர் நாடு', 'சிறையிலியார் நாடு', 'சிறையிலி' என்றும் வழங்கப்பெறுகிறது.

மாரி நாட்டிற்கு **மூன்றனை**, **அனசை** என்னும் பெயர்கள் உண்டு என்பதும், காங்கேயனை **மூன்றனை மன்னர்** (33) **மூன்றனைச மன்னர்** (41) **அனசை நாடார்** (1) என்பதும் உண்டு என்பதும் விளங்குகின்றன. மாரி நாட்டவர் **அனவர்** எனப்பெறுவதும் அறியக் கிடைக்கிறது (41).

காங்கேயன், **காசி** விசுவநாதரை வழிபடுபவன் (3). அவனுக்கும் காசிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அதனால்

அவன், **காசிமாநகர்க் காங்கய ராசன்** எனப்பெறுகிறான்.

இவன் குலம், **சூரியகுலம், கங்கைப் பெருங்குலம், மாளவ வங்கிசன்** (3) என்பவற்றால் அறியப் பெறுகின்றது.

காங்கேயன் வீரப்பேராற்றல்மிக்கவன் : 'ஏகாங்கய வீரன்', 'மாகாங்கய தீரன்', 'மன்னன் காங்கயன்,' 'கண்டன் காங்கயன்,' 'இராவுத்த மிண்டன்,' 'மும்முடி வழங்கினோன்,' 'சோழனை வென்றவன்' என இந் நூலுள் விரவிவரும் செய்திகளால் இவன் வீரத்திறம் விளங்கும். 'மலைகலங்கிடினும் மனம் கலங்காதான்' என்பது (3) நல்ல பாராட்டு.

**பாண்டி நாட்டுக்கும் காங்கேயனுக்கும் உள்ள தொடர்பு** பெரிதாகும். பாண்டி நாட்டின் எல்லையே இவன் எல்லையாகப் பாடப்பெறுகின்றது.

> 'வெள்ளாற் றினுக்கு....................
> .................. ..மேற்கது வாகும் (3)

வையையும் வெள்ளாறும் இவன் ஆறுகள்; இவன் மலை, குறுமுனிமலையம்; மேலும் இவன், 'குல பாண்டி நாடன்,' 'மீனவனுக்கு முடிதந்தோன்' 'முத்துத் துறையன்', 'அலைகடல்வாய் ஐவேல் எறிந்தோன்' என வருவனவற்றால் பாண்டிநாட்டுக்கும் இவனுக்கும் உள்ள தொடர்பு நன்கு விளங்கும்.

காங்கயன் கொடைத்திறம் வியந்து பாடப்பெறுகிறது. அவன் 'நற்றமிழ்க் கண்டன்' என்பதற்கு ஏற்பப் புலவர்களைப் போற்றும் புரவலனாகத் திகழ்கிறான்.

> 'பாடிய புலவர்க்குப் **பாரி** போல்வான்' (3)
> 'கற்றபா வலர்க்குக் காளாஞ்சி தண்டிகை
> பற்றொடு வழங்கிப் பாடல்கொண் டருள்வோன்'
> 'நடைக்கு முன்னே நாவலர் தமக்குக்
> குடைகள் எடுத்துக் குலவுசங் கிராமன்'
> 'எத்தலத் தவர்க்கும் இரவலர் தமக்கும்
> வித்துவ சனர்க்கும் வெகுநிதி யருள்வோன்.'
> 'ஏற்றகை மாறா தின்றள வீந்தோன்' (8)
> '**காரனை** கொடையான்'
> '**வானை** நிகரான கொடையான்' (37)

என்பவற்றால் காங்கேயன் கொடைத்திறம் விளங்கும்.

ஈயாமை இழிவெனக் கொண்ட இவன், 'ஏற்ற கையிற்கு மாற்றியிருக்க இயலாதவனாக வெறுப்புற்றுப் பாம்புப் புற்றுள் கைவிட்டு இறக்கத் துணிந்தானாகப் புற்றில் இருந்த பாம்பு மணியொன்றைக் கையில் கக்க அதனை எடுத்து வந்து வழங்கிய புகழாளன் எனப் போற்றப்பெறுகிறான் (8).

காங்கயன் சீரறிந்த ஐந்தலைப் பாம்பு புற்றை விட்டுக் கிளம்பித் தெய்வ உலகம்சேர்ந்து காங்கேயன் நாட்டில் **கனக மழை** (பொன்மாரி) பொழிய வேண்டிக் கிடந்தது. இறைவன்,

'நன்மழை போல நாற்றிசை தோறும்
பொன்மழை பொழியச்'

செய்வித்தான். இக் கதை கொண்டே இவன் நாடு **மாரி நாடு** முதலிய பெயர்களைப் பெற்றமை அறியலாம். 'பொன்மாரி பெய்யுமூர்' என்னும் ஔவையார் வாக்கொன்று உண்டு. பாம்புப் புற்றில் கைவிட்ட கதை **காளத்தி** முதலியார்க்குச் சொல்லப் பெறுவதும் உண்டு. 'காளத்தி தனதிருகை புற்றி விட்டான்' என்பதொரு தனிப்பாடல் (பெருந். 1383).

ஆராய்ச்சி மணியால் பெருமை கொண்ட மனுச் சோழன் போல இவனும், ஆராய்ச்சி மணி கட்டியவன் என்பது புலப்படுகின்றது. **ஆராய்ச்சி மணிகண்டன் காங்கேயன்** என்பது அது. இவன் வாய்மை, **பொய்யா மொழியான்** என்பதால் விளங்கும். இவன் மக்களுக்குப் பணி செய்தலில் மகிழ்ந்தவன் என்பது இவன் திருவணை கட்டினான் என்பதால் தெளிவாகும்.

'பெருவனப் புவியில் பேரா மிராமர்
திருவணைக் கெதிரான்'

காசி விசுவநாதரைப் பணியும் காங்கேயன் 'சிறையிலி நாதர்' திருப்பணி குறைவற முடித்தவனாகக் கூறப்பெறுகிறான் (8). 'முப்பது வட்டத்து **நம்பிமார்** முறைமுறையாய்ப் பூசை செய' இவன் ஏற்பாடு செய்திருந்தான் என்பது அறியவருகின்றது (15). இறைவர் **மாரிநாயகர்** என்றும், **சிறையிலியார்** என்றும் பேசப்பெறுகின்றார். இறைவி **பிரியாவுடையாள்** பெருமையும் பேசப் பெறுகின்றது. (15, 41).

சிறையிலிநாதர் திருக்கோயில்வாசல் வளமை கூறுங்கால் 15, **அருணாசல முனி** என்பார் பணியும் வாசல் என்றும், விசைய **முத்துரெகுநாத சேதுபதி** தினம்பணியும் வாசல் என்றும் இந் நூலாசியர் குறிப்பிடுகிறார். இதனால், இவர்கள்மேல் இந் நூலாசிரியர் கொண்ட ஈடுபாடு புலப்படும்.

இந் நூலாசிரியர் பெயர் அறிந்துகொள்ள வாய்த்தது அருமையேயாம். காங்கேயன் குறவஞ்சிக்கு **மாரிநாடகம்** என்றொரு பெயர் உண்டென்றும், இந் நூலுக்கு முதல் நூலாக மாரிநாயகர் மேல் **அகவல்** பாவால் அமைந்ததொரு நூல் இருந்தது என்றும் அதனைக் கொண்டு இக் குறவஞ்சி நூலை மாரியூரைச் சேர்ந்தவரும் **பொன் மணி செல்லப்பன்** என்பவரும் ஆகிய புலவர் ஒருவர் செய்தார் என்றும் இந் நூலில் அமைந்துள்ள இரண்டாவது பாடலால் விளங்குகின்றது. அன்றியும், 'வாசல்' பற்றிக் கூறும்போதும் நூலாசிரியர் |தம் பத்தித்திறம் விளங்க,

> **'பொன்மணி செல்லப்பனிதம் புகழ்த்தேந்தும்**
> **வாசலிது'**

**என்**பதாலும் விளங்குகின்றது. நூலாசிரியரைப்பற்றி அறிந்துகொள்ள இந் நூலையன்றி வேறு கருவிகள் ஒன்றும் தெரியவில்லை.

காங்கேயனைப் பற்றியும் இவர் கூறும்,

> 'படிவைத்த பாலைப் பாவைக்கு வைத்தோன்'
> 'வானரந் தனக்கு மணிமாலை யீந்தோன்' (8)

என்பன முதலியன புலப்படவில்லை.

அடியார்களுள் மூவரை ஆசிரியர் நினைவுகூர்கிறார்:

> '**சிறுத்தொண்டர்** மனையில் சிறுவன் கழுத்தை
> அறுத்ததைத் திரும்ப அழைத்தகங் காளா'
> '**திருவாத வூரர்க்**குச் சிவஞானம் நல்கி
> நரிதனை பரியாய் நடத்திய நாதா' (29)

'நரிபரியாய்ச் செய்தவர்க்கு நற்றமிழர்க் கன்பருக்கு' (41) என்பவை சிறுத்தொண்ட நாயனாரையும், மாணிக்கவாசகரையும் பற்றியவை.

'ஏடது வையை எதிர்செல' (8)

என்பது **ஞானசம்பந்தரைப்** பற்றியது.

இனி, இக்காங்கேயன் பெயர் **நாராயண காங்கேயன்** போலும் என்பதை அறிய ஒரு குறிப்பு உளது. அது

'பாவை மகரம் படைத்த நரசிங்க
ரூப **நாராயணகாங் கேயன்**' (3)

என்று வரும் பகுதியாம், ஆனால், இப் பெயருடைய காங் கேயன் ஒருவனைப்பற்றி வரலாற்று நூல்களில் அறிந்து கொள்ளக்கூடவில்லை.

வரலாற்று நூல்களின் வழியே காங்கேயனைப்பற்றி இவண் அறிந்து கொள்ளுதல் இக் குறவஞ்சிச் செய்தியுடன் ஒப்பிட்டுக் கண்டுகொள்வதற்கு உதவும். ஆதலால், அவற் றைக் காண்போம்.

**காங்கய நாடு** என்பது கொங்குநாடு இருபத்து நான்கு பிரிவுகளுள் ஒன்றாகும். அது தாராபுர வட்டத்தின் வட பாகமாகும்.

கொங்கு இருபத்து நான்கு நாடுகளும் ஒவ்வொரு நாட் டுத்தலைவரின் ஆட்சியின் கீழும் அண்மைக்காலம் வரை இருந்தன. அவர்களுக்குத் தலைவர்களாகப் 'பட்டக்காரர் கள்' என்பவர்கள் இருந்தனர். அவர்கள், பழையகோட் டைப் பட்டக்காரர், **காங்கயம் பட்டக்காரர்**, காடை யூர்ப் பட்டக்காரர், சங்கரண்டாம்பாளையம் பட்டக் காரர் என்பவர்.

காங்கயம் பட்டக்காரர், **மும்முடிப் பல்லவராயர்** என்பதை மரபுப் பெயராக உடையவர்.

கோப்பெருஞ்சிங்கன் என்னும் பல்லவ மன்னன் மூன் றாம் இராசராச சோழனைச் சிறைப்படுத்தினான். சோழ மன்னனின் மாமன் ஒய்சள நரசிம்மன் என்பான் சோழனைச் சிறை மீட்க ஒரு பெரும்படையை அனுப்பினான். அப் படை யின் தலைவன் காங்கயம் பட்டக்காரர் மரபினனான இலிங் கய்யன் என்பான். அவன் கோப்பெருஞ்சிங்கனை வென்று **சோழனைச் சிறை மீட்டான்.** அதனால் சோழ மன்னன் இலிங்கய்யனை **மும்முடிப் பல்லவராயன்** எனப் பாராட்டிச் சிறப்பித்தான். அப் பட்டம் பின்னர் மரபுப் பெயராயிற்று.

காங்கயத்தை அடுத்த காடையூரைச் சேர்ந்த ஓர் இளைஞன் பேராற்றல் படைத்தவன்; பெருவீரன். அவன்

பாண்டியன் படையிற் சேர்ந்து தலைவனும் ஆனான். பாண்டிய நாட்டின்மேல் படைகொண்டு வந்த பகைவரை வென்றான். அதனால் மகிழ்ந்த பாண்டியன் அவ் வீரனுக்குக் **காங்கேயன்** என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தான். இக் காங்கேயன் மரபினரே காடையூர்ப் பட்டக்காரர் ஆவர். இவர்கள் **இம்முடி, மன்றாடி** என்னும் பட்டங்களையும் பெற்றுளர்.

மோரூர் என்பது திருச்செங்கோட்டுக்கு வடமேற்கில் 9·6 கி.மீ. தொலைவில் உள்ளதோர் ஊர். அங்கே ஒரு வீரன் இருந்தான். அவன் பெயர் மோரூர்ச் **சூரியன்**.

முதல் சடையவர்மன் குலசேகர பாண்டியனை, மூன்றாங்குலோத்துங்கன் வெற்றி கொண்டான். பாண்டியன், கொங்குச் சோழன் வீரசோழனின் உதவியை நாடினான். மூன்றாங்குலோத்துங்கனின் படைத்தலைவனான 'ஆறகழூர் வாணன்' என்பவனை எவ்வாறேனும் **சிறைசெய்து** விட முயன்றான். அதனை முடித்து தந்தவன் மோரூர்ச் சூரியன் ஆவான். ஆதலால், பாண்டியன் மகிழ்ந்து **ஆகவராம பாண்டியன், காங்கேயன்** என்னும் பட்டங்களை வழங்கி **எழுகரை** நாட்டதிகாரமும் கொடுத்தான். இச் சூரியன் **ஆகவராம பாண்டிய சூரிய காங்கேயன்** என வழங்கப்பெற்றான். இவன் மரபினர் 'காங்கேயன்' என்னும் பெயரைப்பெற்றனர்.

**பொப்பண்ண காங்கேயன்** வழங்கிய சோற்றுப் பெருக்கால் அடியாருக்கு நல்லார் முத்தமிழ்க் காப்பியமாம் சிலப்பதிகாரத்திற்கு உரை கண்டதும், **உரிச்சொல் நிகண்டு** நூலை ஒரு காங்கேயன் செய்ததும், **தமிழ் புரந்த வள்ளல்களாக நல்லதம்பிக் காங்கேயன், குமார காங்கேயன்** முதலியோர் இருந்ததும் வரலாறறிந்த செய்திகள்.

ஒருவரைப் புகழுங்கால் அவர்தம் மரபினோர் புகழ் எல்லாம் ஒருங்கு கூறுதல் நூல் வழக்காதலின் இக் குறிப்புகளை அறிந்துகொள்ளுதல் இக் குறவஞ்சிக் காங்கேயனை அறிந்து கொள்ள உதவியாம். இவ் வரலாற்றுக் குறிப்புகள் **புலவர் குழந்தை** அவர்கள் எழுதிய **கொங்குநாடு** என்னும் நூலின் துணையால் தொகுக்கப் பெற்றனவாம்.

குறவஞ்சி நூல்களுக்குப் பொதுவானவை: காப்பு, தோடையம்; அகவல்; கட்டியங்காரன் வரவு; தலைவி வரவு;

உலாக் காணல்; தலைவி காதல்; வெண்ணிலா, தென்றல், குயில், மன்மதன்-வருத்துதல்; தோழி வரவு; அவள் குற வஞ்சியை அழைக்கச் செல்லுதல்; அழைத்துவருதல்; வாசல் வளம்; சாதிவளம், நாட்டு வளம், தேசங்கள், அண்டகோளம் ஆகியன கூறுதல்; மலைவளம், நதிவளம், தலங்கள், வித்தைகள் ஆகியன விளம்புதல்; முன்னே கைக்குறி கண்டவர்கள் இவரெனக் கூறுதல்; குறிக்களம் அமைத்தல்; வழிபாடு செய்தல், தலைவியின் கைக்குறி, மெய்க்குறி, எண்குறி, தொடுகுறி, பல்லியொலி முதலியன இசைத்தல்; தலைவன் வரவு கூறுதல்; சிங்கியைத் தேடிக்கொண்டு சிங்கன் வருதல்; வங்கணச்சிங்கன் வருதல்; கண்ணி குத்துதல்; சிங்கியை நினைத்துச் சிங்கன் ஏங்குதல்; வங்கணச் சிங்கன் சிங்கியின் வடிவுரைக்கக் கேட்டல்; சிங்கன் சிங்கியின் வடிவுரைத்தல்; அவளைக் காட்டினால் என்ன உச்சிதம் (பரிசு) தருவாயென வங்கணச் சிங்கன் கேட்டல்; சிங்கன் உச்சிதம் உரைத்தல்; சிங்கி வருதல்; சிங்கன் சிங்கி ஏசல்; மங்களம், சோபனம், வாழ்த்துடன் முடித்தல் என்பன.

இவற்றுள் சிறுசிறு சிதைவுகளுடன் கிடைத்த பகுதிகள் வாசல் வளம், வித்தைகள், மலைவளம், குறிகூறல், சிங்கன் வரவு, சிங்கியைத் தேடல், சிங்கியின் அடையாளம் உரைத்தல், உச்சிதம் தருதல், ஏசல் என்பனவே. பிறவெல்லாம் அகப்பட்ட அளவிற்குப் போற்றிக் கொள்ளப் பெற்றனவே.

செல்வம்,
மதுரை-6.
27-7-'80

தமிழ்த்தொண்டன்,
இரா. இளங்குமரன்,
பதிப்பாசிரியன்.

# காங்கேயன் குறவஞ்சி

## விருத்தம்

1. தஞ்சமென் றவரைக் காக்கும்
தாட்டியத் தனசை நாடர்
செஞ்சொலால் புகழ்ந்து போற்றும்
**சிறையிலி நாதர்** நாட்டில்
அஞ்சன விழிபோ ராட
அனங்கவேள் ரதியைப் போலக்
கொஞ்சிய குறிகள் சொல்லக்
குறவஞ்சி தோணி னாளே.

2. **மாரி**யில் வாழுஞ் சேனை
மதிப்பன சொல்லி இந்த
மாரிநா டகத்தின் முன்னூல்
வருந்தமிழ் **அகவல்** தன்னை
**மாரிநா யகர்**மேல் போற்றும்
மாக்குறந் தனிலு ரைத்தேன்
மாரி**பொன் மணிசெல் லப்பன்**
வருந்தமிழ் இசைத்த வாறே.

---

**அருங்குறிப்புரை**

இக் குறவஞ்சி ஏடுகள் மிகச் சிதைவு பெற்றுள்ளன; தலையும், இடை இடையும், கடையும் பல ஏடுகள் இல்லை. உள்ளவற்றுள்ளும் உருமாறியவையும் ஒடிந்தவையும் பல. இயன்ற அளவு செப்பமாக்கி நூல்வடிவம் தரப்பெற்றுள்ளது. பாடல் எண்கள் இங்குள்ளவற்றை வரிசையாய்க் குறிப்பனவே.

1. தாட்டியம் - வலிமை; அனசை நாடு - மாரி நாடு; அனங்கவேள் - மன்மதன்; சிறையிலிநாதர் நாடு - மாரி நாடு.

2. இக் குறவஞ்சிக்கு முன்னால் காங்கேயனைப் பற்றி அகவலால் ஒரு நூல் இருந்ததென இப் பாடலால் அறியலாம். பொன்மணி செல்லப்பன் நூலாசிரியர் பெயர்.

## அகவல்

3. காசி மாநகர்க் **காங்கய ராசன்**
வீசிய புகழ்சேர் மீனவன் தனக்கு
மகுடமே புனையும் மாரனைப் போல்வான்
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
வெள்ளாற் றினுக்கு மிகுந்ததெற் காகும்
உள்ளான பெருவழிக் குரைகிழக் காகும்
கன்னியா நதிக்குக் கதித்திடும் வடக்கு
மின்னுகட லுக்கு மேற்கது வாகும்
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

[‘பண்போற்றி பாண்டி மண்டலஞ் சேர்
ஐம்பத் தாறு காத தேசந் தன்னில்
கண்டி தாரை கழனி தன்ம....குறை சொல....
பெருநியமம் தாழ்வில்லாத **காங்கயன்** தானெழுவருக்கும்
**பாண்டி வளநாடு ஏழா**........சேரர்க்கும் தொண்ட
மண்டலஞ்சேர் நற....னாயிரமுடனருளி....தொறும்
செங்கோல் நடாத்திடும் நாளையில்’]

---

3. காங்கேயன் ‘காங்கயன்’ என்றும், ‘**கண்டன் காங்கேயன்**’ என்றும் வழங்கப் பெறுவான். காசி மாநகரைச் சேர்ந்தவன், மாளவ வமிசத்தவன், சூரிய குலத்தவன், கங்கை குலத்தவன் என்றெல்லாம் கூறப்பெறுகிறான். இவன் பாண்டி நாட்டுப் பகுதியை ஆட்சி புரிந்தவன் எனப் புலப்படுகின்றது.

‘வெள்ளாற்........வாகும்’ இப் பகுதி கீழ்வரும் பாடலைத் தழுவிய தாகும்:

வெள்ளா றதுவடக்காம் மேற்குப் பெருவழியாம்
தெள்ளார் புனற்கன்னி தெற்காகும்—உள்ளார
ஆண்ட கடல்கிழக்காம் ஐம்பத் தறுகாதம்
**பாண்டிநாட் டெல்லை பகார்**.’ — தனிப்பாடல்

பல்வேறு சிதைவுகளுக்கு இடையே காணப் பெறும் செய்தி இது.

**மாரியம்** பதியில் .............. **காங்கயன்**
**சூரிய** குலத்தில் தோன்றிய மரபினான்
மகமே ருவினும் மனங்கொள் புகழினான்
செகமதில் செம்பியன் தனைச்செயங் கொண்டோன்;
பாடிய புலவர்க்குப் **பாரி** போல்வான்
தேடிய புகழ்சேர் தெய்வ சிகாமணி
**காசி விசுவ நாதரைப்** பணிவோன்
பேசிய **கங்கைப் பெருங்குல** நீர்மையான்
மாவிரவி கோத்திரன் **மானவ** வங்கிசன்
பாவை மகரம் படைத்த நரசிங்க
ரூப **நாரா யணகாங் கேயன்**
மேவு கனகக் குடையணி சோமன்
ஓங்கிய உலகைத் தாங்கிய குடையான்
காலாள்கள் சிங்கம் மேலாள்கள் நாயகன்
..........................................................
முத்துத் துறையும் முரசுடை யான்சேர்
..........................................................

**விருத்தம்**

**4.** தங்கிய புகழ்க்**காங் கேயன்**
தான்பிரிந் தகன்றான் என்று
திங்களும் இரவில் வந்து
தீயெனக் காய்ந்த தன்றே.

---

மாரியம்பதி - மாரி நாட்டின் தலைநகர். வங்கிசன்-வமிசத்தவன்; முத்துத்துறை - கொற்கை.

4. காங்கேயன் உலாக்கொண்டு பிரிந்தான். அவ்வுலாக் கண்ட தலைவி காதல் மீக்கூர்ந்தாள். திங்கள் அவளை வாட்டலாயிற்று.

## வெண்ணிலாத் தரு

5. மன்மதன் வருவானோ வெண்ணிலாவே—என்னை
மருவ அழைத்துவா வெண்ணிலாவே.

இம்மாத்திரம் செய்யவேணுமோ வெண்ணிலாவே
எங்கள் **காங்கேயன்** தனைக்கூட்டிவா வெண்ணிலாவே

பெண்களுடன் பிறந்தாயே வெண்ணிலாவே-எனக்குப்
பெருமயல் ஊட்டலாமோ வெண்ணிலாவே

அங்கசன் குடையான வெண்ணிலாவே-எனக்
கனல்போலக் காயலாமோ வெண்ணிலாவே.

அம்மா வென்றழைத்தேன் வெண்ணிலாவே-நீயும்
அமுதந் தனிற்பிறந்தாய் வெண்ணிலாவே.

**பொன்மாரி** நாதரணி வெண்ணிலாவே-நீ
போயவரை முன்வருத்தாய் வெண்ணிலாவே.

## விருத்தம்

6. மந்திர மறையோர் போற்றும்
மதியணி சடிலர் ஒண்போர்ச்
சிந்துரம் உரித்துப் போர்த்தும்
**சிறையிலி** நாதர் நாட்டில்
சுந்தர வதன மொத்த
துணை**ரதி** மோகந் தன்னைத்
தந்திர முடனே தீர்க்கச்
சகிவந்து தோன்றி னாளே.

## தரு

7. **சகி** நல்ல பாங்கியும் வந்தாள்

..............................................................

---

5. மன்மதன் - காங்கேயன்; மருவ - தழுவ; பெண்கள்-திருமகள், மூத்தவள்; அங்கசன் - மன்மதன்.

6. சடிலர் - சடையினர், சிவனார்; சிந்துரம்-யானை; சுந்தரம் - அழகு; ரதி - தலைவி பெயர். சகி-தோழி.

7. பாங்கி - தோழி.

..............................................................

## அகவல்

வெம்புடை வையை வெள்ளா றுடையான்;
குறுமுனி மலையான்; குலபாண்டி நாடன்;
மறுமொழி யுரையான் **மாரியம் பதி**யான்;
கற்றபா வலர்க்குக் காளாஞ்சி தண்டிகை
பற்றொடு வழங்கிப் பாடல்கொண் டருள்வோன்
ஏகாங் கயவீரன் இராவுத்த மிண்டன்;
**மாகாங் கயதீரன் மாரிநா டுடையான்;**
மலைகலங் கிடினும் மனங்கலங் காதான்;
அலைகலங் கிடவே ஐவேல் எறிந்தோன்;
முடிவைத்த அரசர்க்கு மும்முடி வழங்கிப்
படிவைத்த பாலைப் பாவைக்கு வைத்தோன்;
மீனவன் தனக்கு மிருமுடி யளித்தோன்,
வானரந் தனக்கு மணிமாலை யீந்தோன்
பேடையில் குதிரை இயக்குவார் **கண்டன்**
ஏடது வையை எதிர்செல அந்நாள்
வேண்டாச் சமணரை வீண்கழு வேற்றிப்
பாண்டிமண் டலத்தில் பாயு நீறுடை ...
..................................................
நடைக்கு முன்னே நாவலர் தமக்குக்
குடைகள் எடுத்துக் குலவுசங் கிராமன்
**கண்டன் காங்கயன் காசியம் பதியான்**

---

வெம்பு-வம்பு, புது நீர்ப்பெருக்கு; குறுமுனி-அகத்தியன்; காளாஞ்சி - வெற்றிலைப் படிக்கம்; இராவுத்த மிண்டன் - குதிரை விரன்; 'அலைகலங். . . ஐவேல் எறிந்தோன்' அலைசுவற வேலெறிந்த பாண்டியன் புகழைக் காங்கேயனுக்கு ஆக்கிக் கூறியது. பேடை - கூடை; குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டல் என்பது போன்ற அருஞ்செயல். 'ஏடது. . . நீறுடை' - திருஞான சம்பந்தர் வரலாற்றுக் குறிப்பு. பாயும்நீறு—பரவிய திருநீறு. நடை - வழி.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
பொய்யா மொழியான் புரவலர் கோளரி
தெய்வ குசேலன் தெய்வ . . . .
சிறையிலி நாதர் திருப்பணி
குறைவற முடித்த கோதண்ட ராமன்
எழுகூற்றம் பதினெட்டு . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
பெருவனப் புவியில் பேரா மிராமர்
திருவணைக் கெதிரான்; குலந்தனை நடத்திக்
கொடுங்கலிக் குற்றமும் அகற்றி. .
நாளும் பொழுதும் நடத்தி யிருந்து
எத்தலத் தவர்க்கும் இரவலர் தமக்கும்
வித்துவ சனர்க்கும் வெகுநிதி யருள்வோன்
ஏற்றகை மாறா தின்றள வீந்தோன்
மாற்றி யிருத்தல் மன்னர்க் கியல்பல
வென்றுளம் நினைந்து ராசகோத் திரத்தில்
வென்றிசேர் புதல்வனை வினை செயத் துணிந்து
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

**அரவிற்புற் றில்அவர் கையிடச் செல்லக்**
**கரமதில் ரத்தினம் களிப்புடன் கொடுக்கச்**
சிறையிலி நாதர் திருவரு ளதனால்
குறைவிலாச் செம்பொன் கொடுத்திருந் திடுநாள்
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . ஐந்தலை நாகம்
புதுமையாய் இருந்த புற்றைவிட் டெழும்பித்
தெய்வலோ கத்தில் தேவர்கள் முன்போய்
. . . . . . . . . . . . . . . . . . . . . **காங்கயன்** குடைக்குக்
**கனகமாய்ப் பொழி**யெனக் கருத்துடன் வணங்க

---

திருவணை - இராமர் கட்டிய கடலணை; எதிரான்- ஒப்பானவன்; மாற்றியிருத்தல் - ஈயாது இருத்தல்.

அரவிற் புற்றிற் கைவிட்ட செய்தியைக் காளத்தி வள்ளல் மேல் கூறும் தனிப்பாடல். ''காளத்தி தன தருகை புற்றிவிட்டான்' (பெருந். 1383)

நன்மழை போல நாற்றிசை தோறும்
பொன்மழை பொழியப் புனிதர்கங் காளர்
பொதியமா மலையான் புனல்பாண்டி நாடன்
மதிவளர் உஞ்சை மாரிவாழ் சிவனார்
கொன்றை மாலிகை குலவுகங் காளர்
கொண்ட இடபக் கொடிவிரு துடையார்
சாத்திர வண்ணச் சாம்ப சதாசிவன்
பாத்திர மாகப் பலமுர சுடையார்'
அடியவர் மீதில் ஆணைக்கஞ் சிடுவார்
முடிமதி தரித்த முக்கணீ சுரனார்
நாரியோர் பாகர் நாகா பரணர்
மாரிவாழ் **சிறையிலி நாயகர்** வரையில்
அண்டர்கள் புகழு மாராய்ச் சிமணி
**கண்டன் காங்கயன் காசியம் பதியான்**
வெம்பரி ஏறி வீதியில் வருகையில்,
கும்பமா முலையாள் கோகில வாணி
அருந்தவர்க் கரசு வன்னமின் னிடையாள்
வருந்திய விரக மயலது கொண்டு
உருவிலி கணையால் உள்ளங் கலங்கி
வருந்திய மாது **மோகினி** மனந்தனில்
கருதிய வகையும் வகையாய் நிகழ்ந்திடு
கருமமும் நீள்துயர்க் காதல் வெற்றியும்
பொருந்திய துரைக்கப் பூமகள் போலத்

---

பொன்மாரி என்னும் ஊர்ப் பெயர்க் காரணம் 'ஐந்தலை ... பொன் மழை பொழிய'. கங்காளர் - எலும்பு மாலை அணிந்தவர்; மாலிகை-மாலை;

நாரி - பெண், உமையம்மை. வெம்பர்-விரும்பத் தக்க குதிரை ; கோகிலவாணி - குயில் போல் பேசு பவள்; வன்னம் - அழகு; உருவிலி - மன்மதன்;

திருந்திய தெய்வ லோகமீ திருந்து
பார்தனில் வந்து................
பையவே நடந்து பலபல பேசி
....................................
கையினில் கோலும் காதினில் தோடும்
செய்ய பங்கயம் போல்திகழ் முகத்தில்
....................................
இருவிழி மருட்டும் இணங்குசொற் சுருட்டும்
சருவிய மொழியும் சரசமாய் நகையும்
....................................
செவ்விள நீருக் கொப்பெனப் பருத்த
ஒளிபெறு தனமும் ஊர்வசி திலோத்தமை
....................................
செஞ்சிலம் போசை சிலசில புலம்ப
வஞ்சி வந்தனளே.

### தரு

9. வஞ்சி வந்தாள்—குற
வஞ்சி வந்தாள்.

கொஞ்சு கோகில வாணி—போல்
செஞ்சொல் நாவலர் இன்சொலால்—மகிழ்
சிறையிலி நாதர் நாட்டில்—வஞ்சி வந்தாள்

கஞ்ச மாதுறை
விஞ்ச வேவளர்
கன்னியிவ ளாமென..........

---

சருவிய மொழி - பாராட்டு மொழி.
9. கன்னி - திருமகள்.

### தரு (வேறு)

10. வஞ்சி வந்தாளய்யா—குற
வஞ்சி வந்தாளய்யா

உம்ப ரோடுமுனி வோரும் கூடியுள்
ளுருகி ஆர்வமாய் இறைஞ்சிடும்

செம்பொன் மாரியின் நம்ப ராகிய
சிறையி லீசுரர் சபைதனில்

கும்ப நேர்முலை கெண்டை நேர்விழி
கொண்ட மோகினி யாமெனச்

சம்ப்ர மோடுநட மாடி யேவிளை
யாடி யேமலர்க் கொடியென—வஞ்சி.

அரிமு குந்தமு ராரி கேசவ
அச்சு தர்க்கினி தாகிய

திருவு லாவிய மாரி மேவிய
சிறையி லீசுரர் சபைதனில்

சருவி மேலெழும் காம விரகொடு
சரச லாகிரி மீறியே

கரிய கூந்தலும் சரிய வேயொரு
கான மஞ்ஞையாய் மகிழவே—வஞ்சி வந்தாளய்யா.

### தரு (வேறு)

11 வஞ்சி வந்தாளய்யா—சிங்காரக் குற
வஞ்சி வந்தாளய்யா.

அன்ன நடை
சின்ன இடை
பின்னு சடை
கன்னல் மொழி
வன்ன முலை
மின்னப ரஞ்சி—வஞ்சி
மேக நேர்குழல் முடித்து
மென்கை யில்கிள்ளை பிடித்து
ராக முடனே படித்து..........வஞ்சி

---

10. உம்பர் - தேவர்; சம்ப்ரம் - உடலசைப்பு, தளுக்கு.

அரி, முகுந்தன், முராரி, கேசவன், அச்சுதன்- திருமால்; திரு - திருமகள், சரசலாகிரி - இன்ப ஆடல், காமக்களி; மஞ்ஞை - மயில்.

11. கன்னல் - கரும்பு. கிள்ளை - கிளி.

### கலிப்பா

**12.** நீதிபுணர் **பொன்மாரி** நிமலர்திரு நன்னாட்டில்
மாதினுரு வாய்ச்சமைந்து வந்தரதிப் பெண்ணரசே
ஆதிமுத னீடிவரும் அம்புவியி லுங்கள்குலம்
சாதிவள மானவெலாம் தானறியச் சொல்வாயே.

### தரு (சாதிவளம்)

**13.** எங்கள் சாதிவளம் சொல்லக்கேள் மானே
**மாரியீசர் சிறையிலி நாதர்** நாட்டில் தானே

சங்கப்பரி தன்னைச்சீ தனங்கள் கொடுப்போம்— எங்கள்
சாதியெல்லாம் மரவுரி யுரித்துடுப்போம்.

தங்கத்தினா லேசமைத்த பணிபூணோம்—உங்கள்
தனக்குறிகள் சொல்லநாங் கள்நாணோம்.

வெங்கயத்தின் கோடதனை நாளிக்களிப்போம்—நாங்கள்
மேதினியில் காதுகுத்தி நன்றாய் வளர்ப்போம்.

ஆனைத்தந்தத் தாலேகுடில் கதவடைப்போம் — எங்கள்
ஆறு முகவர்க்குத் தேன்தினை மாவுபடைப்போம்.

மானையல்லாமல் மாங்கிசங்கள் தனையருந்தோம்—
நாங்கள்
மார்பி....................................

### விருத்தம்

.............................................

**14.** சிகரகோ புரத்து வாசல் சிறப்பெல்லாம் செப்புவாயே.

---

12. மாதின் உருவாய் - ஒரு பெண்ணின் உருவ இலக்கணம் என்று சொல்லப்படுவதெல்லாம் அமைந்த உருவமாய்; சமைந்து - அமைந்து. 'அம்புவியில் ஆதிமுதல் நீடிவரும் உங்கள் குலம்' என இயைக்க.

13. சங்கப்பரி - நிறைந்த அன்பு; பணி - அணிகலம்; வெங்கயத்தின் கோடு-விரும்பத்தக்க யானைத் தந்தம்; நாளி - கள்; மாங்கிசம் - மாமிசம், ஊன்;.

### தரு (வாசல்)

**15.** மகமேருக் கிணையான வளர்சிகர வாசலிது
செகராசர் தினம்பணியும் **சிறையிலியார்** வாசலிது

வானவரும் தானவரும் வந்துபணி வாசலிது
ஞானமுடன் தவமுனிவர் நலந்திகழும் வாசலிது

திருமாது புவிமாது சிறந்திலங்கு வாசலிது
**அருணாசல முனி**பணியும் அய்யருட வாசலிது

**மாரி**யிலூர் மன்னவர்கள் வந்துபணி வாசலிது
சூரியகுல **காங்கேயன்** தொழுதிறைஞ்சும் வாசலிது

முப்பதுவட் டத்துநம்பிமார் முறைமுறையாய்ப் பூசைசெயும்
செப்பமுள மாரியில்வாழ் **சிறையிலியார்** வாசலிது

ஓதுமறை வாணர்கள் உயர்சிகர வாசலிது
மாது**பிரி யாவுடையாள்** வளர்சிகர வாசலிது.

நம்புமடி யவர்க்குதவு நாதருட வாசலிது
செம்பொன்னின் **மாரி**வாழ் **சிறையிலியார்** வாசலிது

**விசையமுத்து ரெகுநாத சேதுபதி** தினம்பணியும்
திசைபுகழும் **பொன்மாரி சிறையிலியார்** வாசலிது

தன்மநெறி நீதிமுறை தப்பாத வாசலிது
**பொன்மணிசெல் லப்பணிதம்** புகழ்ந்தேத்தும் வாசலிது

### தரு

**16.** ஈசர் சிறையிலியார் இயல்சிகர கோபுரத்து
வாசல் அடையாளம் சொல்லிவந்த குறவஞ்சி,
நேசமுட னேநடந்து நீயறிந்து வந்தசில
**தேசமெல்லாம்** என்றனுக்குத் தெரியவுரை செய்வாயே.

---

15. தானவர் - அசுரர்; அய்யருட - உயர்ந்தோருடைய; பிரியாவுடையாள் - இறைவனைப் பிரியாதுறையும் தேவி, சக்தி.

தன்மம் - தருமம்; பொன்மணி செல்லப்பன் - நூலாசிரியர்.

### தேசத் தரு

17. வங்கம் கலிங்கம் மராடம்..................

....................................................

மாரிச் சிறையிலியார் நன்னாட்டில் அன்னமே,

ஐம்பத் தாறுவகைத் தேசமெலாம் அறிவேனே.

### கலிப்பா

18. சித்தசனை விழித்தெரித்த **சிறையிலியார்** நன்னாட்டில்

வத்தாதி போல்வடிவாய் வந்தகுற வஞ்சியரே,

உற்றதொரு தேசமெலாம் உண்மையுட னேதிரிந்து

கற்றவித்தை யெல்லாமும் கருத்துடனே சொல்வாயே.

### தரு

19. நல்ல வித்தை அறிவேன்—இன்னும்
நானறிந்து சொலக்கேளாய்.

வல்லார் புகழ்சேரும் செம்பொன் மாரி
நன்னாட்டில் வளர்மானே

நல்ல வித்தைராச வசீகரமும் நாரியர்
மோகன லம்பனமும்

தேச கருசண முஞ்சில பெந்தன
வித்தையெல் லாமறிவேன்;

பேசிடுமுச் சாடனமும் பெண்கள் பின்னே
தொடர மருந்தறிவேன்; [நல்லவித்தை.]

---

18. சித்தசன் - மன்மதன்; வத்தாதி - மல்லன் போன்ற வலுவான உடற்கட்டு; 'வஞ்சியரே, சொல் வாயே' எண்வழு.

19. இராச வசீகரம்-பெரியவர்களைக் கவர்தல்; நாரியர் மோகனலம்பனம் - மகளிரைக் கவர்தல்; தேசகருசணம்-பகை நாட்டை அழித்தல்; பெந்தனம்-வாய் கட்டல்; உச்சாடனம் - அறுபத்து நான்கு கலைகளுள் ஒன்று, ஏவுதல்.

இரும்பைப் பொன்னாக்கி வைப்பேன்; ரசவாத
வித்தை நானறிவேன்;
விரும்பிய வங்கமதை வெள்ளி யாக்க
மருந்துமிக அறிவேன்;
தரும்பித் தளையையும் தயவான அபரஞ்சிப்
பொன்னென ஆக்குவேன்;
வரும்பஞ்ச லோகத்தையும் மாற்றா யிரத்தெட்டுப்
பொன்னாக்கி வைப்பேன்;—நல்ல வித்தை

பன்னும் கலைதெரிந்து பரலோகத்தை நோக்கிச்
செல்லும் திறமறிவேன்
....................முனிவருடன் தேவர்சிங்
காதனத்தில் மிகவிருப்பேன்
எண்ணும் பதினாறு வயதாகி இருந்திடத்
தக்கமருந்துகள் நானறிவேன்
நண்ணுந் தலைக்கூந்தல் நரையாமல் இருக்க
மருந்துகள் நன்கறிவேன்—நல்ல வித்தை

தனமே சரிந்திடின் தந்திக் கோடென
நிற்க மருந்தறிவேன்
மனமே வெறுத்தவர்க்கு மனமொன் றாகிக்
கூடிட மருந்தறிவேன்
கனமான கன்னியர் காளையர் பின்னே
தொடர மருந்தறிவேன்
வனமான மங்கையை வாலிபர் பின்னே
தொடர மருந்தறிவேன்—நல்ல வித்தை

வாகாங் கரண வித்தைமகிழ்ந் தம்மானை
ஆடமருந் தறிவேன்
பாகாரு மென்மொழி யார்பாரில் பால,
னுண்டாக மருந்தறிவேன்
செப்பிடு வித்தை அறிவேன் செய்அக்கினித்
தம்பன மறிவேன்
ஒப்பும் பரதவித்தை உற்ற காவிய
நாடகம் அறிவேன்—நல்ல வித்தை.

---

தனம் - மார்பு; தந்திக்கோடு - யானைத்தந்தம்; வாகு-வாய்ப்பு; 'கரணவித்தை ...... ஆட' - கரண வித்தை செய்துகொண்டே அம்மானை விளையாட; அக்கினித் தம்பனம் - தீயைக் கட்டுதல்.

வங்கம் - ஈயம்; அபரஞ்சிப்பொன் - ஓடவிட்ட பொன், மாற்றுக் குறையாப்பொன்; எண்ணும் - என்றும்; நண்ணும்-பொருந்திய.

### விருத்தம்

**20.** சிலைமதன் தனைமு னிந்த சிறையிலி நாதர் நாட்டில்
குலவிய நளினஞ் சேர்ந்த குறவஞ்சிப் பெண்ணே கேளாய்
அலைவிலாக் கனஞ்சேர் ஞானத் தருந்தவர் இருந்து வாழும்
மலைகளின் பேரை யெல்லாம் வன்மையால் உரைசெய் வாயே.

### தரு (மலை)

**21.** பொதியமலை சதுரகிரி புகழும்சோதி மலையும்
பூசக்கர வாளகிரிப் புதுமையெலாம் அறிவேன்
அதியமலை அருணகிரி அழகர்மலை அறிவேன்
ஆனைமலை ஈற்றின்மலை அரியுமலை அறிவேன்.
மேருகிரி ரசதகிரி வீறுகிரி அறிவேன்
வெள்ளிமலை சொர்ணகிரி மேலைமலை அறிவேன்
பார்விளங்கும் பவளமலை பச்சைமலை அறிவேன்
பரமர்திருக் கயிலைமலை அறிவுடனான் அறிவேன்.
வடதிசையில் சதுரகிரி வடவேங்கட மலையும்
வானவர்கள் புகழும்அத்திரி மலையறிவேன் அம்மே!
படமேவு நாகமலை பன்றிமலை அறிவேன்
பாரத்தை தோகைமலை பதுமமலை அறிவேன்
தங்கமலை சோலைமலை சுப்ரமணியர் மலையும்
சோதிமலை நீலமலை துலங்கமிக அறிவேன்
கங்கைமதி அணிமுடியார் சிறையிலியார் நாட்டில்
காணுமலை எல்லாமும் கண்டறிவேன் அம்மே!

### விருத்தம்

**22.** செஞ்சொலர்க் கன்பர் மாரிச் சிறையிலி நாதர் நாட்டில்
கொஞ்சிய நளினஞ் சேர்ந்த குறவஞ்சிப் பெண்ணே கேளாய்
சஞ்சீவி மிருகம் சீவன் தவமுனி வோர்கள் சித்தர்
மிஞ்சிய மலைவ ளத்தை விரும்பியே விளம்பு வாயே.

---

20. சிலைமதன் - கரும்பு வில்லையுடைய மன்மதன்; நளினம்-இங்கிதம்.

22. சஞ்சீவி - மருந்துகள்; சீவன் - உயிர்கள்;

### தரு (மலைவளம்)

23. முப்பது முக்கோடி தேவர்கள் கூட்டமுண்டு
செப்பமுடன் முனிவோர்கள் சித்தர்கள் மிகவுமுண்டு

சத்த ரிசிகளுண்டு சத்தகன் னிகையுண்டு
சுத்த மதுரமுண்டு சோதி விருட்சமுண்டு

கோட்டம்வால் மிளகுண்டு குங்குமந்தற் கோலமுண்டு
நாட்டமுட னகில்தேக்கு நல்லசந் தனமுண்டு

சோதி விருட்சமுண்டு சுகந்தகே தகையுண்டு
பாதிரியுட னேவேங்கை பாரிசா தகமுண்டு

ஏலமில வங்கமுண்டு இனியசெண் பகமுண்டு
ஞாலமகிழ நாவியுண்டு நல்லசா மரையுண்டு

ஓங்கிய தேக்குமுண்டு ருத்திராட்ச மரமுண்டு
மூங்கிலொடு கோங்குபலா முக்கனிமா வாழையுண்டு

அண்டபே ரண்டமுண்டு ஆணையுணர் பட்சியுண்டு
கண்டங்கருஞ் சாரையுண்டு கருநெல்லி தானுமுண்டு

வானம்பாடிப் பட்சியுண்டு வாயுவருணப் பட்சியுண்டு
கானங் கோழியுண்டு கறுத்த கொக்குமுண்டு

அனலமுக்கிப் பட்சியுண்டு அன்னமுடன் கீரியுண்டு
பனகமைந் தலையுண்டு பாயுமான் மறிகளுண்டு.

வம்பமருங் குழலாளே வஞ்சியிளங் கொடிமாதே
செம்பொன் மாரிமேவும் சிறையிலியார் நாட்டணங்கே.

### விருத்தம்

24. மதியணி சடையார் மாரி வளர்சிறை யிலியார் நாட்டில்
ரதியெனு மோக ரூபக் குறவஞ்சி மாதே கேளாய்,
அதிசய மலைவளத்தை அறிந்துநீ யுரைசெய் தாற்போல்
நதிகளின் பேரை யெல்லாம் நன்மையாய் உரைசெய்
வாயே.

---

23. கோட்டம், தற்கோலம் (தக்கோலம்) மணப் பொருள்கள்; கேதகை - தாழை; நாவி - கத்தூரி, புழுகுபூனை; அண்டபேரண்டம் - அண்டரண்டம் என்னும் பறவை; ஆணையுணர் பட்சி - நிகழ்வதுரைக்கும் பறவை. கரிக்குருவி முதலியன; அனலமுக்கி - தீப்பறவை; பனகம் - பாம்பு.

### தரு (நதி)

**25.** சிந்து காவேரி கோதாவரி மணிகை கன்னியா குமரி
சிறக்கும் சரசுவதியும் செயகிருஷ்ண வேணியு
மறிவேன்;

இந்தி ராதிபர் வந்துபூசை செய்யும் யமுனை கங்கை
நர்மதை இயல்பா கியதனுக் கோடி யிராமேசுர
மறிவேன்.

பொங்கு தாம்பிர வர்ணியும் போற்றிசெய் யுங்கும்ப
நதியும்
புவிமீதி னில்வைகை மாநதி புயலாம் பூரா வதியும்

திங்கள் சூடிய சுவாமி நாயகர் சிறையி லீசுரர்
நாட்டில் தேனேமலர் மானேநதி சேரஅறி வேனே.

### கலிப்பா

**26.** பாற்கரனும் சங்கரனும் பங்கயனும் வாசவனும்
தீர்க்கமுடன் பூசனைசெய் சிறையிலியார் நன்னாட்டில்
வாக்கும்வடி வுமதாகி வந்தவொரு வஞ்சியரே
யார்க்குநீ குறியுரைத்தாய் அறியவினிச் சொல்வாயே.

### தரு (குறி)

**27.** மாதுசீதை வனவாசத்தில் சிறையாகவே வருந்தியிருந்து
மனஞ்சலித் திடுநாளில்
ஏதிடரு மின்றியுனையே இராமர்வந்து சேர்வரென
மெய்யாகச் சொன்னேனே.

மும்முலைத்தடா தகைதனக்கே முற்சாபத் தால்மூன்று
முலையுளொரு முலைமறைந்து
செம்மையுடன் மங்கைபாகர் பிரான்மலையில்
சேர்வரென்றே
குறிகள்செப்பி உரைத்தேனே.

---

26. பாற்கரன்-கதிரோன்; பங்கயன்-நான்முகன்; வாசவன் - இந்திரன்.

27. மங்கைபாகர் பிரான்-மங்கை பாகராகியசிவ பிரான்; மலை - இமயமலை.

தாராருந் தமயந்தி நளராசன் தன்னையே
பிரிந்துமனம் சலித்திடுநாள்
வாராருந் தலைமீதில் நளராசன் அணைவனெனக்
குறிமுந்தச் சொன்னேனே.

சந்திரமதி யரிச்சந்திரன் தனைப்பிரிந்து தன்மனது
சலித்திருந்த அந்நாளில்
தந்திரமுடன் உன்றனையிப்போ தணைவனென்று தப்பாமல்
குறிமெய்ப்பாய்ச் சொன்னேனே.

மந்திரகன்னி புதல்வர்தமைப் பெறவேண்டி வருத்தமுடன்
தவசுபண்ணி இருந்திடுநாள்
விந்தையுடன் கெருடனைநீ பெறுவையென்று மெய்யாகக்
குறிகள்தப்பா மல்சொன்னேன்.

வாசவனைப் பிரிந்திருந்த இந்திராணி யவள்வருந்தித்
தவசுபண்ணி இருந்திடுநாள்
நேசமுடன் இந்திரனையே அணைவையென்று நீதியினால்
அவட்காதி யில்சொன்னேன்.

சந்திரனைப் பிரிந்தரோக ணிக்குத்தான் அவள்மனது
சடுதியிலே மகிழும்வகை
வந்தவனும் சந்ததமாய் அணைவனென்று வன்மையினால்
குறிகளுண்மை யாய்ச்சொன்னேன்.

மாரிவரை யால்தடுத்தோன் வணங்குஞ்செம்பொன்
மாரிச்சிறையில்
நாதர்நாட்டில் மானேகேள்
காரியமாய்க் குறிகள்சொல்ல அவரவர்தம் கையில்மெய்
வரிசையெ லாம்செய்தாரே.

---

வார் - கச்சு; கருடனைப் பெற்றவள் காசிப முனிவர் மனையாள் வினதை என்பாள்.

சடுதியில் - விரைவில்; சந்ததமாய் - நிலையாய்; மாரி வரையால் தடுத்தோன் - மழையை மலையால் தடுத்த கண்ணன்; இது கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்த கதையைக் குறித்தது. ‘அவரவர் தம் கையில் குறிகள் சொல்ல மெய்வரிசையெலாம் செய்தார்.’ மெய்வரிசை — உள்ளன்போடு கூடிய சிறப்பு, பரிசு.

## விருத்தம்

28. பையர வுறுகு சூடும் பரமர்பொன் மாரி நாட்டில்
வையகம் புகழும் கீர்த்தி மலைக்குற வஞ்சி கேளாய்
எய்யுமன் மதனைப் போல யெனைக்கூடிப் பிரிந்த
அன்பர் மெய்யொன்றாய் அணைந்தி ருக்க மெய்க்குறி
விளம்புவாயே.

## அகவல்

29. கூடல்வாழ் சுந்தரா கூடல்மீ னாட்சி
ஏடகத் துறையும் எங்கள்நா யகனே
திருவளர் புனவை சிறந்திடு லிங்கமே
மருவளர் சேதுவில் வருராம லிங்கா
சேது மாதவர் சேருகா தலியே
பாவமே யறுக்கும் பர்வத வர்த்தனி
காளையம் பதியில் காளைநா யகனே
ஆனையா டிறைஞ்சும் ஆடானை நாதா
காஞ்சியே கம்பா காமாட்சி யம்மா
வாஞ்சை ஐயாறு வளர்த்தநா யகியே
அருணையம் பதியில் அருணா சலமே
கருணைகூர்ந் திலங்கும் கடம்பூர் நாதா
சிவகாமி பங்கா தில்லைநா யகனே
தவமுனி வோர்புகழ் சம்புவே சங்கரா
**சிறுத்தொண்டர்** மனையில் சிறுவன் கழுத்தை
அறுத்ததைத் திரும்ப அழைத்தகங் காளா
**திருவாத ஊரர்**க்குச் சிவஞானம் நல்கி
நரிதனைப் பரியாய் நடத்திய நாதா
குணதிசை மாரியில் கொட்டுடை யவனே
கோலாயிரங் கொண்ட குஞ்சர வாகனா
மாலாம் பரந்த வனமுடை யவனே
நாட்டிய புகழின் சேரநாட் டம்மா
தீட்டிய திருநெல் வேலிநா யகனே
எறிந்தவே லையனே ஏழைபங் காளா
அறிந்துனைப் பணிவேன் அரிகர புத்திரா
சங்கரி வயிரவி சாமுண்டி...............
..........................................

---

28. பை அரவு - படத்தையுடைய பாம்பு; மெய் ஒன்றாய் - உடல் ஒன்றாய்; மெய்க்குறி - உண்மையான குறி.

29. ஏடகம் - திருவேடகம்; காதலி-மலைவளர் காதலி, காளையம்பதி - காளையார்கோயில்; வளர்த்த நாயகி - அறம் வளர்த்த நாயகி;

திருவாதஊரர் - மாணிக்கவாசகர்; குஞ்சரம் - யானை; மால்-விருப்பம்; சேரநாட்டம்மா-வித்துவக் கோட்டு அம்மா.

### தரு

30. மானே குறிசொல்ல நீ
தானே வந்துகேளாய்
உண்மை யாகவே—உனக்கே குறி
உரைப் பேனே!

மலர்த்திருவே மதன குருவே ரதியுருவே
சிவனார் சிறையிலி நாயகர் திருத்தாள் மனமிருத்தி
—மானே

சாணிபுல் கொடுவா நிலஞ்சதுர முடன்மெழுகு
தந்திமுகன் தனையேவைத் தறுகூன்றி அணிவாய்
வாணிசரசு வதியைத்தின மனதில்மிகநினைத்து
மனமீதி லில்புகுந்தே யுள்ளமெலாம் குளிர்ந்தே.
நாழிதனில் முத்தளந்து நன்மையுடன் கொடுவா
நல்லகனி வெல்லமுடன் எல்லாமிகப் படைப்பாய்
ஆழிசங்கு தரித்தஎங்கள் அரிகேசன் மருகன்
ஆனைமுகற் கிளையகுகன் அருளைநினை மாதே.

[தலைவியின் இடப்பக்கத்தில் தோன்றிய மறு, முன்னே வந்து நின்ற நேரம், தலையைத் தொடுதல், தோளைத் தொடுதல், தனத்தைத் தொடுதல் ஆகியவற்றைக் கொண்டு விரைவில் தலைவன் மருவ வருவான் என்பதைக் குறவஞ்சி குறிக்கிறாள். இப் பகுதியில் அமைந்த ஏடுகள் சிதைவுற்று ஒழுங்கு படுத்தக் கூடாவண்ணம் உள்ளன.]

சந்திரமதி தன்னையேஅரிச் சந்திரன் அணைந்ததுபோல்
தமயந்தியும் நளராசனும் தாம்வாழ்ந் திருந்ததுபோல்
இந்திரன்சிறை யிலிநாயகர் இணங்கிமிக வளைந்தியல்பாய்
மைந்தர்பதி னாறும்பெற் றிருப்பாயடி யம்மே!

### விருத்தம்

31. பொங்கிய விடத்தை யுண்ட புலிதனார் சிறையி லீசர்
தங்கிய மாரி மேவித் தழைத்திடு மன்னர் முன்னே
இங்கிதக் குயில்போல் சொல்லின் ஏந்திழை யான மோகச்
சிங்கியைத் தேடிக் கொண்டு சிங்கனும் தோணி னானே.

---

30. கொடு - கொண்டு; ஆழி - சக்கரம்; அரிகேசன்-திருமால்.

### தரு

32. சிங்கன் வந்தான்—குறப்பயல்
சிங்கன் வந்தான்.

செம்பொன் மாரிப்பதி மன்னர் சேர்ந்துகூடி
நிறைந்திருக்கும் சபைதனில்
திங்கள் சேர்வதன மங்கை யானரதி
தங்கை யானகுறச் சிங்கிதனைத் தேடிச்—சிங்கன்.

சில்லைக் கோலுங் கொண்டு சிங்கி யடித்துக் கொண்டு
பல்லைக் காட்டிக் கொண்டு பாந்திப் பதுங்கி மெல்லச்
சொல்லைக் குழறிப் பேசிக் சூது பொருத சோடு
வல்லைப் பொருத முலையாள் வஞ்சி தன்னைத்
தேடிச்—சிங்கன்

திக்குளோர் பணிந்து போற்றும் செம்பொன் மாரி
நாட்டில்
செய்க்குள் இறங்கி மேயும் செங்கால் நாரை தாரா
கொக்கு மடையான் அன்றில் குருகு பறவை யெல்லாம்
கைக்குள் ளாகக் கொண்டு கன்னி தன்னைத்
தேடிச்—சிங்கன்

வீர முடைய செம்பொன் மாரிப் பதியில் மன்னர்
மிகுத்து நிறைந்து வளர்ந்திருக்கும் சபைநடுவே
தூர விட்ட சிங்கி சோரம் செய்தாள் என்று
தொழுது வணங்கித் துடித்து முறுக்கி விரைவுகொண்டு
—சிங்கன்

### தரு

33. சிங்கியைக் காணேனே —என்றன் வங்கணச்
சிங்கியைக் காணேனே.

தெய்வமே எந்தத் தேசத்தில் போனாளோ
தேடியும் காண்கிலேன்
இங்கிதம் மேவிய **மூன்றனை** மன்னர்
இருக்கும் சபைதனில்—சிங்கியைக்.

கொங்கு வங்காள மலையாளம் ஈழ
முங்குச் சரதேசங் கொழும்புமன் னார்முதல்
எங்கெங்கும் தேடினேன் காணேனே என்னுட—
சிங்கியைக்.

---

32. சில்லை - சிறிய; செய் - வயல், நிலம்; குருகு-நாரை ; சோரம் - ஏமாற்று.

வாலிபர் தம்மை விழியாலே வெல்லுவாள்
மாதர் தமக்குக்குறி நன்றாகச் சொல்லுவாள்
சூலி மனையில் தினந்தினம் செல்லுவாள்
சொலிந்த விடத்தைக் குழியாகக் கெல்லுவாள்—சிங்கியைக்.

ராகத் துடனே நயமாகப் பாடுவாள்
நானில மெச்சப் பரதத்தை யாடுவாள்
மோகத் துடனே எனைத்தினங் கூடுவாள்
முத்துக் குறிசொல்ல மாதரைத் தேடுவாள்—சிங்கியைக்.

**கலிப்பா**

34. மன்னவர்பொன் மாரிவாழ் **அனைசை** மன்னர்மகிழ்
சின்னகுறச் **சிங்கா** என் சேதிசொல்ல நீகேளாய்
உன்னுடைய **சிங்கி**யுனைப் பிரிந்தாளென்று சொன்னாயவளுக்
கென்னஅடை யாளமுண் டெனக்கறியச் சொல்வாயே.

**தரு** (சிங்கி அடையாளம்)

35. காரைப் பொருதகுழலாள் சிங்கிகாண் அய்யே-என்றன்
காமத்துக் கேற்றகலவிச் சமத்திகாண் அய்யே.
ஆரையுஞ்சொல் வசனத்தா லுருக்குவாள் அய்யே—பொரும்
அங்கசனைக் கடைக்கண்ணால் மருட்டுவாள் அய்யே.
மாரன் கருப்புச்சிலைப் புருவங்காணு மெய்யே—வள்ளைத்
தண்டொத்த குழைக்காதுச் சிங்கிகாண் அய்யே.
சீரொத்திளம் பிறையாகு நுதற்சிங்கி அய்யே—
செகமேவுங் குமிழமலர் மூக்குத்திகாண் மெய்யே.

---

33. மூன்றனை மன்னர்-காங்கேயன்; 'அனசை' என்பதும் அது. சூலி - கருவுற்ற பெண்கள்; சொலிந்த இடம் - மென்மையான இடம்; கெல்லுவாள் (கல்லுவாள்) தோண்டுவாள், 'கிழங்கு கல்லி எடுப்பது' குறவர் வாழ்வொடு தொடர்புடையதாகலின் இவ்வாறு கூறினாராகலாம்.

35. கார் - மேகம்; பொருத - ஒப்பான; கருப்புச் சிலை - கரும்புவில்;

ஆலைக்கரும் பைப்பிழிந்த அதரத்தாள்காண் அய்யே
அபரஞ்சி யாமெனக் கொஞ்சிய சிங்கிகாண் அய்யே—
சோலைக்கமு கின்நிகர்தொண் டையாள்சிங்கி அய்யே
துலங்குமதி போல்வதனத் தினாள்சிங்கி மெய்யே
பச்சிளநீ ரைப்பழித்த தனத்தினாள் அய்யே
பச்சைஆ லிலைபோல வயிற்றை யுடையவள் அய்யே.
மெச்சியசொல்லத் துடியிடை யாள்காணு மய்யே—வெகு
மைக்கண் ணரவப் படம்போல அல்குலாள் அய்யே.
தோரணவா ழைத்துடை யாள்சிங்கி அய்யே—
சொல்லுங் காமுகரை முழங்காலால் மயக்குவாள் அய்யே
தாரணி யிலிருள் பொத்தகத் தாளினாள் அய்யே
தவந்தனை நிறுக்கும் தராசுப் பரட்டினாள் அய்யே
எங்கெங்கும்தேடித் திரிந்தலுத் தேனடா அய்யே—என்
இங்கிதச் சிங்கிக் கின்னமடை யாளம்முண் டய்யே.

### கலிப்பா

**36.** நானிலஞ்சேர் பொன்மாரி நாடனசை மன்னர்முன்னே
பானுலகெல் லாந்தேடிப் பார்த்துவந்த சிங்காகேள்
கானிலகும் பூங்கூந்தல் கன்னிதனைக் காட்டவின்று
மானிலத்தி லுள்ளமருந் தென்னநீ தருவாயே.

### தரு (மருந்து)

**37.** ராச வசீகரம் தருவேன் நானிலத்தி லுள்ள
நாரியர்கள் பின்தொடர மருந்து தருவேன்
வாச நரிக்கொம்பு தருவேன் மறுமன்னிய வணங்கி
யிணங்க நல்ல மருந்து தருவேன்

சிலபெந் தனங்கள் தருவேன் செகத்தி லுள்ள
திரவிய மெடுக்க அஞ்சனந் தருவேன்
கலவியில் மங்கையர் கள்தன்னைப் பிரிந்திடாமல்
கைவச மாகநல்ல மருந்தறிவேன்.

ஆனைத்தந்தச் செப்புத்தருவேன் அரிய காண்டா
மிருகத்தின் வளைபலவும் நான்தருவேன்
வானை நிகரான கொடையான் வாழனசையில்வாழும்
செம்பொன் மாரியிளந் தாரியே.

---

அதரம் - இதழ்; இருள் பொத்தகம் - இருட்டில் படிக்கப்படும் பொத்தகம் என்றது இடக்கரடக்கு; பரடு - காலடி; குழல் முதல் அடி வரை உரைத்தது அறிக.

36. பானுலகு - கதிரோன் ஒளிபடும் உலகு; கான்-மணம்; மானிலம்-மாநிலம்.

37. மறு-பகைவர், மாறுபட்டோர்; பெந்தனம்-கட்டு, பேய்க்கட்டு, தீக்கட்டு முதலியன. அஞ்சனம்-மை; வளை - மோதிரம்; இளந்தாரி - இளைய வாலிபன்; வான்-மழை.

## விருத்தம்

**38.** காரனை கரத்தான் கண்டன் காங்கயன் மாரி நாட்டில்
மேரனை முலையாள் சிங்கி மீதிலே ஆசை கொண்டு
பாரெலாம் தேடி ஓடிப் பரந்திட வேண்டாஞ் சின்ன
மாரனே சிங்கா உன்முன் வந்தனள் சிங்கி தானே

## தரு (ஏசல்)

**39.** என்னைத் தனியேவிட் டெங்கேபோனாய் சிங்கி-இந்தத்
தேசத்து மங்கையர்க் கின்பக் குறிசொன்னேன் சிங்கா.

உன்னைப் பிரிந்தோ ருளம்தெரி யேனடி சிங்கி—நீயும்
உள்ளே கவடுவைத் துண்மைசொன் னாய்குறச் சிங்கா.

கொண்டையில் நெட்டியைக் கட்டின தென்னடி சிங்கி
குடமல்லி கைமுல்லை யரும்பல்ல வோகுறச் சிங்கா.

மண்டைக் கருமுன்னே யுடன்காய தேதடி சிங்கி
மன்னன்காங் கயன்தந்த கனகப் பிறையது சிங்கா.

காதிலே காளானைத் தூக்கிய தென்னடி சிங்கி
கண்டன்காங் கயன்தந்த பொன்னின் கொப்புதானடா
சிங்கா.

பாரிய காதில் பணியாரம் என்னடி சிங்கி
பத்தரை மாற்றுப் பசும்பொன்னின் ஓலைகாண் சிங்கா.

கூரிய கொடியென் முன்னே நிற்பதேன் சிங்கி
குலவிய மாத ரணிவாழி யல்லவோ சிங்கா.

கண்ணில் கரியை வழித்திட்ட தென்னடி சிங்கி—
கடைக்
கண்ணுக் கிசைந்திடு மையல்ல வோகுறச் சிங்கா.

கழுத்தினில் ஓலை கட்டின தென்னடி சிங்கி—கண்டன்
**காங்கயன்** இட்டபொற் பட்டக்கா றையல்லோ
சிங்கா.

நண்ணிய மூக்கில் விளாம்பிசின் ஏதடி சிங்கி
நல்லமுத்தால் அழுத்திய மூக்குத்தி அல்லவோ சிங்கா.

சிட்டு முட்டைதனைக் கட்டின தென்னடி சிங்கி—நல்ல
சிங்கார முத்து வடமல்ல வோகுறச் சிங்கா.

---

38. கார் அனை கரத்தான் - மேகம் போன்ற கொடைக்கையான்; மேரனை - மேரு அனைய; சின்ன மாரன் - அழகிய மன்மதனே, இளைய மன் மதனே என்றுமாம்.

39. கவடு - வஞ்சகம், சூழ்ச்சி.
வாழி-மூக்குவாழி. அபரஞ்சி-பொன்; தாரம்- அரும் பொருள்; (உடையாய அரும் பொருள் என்க.)

கட்டுங் கழுத்தினில் வட்டம தென்னடி சிங்கி
கழுத்தில் அபரஞ்சிப் பொட்டல்ல வோகுறச் சிங்கா.

நெஞ்சிலே ரெண்டிடம் வீங்கிய தென்னடி சிங்கி—மலை
நேரான கும்பத் தனமல்ல வோகுறச் சிங்கா.

மிஞ்சும் இடைதன்னில் மின்னிய தென்னடி சிங்கி
மிகுவெள்ளி யினாலுடை தாரமலோ போடா சிங்கா.

சொல்லுங் குடங்கைச் சுண்ணாம்புத் தடையென்ன சிங்கி
துலங்கிய வெள்ளி வளையமல்ல வோகுறச் சிங்கா.

மெல்லிய முன்கையில் மின்னிய தென்னடி சிங்கி—நன்றாய்
மெச்சிய தங்கக் கடையமல் லோகுறச் சிங்கா.

காலில் அல்லித்தண்டைக் கட்டிய தென்னடி சிங்கி
**கண்டன்காங் கயன்** தந்த பொற்றண்டை யல்லவோ சிங்கா.

கோலிய கள்ளுக் குடுவைய தென்னடி சிங்கி
கொண்டு செலத்தங்கக் குறக்கூடை அல்லவோ சிங்கா.

பையினில் கம்பின் பளபளப் பென்னடி சிங்கி
பாங்கான பொன்னாலே மாத்திரைக் கோலடா சிங்கா.

மெய்யொன் றாகக்கூடி மேவி யிருக்கவா சிங்கி—போடா
வீணான வார்த்தையை ஏதுக்குப் பேசுறாய் சிங்கா.

காவிக் கனிவாய் அதரம் தரவேணும் சிங்கி—போடா
கள்ளுக் குடித்த வெறியில்தான் பேசுறாய் சிங்கா.

ஆருயிர்க் குமருந் தல்லவோ நீயும் சிங்கி—போடா
ஆலையில் லாவூருக் கிலுப்பைப்பூச் சக்கரை சிங்கா.

பின்னே திரிந்துனக் கேவல்செய் வேனடி சிங்கி
பேராசை யானக்கால் பேயும் இரங்காதே சிங்கா.

என்னசொன் னாலும் இரங்காத தென்னடி சிங்கி
ஏய்க்கிற ஏய்ப்புக் குளப்படு வேனோடா சிங்கா.

வித்தடிமையெனைக் கொத்தடிமை கொள்ளடி சிங்கி
வேண்டிய வார்த்தைநெய் வேத்திய மாகுமோ சிங்கா

---

குடங்கை-தோள்வளை போடுமிடம்; கடையம் - கடகம்; காவி-சிவப்பு;

வித்தடிமை - விற்றடிமை; கொத்தடிமை-கொற்றடிமை, கொற்றாவது கூலி; சனதம் - வெறி, கொழுப்பு,

சித்த மிரங்காயோ எனைச்சற்றே பாரடி சிங்கி
சிலபெண் களைப்போலே மழுங்கித் திரிவேனோ சிங்கா.

காலில் விழுந்துனைக் கும்பிடு வேனடி சிங்கி
காமச் சனதமிஞ்சித் தலையேறிக் கொண்டதோ சிங்கா.

ஆலிலைக் கிழர வின்படம் காட்டடி சிங்கி
அறியாமல் வெறியால் குழறித் திரியிறாய் சிங்கா.

உன்னையல் லாமல்ஒரு மாதரைச் சேரேனே சிங்கி—இது
உண்மையென் றென் முன்னே பாசையிட் டுத்தாடா சிங்கா.

செப்புத் தனத்தைத் திறந்து காட்டடி சிங்கி—சில
சேயிழை மார்களைப் போலே திரியேன்காண் சிங்கா.

ஒப்பு மனத்தா லுனைப் பணிந்தேனடி சிங்கி
ஒருமா தரைக்கூடித் திரிந்து வந்தாய் சிங்கா.

அப்படி வார்த்தை வெளியாகச் சொல்லடி சிங்கி
அதுதானே உனைக்கூட இத்தனை சொன்னது சிங்கா.

அத்தனை எதுக்குக் குற்றம்பா ராட்டினாய் சிங்கி
அரைச்சொல் லாலேஅம் பலம்ஏறப் பண்ணாதடி சிங்கி.

சித்த சனும்ரதி யும்போலே சேருவோம் சிங்கா—நல்ல
சிங்கார மான குடில்தனில் செல்லுவோம் சிங்கா.

**மூன்றனை** மன்னரை வேண்டியே வாழ்த்திடுசிங்கி—திங்கள்
மும்மாரி பொழிந்திட வேதினம் வாழ்த்திடு சிங்கி.

ஆண்டவர் மாரிச் சிறையிலி நாதரை வாழ்த்தி
அன்பான குடிலில் அணைந்து சுகிக்கவா சிங்கா.

---

பாசை-உறுதிமொழி; சேயிழைமார்-செவ்விய அணிகலம் அணிந்த பெண்கள்; வெளியாக-வெளிப் படையாக; குடில்-குடிசை.

### தரு

40. சிங்கியைக் கூடியணைந்து சுகித்தேனே—அய்யே

சிறுமான் கன்றினைப்போல மைந்தரைப் பெற்றேனே
—அய்யே

பொங்கிய வாழ்வுப் புதல்வரைப் பெற்றேனே—
அய்யே

பொன் மாரியில் நாதரைப் போற்றி வணங்கினேன்—
அய்யே.

### மங்களம்

41. கனகமழை பொழிந்தவர்க்குக்
கயிலாச நாதருக்கு
அனவர்தொழும் பாதருக்கு
அய்யர்சிறை யிலீசருக்கு—மங்களம்.
கரியுரியைப் போர்த்தவர்க்குக்
கங்கைமதி தரித்தவர்க்கு
நரிபரியாய்ச் செய்தவர்க்கு
நற்றமிழர்க் கன்பருக்கு—மங்களம்
**காங்கயன்**கலி தீர்த்தவர்க்குக்
**கனகமழை** பொழிந்தவர்க்கு
பாங்குடன்**மூன் றனசை**மன்னர்
பணிந்தேத்தும் பாதருக்கு—மங்களம்.
தேவி பிரியா வுடைக்கு மங்களம்
சிறையிலி நாதருக்கு மங்களம்.

........................

........................

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி

## (எண் - செய்யுளெண்)


| | | | |
|---|---|---|---|
| ஈசர் | 19 | நீதிபுணர் | 18 |
| எங்கள் | 18 | பாற்கரனும் | 24 |
| என்னைத் | 31 | பையரவு | 26 |
| கனகமழை | 34 | பொங்கிய | 27 |
| காசி | 9 | பொதியமலை | 22 |
| காரனை | 31 | மகமேருக் | 19 |
| காரைப் | 29 | மதியணி | 23 |
| கூடல் வாழ் | 26 | மந்திர | 11 |
| சகி நல்ல | 11 | மன்மதன் | 11 |
| சிகர கோபுர | 18 | மன்னவர் | 29 |
| சிங்கன் | 28 | மாரியில் | 8 |
| சிங்கியைக் காணேனே | 28 | மாது சீதை | 24 |
| சிங்கியைக் கூடி | 33 | மானே | 27 |
| சித்தசனை | 20 | முப்பது | 23 |
| சிந்து காவேரி | 24 | ராச வசீகரம் | 30 |
| சிலைமதன் | 22 | வங்கம் | 20 |
| செஞ் சொலர்க் | 22 | வஞ்சி வந்தாள் | 16 |
| தங்கிய புகழ் | 10 | வஞ்சி வந்தாளய்யா—குற | 16 |
| தஞ்சமென் | 8 | வஞ்சி வந்தாளய்யா—சிங்கார | 17 |
| நல்ல வித்தை | 20 | | |
| நானிலஞ்சேர் | 30 | வெம்புடை | 12 |

சிக்கல்

# 3. நவநீதேசுவரசுவாமி குறவஞ்சி

சொக்கலிங்கம் பிள்ளை

இயற்றிய

சிக்கல்

# நவநீதேசுவர சுவாமி குறவஞ்சி

[ ஆராய்ச்சி முன்னுரை
அருங்குறிப்புரை
முதலியவற்றுடன் ]

பதிப்பாசிரியர்,
கழக இலக்கியச் செம்மல்
புலவர் இரா. இளங்குமரன்,
திருநகர், மதுரை-6.

## NAVANEETHESWARA SWAMY KURAVANCHI

*By*

CHOKKALINGAM PILLAI

The Singaravelar temple dedicated to Subramanya at the village of Sikkal near Nagapattinam is a famous temple of the Tamil country. The village can be reached from Thiruvarur, on the highway to Nagapattinam about 5 k. m. before Nagapattinam. It is also connected by rail. According to tradition the temple was built by the celebrated Chola ruler Kochengat Cholan. The Saivite Saint Gnanasambandar has a hymn on this temple. Sundaramoorthy Nayanar also refers to this shrine. Arunagiri Nathar, the celebrated author of Thiruppugazh, has added to the sanctity of the temple by his hymn on Lord Subramanya, the presiding deity of this temple. There are other poems celebrating the greatness of this shrine in Tamil, among them this Kuravanchi is one.

According to local legends, the sage Vasishta worshipped and invoked the presence of devine cow, Kamadhenu, in this village. Kamadhenu's milk flow crystalised into a great butter ball forming the pedestal and Siva Linga of this place. Vasishta worshipped this Linga of butter. Subsequently when he tried to take the Linga after the worship, it could not be moved and hence the place came to be called Sikkal. The legend finds mention in this work. The Mulasthana of this temple is referred to Vennai Peruman. According to the inscriptions found on the temple, the presiding deity is called 'Palvennai Nathar', also called 'Palvennai Nayanar.' The deity is therefore called 'Navaneetheswara' in Sanakrit and the Goddess is called 'Vel Nedunkanni' and 'Sathyayadakshi'.

Since this place was adored by Vasishta, the village came to be called 'Vasistashramam'. Jasmine creapers grow in abundance in this village and hence the place also came to be called Mallikaranya (Jasmine Forest). It is believed that this place brings the divine grace to all the devotees and is being called Devasannidhya. The pond of this place is held sacred for its

purity and is called the Kaya saras. Later inscriptions mention that this village was situated in the Usavadi, a sub-division of Jeyamanicka Valanadu. The name of the village Sikkal appears as Sikarai, a popular name called in this work. It is said to be situated in the midst of green fields and flower gardens.

The temple is situated at the eastern end of the village. An entrance tower was erected in 1933. In front of the shrine is the Krithikai Mandapa at the entrance. Recently the Mandapa has been embellished with paintings depicting the various episodes of Lord Subramanya. Adjacent to the Mandapa, south of the entrance, is a Ganesa and to the north is enshrined Subramanya. Passing the entrance one comes to the flag mast situated in the first enclosure. In the southern side of this enclosure is the temple of 63 Saivite saints. At the western end, Lord Kasi Viswanatha and his consort Visalakshi are enshrined. In the same place is noticed the shrine of Lord Karthigai Ganesa. According to tradition this Ganesa was worshipped by the Krithigai women for bringing up Lord Muruga. At the western end is a shrine of Subramanya as Shanmuga, seated on his peacock. In the north of the enclosure are enshrined Sri Lakshmi and Chandeswara.

The presiding deity in the Mulasthana is on a raised shrine resembling an artificial hillock. The shrine is approached by 12 high steps. In the southern side of the front Mandapa we have a shrine of Sundaraganapathy, Saniswara, Vasishta and other seven sages. In the shrine of Somaskanda is found a Linga of emerald called Maragathavitangar. Somaskanda shrine is the main shrine of Vennai Peruman. The Nataraja shrine is south facing. The shrine of Singaravelar is now decorated with marble stones. Lord Singaravelar is shown in a standing posture. The shrine of Goddess Ammai Velnedunkanni and Palliarai are also located in the same region. In the northern part of the enclosure is the temple of Lord Vishnu as Kolavamanapperumal and Komalavallithayar. In the enclosure near to the Dekshinamurthy shrine is found a jasmine creaper. Near to the 'Milk-tank' (Palkulam) is found an Aswatha tree. These are considered the sacred creaper and tree of the temple. The water tanks of this temple are named 'Palkulam, Lakshmi Thirtham, Kaya Thirtham, Ammankulam Vridha Kaveri', etc.

Among the various festivals celebrated in this temple, the most famous is called 'Velvanguthal', i.e., receiving the spear. It is celebrated on the night prior to Surasamhara festival in the month of Aipasi. Lord Muruga is said to receive the spear (spear of Knowledge) from Goddess Uma. According to tradition Muruga is said to have obtained the spear at Sikkal and used it to destory Surapadma at Tiruchendur.

The Sikkal Kuravanchi has some variations. For example, the work has no Kattiyakkaran. It however begins with **'Todayam'**. Mohini arrives as heroine. The poet himself narrates the heroine's love towards the hero who comes in procession. Then is introduced Muthurekha, the close friend of the heroine who brings the Kuratti. The dialogue between the heroine and the fortune-teller takes the form of a description of the hill, river, fertility of the soil, the sacred spots, the form of **anda**, etc. the sciences learnt by the kuratti, the important persons who have benefitted by the fortune-teller, the prizes she received etc., After invocation the kuratti describes the hero and the time when her love would bear fruit. The arrival of Singan and his friend is then described.

The composer of the work calls this work as 'Daivat turai Kuravanchi (divine Kuravanchi), Pugazh Kuravanchi (Kuravanchi of fame), Thiru Kuravanchi (auspices Kuravanchi), Sirgara Kuravanchi (delightful Kuravanchi) and Maivalakanni Mak-Kuravanchi'. That the work is of great literary merit is also alluded to. The village Sikkal is called Sikarai and is equated to Kasi in its sanctity. The presiding deity is mentioned as 'Pal Nadi Arasu'. The Lord referred to as the God of the Mountain, seems to allude to the structural aspect of the temple.

The local legend of Sage Vasishta's worship and the Linga being formed of butter, and Vasishta's effort to carry the Linga and his failure and detailed in this text. Among other legends alluded to the story of Pazhaiyanur Neeli, the Lord's rule as the Pandya of Madurai, and also the story of the chaste wife deserve special mention.

The poet introduces at places, appropriate proverbs and also uses colloqual words suited to the characters and situations. He

heightens the poetic appeal by repeating the words or employing alliterations at suitable places. The mountains referred to in the work are—

Indragiri, Indra Saila, Gandhamandana,
Garudagiri, Kailasa, Kedarasala, Caturagiri,
Chandragiri, Sutamalai, Surasala, Nilagiri,
Bhadragiri, Pavalamalai, Pannakagiri,
Balagiri, Meru, Manehdragiri, Mantrasala, etc.

Besides the well known rivers, the work also refers to Navanadhi, Bhavani, Manikarni, Vegavati and others. The countries mentioned are Anga, Vanga, Ila, Karnataka, Kalyana, Kalinga, Kekaya, Cochin, Kollam, Koda, Kosala, Sankha, Savakam, Salavam, Singala, Sindhu, Chinam, Suram, Sonakam, Trikutam, Tulukkanam, Tuluva, Tottiyam, Pulindam, Maccam, Matangam, Maratam, Magadam, Madram, Malavam.

The author of this work is one Chockalingam Pillai also called Chockalinga Pulavar, who hailed from Thiruvarur. His father was one Suppa Pillai and the poet refers to his father in a number of stanzas as 'Suppa Pillai Arulthavathal Vantha Maindan' and 'Arul Chockalinga Pulavar'. It is seen that his teacher was also named as Chockalingam.

The poet Chockalingam Pillai, the author of this work belong to the Vellala Community know for its philonthrophic services in the region. Sivaji Raja, Narayana Iyer, Suppa Pillai and Annamalai Pillai are referred to as the patrons of this poet. Sivajiraja is obviously the Maratta ruler of Thanjavur and the son of Serfoji, the famous author of Kuravanchi works. Serfoji died around 1832 and Sivaji succeeded him. There is an internal reference in this text that the country was under the rule of Thanjavur Sivaji Raja and under the administrative set up of the English. The other patrons of the poet were probably the residents of Thiruvarur and other places in Thanjavur District. From the references in the text, it is seen that the work was completed in the year 1852, year Parithapi, month Tai, date second and day Wednesday.

The author calls himself a 'School Master of Thiruvarur.'

Dr. R. Nagasamy
Dr. of Archaeology Department.

# பொருளடக்கம்


பக்கம்

**ஆராய்ச்சி முன்னுரை** .. 1

1. திருச்சிக்கல் திருக்கோயில், 1
2. குறவஞ்சி, 4
3. சிக்கல் நவநீதேசுவர சுவாமி குறவஞ்சி, 8
4. நூல் நயம், 10
5. நூலாசிரியர், 17

சாற்றுக்கவிகள் .. 20

சிக்கல் நவநீதேசுவரசுவாமி குறவஞ்சி—
மூலமும், குறிப்புரையும் .. 25

செய்யுள் முதற்குறிப்பு அகராதி .. 81

# ஆராய்ச்சி முன்னுரை

## 1. திருச்சிக்கல் திருக்கோயில்

புகழ்மிக்க திருக்கோயில்களுள் **சிக்கல்** என்பதும் ஒன்றாகும். சிக்கல் என்னும் பெயர் கேட்ட அளவில் **சிங்கார வேலர்** நினைவு எவருக்கும் தோன்றும்.

சிக்கல், திருவாரூரில் இருந்து நாகப்பட்டினம் செல்லும் நெடுஞ்சாலையில், நாகப்பட்டினத்திற்கு மேற்கே 5 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்குத் தொடர்வண்டி நிலையமும் உண்டு.

சிக்கல் கோயில் பழைமையானதாகும். இது **கோச் செங்கட் சோழ** நாயனாரால் கட்டப்பெற்ற கோயில்களுள் ஒன்று என்று கூறுவர். **திருஞான சம்பந்தர்** இத் திருக் கோயிலுக்கு வந்து திருப்பதிகம் பாடியுள்ளார். **சுந்தரர்** இத் திருகோயிலைக் குறித்துள்ளார். பின்னாளில் **அருணகிரி நாதர்** இத் திருப்பதிக்கு வந்து திருப்புகழ் இசைத்துப் புதுப் பொலிவு கூட்டியுள்ளார். இன்னும் சில பதிகங்களும் திருப் பாடல்களும் இக் கோயில் பெற்றுச் சிறந்துள்ளது. இது பெற்றுள்ள சிற்றிலக்கிய நூல்களுள் ஒன்று இக் குறவஞ்சி நூலாகும்.

**வசிட்டமுனிவர்** வழிபாடு செய்து, காமதேனுவை வருவித்த தலம் சிக்கல் என்றும், காமதேனுவின் பால் பெருகி வெண்ணெயாகத் திரண்டு உறைந்தது என்றும், அவ் வெண்ணெய்யால் பீடமும் இலிங்கமும் அமைத்து வசிட்டர் வழிபட்டார் என்றும், அவ் வழிபாட்டை முடித்த பின்னர் இலிங்கப் பெருமானை எடுத்துச் செல்ல அவர் முயன்றபோது அது வாராது சிக்கிக் கொண்டமையால் சிக்கல் என்னும் பெயர் உண்டாயிற்று என்றும் கதை வழங்குகின்றது. இதனை இக் குறவஞ்சி (36) விரித்து விளக்குகின்றது.

கோயில் மூலவர் பெயர் **வெண்ணெய்ப் பெருமான்.** இவர் 'பால் வெண்ணெய் நாதர்' என்றும், 'பால் வெண்ணெய் நாயனார்' என்றும் இக் கோயிலிலுள்ள கல்வெட்டுகளில் குறிக்கப்பெற்றுள்ளார். வடமொழியில் இவர், 'நவநீதேசுவர சுவாமி' என்றும் வழங்கப் பெறுகிறார்.

இறைவியின் திருப் பெயர்கள் **வேல்நெடுங்கண்ணி, சத்தியாய தாட்சி** என்பவை.

வசிட்ட முனிவரால் உண்டாக்கப் பெற்ற மூலவரைக் கொண்ட இடம் ஆதலின் இவ்வூர், 'வசிட்டாச்சிரமம்' என்றும், மல்லிகைக் காட்டின் இடையே இருந்தமையால் 'மல்லிகாரணியம்' என்றும், எல்லாத் தெய்வ வழிபாட்டுப் பேறுகளும் ஒருங்கே அருளும் பெருமையால் 'தேவசாந்நித்தியம்' என்றும், 'காயா' என்னும், நீர்த்துறை உண்மையால் 'காயாசரஸ்' என்றும், பிராமணர் குடியிருப்பாக இருந்தமையால் 'பிராமண அக்கிரகாரம்' என்றும் இதற்குப் பெயர்கள் உண்டு. கல்வெட்டில் இவ்வூர் 'செயமாணிக்க வளநாட்டு உசவாடி' என்று குறிக்கப் பெறுகிறது. இக் குறவஞ்சி சிக்கல் என்பதன் மரூஉப் பெயராகிய **சிகரை** என்பதைப் பயில வழங்குகின்றது.

திருச்சிக்கல் வளமிக்க வயல்களுக்கும் சோலைகளுக்கும் இடையே உள்ளது.

'நீல நெய்தனில விம்மல ருஞ்சுனை நீடிய
சேலுமா லுங்கழ னிவ்வள மல்கிய சிக்கல்'

என்றும்,

'வண்டி ரைத்துமது விம்மிய மாமலர்ப் பொய்கைசூழ்
தெண்டி ரைக்கொள்புனல் வந்தொழு கும்வயற் சிக்கல்'

என்றும் ஞான சம்பந்தரால் பாடப் பெறும் வளமை வாய்ந்தது சிக்கல்.

கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. 70 அடி உயரம் உள்ள எழுநிலை மாடமமைந்த கோபுரம், 1933-ல் கட்டப் பெற்றதாகும். கோயில் முகப்பில் **கிருத்திகை மண்டபம்** என்னும் வசந்த மண்டபம் உள்ளது. அதில் திருமுருகன் பிறப்பு முதல் திருமண நிகழ்ச்சி முடியவுள்ள வரலாறுகளை விளக்கும் வண்ண ஓவியங்கள் தீட்டப்பெற்றுள்ளன.

மண்டபத்தை அடுத்துள்ள வாயிலுக்குத் தென்பால் மூத்த பிள்ளையாரும் வடபால் இளைய பிள்ளையாரும் உளர். வாயிலைக் கடந்தால் **கொடிமரம்** உள்ளது. அது முதற் சுற்றாகும். அதன் தென்பால் ஊர்திகள் வைக்கும் அறையும், அறுபத்து மூவர் கோயிலும் உள்ளன. மேற்குப் பக்கத்தில் காசி விசுவநாதரும் விசாலாட்சியும் எழுந்தருளியுள்ளனர். ஆங்குக் கார்த்திகை விநாயகர் சந்நிதி உள்ளது. திருமுருகன் வளர்ச்சிக்காகக் கார்த்திகைப் பெண்கள்

வழிபாடு செய்த பிள்ளையார் அவர் என்பது கதை. மேற்குக் கோடியில் அறுமுகப் பெருமான் அணிமயில்மேல் அமர்ந்த திருக்கோலத்தில் உள்ளார். வடக்குப் பக்கத்தில் திருமகள், சண்டேசுவரர் சந்நிதிகள் உள்ளன.

இனி இக் கோயில் மூலவராகிய வெண்ணெய்ப் பெருமான் ஒரு **கட்டுமலை**மேல் உள்ளார். அம்மலைக்குப் பன்னிரு படிகள் உள்ளன. தென்புரத்தில் **சுந்தர கணபதி சந்நிதி, சனீசுவரர் சந்நிதி, வசிட்டர் முதலிய முனிவர் எழுவர் சந்நிதி** ஆகியவை உண்டு.

கட்டுமலையின் மேல்பக்கம் **தேவகோட்டம்** எனப் பெயர் பெறுகிறது. இங்குள்ள சோமாஸ்கந்தர் சந்நிதியில் மரகதலிங்கம் உள்ளது. அதற்கு **மரகத விடங்கர்** என்பது பெயர். சோமாஸ்கந்தரை அடுத்து **வெண்ணெய்ப் பெருமான்** உள்ளார். அவரை அடுத்துத் தெற்கு நோக்கிக் **கூத்தப்பெருமான்** உள்ளார். அடுத்துள்ள சலவைக்கல் கோயிலில் **சிங்கார வேலர்** நின்ற திருக்கோலத்தில் காட்சி வழங்குகிறார்.

மலைக்குக் கிழக்கே பள்ளியறையும், **அம்மை வேல்நெடுங்கண்ணி** கோயிலும் உள. முன்கோபுரத்தை அடுத்த வடக்குச் சுற்றில் நின்ற கோலத்தில் **கோல வாமனப் பெருமாளும், கோமளவல்லித் தாயாரும்** உள்ளனர். மாவலியை அழித்தற்குப் பெருமானிடம் வரம் வேண்டிக் காயா தீர்த்தத்தில் நீராடியமையால் **காயா மாதவன்** என்பதும் கோல வாமனர்க்குப் பெயர் என்பர்.

உள் திருச்சுற்றில் தென்முகக் கடவுளை அடுத்து **மல்லிகைக் கொடியும்,** கோயிலுக்கு மேல்பால் உள்ள பாற்குளத்திற்குக் கிழக்குக் கரையில் **அரசமரமும்** உண்டு; இவை இக் **கோயில் கொடியும் மரமுமாம்.**

இங்குள்ள **புனித நீர்த்துறைகள்** பாற்குளம், இலக்குமி தீர்த்தம், காயா தீர்த்தம், அம்மா குளம், விருத்த காவேரி என்பன.

இங்கு நிகழும் விழாக்களுள் முருகன் **வேல் வாங்குதல்** என்னும் விழா மிகச் சிறப்புடையதாகும். அஃது ஐப்பசித் திங்களில் சூர சம்மாரத்திற்கு முதல் நாள் இரவில் உமையம்மையிடம் முருகன் வேல் வாங்கும் நிகழ்ச்சியாகும். 'சிக்கலில் வேல் வாங்கிச் செந்தூரில் சம்மாரம்' என்னும் பழமொழியை விளக்கும் நிகழ்ச்சி இது.

## 2. குறவஞ்சி

**குறவஞ்சி** என்பதன் சொற்பொருள் குறப்பெண் என்பதாகும். குறிஞ்சிநிலப் பெண்கள் **கொடிச்சியர்** எனப் பெற்றனர். கொடிபோன்ற இடை உடையவரைக் 'கொடிச்சியர்' என்றது ஆகுபெயர். வஞ்சி என்பதற்கும் கொடி என்பதே பொருள். ஆகலின் **குறவஞ்சி** என்பதும் **குறக் கொடி** என்பதும் ஒருபொருள் தருவனவே.

குறப்பெண் அல்லது குறிஞ்சி நிலப்பெண் எனப் பொருள் தரும் குறவஞ்சி, ஒரு வகைச் சிற்றிலக்கிய நூலுக்குப் பெயராக வழங்குகிறது. இது, அந் நூலில் அக் குறிஞ்சி நிலப் பெண்ணுக்குரிய சிறந்த இடத்தைக் கருதித் தந்த குறியீடே ஆகும்.

ஒரு தலைவன் உலா வருகிறான். அவனைக் கண்டு காதல் கொள்கிறாள் ஒரு தலைவி; அவளுக்குக் குறிகூறும் முகத்தால் குறிஞ்சி வளம், குறவர் வாழ்வு முதலியவை பெருக்கமாகக் கூறப் பெறுகின்றன. ஆதலின் நூலின் பெயர்ப் பொருத்தம் நன்கு விளங்கத் தக்கதே.

குறவஞ்சி பிற்காலச் சிற்றிலக்கிய வகையைச் சார்ந்தது. எனினும், அதன் வித்து **தொல்காப்பியத்தில்** உள்ளது. அவ் வித்து காலந்தோறும் முளைத்துச் செழித்துப் பதினேழாம் நூற்றாண்டு அளவில் 'செவிநுகர் கனி' என்னும் தனி நூற் பயன் நல்கியுள்ளது. குறவஞ்சி இலக்கியத்திற்கு முதல் நூலும் நிலைத்த புகழ் நூலுமாக விளங்குவது **திருக்குற்றாலக் குறவஞ்சியே** யாகும். அவ் விலக்கிய நூலே பின்னை எழுந்த குறவஞ்சி நூல்களுக்கு எல்லாம் எருசார் இலக்கணமாகத் திகழ்கின்றது. இலக்கிய நூலே இலக்கண நூலுமாம் திறம் இது. இவ்வகையில், காப்பிய நூல்களுக்கு முன்னோடிப் படைப்பாளியாகத் திகழ்ந்த இளங்கோவடிகளாரைப் போன்ற பெருமைக்குரியவர் **திரிகூடராசப்பக் கவிராயர்** ஆவார்.

**விருந்து** என்னும் ஒருவகை நூலைக் குறிப்பிடுகிறார் ஆசிரியர் தொல்காப்பியர். அக் குறிப்பே பிற்காலப் புதுப் புதுப் படைப்புகளுக்கெல்லாம் நலத்தகு நிலைக்களம் ஆயிற்று.

'விருந்தே தானும்,
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே'

என்பது அவர்தம் கூற்று. இதனால் குறவஞ்சி விருந்து என்னும் நூல்வகையைச் சார்ந்தது என்க.

மக்களுக்குப் பொதுவாகச் சில அடிப்படை உணர்வுகள் உள்ளன. அவ்வுணர்வுகள் உலகமெங்கும் பரந்துள்ளன; எக் காலத்தும் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று தங்கள் நிகழ்கால எதிர்கால நிலைகளை அறிந்துகொள்ள வேண்டும் என்னும் ஆர்வமேயாம். அவ்வார்வத்தின் முத்திரையாக விளங்குவது குறவஞ்சி என்னும் சிற்றிலக்கியம் என்பது கருதத்தக்கதாம்.

நாளும் கோளும் கணித்துக் கூற வல்லார் **கணியர்** எனப் பெற்றனர். அக் கணியர்தம் பெருமைக்கு எடுத்துக் காட்டாக இலக்கிய பெருமகனார் **கணியன்பூங்குன்றனார்.**

**நிமித்தம்** பார்த்தலும் **விரிச்சி** கேட்டலும் பண்டு தொட்டே வழக்கில் இருந்து வருகின்றன. இவை புறப் பொருள் துறைகளாக இலக்கண நூல்களில் இடம் பெற்றுள் ளன. சிலப்பதிகாரத்தில் வரும் நிமித்திகனும், சங்கப் புல வருள் ஒருவராகிய விரிச்சியூர் நன்னாகனாரும், இவற்றுக்கு எடுத்துக்காட்டாக இலங்குகின்றனர் (புறம் 292).

நாம் **சகுனம்** என்று வழங்குவது, முந்தையோர் வழங் கிய **சொகினம்** என்பதன் திரிபேயாம். தும்பைச் **சொகின னார்** என்னும் புலவர் பெயர் சொகினச் சிறப்பை உணர்த் தும் (புறம் 249. ஔவை சு. து.).

குறியறியும் வகைகளைக் **கட்டுவைத்தல், கழங்கு பார்த்தல், வெறியாடல்** எனத் தொல்காப்பியர் குறிக் கின்றார் (களவு 24). இவற்றுள் கட்டுவைத்தல் என்பது நெற் குறியாகும். இதனைக் கண்டு கூறுவாள் **கட்டுவிச்சி** எனப்பெறுவாள். இதனைக்

'காரார் குழற்கொண்டைக் கட்டுவிச்சி கட்டேறிச்
சீரார் சுளகில் சிலநெல் பிடித்தெறியா'

என்னும் **திருமங்கை மன்னர் சிறிய திருமடல்** வாக்காலும்

'முந்நாழி முச்சிறங்கை நெல்லளந்து கொடுவா
முறத்திலொரு படிநெலையென் முன்னேவை அம்மே
இந்நாழி நெல்லையுமுக் கூறுசெய்தோர் கூற்றை
இரட்டைபட எண்ணினபோ தொற்றைபட்ட தம்மே'

என்னும் **மீனாட்சியம்மை குறத்தின்** வாக்காலும் அறியலாம்.

கட்டுவைத்துக் காண்பார் குறமகளிர் என்பதைக் 'குற மகள் குறிஎயினி' என்னும் புலமைச் செவ்வியார் பெயரால் (நற். 357) அறியலாம். இக் கட்டுவிச்சியர் **அகவன் மகளிர்** எனப் பெற்றனர் என்பதும் (குறுந். 23), அவர்கள் கையில் கோல் வைத்திருந்தனர் என்பதும், அக் கோல் சிறுகோலாக இருந்தது என்பதும் 'நுண்கோல் அகவுநர்' (அகம். 152) 'சிறுகோல் அகவன் மகளிர்' (குறுந். 298) என்பவற்றால் அறியக்கிடக்கின்றன.

இனிக், **கழங்காவது** கழற்சிக்காய்; அக் காய்களை ஒரு கலத்துள் இட்டு ஒன்றை எடுத்து அக் காயின் இயல் கண்டு குறி கூறுவதாகும். இதனைக் கூறுபவன் **வேலன்** எனப் பெறு வான் என்பது,

'ஆகுவ தறியும் முதுவாய் வேல
கூறுக மாதோ கழங்கின் திட்பம்'

என்பதால் அறியப் பெறும்.

**வெறியாட்டு** என்பது தெய்வம் ஏறப் பெற்று ஆடுவது ஆகும். வெறியாடுவானும் வேலனே ஆவான். அவன் முருக வழிபாடு செய்பவன் ஆகலானும், வேலையுடையவன் ஆக லானும் வேலன் எனப் பெயர் பெற்றான். 'வெறியறி சிறப் பின் வெவ்வாய் வேலன்' என்றார் **தொல்காப்பியனார்.** மகளிர் வெறியாடிக் கூறும் வழக்கும் உண்டு என்பது **திருமுரு காற்றுப்படையாலும், சிலப்பதிகாரம், பெருங்கதை** முதலிய இலக்கியங்களாலும் அறியப்பெறும்.

வேலன் வெறியாடலைக்,

'கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்'

என்னும் **நற்றிணை**யால் நன்கு அறியலாம்.

குறிகூறுதலுக்கு அடிப்படையாக வேண்டும் திறம் **குறிப்பறிதல்** ஆகும். குறிப்பறிதலின் சிறப்புணர்ந்த **திருவள்ளுவர்** பொருட்பாலில் ஒன்றும், இன்பத்துப் பாலில் ஒன்றுமாகக் 'குறிப்பறிதல்' என்னும் பெயரிய ஈரதிகாரங்கள் இயம்பினார். புறவாழ்வுக்குக் குறிப்பறிதல் இன்றியமை யாமை போலவே அகவாழ்வுக்கும் இன்றியமையாதது என் பது அவர்தம் கருத்தாதல் புலப்படும்.

'கூறாமை நோக்கிக் குறிப்பறிதல்' (701), 'குறிப்பிற் குறிப்பு உணர்தல்' (703, 705), 'குறித்தது கூறாமைக் கொள் வார்' (704), 'அகம்நோக்கி உற்ற துணர்வார்' (708)

என்றெல்லாம் குறிப்பறிதலை விளக்குகின்றார். மேலும் இத் திறத்தில் தேர்ந்தார் தெய்வத் தன்மையாளர் என்பதை, 'ஐயப் படாஅ தகத்த துணர்வானைத் தெய்வத்தோ டொப்பக் கொளல்' எனக் குறிப்பார் (702). இக் கருத்தாற் போலும் குறவஞ்சியைக் குறிக்கும் புலவர்கள் 'தெய்வக் குறவஞ்சி' என்றனர் என்க.

குறிகூறலும் குறிகேட்டலுமாகிய வழக்காறுகள் காப்பியங்களில் இடம் பெற்றன; **கலம்பகம்**, **கோவை** முதலிய சிற்றிலக்கியங்களிலும் இடம் பெற்றன. கலம்பகத்தில் **குறம்** என்பது ஓர் உறுப்பு ஆகியது. 'குறம்' என்பது **குறத்திப் பாட்டு** எனப்பெறும் என்பதும், அதன் இலக்கணமும்,

'இறப்பு நிகழ்வெதிர் வென்னுமுக் காலமும்
திறப்பட உரைப்பது குறத்திப் பாட்டே' (217)

என்னும் **பன்னிருபாட்டிய**லால் அறியப் பெறும்.

குறத்திப் பாட்டின் அடிப்படையில் வளர்ந்த குறவஞ்சியிலிருந்து **குளுவநாடகம்** என்பது கிளைத்தது எனினும் அது குறவஞ்சி அளவிற்குப் பலுக்கமாக வில்லை. குறவஞ்சி இலக்கியமாக மட்டும் அமையவில்லை. நாடகமாக நடிக்கவும் ஆக்கப் பெற்றதே என்பது, பெரும்பாலான குறவஞ்சி நூல்களில் வரும் **குறவஞ்சி நாடகம்** என்னும் குறிப்பால் அறியப்பெறும்.

சிவக்கொழுந்துதேசிகர் இயற்றிய **சரபேந்திர பூபாலக் குறவஞ்சி** தஞ்சைப்பெரிய கோயிலில் நடிக்கப் பெற்ற செய்தி உண்டு. **குற்றாலக் குறவஞ்சி** நாட்டிய நாடகமாகக் **கலாசேத்திரத்தினரால்** நடிக்கப் பெறுகின்றது. குறவஞ்சி நூல்களின் அமைதியும், அதில் விரவிவரும் இசைப்பாட்டு, வசனம் ஆகியவையும் நடிப்புக்கு ஏற்ற வாய்ப்புடையவை என்பதை விளக்கும். ஆகலின் குறவஞ்சி முத்தமிழ் இலக்கியமாகவும் அதேபொழுதில் எத்திறத்து மக்களும் இன்புறும் கலைச்செல்வமாகவும் விளங்குகின்றது எனலாம்.

## 3. சிக்கல் நவநீதேசுவரசுவாமி குறவஞ்சி

### குறவஞ்சியின் பெயரமைதி

குறவஞ்சி நூல்கள், நால்வகையால் பெயர் பெற்று உலா வருகின்றன. திருக்குற்றாலக் குறவஞ்சி, திருவாரூர்க் குறவஞ்சி போல்வன ஊர்ப்பெயர் சார்ந்து வருபவை; அழகர் குறவஞ்சி, சரபேந்திர பூபாலக் குறவஞ்சி போல்வன பாட்டுடைத் தலைவன் பேர் சார்ந்து வருபவை; சுவாமிமலை முருகன் குறவஞ்சி, சேற்றூர் முத்துசாமி துரை குறவஞ்சி போல்வன பாட்டுடைத் தலைவன் ஊரொடு பேரும் சார்ந்து வருபவை; ஞானக் குறவஞ்சி, ஞானரத்தினக் குறவஞ்சி போல்வன எடுத்துக்கொண்ட சொற்பொருள் அமைதி சார்ந்து வருபவை. இவற்றுள் இக் குறவஞ்சி ஊரொடு பேரும் சார்ந்து பெயர் பெற்றதாகும்.

### குறவஞ்சி அமைதி

கட்டியங்காரன் வரவு; அவன், தலைவர் உலாவரவு உரைத்தல்; உலாக் காண மகளிர் வருதல்; அவர்கள் தலைவனைக் கண்டு காமுற்று மொழிதல்; தலைவி அறிமுகம்; அவள் தலைவன் உலாக் காண வருதல், தலைவனைக் கண்டு அவள் தீராக் காதலுறல், தலைவியின் தோழியர் வருதல்; அவர்கள் தலைவி நிலை கண்டு வருந்துதல்; நிலவு, காமன், தென்றல் முதலியவற்றைத் தலைவி பழித்தல்; தலைவரைப் புகழ்தல்; தூது விடுதல்; குறவஞ்சியாகிய சிங்கி வருதல்; அவள், மலைவளம், நாட்டுவளம், திருத்தலப் பெருமை, குறிச் சிறப்பு ஆகியன கூறுதல், குறிசொல்லுதல்; சிங்கியைத் தேடிக் கொண்டு அவள் கணவனாகிய சிங்கன் வருதல்; அவளைத் தேடிக்கொண்டு அவன் தோழன் வருதல்; பறவைகள் வருதல்; பறவைகளைப் பிடிக்கக் கண்ணி குத்துதல்; சிங்கன் சிங்கியை நினைத்துப் புலம்புதல்; அவளைத் தேடுதல்; காணுதல்; சிங்கனும் சிங்கியும் எதிருரையாடல்; மனமொத்து மகிழ்தல்; வாழ்த்துதல் என்னும் அமைதி குற்றாலக் குறவஞ்சியால் அறியப் பெறுகின்றது. இவற்றுள் சிலவற்றைக் குறைத்தும், சிலவற்றைக் கூட்டியும் வசனம் என்னும் பகுதியை வளர விரித்தும் குறவஞ்சி நூல்கள் இயல்கின்றன.

### சிக்கல் குறவஞ்சி

இச் சிக்கல் குறவஞ்சியில் கட்டியங்காரன் என்பான் ஒருவன் இலன். தோடயம் என்னும் முன்னுரையுடன் செய்தி

தொடங்குகிறது. பின்னர்த் தலைவியாகிய மோகினி வருகிறாள். அவள் தலைவன் உலாக் கண்டு மையல் கொண்ட செய்தியை ஆசிரியரே உரைத்து வெண்ணிலாவையும் தென்றலையும் காமவேளையும் அவள் பழிப்பதை விரிக்கிறார். பின்னே மோகினியின் தோழி முத்துரேகை வரவுரைத்து அவள் உசாவுதலும் தலைவி வருந்துதலும் கூறுகிறார். தோழி, குறவஞ்சி சிங்கியைக் கண்டு அழைத்துக்கொண்டு வருகிறாள். அதன்பின் தலைவி, குறவஞ்சி ஆகிய இருவர் உரையாடலாக நூல் வளர்கின்றது. வாசல் வளம், தேசவரிசை, சாதிக் குணம், தேசம், மலை, மலைவளம், நதிவகை, புண்ணியத்தலம், அண்டகோள்நிலை, குறவஞ்சி கற்ற வித்தை வகை, அவளிடம் குறிகேட்டவர்கள், அவர்கள் அளித்த பரிசு ஆகியவற்றை மோகினி ஒவ்வொன்றாக வினவக் குறவஞ்சி மறுமொழி கூறுகின்றாள்; இப் பகுதி உரையும் பாட்டும் விரவி வருகின்றது; பின்னர்க் குறிகூறும் களம் அமைக்கப்பெற்றுக் குறியுரைக்கிறாள்; கைக் குறிகளை விளக்கி மொழிகிறாள்; இச் சித்த நாயகன் பெயர் அடையாளங்களை உரைத்து அவனை அடையும் பொழுதையும் சொல்கிறாள்; குறவஞ்சி மகிழுமாறு பரிசுகள் வழங்குகிறாள் தலைவி; சிங்கியாகிய குறவஞ்சியைத் தேடிக்கொண்டு சிங்கன் வருகிறான்; அவ்விருவரையும் தேடிக் கொண்டு சிங்கன் வருகிறான்; அவ்விருவரையும் தேடிக் கொண்டு சிங்கன் தோழன் வங்கணச் சிங்கன் வருகிறான்; இருவரும் கண்ணி குத்துகின்றனர்; பறவைகள் பிடிக்கின்றனர்; பின்னர் சிங்கியின் நினைவு சிங்கனை வருத்த அவளைத் தேடிக் காண்கின்றான்; சிங்கன் சிங்கி எதிருரையாடல் நிகழ்கின்றது. இறுதியில்,

'இரதியும் மதனும்போல் எந்நாளும் வாழ்ந்திருப்போம்' என்னும் உறுதியுடன் நூல் முடிவடைகின்றது.

## வேறுபாடுகள்

இதில் கட்டியங்காரன் வருதல், தலைவன் உலா வருதல், மகளிர் கண்டு காதல் மொழிதல், தலைவி உலாக் காணல், தூதுவிடுதல், வாழ்த்துதல் ஆகிய குறவஞ்சிப் பொதுப் பொருள்கள் இடம் பெற்றில.

தோடையம், வாசல்வளம், அண்டகோள் நிலை, குறவஞ்சி கற்ற வித்தை வகை, அவளிடம் குறி கேட்டவர், பெற்ற பரிசு ஆகிய சில படைத்துக் கொள்ளப்பெற்றவை. மற்றைக் குறவஞ்சிகளிலும் இத்தகைய சிறு சிறு மாற்றங்கள் சில உள.

## 4. நூல்நயம்

**குறவஞ்சி**யை ஆசிரியர் அடைமொழி பலவாய் நடை பெற உரைத்து மகிழ்கிறார். தெய்வத் துறைக் குறவஞ்சி (7), புகழ்க் குறவஞ்சி (10), திருக் குறவஞ்சி (30), சிங்காரக் குற வஞ்சி (35), மைவளர் கண்ணி மாக் குறவஞ்சி (36) என்பன அவை. இதனால் ஆசிரியர் தம் குறவஞ்சிநூற் காதல் விளங் கும். மற்றும் 'சந்தக் குறவஞ்சி' (1) என்றும், 'சந்தமிகு செந்தமிழ்' (2) என்றும் 'மாப்புகழ்க் குறவஞ்சி' (5) என் றும், வரும் சாற்றுக் கவித் தொடர்களால் இந் நூலின் பா நலனும் சுவை நலனும் வெளிப்படும்.

**சிகரை : சிக்கல்** என்னும் பெயரை அரிதாகவே வழங்கு கிறார் ஆசிரியர். 'மங்குல் வந்துறையும் சிக்கல்' (8), 'நதி வளர் சிக்கல்' (8), 'நன்மணி விளையும் சிக்கல்' (21) என் பன அவை. 'மருவளர் மல்லிகை மாபுரி' (25) என ஓரிடத்து வழங்குகின்றார். எஞ்சிய இடங்களில் **சிகரை** என்பதையே சிறக்க வழங்கியுள்ளார்.

அணிமணிச் சிகரை (36), அணிமணி மாசிகரை (49), அணியார் சிகரை (2), அழகு சிகரை (35), அழகுசூழ் சிகரை (45), அழகுமா சிகரை (36), அறந்தழை சிகரை (34), காரணி சிகரை (15), கோதில் சிகரை(53), கோல வரைகொள் சிகரை (57), சம்பிரமச் சிகரை (78), சித்திரச் சிகரை (78), தவமிகு சிகரை (36), தழைவுறு சிகரை (36), திருச்சிகரை (36), திரு மலைச் சிகரை (40), துலங்குமா சிகரை (36), நளினச் சிகரை (50), நற்சிகரை (29), பண்புள சிகரை (36), பழனமிடை சூழ் சிகரை (65), பளிங்குமா சிகரை (36), பனிமலைச் சிகரை (3), பரிதி தவழ் சிகரை (14), பாரார் சிகரை (1), மணிதிகழ் சிகரை (13), மதியுலாம் சிகரை (5), மாமலைச் சிகரை (43), முதிர்ந்தசீர்ச் சிகரை (36), மோகனச் சிகரை (52), என்று **இனிய மகவைக் கொஞ்சிக் கொஞ்சி மகிழும் தாயெனச் சிகரையைக் கொஞ்சி மகிழ்கிறார் ஆசிரியர்.**

சிகரையைக் காசியுடன் ஒப்பிட்டுக் கூறவிழையும் ஆசிரி யர் அவ்வளவில் அமையாமல் அதற்கு உயர்வு காட்டுதலில் உவப்புறுகின்றார்.

> 'காசி முதலாய்க் கன்னியீ றாகப் பேசிடில் வீசம்
> பெரியமா சிகரை'

என்றும் (36),

> 'தேசமெல் லாம்புகழும் காசிதனி லதிகம் வீசம்'

என்றும் (38) ஆர்வ மீதூர அறைகின்றார்.

## வெண்ணெய்ப் பெருமான்

வெண்ணெய்ப் பெருமான் மேல் இவர் கொண்ட காதல் பெரிது. நவநீதரை, 'நவநிதி' யாக்கி மகிழ்கிறார் (61). பால் நதிக்கு அரைசு (11) என்றும், மாமலைச் சிகரர் (12) என்றும் புகல்கிறார். மதியணி பெருமையை மதியணி நவநீதர் (25), சிறு வெண்மதிபுனை நவநீதர் (5), மதி நதி சடையிற் சூடி மகிழ் வெண்ணெய் லிங்கர் (7) என்று விளக்குகிறார். அரியராம் தன்மையை, 'அடிமுடி தெரியா நின்ற அண்ணல்' (45), 'நான்முகனார் அண்ணாந்து நாள்தோறும் தேடிய நவநீதர்' (22) என்பவற்றால் குறிக்கிறார். அருணிறை கண்டத்தின் அழகில் தோய்ந்து கறைமிடற் றண்ணல் (41), கங்குலைக் கறுத்த கண்டர் (15), ஆல காலத்தையுண்ட அண்ணல் (9) என்கிறார். இன்னும், 'வெண்ணெய் அப்பர்' (19) என்றும், 'பொதுவணி வெண்ணெய் லிங்கர்' (10) என்றும், 'மல்லிகாரணியத்து அல்லிய நவநீதர்' (12) என்றும் சிறப்பிக்கிறார். இவர் தம் ஆர்வப்பெருக்கு 'நாடுமவர் பேருரும் நன்கடையாளமும்' (65) உரைக்கும் போது பொங்கித் ததும்பி வழிகின்றது (66) தலைவியாகத் தாம் நின்று தலைவன் புகழ் கேட்குமாப் போலத் ததும்புகிறார்!

## வேற்கண்ணி

வேற்கண்ணியை மிக அருகலாகவே குறிப்பிடும் ஆசிரியர் அழகு சொட்டச் சொட்டச் சுட்டுகிறார்: வேற்கண்ணி (9), வேல்நெடுங்கண்ணி (12, 36), வேலைக் கடிந்த வடிவேல் நெடுங்கண்ணி (38), பாலினு மென்மொழி (36), 'மாலுக்கு இளைய வல்லி, பாலைப் பொழிந்த சொல்லி (38) என்பவை அவை.

இனிக் கோயிலில் உள்ள மூத்த பிள்ளையார் 'சுந்தர விநாயகர்' என பெறுகிறார். அவரைப் பொருளுணர்ந்து 'அழகிய பிள்ளையார்' என அருமையாகப் பெயர் சூட்டுகிறார் (3). கோயில் கொடியாக விளங்கும் மருவளர் மல்லிகையும் (12), பங்கயங்களுறை பாலைமாநதியும் (11, 12, 36) இவரால் சிறப்பிக்கப் பெறுகின்றன. திருக்கோயில் அமைப்பும், அது தோற்றமுற்ற வரலாறும் செவ்விதின் உரைக்கப் பெறுகின்றன.

## வெண்ணெய் லிங்கம்

'மாதவத் துயர்ந்த மாமுனி வசிட்டர்
பூத லத்தினுள் புண்ணியத் தலங்களைப்
பூசிக்க எண்ணிப் பொன்னகர் இழிந்து
மாசிலாத் திங்களில் மனமகிழ்ந் தேகி
எங்கணும் சென்று இயல்புடன் சூழ்ந்துதம்
அல்லது செல்ல அமர்ந்த காலையில்
மல்லிகா ரணிய மானவித் தலத்தில்
வானவர் அறியா வளமிகு பாலை
மாநதி தன்னில் மகிழ்வுடன் மூழ்கி
நீற தணிந்து நியம முடித்து
வேறிலாச் சித்தம் வியந்தும் உவந்தும்
**பாலதிற் றிரண்ட பதமுறு வெண்ணெயை**
**மேலதாம் பீடம் மேவ வமைத்து**
**இலிங்கம தாக எழிலுருக் குறித்து**
நலங்கொள் நானம் நறுமலர் தூவிப்
போற்றிப் புகழ்ந்து பொதுநடங் கண்டு
ஏத்தி இறைஞ்சி இணையடி பணிந்து
முற்றும் பூசை முடித்து மாமுனி
**பற்றி எடுக்கப் பாதல முதலாய்ச்**
**சுற்றியே மூலம் துகளற நிற்கச்**
சித்தம் மறந்து திகைத்து மாமுனி
அத்த னேயென் றனுதினம் பணியும்
பத்திசேர் பழம்பதி பண்புள சிகரை' (36)

என்பது வெண்ணெய் லிங்கர் உருவாகிய வகையையும் சிக்கல் என்னும் பெயருண்டாகிய கதையையும் விளக்குகின்றது. இதனைத் தொடுத்துக் கோயில் அமைப்பும் விரித்துக் கூறப் பெற்றுள்ளது.

### மரபு வழி

முன்னவர் மொழியையும், அவர் மொழிபொருளையும் பொன்னே எனப் போற்றிக்கொள்ளுதல் புலவர் மரபு; அம் மரபுப்படி இவர் போற்றிச் சிறப்பிக்கிறார்.

சிகரைச் செழுமையை,

'மழலையை அணைத்து மார்பில் மந்திகள் முரசுக் கஞ்சிக்
குழலிசைக் கேட்டு மீண்டும் கோடுகள் தோறும் தாவப்
பழமுதிர் பழனம் சூழும் பனிமலைச் சிகரை'

என்கிறார். முரசு குழல் இசைகளுக்கு அஞ்சிய மந்தி கோடு தோறும் தாவும் இந் நிகழ்ச்சி,

'வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி முகில் பார்க்கும் திருவையாறே'

என்னும் **ஆளுடைய பிள்ளையார்** அருமை வாக்கினைப் பின்பற்றி எழுந்ததாம்.

**சிறைகாவல், நிறைகாவல்** என்னும் இருவகைக் காவல்களைஉரைத்து நிறைகாப்பின் சிறப்பை நிலை பெறுத்தும் **வள்ளுவர்,** 'சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை'

என்கிறார். இதனைப் போற்றித் தலைமேல் கொள்ளும் ஆசிரியர், தக்க இடத்தில் பயன்படுத்திக் கொள்கிறார்.

சிங்கியைக் கண்ட சிங்கன் அவளிடம் வினவி எதிருரை யாடும்போது தன்னைத் தானே நொந்து கொண்டவனாகச், 'சிறுக்கிமனம் காணாமல் செடிகாத்தவன் போலாச்சே சிங்கி'

என்கிறான். அதற்கு அவள்,

'சிவமறியும் என்சிந்தை **சிறைகாப்ப தேவனடா** சிங்கா' என்கிறாள். இம் மறுமொழி பொய்யாமொழியைக் கருதியது என்பது வெளிப்படை.

**கதைகள்**

இடமறிந்து சிற்சில கதைகளை எடுத்தாள்கிறார் இவர். சிங்காரவேலன், 'செங்கைவே லதனாற் சூரன் சிரமதைத் துணித்து மீண்ட' செய்தியைக் குறிக்கிறார் (8); ஆலகாலம் அமுதின்பின் தோன்றியதையும், அதனை இறைவன் உண்டதையும் பாடுகிறார்(9); வெண்ணிலா தன் நடுவு நிலைமை நீங்கியமையால் தாரகைப் பெண்டிர் வருத்தத்திற்கு ஆட்பட்டதையும், அவர்கள் தம் தந்தையாம் அத்திரி முனிவரிடம் உரைக்க அம்முனி முனிந்து கூறிய வசையால் சீரிழந்ததையும் குறிக்கிறார்(16); இராகு திங்களை உண்டு உமிழ்ந்த கதையையும் சுட்டுகிறார்(16); பழையனூர் நீலி கதையையும், கண்ணன் மண்ணுண்ட கதையையும் நினைவுறுத்துகிறார்(20); இறைவன் மேருமலையை வில்லாக்கி முப்புரம் அழித்தது, பாண்டியன் வேண்டிக்கொள்ளக் கால்மாறி யாடியது, மதுரை வேந்தனாக ஆட்சி புரிந்தது, அலைகடல்மேல் வலை வீசியது ஆகிய திருவிளையாடல்களையெல்லாம் தொகுத்து உரைக்கிறார்(49); 'கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா' என்னும் கற்புடைய காரிகையின் கதையை நயமாக எடுத்தாள்கிறார்(85).

**பழமொழிகள்**

பழமொழி பயில இவர் பாடுதலில் தேர்ந்தவர் என்பது நன்கு விளங்குகின்றது. சிங்கன் சிங்கி எதிருரையாடல் பகுதியில் மட்டும்(85) ஏழு பழமொழிகளைப் பயன்படுத்தியுள்ளார். அவை:

'சாதித் திருடன் பிறர்மீதில் நம்புவ துண்டோ?' (தான் திருடி அயல் நம்பாள்)

'மடியிற் கனமுமில்லை வழியிற் பயமுமேது'

'இல்லாது பிறவாது அள்ளாது குறையாது'

'காட்டில் எரித்த கொக்கைக் கண்டொருத்தி சொன்னாள்'

(கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா)

'குத்தமுள்ள வர்மனம் குறைகுறிப்பா வெண்ணும்'

(குற்ற முள்ள மனம் குறுகுறுக்கும்)

'சிவமறியும் என்சிந்தை'

(ஆண்டவனுக்கே வெளிச்சம்)

'புலி பசித்தால் புல்லைப் பொசிக்குமோ?'

'கள்ளனுடைய அச்சம் காடு கொள்ளாது'

**அணிநலம்**

சொல்லணியும் பொருளணியும் விளங்க இவர் பாடும் திறமை சில இடங்களில் பளிச்சிடுகின்றது.

நான்காம் பாடலில் அன்னவனே, முன்னவனே, என்னவனே, மன்னவனே என அடியிறுதியில் அமைத்து **இயைபு** என்னும் சொல்லணியை நாட்டியுள்ளார். ஐந்தாம் பாடலில் **மதி** என்னும் சொல்லைக் கொண்டு சொற்பின் வரு நிலையணியும், சொற்பொருள் பின்வரு நிலையணியும் செழும உரைத்துள்ளார்.

'சவித்த முனியுன்னைச் சாகாமல் வைத்தாரே வெண்ணிலாவே
அவித்த பயறுமுளைத்தாற் போலானாயே வெண்ணிலாவே''

என்பதில்(16) **இல்பொருள் உவமை** இயலப் படைத்துள்ளார்.

மன்மதன் தருவில் (20) புகழ்வதும் பழிப்பதுமாகிய **அங்கதச் சுவை** அமைய இசைத்துள்ளார். 'மாலின் வயிற்றில் பிறந்தாய், அந்த வயிற்றில் மண் விழுந்தது', 'மீனைக் கொடியாய்ப் பிடித்தாய்; அந்தமீன் பானைக்குள்

சென்றது', 'இருட்டைக் களிறாகக் கொண்டாய்; அவ் விருட்டு திருட்டுக்கு இடமாயிற்று' 'காற்றைத் தேராகக் கொண்டாய்; அது கடையர் தூற்றத் துணை யாகியது' என் பனபோல வருபவை சுவை பயப்பனவாம்.

மோகினி வரவு (13), சகி வரவு (24), குறவஞ்சி வரவு (32) ஆகியவற்றில் அவ்வவரை அழகுபெறச் சொல்கிறார். பிற உவமைகளை வென்ற திறத்தை விளக்குகிறார். இயைபு களை இயைக்கிறார்; இவற்றுடன் வஞ்சி வருகையில் **ஐய வணி**யைக் காட்டி மயக்கவும் செய்கிறர்.

'திங்களா வதனம் என்னத் திருநுதல் பிறையா என்னக்
கங்குலா சடிலம் என்னக் கார்முகம் புருவா என்னச்
செங்கையா பதுமம் என்னச் செவிக்குழா ளிகமா என்னக்
கொங்கைக்கோங் கரும்பு நாணக் குறவஞ்சி தோணி னாளே'

என்பது அது.

'சரசுநதிக் கதிபனம்மே
சதுரரெட்டிக் குணத்தனம்மே'

எனத் தொடங்கும் தலைவன் பெயர் அடையாளம் கூறும் பாடலில் (66) அமைந்துள்ள **சொன்மடக்கு நயம்** சுவைத்து இன்புறத் தக்கதாம்.

**சந்த விருத்தங்களை** ஆங்காங்குப் பாடிச் செல்லும் இவர், குறச்சிங்கி வரும்போது தாள இசைகளைத் தத்தளித்துப் போகுமாறு கொட்டித் தீர்த்துவிடுகிறார். எடுத்து வைக்கும் எட்டெல்லாம் தாளக் கட்டாக்கி மகிழ்கிறார். இவர்தம் இசைப் புலமைககு இவை (33-35) சான்றாகும். தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிப்புலமையும் இவர்க்கு உண்டு என்பது 34.க, சகி, குறவஞ்சி ஆகிய இருவரும் உரையாடும் வசனம் ஆகியவற்றால் விளங்கும்.

## கொச்சை வழக்கு

எடுத்துக்கொண்ட நூல்நிலை, பேசும் மாந்தர் நிலை, இசையமைதி ஆகியவற்றுக்கு ஏற்பச் சில இடங்களில் கொச்சை நடையை மேற்கொண்டுள்ளார். எய்யுறாய், எழுது, காத்தை, காயுது, செய்யுது, தருது, தூத்த, தோயுது, நோவுது, பாயுது, பெருசு, மீறுது, மெய்யாச்சு, மேயுது, வாடுறேன், வேணும் என்பன அவ்வாறு வருவன வற்றுள் சில.

**அடுக்கும் இணையும்**

சில இடங்களில், இரட்சிப்பாயே இரட்சிப்பாயே (21), சொன்னேன் சொன்னேன் (16) என்னும் அடுக்கும், பேசுவாள் ஏசுவாள் (15), மாறுவாள் தூறுவாள் (17), விளம்பினாள் தளம்பினாள் (19), ஆற்றுவாள் சாற்றுவாள் (27) என்னும் இணைச்சொல் நயங்களும் பெய்துள்ளார்.

இனி இந் நூலில் குறிக்கப் பெறும் மலைகள், ஆறுகள், நாடுகள், நகர்கள், வித்தை வகை, முத்துவகை, உணவுவகை முதலியன மிகப் பல.

**மலைகள் :** இந்திரகிரி, இந்திரசயிலம், கந்தமாதனம், கருடாத்திரி, கயிலை, கேதராசலம், சதுரகிரி, சந்திரகிரி, சூதமலை, சூராசலம், நீலகிரி, பத்திரகிரி, பவளமலை, பன்னககிரி, பாலகிரி, மகமேரு, மகேந்திரகிரி, மந்திராசலம், மேகமாவிசாலம், விந்தகிரி, வேதகிரி.

**ஆறுகள் :** அமிர்தவதி, அனுமநதி, இந்திராணி, கம்பை, கமலை, கயிலை, கருடாத்திரி, கவுதமோதகி, காளிந்தி, கெங்கை, கெண்டகி, கெவுரி, கௌதமி, சங்கநதி, சந்திரபாவை, சரசுவதி, சரயு, சிந்து, சிர்வாணி, சீதை, சேசபுரி, சோபாவதி, தீர்த்தநதி, துங்கபத்திரை, நந்தினி, நவநதி, நிவிதை, பகீரதி, பஞ்சவடி, பம்பை, பவதி, பவனாசினி, பவானி, மணிகர்ணி, மணிபத்மநதி, மந்தாகினி, யமுனை, ரூபாவதி, வர்ணி, விரசை, வேகவதி.

**நாடுகள் :** அக்கம், அங்கம், ஈழம், கர்நாடகம், கல்யாணம், கலிங்கம், குடாவு, கேகயம், கொங்கம், கொச்சி, கொல்லம், கோடம், கோசலம், சங்கம், சாவகம், சாளவம், சிங்களம், சிந்து, சீனம், சூரம், சோனகம், திரிகூடம், திவாகரம், துலுக்காணம், துளுவம், தெலுங்கம், தொட்டியம், புலிந்தம், மச்சம், மதங்கம், மராடம், மாகதம், மாத்திரம், மாளவம், மிலாக்கம், வங்கம், விதர்ப்பம், விலாடம்.

**நகர்கள் :** அயோத்தி, அருணபுரி, அவிநாசி, அழகர்கோயில், அனந்தசயனம், ஆடுதுறை, ஆயர்பாடி, ஆரூர் ஆவினன்குடி, ஆனைக்கா, இந்திரபுரி, கடல்நாகை, கதிர்காமம், கழுக்குன்றம், களம்பூர், காசி, காஞ்சி, குந்தபுரி, குமரி, குருசேத்திரம், குவளை, கொல்லாபுரி, சக்கரபுரி, சகனாதம், சந்திரபுரி, சவரிபுரி, சுவேதபுரி, செந்தில், சென்னி

மலை, சேது, சொர்ணபுரி, சோணபுரி, தர்மபுரி, திரிசிரபுரம், திருக்கடந்தை, திருக்கடையூர், திருக்குருகூர், திருப்பழனம், திருப்புகலூர், திருபுவனம், துவரை, தென்காசி, தென்னரங்கம், தேவபுரி, நீலபுரி, பஞ்சநதம், பதரிவனம், பவனாசம், பழனி, பிரபலபுரி, பிரமபுரி, பூந்துருத்தி, மதுரை, மந்திரபுரி, மயூரம், மருகல், மாவலிபுரி, முதுகுன்றம், வடமதுரை, வயலூர், வர்ணபுரி, வலஞ்சுழி, வானபுரி.

**வித்தைவகை:** அட்டாங்க யோகம், இந்திரசாலம், உச்சாடனம், தம்பனம், மோகனம், வஞ்சனம், வேதபுராண ஆகமம்.

**முத்துவகை:** கதலிமுத்து, கரிமுத்து, சங்கமுத்து, சாலி முத்து, பங்கய முத்து, பன்றிமுத்து.

**உணவுவகை:** அதிரசம், அன்னம், கன்னல்ரசம், கனிவருக்கம், சுகியன், தினைமாவு, தேன், நறுநெய், பாகு, பாயசம், புட்டு, வடை.

இவ்வாறே **பறவைகள், விலங்குகள், மரங்கள், பூக்கள், தெய்வங்கள், கருவிகள், அணிகலன்கள், அருஞ்சொற்கள்** பல வந்துள்ளன.

## 5. நூலாசிரியர்

இக் குறவஞ்சி நூலை இயற்றிய ஆசிரியர் **சொக்கலிங்கம் பிள்ளை** என்பவர். இதனை இந்நூலில் உள்ள சாற்றுக் கவிகள் அனைத்தும் குறிப்பிடுகின்றன. இவர் **சொக்க லிங்கப் புலவர்** எனப்பெறுவார் என்பதும் (6) அறியப் பெறுகிறது.

இவர் **திருவாரூரினர்** என்பதும், இவர்தம் தந்தையார் **சுப்பாப் பிள்ளை** என்பதும்.

> 'ஆரூர்ச் சொக்கலிங்கப் புலவர்' (6)
> 'சுப்பப் பிள்ளை யருள்தவத்தால் வந்த மைந்தன்' (2)
> 'சுப்பா பிள்ளையருள் குஞ்சரம்' (1)
> 'கமலை நகர் வாழும் துங்கன் தணிவில் சுப்ப பிள்ளை அருள் தவத்தால் தோன்றும் மைந்தன்' (4)

என வருவனவற்றால் விளங்கும்.

இவர்தம் ஆசிரியர் பெயரும் **சொக்கலிங்கம்** என்பதேயாம். இதனை இவர் குரு வணக்கமாக உரைக்கும், 'எஞ்ஞானங்களும் உணர்ந்த' எனத் தொடங்கும் பாடலால்

அறியலாம். அவரும் ஆரூரினரே என்பதும் அப் பாடலால் விளங்கும்.

இவரும் இவர்தம் தந்தையாரும் தாம் பிறந்த வேளாண்குடிக்கு ஏற்பக் கொடையாளராகத் திகழ்ந்தனர் என்பதைத் (2) தயாளு சுப்பப்பிள்ளை என்பதாலும், 'ஆது' லர்க்கன்ன மிடுமைந் தருவைநிகர் சொக்கலிங்கம் பிள்ளை என்பதாலும் (1)அறிய முடிகின்றது.

இவர் தம் இலக்கணப் புலமை,

'அக்கர மொழிபொருள் யாப்பணி ஐந்தும் ஆய்ந்து' (3) என்பதாலும்,

நவநீதர்பால் இவர் கொண்ட பேரன்பு,

'அருமறை புகழ்ந்திடு நவநீத நாதரை
அனுதின மனதினி னினைவோன்'' (1)

'சிவ சமையன்' (1)

'மிஞ்சிய ஞானத் துறையினில் அன்பு
மீதுற வான்று' (4)

என வருவனவற்றாலும், இந் நூலாலும் நன்கறியப் பெறும்.

இந் நூலை இவர் இயற்றுதலை விரும்பினாரும், இயற்றிய பின்னர் விரும்பிக் கேட்டு மகிழ்ந்தாருமாகக் குறிப்பிடத் தக்க நால்வர் அறியப்பெறுகின்றனர். அவர்கள் **சிவாசி ராசேந்திரன், நாராயணையர், அப்பாப் பிள்ளை, அண்ணாமலைப் பிள்ளை** என்பார். இச் செய்தியைப் பதினோராம் பாடலால் அறிகிறோம்.

சிவாசிராசேந்திரன் என்பார் தஞ்சை நாட்டை ஆட்சி புரிந்த மராட்டிய மன்னர்; சிவாசி மன்னன் வழியினர்; குறவஞ்சி முதலாய சில நூல்களை ஏற்றுப் புகழ்பெற்ற சரபோசி மன்னர் மைந்தர். சரபோசி மன்னர் கி.பி.1832-ல் இயற்கை எய்திய பின்னர் இவர் ஆட்சிக்கு வந்தார். அப்பொழுது நாடு ஆங்கில ஆட்சியின்கீழ் இருந்தது என்பது எவரும் அறிந்ததே. இதனை,

'சீர்மிகு தஞ்சை சிவாசிரா சேந்திரன்
பேரணி செங்கோல் பெருகிய நாளில்
இங்கிலீசு தேசத் திரோப்பு மன்னர்
அங்குடை ஒன்றில் அரசாளு நாளில்'

என்கிறார் ஆசிரியர்(11).

சிவாசியை அடுத்துக் கூறப்பெற்றுள்ள மூவரும் நூலாசிரியர்க்கு நட்புக் கிழமையும் உதவும் மேன்மையும் பூண்டிருந்தவர் ஆகலாம். அதனால் அம் மூவரையும் சிறப்பிக்கு முகத்தான்,

'நாரணப் பையர் வயலேரிக் கட்டளை'

'அப்பாப் பிள்ளை சேத்தி'

'அண்ணாமலைப் பிள்ளை ஆயக்காரன் கட்டளை' எனக் குறிப்பிடுகிறார். இம் மூவருடன்,

**'பொன்னையாப் பிள்ளை** வயல் பூலாங்குத்து' என்றும் ஒருவரை இணைத்துக் கொள்கிறார். ஆசிரியர்தம் நன்றிக் குணத்திற்குச் சான்றாவது இது.

சிவாசி மன்னர் காலத்தில் இருந்து ஆசிரியர் இந்நூலைப் பாடினார். ஆகலின், இவர் காலமும் அதுவேயாம். ஆதலால், ஆசிரியர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராம்.

இனி, இந் நூல் எழுதி முடிக்கப் பெற்ற காலம் இதன் இறுதி ஏட்டில், 'பரிதாபி ஸூ தை மீ 2-ந்தேதி புதவாரம் எழுதி முடிந்தது' என்றுள்ள குறிப்பால் அது கி.பி. 1852ஆம் ஆண்டு என்று தெளிவாகின்றது. மற்றும் ''திருவாரூர் ஸ்கூல்மாஸ்டர் சொக்கலிங்கம் பிள்ளை'' என்றுள்ள குறிப்பால் நூலாசிரியர் போதகாசிரியப் பணி பூண்டிருந்தவர் என்பதும் புலப்படும். அவர்தம் இனிய தொண்டு என்றும் வாழ்க!

செல்வம், திருநகர்,
மதுரை-6
24-5-80

தமிழ்த் தொண்டன்,
**இரா. இளங்குமரன்,**
பதிப்பாசிரியன்

## சாற்றுக் கவிகள்

## நவநீதேசுவர சுவாமி குறவஞ்சி

திரிசிரபுரம் தமிழ் உவாத்தியாயர் கவிகற்பக சிந்தாமணி
**முத்துசாமி பிள்ளையவர்கள்** பாடிய
சாற்றுக்கவி.

### பதினாலு சீரடி ஆசிரிய விருத்தம்

1. திருமாது கலைமாது புகழும் புயாசலச்
செல்வனெழில் குவளை மார்பன்
செந்தமிழ்க் குதவுவோன் பந்துகட் கன்புளோன்
செய்ய**திரு வாரூ ரில்**வாழ்
குருநாத னைப்பணிந் திடு**சுப்பா பிள்ளை**யருள்
குஞ்சர முலகை யாளுங்
கொற்றவர் துதிக்குமணி ரத்தினங் கங்கைகுல
கோத்திரன் சிவச மையன்
அருமறை புகழ்ந்திடு நவநீத நாதரை
அனுதின மனதி னினைவோன்
ஆகம புராணங்கள் கேட்டிட விருப்புளோன்
ஆதுலர்க் கன்ன மிடுமைந்
தருவைநிகர் **சொக்கலிங் கம்பிள்ளை** பாடிய
சந்தக்குற வஞ்சி தன்னைத்
தரணியோர் நாவலர்கள் முனிவோர்கள் மறையோர்கள்
தாங்களிப் புற்ற னர்களே.

---

**அருங்குறிப்புரை**

கங்கைகுல கோத்திரன் - வேளாளன்; ஆதுலர் - வறியர்.

ஐந்தரு - கற்பகம், சந்தானம், அரிசந்தானம், பாரிசாதம், மந்தாரம்; அள்ளித் தரும் கையின் ஐந்து விரலுக்கு ஏற்ப ஐந்தருவைக் குறித்தார்.

சந்தக் குறவஞ்சி - இசைப்பாக்களால் அமைந்த அழகிய குறவஞ்சி நூல்.

### எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

2. நந்துலவு சிகரைநகர் தன்னில் வாழும்
நவநீத நாதர்குற வஞ்சி தன்னைச்
சந்தமிகு செந்தமிழால் இன்ப மாகத்
தயாளு**சுப்பப் பிள்ளை**யருள் தவத்தால் வந்த
மைந்தனே புலவர்தமக் கமுத மீயும்
மாதவன்போல் கவிராசர் புவிரா சர்க்கும்
சிந்தையுநற் செவியுமிகக் களிப்ப தாகச்
செய்வித்தான் **சொக்கலிங்க** தீரன் தானே.

திருச்சிராப்பள்ளி லயிட்டின்பந்திரி முப்பத்தொன்றாவது
ரெசிமெண்டு செனரோடப் பட்டாளம் 1வது கம்பெனி
நாயக்கு-கவிகேச ரங்குச பேதக வச்சிர குடார மறுமானிய
**ஸ்ரீசுப்பிரமணிய பிள்ளை**யவர்கள் சாற்றிய

### எழுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்

3. அக்கர மொழிபொருள் யாப்பணி ஐந்துப்
ஆய்ந்ததன் வழியினில் வரவாய்
அக்கர வணியி மயமதிச் சடிலர்
அம்புய மலரடி மகிழ
அக்கரஞ் சிகரைக் குறவஞ்சி பாவாய்
அறைந்தனன் ஐந்தரு வளர்மா
அக்கரஞ் **சொக்க லிங்கபூ பாலன்**
அவனியிற் கலிவளர் அரசே.

---

2. நந்து - சங்குப்பூச்சி, சிப்பி; சிகரை - சிக்கல்; புலவர் - புலவரும் தேவரும் (இரட்டுறல்).

3. அக்கரம் - எழுத்து; மொழி - சொல்; வழியினில் வரவாய் - மரபில் வந்ததாய்; அக்கு அரவு அணி இமயமதிச் சடிலர் - எலும்பு பாம்பு களை அணிகலமாகக் கொண்டு பனிமதியைச் சடையில் சூடியவர்; அம்புயம் - தாமரை; அக்கர்- முக்கண்ணர், சிவபெருமான்; அக்கரம் - அழியாத் தன்மை. அஃதாவது புகழ்: ‘புகழல்லால் பொன் றாது நிற்பதொன்றில்’ — திருக். அக்கரத்திற்கு அழியாமைப் பொருள் ‘கல்மேல் எழுத்திற்கு நேர்’ என்பதால் அறிக.

திரிசிரபுரம் தமிழ் உவாத்தியாயர் செந்தமிழ்ப்புலவர் சிகாமணி **தெட்சணாமூர்த்தி பிள்ளை** பாடிய

### எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

4. கொஞ்சிய மொழியார் ஆசையிற் கனிந்த
கோதறு சுருதிக ளாய்ந்து
மிஞ்சிய ஞானத் துறையினி லன்பு
மீதுற வான்று சிகரை
மஞ்சுறு குவடு நவநீத நாதர்
மலரடி மகிழ்வுறக் குறவர்
வஞ்சிபா விணைத்துச் **சொக்கலிங் கேந்த்ரன்**
வாணர்கட் குதவினன் மாதோ.

திரிசிரபுரம் தமிழ் உவாத்தியாயர் திருநாவலர் சிகாமணி **கறுப்பண்ண பிள்ளை** யவர்கள் சாற்றிய

### எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

5. கந்தமலி சிகரைநவ நீத வெம்மான்
கழலிணைக்கோர் குறவஞ்சி கருதி அன்பாய்த்
தந்தனன் பாவாணர் உகந்துய வானந்
தந்தான்கொள வேதநெறி தவறாப் போத
சந்தமிகு கமலைநகர் வாழுந் துங்கன்
தணிவில்சுப்ப பிள்ளையரு டவத்தால் தோன்று
மைந்தனதி பொறைபூமன் **சொக்க லிங்க**
**வல்லவனாங் கவிராச மன்னன்** தானே.

---

4. கோது அறு - குற்றமற்ற; சுருதிகள்- வேதங்கள், நூல்கள்; ஆன்று - நிறைந்து, அகன்று; மஞ்சுறு குவடு - முகில் தவழும் மலை; வாணர் - கவிவாணர், வாழ்நர் என்பதன் மரூஉ.

5. கந்தம் - மணம்; கழல் - திருவடி; உகந்து உய- விரும்பி உய்யவும்; ஆனந்தந்தான் கொள-மகிழவும்; கமலைநகர் - திருவாரூர்; துங்கன் - சிறந்தோன்; போதமும் சந்தமும் மிகுந்தவனும், கமலையில் வாழ்பவனுமாகிய சுப்ப பிள்ளை என்க. அதிபொறை - மிகுந்த பொறுமை; பூமன் - பூமான்.

தருமபுர ஆதீனம் காஞ்சிமடம்—காஞ்சிபுரங்

**கந்தப்பத் தம்பிரானவர்கள்** பாடிய

**அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

**7.** மாயிருஞா லம்புகழு மலையமுனி தனைநிகர்த்து
மதிப்புற் றோங்கும்

தேய மெலாம் சிறந்தாரூர்ச் **சொக்கலிங்கப் புலவர்** குற
வஞ்சி தன்னைத்

தூயவர்கள் திறங்கண்டு களிகொண்டு வாய்விண்டு
சொல்ல வென்றால்

ஆயிரநாப் போதாதென் றாதிசேட னும்பிலத்துள்
அடங்கி னாளே

---

7. மாயிரு - மிகப் பெரிய; ஞாலம் - உலகம்; மலையமுனிதனை நிகர்த்து - அகத்திய முனிவனுக்கு ஒப்பாய்; ஆரூர் - திருவாரூர்; விண்டு சொல்ல - விரித்துச் சொல்ல; பிலம் - பாதலம். ‘ஆயிரநாப் போதாதென ஆதிசேடனும் பிலத்துள் அடங்கினான்; ஒரு நாவால் யான் விண்டு சொல்வனோ’ என்க.

## சிக்கல்

# நவநீதேசுவரசுவாமி குறவஞ்சி

### காப்பு

1. சீர்மா கரியின் செழுமா முகவா
தேர்மா மகுடந் திகழும் பகவா
காரா குவிணை கழல்பா வியவா
பாரார் சிகரைப் பதிமே வியவா.

2. எழுத்து நிறைத்த மதக்களிறே
எக்கா லெவர்க்கு நாயகமே
வழுத்தும் அடியார் தம்வினையை
வலக்கை மழுவாற் றடுப்பவனே
பழுத்த கருணைப் பகவனரும்
பழைய மகவே பரந்தவக
டழுத்தி யசைத்த ஐங்கரனே
அணியார் சிகரை அமர்ந்தவனே.

---

1. முகவா-முகத்தை யுடையாய்; தேர் மா மகுடம்-சிறந்த கலைத் திறத்தால் செய்யப் பெற்ற பெரிய முடி; அம்பகவா-எழுச்சி யுடையாய்; நெற்றிக் கண்ணுடையாய் என்றுமாம். கார் ஆகு-கரிய பெருச்சாளி; இணைகழல்-இரண்டு திருவடி; பாவியவா-வணங்கப் பெற்றவனே, மேவியவா - வீற்றிருப்பவனே.

2. எழுத்து நிறைத்த மதக் களிறு-பாரதக் கதையை வியாசர் கூற மேருமலை ஏடாகவும் தன் வலக் கொம்பை எழுத்தாணியாகவும் கொண்டு எழுதிய யானை.

'நீடாழி உலகத்து மறைநாலோ டைந்தென்று
நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதம்
சொன்னநாள்
ஏடாக வடமேரு வெற்பாக அங்கூர் எழுத்தாணிதன்
கோடாக எழுதும் பிரான்'

என்றார் வில்லியார். மழு - எரி இரும்பு, பரசு; பகவான்-சிவ பெருமான்; பழையமகவு-மூத்தவன்; அகடு-வயிறு.

## நலத்து விநாயகர் துதி

3. மழலையை அணைந்து மார்பில்
மந்திகள் முரசுக் கஞ்சிக்

குழலிசை கேட்டு மீண்டு
கோடுகள் தோறும் தாவப்

பழமுதிர் பழனஞ் சூழும்
பனிமலைச் சிகரை வாழும்

அழகிய பிள்ளை யாரின்
அடியிணை முடிமேல் வைப்பாம்.

## விருத்தம்—விநாயகர் துதி

4. தேனைத் திருடும் அளியன் னவனே
மானைப் புணர்வேல் மகிழ்முன் னவனே
பானைக் ககடு பரிதென் னவனே
ஆனை முகத்னதங் கரமன் னவனே.

---

3. மழலை - குட்டி; கோடு-மரக்கிளை, பழமை - வயல் நிலம்;

'வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர
மழையென் றஞ்சிச்
சிலமந்திய லமந்து மரமேறி முகில் பார்க்கும்'

என்னும் ஐயாற்றுத் தேவாரம் இவண் கருதத் தக்கது.

4. 'தேனைத் திருடும் அளி' என்றது 'உள்ளம் கவர் கள்வன்' போன்றது; அளி-வண்டு; ஈ. மான்-வள்ளி; வேல்-வேலன்; முன்னவன் - மூத்தவன்; அகடு-வயிறு; பானைக்கு அகடு பரிது - பானையில் பெரிய வயிறு; என்னவன்-என்று சொல்லத் தக்கவன்; அன்னவன், முன்னவன், என்னவன், மன்னவன் என்பவை இயைபு என்னும் அழகு.

## அவையடக்கம்

**5.** மதியுலாஞ் சிகரைபத்தி மருவுமா சிறுவெண்
மதிபுனை நவநீதர் மாபுகழ்க் குறவஞ்சி
மதியிலென் னுரைமகிழ்ந் ததன்கோள் களைப்பொறுத்து
மதியுளார் இகழாது நேர்ந்தருள்வர் மாநிலத்தே.

## குரு தோத்திரம்

**6.** எஞ்ஞானங் களுமுணர்ந்த எழிற்குரவர் களிலரசாம்
அஞ்ஞானந் தனையகற்றும்* அருட்சுடராம் **ஆரூர்வாழ்**
மெய்ஞ்ஞான தேசிகனா மேருமர பதனில்வரு
சுஞ்ஞான குரு**சொக்க லிங்கமுகில்** பதம்போற்றி.

**7.** மதிநதி சடையிற் சூடி மகிழ்வெண்ணெய் லிங்கர் மீதில்
துதிமிகுந் தோதுந் தெய்வத் துறைக்குற வஞ்சி பாட
விதிமுதல் மாலும் தேவர் விஞ்சையர் முனிவர்போற்றும்
கதிகரி முகத்தோன் ஐந்து கரத்தவன் காப்புத் தானே.

**8.** பங்கயா சனனும் தேவர் பண்ணவர் முனிவர் போற்றச்
செங்கைவே லதனாற் சூரன் சிரமதைத் துணித்து மீண்டு
மங்குல்வந் துறையுஞ் சிக்கல் மாமலை யதனில் வாழும்
**சிங்கார வேலன்** பாதம் சிந்தையில் இருப்ப தாமே.

---

5. பத்தி மருவு-பத்தி கலந்த; மதியில் என் உரை-அறிவிலாத என் உரை; கோள் - குற்றம் குறை; நேர்ந்தருள்வர்-ஏற்றுக்கொள்வர்; மதி என்னும் சொல் பல்கால் வரச் சொல்லியது ஒரு நயம் கருதுக.

6. குரவர் - ஆசிரியர்; அஞ்ஞானம் இருள் ஆகலின் அதனை அகற்றும் ஆசான் சுடர் எனப் பெற்றார். வெதுப்பும் சுடரின் வேறுபாடு தோன்ற அருட்சுடர் என்றார்; மேரு மரபு - திருமூலர் முதலிய சித்தர் மரபு; சுஞ்ஞானம் - பரம ஞானம்.

7. விதிமுதல் - நான்முகன்; கதி - அடைக்கலப் பொருளாகிய.

*பாடம் - அருட்கடலாம்.

8. பங்கய ஆசனன்-நான்முகன்; பண்ணவர்-கடவுளர், மங்குல்-மேகம்.

**9.** வேலையின் அமுதின் பின்னர் விளைந்துமுன் னமர ரோடு
மாலையு மால்செய் தார்த்து மருட்டியே திரண்டு நின்ற
ஆலகா லத்தை யுண்ட அண்ணலாம் **வெண்ணெய் லிங்கர்**
பாலதில் உறை**வேற் கண்ணி** பதமலர் பணிவ தாமே.

**10.** பொதுநட மாடப் புத்தேன் புரந்தரன் முதலோர் போற்றும்
பொதுவணி வெண்ணெய் லிங்கர் புகழ்க்குற வஞ்சி பாடப்
பதுமவா சனத்தில் மேவும் பகுமறைக் கிளவி செய்ய
மதுமலர்த் **தெய்வ வாணி** மலர்ப்பதம் பணிவ தாமே.

---

9. வேலையின் அமுதின் - பாற்கடலில் தோன்றிய அமுதிற்கு; அமரர்-தேவர்; மாலையும் மால் செய்து - திருமாலையும் மயங்குமாறு செய்து; ஆர்த்து - கட்டி; மருட்டி-மயக்கி; ஆலகாலம்-நஞ்சு, பாம்பினால் கக்கப் பெற்றது; பாலதில்-பாகத்தில்; வெண்ணெய் லிங்கர், வேற்கண்ணி-தலத்து இறைவன் இறைவி பெயர்கள். பாதமலர்-திருவடித் தாமரை.

10. பொதுநடம் - பொதுவாகிய ஐந்து திருமன்றங்களில் இறைவன் திருக் கூத்தாட; அவை ஆலங்காடு, திருச்சிற்றம்பலம், மதுரை, திருநெல்வேலி, திருக்குற்றாலம் என்பன; அவற்றின் பொது முறையே இரத்தினசபை, பொற்சபை, வெள்ளி சபை, தாமிரசபை, சித்திரை சபை என்பன. புத்தேள்-தேவர்; புரந்தரன்-இந்திரன்; பொது-அனைவரும் போற்றும் பொதுப் புகழ்; அணி-மாலையாக அணிந்த; பதும வாசனம்-தாமரை இருக்கை; பகுமறைக் கிளவி-பலவாகப் பகுக்கப் பெற்ற திருமறைச் சொல்லி, கிளவி-சொல்; மதுமலர்-தேன் ததும்பும் மலர்; 'செய்ய' என்பதைத் 'தெய்வவாணி' யுடன் இணைக்க; தெய்வாணி-கலைமகள்.

### அகவல்

**11.** சீர்மிகு தஞ்சை **சிவாசிரா சேந்திரன்**
பேரணி செங்கோல் பெருகிய நாளில்
இங்கிலீசு தேசத் தீரோப்பு மன்னர்
அங்குடை யொன்றில் அரசாளு நாளில்
தெய்வத் தலங்கள் தீர்க்கமாய் விளங்க
ஐவர்பஞ் சாயத் தாகிய நாளில்
இராதை மங்கலத் தியல்புடன் விளங்கும்
**நாரா யணையர்** நன்மறை யவரும்,
மணிமலைச் சிகரை மாநகர் உறையும்
அணிவளர் சைவன் **அப்பாப் பிள்ளையும்**
நதிவளர் சிக்கல் நாட்டினில் மிக்க
அதிமதி யூகன்**அண் ணாமலைப் பிள்ளையும்**
நால்வரு முவந்து நன்குள மகிழப்
பால்நதிக் கரைசின் பத்தியே மிகுந்து
நாவலர் மகிழ நன்மொழி திகழ
வாழ்**சொக்க லிங்கம்** ஏத்தின பனுவல்.

### தோடையம்

**12.** பாவலர் புகழப் பண்புடன் நிகழ
இயலிசை சேரும் எழிற்**குற வஞ்சி**—செயசெய
வெண்ணெய்லிங் கேசர் சிகரை வாசர்—செயசெய
வேல்நெடுங் கண்ணி சமேத ஈசா—செயசெய
மல்லி காரணி யல்லிய நவநீதா—ஆஆ! செயசெய

---

11. ஆங்கிலவர் ஆட்சிக்கு உட்பட்டுக் குறுநில மன்னனாகத் தஞ்சைப் பகுதியை ஆட்சி புரிந்தவன் சிவாசிராசேந்திரன் என்க. மராட்டிய மன்னன் சிவாசியின் வழிமுறையினர் ஆட்சியில் தஞ்சைப் பகுதி இருந்த வரலாற்றைக் கருதுக. அம் குடை-அழகிய குடை, அஃதாவது ஆட்சி; தீர்க்கம் - முழுமை; பால்நதி - சிக்கல் பக்கம் ஓடும் ஆறு; பால்நதிக்கு அரைசின் பத்தி-வெண்ணெய்ப் பெருமான்மேல் கொண்ட பேரன்பு; வாழ்சொக்கலிங்கம் என்பதை மகிழ வாழ் சொக்கலிங்கம், திகழவாழ் சொக்கலிங்கம் என இயைக்க; ஏத்தின - புகழ்ந்த; இயற்றப்பெற்ற என்றுமாம். பனுவல்-நூல்.

12. தோடையம் - நாடகச் சிறப்புப் பாயிரக் கவி; இது தொகுதியாகச் சேர்ந்து பாடப் பெறும் வாழ்த்தாக அமையும்; தோடு - கூட்டம், தொகுதி. நாடகத் தொடக்கத்தில் பாடப் பெறும் 'குழுஉப்பாட்டு' (கோரசு) என்க; வாசர்-வாழ்பவர்; வேல்நெடுங்கண்ணி சமேத ஈசர்-வேற்கண்ணியுடனாகிய இறைவர்; மல்லிக ஆரணி-சிகரையின் ஒரு பெயர்; கோயில் மரங்களுள்-தல விருட்சங்களுள், - ஒன்று மல்லிகை, மற்றொன்று அரசு; அல்லியம் - கூத்து, நவநீதம் - வெண்ணெய்.

(1) மங்கள வாசா மாமுனி பணியீசா
வேற்கணி பங்கா வெண்ணெய்லிங் கேசா—மங்களம்
வெண்ணெய் லிங்கர்க்கு மங்களம்—ஆஆ! மங்களம்
ஆஆ! செயசெய

(2) சிங்கார வேலர்தனைச் சிறந்தீன்ற போதா
பங்கயங் களுறை பாலைமா நதிக்கு நாதா—ஆஆ மங்களம்
செயசெய மங்களம்

(3) மருவளர் மல்லிகைக்கும் மாமலைச் சிகரர்க்கும்
குருமுனி வசிட்டர்க்கும் குலமுனி அறுவர்க்கும்—மங்களம்

(4) மைந்நிற மயிலுக்கும் சிங்கார வேலர்க்கும்
செயமங்களம் ஆஆ! மங்களம்.

## விருத்தம்

**13.** மதிதவழ் மாளி சூழ மணிதிகழ் சிகரை ஓங்கு
பதியுறை வெண்ணெய் லிங்கர் பவனிகண் டாசை
கொண்டே
கதிமிகு நடன கீத கானபே தங்கள் கற்ற
துதிபதி மெச்சு மோகத் துரித**மோகினி**வந் **தாளே.**

---

(1) மாமுனி - வசிட்டர்; இறைவனை வழிபடுதற்கென வசிட்டர் அமைத்த இலிங்கமே வெண்ணெய் லிங்கம் என்பது கோயில் வரலாறு. சிக்கலுக்கு அமைந்துள்ள மற்றொரு பெயர் வசிட்டாச்சிரமம் என்பதையும் கருதுக.

(2) போதன் - இறைவன்; பாலைமாநதி - பால்நதி.

(3) மரு-மணம்; மாமலைச் சிகரர் - மலைமேல் வீற்றிருக்கும் வெண்ணெய்ப் பெருமான், குருமுனி - குருவாகிய முனிவர், அறுவர் - வசிட்டர் நீங்கிய ஆறு முனிவர்; அவராவார்; அத்திரி, ஆங்கீரசன், கௌதமன், சமதக்கினி, பரத்துவாசன், விசுவாமித்திரன்; பிறவாறும் கூறுவர்.

(4) மைந்நிறமயில் - தேவயானை.

13. மாளி - மாளிகை; இவ்வாறே மேலும் கூறுவார் (30); பவனி-திருவுலா, மோகினி இசையும் கூத்தும் வல்லவள் என்பதை, ‘கதிமிகு நடன கீத கான பேதங்கள் கற்ற’ என்றார். ஆடல் பாடல் அழகு என்னும் மூன்றிலும் குறையாதவள் என்று மாதவியை இளங்கோவடிகள் குறிப்பதை ஒப்பு நோக்குக (சிலம்பு 3:8) துரிதம் - விரைவு; மெய்ப் பாடு என்னும் பாவமுமாம்.

தரு சுருட்டி ஆதிதாளம்

14. துரித மோகினியும் வந்தாள்-துல்லிய மாகத்
துரித மோகினியும் வந்தாள்
பரிதிதவழ் சிகரைக் குரிய வெண்ணெய் லிங்கேசர்
பிரிய மிகவும் நாடும்—துரித.

(1) பிடிகள் நடையி லஞ்சவே—கடிகமழு
முடியில் அளிகள் துஞ்சவே
துடியிடையை மின்கெஞ்ச நடித்துத்
தனத தித்தைத் தாவென—துரித.

(2) மதன ரதியார் எனவே மனமகிழ்ந்து
வதன மதிபா ரெனவே பதன மடவார்
விதனம் பெறாமல் சொன்னசுதின மின்றைக்
காமென
தத்தனந் தனங்கு தைததாவென—துரித.

(3) மங்கையர் வந்து பணியக்
கொங்கைகள் இரண்டும்
பொங்கிக் கச்சதை முனியச்
செங்கண் சேலைத் துணிய
அங்கம் பொன்னே குனிய
சங்கங் கணைக்காலெனத்
தொங்கத் திங்கத் தாதிங்கண தோமென—துரித.

---

14. துல்லியம்-ஒருப்பட்ட உள்ளம்; நாடும்-விரும்பும்.

(1) பிடி-பெண்யானை; கடி-மணம்; அளிகள் துஞ்ச-வண்டுகள் துயில; துடியிடை - உடுக்குப் போன்ற இடுப்பு; அவள் வரும் போதே தாளகதியில் வந்தாள் என்க. உவமிப்பார் உவமையை வென்றவள் மோகினி என்பதைப் பிடிகள் அஞ்ச, மின் கெஞ்ச என்பவற்றால் விளக்கினார். இவை நடைக்கும் இடைக்கும்; மொழிக்கும் சுளிகள் துஞ்சுதல் குறித்தார்.

(2) மதன ரதியார் - மன்மதனுக்குரிய ரதி தேவியார்; காமக் கலைவல்ல ரதிதேவியாருமாம்; வதனமதி-முகமாகிய முழுமதியம்; பதனமடவார்-மெல்லிய மகளிர்; விதனம் - கவலை; சுதினம்-நன்னாள்.

(3) கச்சு - மார்புக் கட்டு; முனிய-அடங்காது திமிர; சேல் - கெண்டைமீன்; துணிய - ஒப்பென உரைக்க; வெருண்டோடச் செய்ய என்றுமாம்; அங்கம் - உடல் நிறம்; குனிய - நாணித் தாழ; சங்கம் - சங்கு.

## விருத்தம்

**15.** காரணி சிகரை வாழும் கங்குலைக் கறுத்த கண்டர்
தாரணி வெண்ணெய் லிங்கர் தனதுமோ கத்தி னாலே
சீரணி மணிக ளோடு செருக்கிய மையல் பூண்டு
பேரணி மதியைக் கண்டு பேசுவாள் ஏசு வாளே.

## வெண்ணிலாத் தரு

**16.** அன்னைபெற் றென்னையு முன்னைக்காய வைத்தாளே
வெண்ணிலாவே
சொன்னேன்சொன் னேன்இன்னஞ் சிலநேரம்
போகட்டும் வெண்ணிலாவே

(1) தாரகை யால்முன்னே சீரிப் படியழிந்தாய்
வெண்ணிலாவே
யாரையும் அநியாயம் நேராகச் செயலாமோ
வெண்ணிலாவே

(2) ஓரைக்கோள் களிலும்தன் பேரேபிர பலமாகச்சே
வெண்ணிலாவே
தாரணி யில்மாதர் தனித்தால்நீ தாயாதி
வெண்ணிலாவே

(3) உன்னை யுண்ட ராகுவு முமிழ்ந்தானுடல்கறுத்து
வெண்ணிலாவே
இன்னமு முலகினி லுனக்கீ டொருவருண்டோ
வெண்ணிலாவே

---

15. கார்-மேகம்; கங்குலைக் கறுத்த கண்டர் - மையிருட்டினும் கரிய கண்டத்தையுடையவர் ; தார்-மாலை, 'பேரணி....ஏசுவாளே' - இது மதிகண்டு புலம்பல்.

16. காயவைத்தல்-சுடுமாறு வாழவைத்தல்.

(1) தாரகை ; விண்மீன்கள்; விண்மீன்களாகிய மனைவியர்; அத்திரி முனிவர் மகளிருள் 27 பேரை வெண்ணிலா மணந்து உரோகிணிமேல் தனிப் பற்றுச் செலுத்தியமையால் முனிவர் சாபம் பெற்றது குறித்தது. சீர் இழந்தல் - வளர்தலும் தேய்தலும், மறைதலும் ஆகியவை.

(2) ஓரை - இலக்கினம்; தாயாதி - பங்காளி இவண் தாயாதித்தனம் உடையவன் என்பது குறிப்பு; தாயாதித்தனமாவது எதிர்ப்பும் எரிச்சலும்.

(3) 'உடல் கறுத்து உமிழ்ந்தான்' என்க.

(4) ஒன்பது கோள்களில் உன்பலம் மேலாமே
வெண்ணிலாவே
என்பாவங் கொள்ளநீ யிருந்துவிண்ணி லெழுந்தாய்
வெண்ணிலாவே

(5) கீற்றுக் கீற்றாய்க் கிழிந்தாய் பதினாலாய்
வெண்ணிலாவே
தோற்றும் உருவுனக்குத் துணுக்கொன்றில் நின்றதே
வெண்ணிலாவே

(6) சவித்த முனியுன்னைச் சாகாமல் வைத்தாரே
வெண்ணிலாவே
அவித்த பயறுமுளைத் தாப்போ லானாயே
வெண்ணிலாவே

(7) சிகரை வெண்ணெய் லிங்கேசர் சேர்ந்தெனை
அணைவார் வெண்ணிலாவே
நகரிலுனைக் கண்டபேர் நாளை நகைப்பர்
சொன்னேன் வெண்ணிலாவே.

## விருத்தம்

**17.** சந்திரன் தன்னால் வாதை சகித்திலாள் மோகி னிப்பெண்
சிந்தையு மிகவெ தும்பிச் சிகரைவாழ் வெண்ணெய் லிங்கர்
தந்திடு மைய லாலே தயங்கிய வேளை தன்னில்
மந்தமா ருதத்தைக் கண்டு மாறுவாள் தூறு வாளே.

---

(4) பதினான்கு நாள் வளர்தலும், பதினான்கு நாள் தேய்தலும் கருதியது; ஒரு நாள் வடிவு ஒரு துண்டு எனக் கொள்க.

(5) சவித்த - சபித்த; முனி - அத்திரி; அவித்த பயறு முளையாது; அதனைக் காட்டிடியது இல்பொருள் உவமை.

(6) தோற்றார்க்கு நகைப்புக் கிட்டும் ஆகலின் 'நகரிலுனைக் கண்டபேர் நாளை நகைப்பர்' என்றாள். 'நான் வெல்வேன்' என்பது குறிப்பு.

17. மந்த மாருதம் - இளம் தென்றல்; மாறுவாள் - பகைப்பாள்; தூறுவாள் - தூற்றுவாள்.

## தென்றல்—தரு

**18.** தென்மலை தனில்வாழும் தென்றலே—உன்றன்
நன்மனை நான்தானோ தென்றலே.

(1) பொதியா சலத்தில்வந்த தென்றலே—உன்றன்
பதியும் நான்தானோ தென்றலே.

(2) அலையில் புரண்டுவரு தென்றலே—இந்த
கலையைநீ எங்குக்கற்றாய் தென்றலே.

(3) சந்தனச் சோலைவாழ் தென்றலே—இந்த
விந்தைநீ கற்றதென்னே தென்றலே.

(4) அலர்தளிர் களிலுறையும் தென்றலே—நீயும்
சிலர்பாவம் கொள்வ தென்னே தென்றலே.

(5) தாமரை மேலுலவு தென்றலே—நீயும்
காமனுக் கேதுறவு தென்றலே.

(6) நவநீதர் எனைச்சேர்வார் தென்றலே—நீயும்
பவனன்முன் னெலியாவாய் தென்றலே.

## விருத்தம்

**19.** தென்றலைத் தூறிக் கூறித் திகைத்துமோ கினியும் நின்றாள்
அண்டர்நா யகனாம் வெண்ணெ யப்பர்தன் மயலி னாலே
கண்டனள் **காம வேளைக்** கடிமலர்க் கணைகள் தூவ
விண்டனள் பலவாய்ச் சிந்தை விளம்பினாள் தளம்பி னாளே.

---

18. தென்மலை - பொதிய மலை; மனை- இருப்பிடம்.

(1) பதி-இடம்.

(2) கலை - புரண்டுவரும் கலை, புரட்டி வருத்தும் கலை.

(3) விந்தை - தனித்திருப்பாரைத் துன் புறுத்தும் வியப்பான செயல்; விந்தை, வித்தை யுமாம்.

(4) அலர்-மலர்.

(5) பவனன் - பாம்பு, பாம்பின் முன் எலி, 'ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை நாகம் உயிர்ப்பக் கெடும்'—திருக்குறள்

18. இவை தென்றலை முனிதல்.

19. காமவேள் - மன்மதன்; மன்மதன் ஏவும் மலர்க் கணைகள்; தாமரை, மா, அசோகு, முல்லை, நீலம். விண்டனள்-வெதும்பிக் கூறினாள்: தளம்பினாள் - நிலைகுலைந்தாள்.

## மன்மதன் தரு

**20.** நேரே யெனைநின் றெய்யுறாய் மன்மதா—ஒரு
நீலி கதை அறியாயோ?

(1) மாலின் வயிற்றில் பிறந்தாய் அந்த வயிற்றில்
மண்விழுந்தது காணாயோ?

(2) மீனைக் கொடியாப் பிடித்தாய் அதுவும்சில
பானைக்குள் மேவிற் றையையோ!

(3) இருட்டைக் களிறாய் ஏறினாய் அதுவும்பல
திருட்டுக் கிடம தாயிற்றே.

(4) காத்தைத் தேராக ஊர்ந்தாய்—அதுவும் நெல்லைத்
தூத்தக் கடையர்கைக் கொண்டார்.

(5) திங்கட் குடைபிடித்தனை அமாவாசை
தங்கக் கலையொன் றாயிற்றே.

(6) பூவைப் பாணமாய்த் தொடுத்தாய்—அதுவும்பல
காவுகள் அதனில் மேவிற்றே.

(7) அணைவார் வெண்ணெய் லிங்கரெனை நீயப்போது
பணிவாய் தலைகுனிந்துமே.

---

20. எய்யுறாய் - எய்கிறாய்; நீலி - பழையனூர் நீலி; 'உன்னைப் பழிவாங்குவேன்' என்றது இது.

(1) மால் - திருமால்; காமன் மால்மகன் என்பது கதை; வயிற்றில் மண்விழுதல் என்பது வசை; கண்ணன் மண்ணுண்ட கதையை உட்கொண்ட செய்தி இது.

(2) மன்மதன்கொடி மீன்கொடி; பானைக்குள் மேவல் - அவித்தல்.

(3) மன்மதன் ஊர்தி இருளாகிய யானை; களவுக்குக் காரிருட்பொழுது வாய்ப்பானது என்பது கருத்து. இஃது அப்பொழுதின் சிறுமை உரைத்தது.

(4) மன்மதன் தேர் காற்று; காற்றைக் காத்து என்றும், தூற்றுதலைத் தூத்துதல் என்றும் குறித்தார். கடையர் - உழவர்.

(5) மன்மதன் குடை திங்கள்; அதன் அழிவும் சிறுமையும் குறித்தார்.

(6) பாணம் - அம்பு; காவு-சோலை. மேவுதல் - அடைதல்.

(7) தன் வெற்றித்திறம் கூறினாள் மோகினி. இவை மன்மதனைப் புலத்தல்.

## விருத்தம்

**21.** மன்மத உபாதி தன்னை மாற்றிட உபாயம் உண்டோ
உன்மனம் இரங்கா தாயின் உலகிலோர் மருந்தும் இல்லை
நன்மணி விளையும் சிக்கல் நவநீத லிங்கர் போற்றி
என்மனங் கலங்கா வாறு இரட்சிப்பாய் இரட்சிப் பாயே.

## தரு

**22.** நான்முகனார் அண்ணாந்து நாள்தோறும் தேடிய நவநீதா
உன்னை நம்பினேன் என்னை நடுக்கஞ் செய்யலாமோ நவநீதா

(1) தீராப் பெருமையலால் திகைத்து வாடுறேன் மெத்த நவநீதா
நீயுந் தினமுமெனை அணையச் சித்த மிரங்க வேணும் நவநீதா

(2) பேராசை யுன்மேல் கொண்ட பிழையை மன்னித் தருள்செய் நவநீதா
யாரும் பெண்புத்தி என்றுலகில் பேசுவது மெய்யாச்சே நவநீதா

(3) தாமதம் செய்யலாமோ தாயும்பகை யானாளே நவநீதா
நானுங் காமியென் றனைநீயுங் கணத்தில்வந் தணைகுவாய் நவநீதா

---

21. உபாதி - துன்பம், உபாயம் - வழி உலகிலோர் மருந்தும் இல்லை.
'பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்னோய்க்குத் தானே மருந்து' திருக்.
இரட்சிப்பாய்—காப்பாய்.

22. நான்முகனார் அண்ணாந்து தேடியது திருவண்ணாமலைக் கதை.

(1) மெத்த-மிக

(2) உலகில் பேசுவது: 'பெண் புத்தி பின் புத்தி'

(3) காமி-(உன்மேல்)காமப் பெருக்குடையவள்; கணம்-நொடிப்பொழுது.

## விருத்தம்

**23.** மயில்நட மாடக் கண்டு மாங்குயில் கூவுஞ் சோலை
சயிலம்வாழ் வெண்ணெய் லிங்கர் சைகையால் ஆசை
கொண்ட
அயில்விழி மோகி னிக்கே அன்புள பாங்கி யாவும்
பயில்மதி முத்து ரேகை பாங்குள சகிவந் தாளே

## சகித்தரு

**24.** முத்து ரேகைச்சகி வந்தாள்—மோகினிக் கனபா
முத்து ரேகைச்சகி வந்தாள்
முத்து ரேகைச்சகி வந்தாள் பக்தர்கள் ரட்சகரான
அத்தர் வெண்ணெய் லிங்கர் வாழும்
சித்திரச் சிகரை நாட்டில்—முத்து.

*(1)* சந்திரவதனம் இலங்கப்—பந்து முலைகள்
மந்தரத் தைமிஞ்சித் துலங்கச்
சந்தனங் களபம் நறுங்கந்தப் பொடிகள் பூசிச்
சிந்தை மகிழ்ந்து பேசி
சுந்தரக் கைமிக வீசி—முத்து.

*(2)* கெண்டை விழிக்கணை தைத்தக்—கண்டவர்
நின்று மயங்கி மோகிக்க
மன்றல் முல்லை யணிந்த
கொன்றை யளிகளிக்கக் கண்டு
தண்டைச் சதங்கை தொனிக்க—முத்து.

---

23. சயிலம் - மலை; அயில்விழி - வேல்விழி; பாங்கி, சகி-தோழி; அவள் பெயர் முத்துரேகை; பாங்குள - பண்பமைந்த. யாவும் பயில் மதி-பல கலையும் பயின்ற அறிவு.

24. கனபா - புகழ் பரவிய; இரட்சகர்-காப்பவர்; அத்தர்-இறைவர்: சித்திரச் சிகரை-அழகிய சிக்கல்.

(1) சந்திரவதனம் - மதி போன்ற முகம்; மந்தரம் - மலை; கந்தப் பொடி - மணப்பொடி; சுந்தரம் - அழகு.

(2) கெண்டை விழிக்கணை தைக்க - கெண்டைமீன் போன்ற விழிகள் அம்புபோல் தாக்க; மன்றல் - மணம்; அளி-வண்டு; சதங்கை - சலங்கை என்னும் காலணி.

(3) அன்ன நடையில் மறைய—ஆதிசேசனும்
தன்னைப் புகழ்ந் துறையக்
கன்னல் மாரன் செறிய
மின்னல் காரில் மறைய
வன்னக் குயிலஞ்சிய—முத்து.

### விருத்தம்

**25.** மருவளர் மல்லிகை மாபுரி வாழு மதியணி நவநீதர்
வருபவ னிக்குள மயங்கிய மாதர் மனத்தை
நிகர்த்தனை நீ
திருவளர் தாமரை திகழ்முகம் வாடித் தியங்குவ
தென்னைமிக
ஒருவித மாயுன துள்ள முருகுவ தோதிரு மோகினியே.

### வசனம்

'வாருமம்மா மோகினியே, செந்தாமரை போன்ற உமது முகம் வாடியும் அசஞ்சலமாயிருக்கின்ற உமது சித்தம் சஞ்சலமாயும் ஸ்ரீவெண்ணெய் லிங்கேசர் பவனி கண்டு மோகித்த பெண்களைப் போலிருப்பது என்ன வயணம் சொல்லுமம்மா.'

### தரு

**26.** விரகமிகப் பெருசு வேதனைகள் தருது
சரசமொழி பெறாது சகியே கேளாய்!

(1) மெய்மயக்க மீறுது மையில்மிக ஏறுது
செய்வதொன்று மறியேன் சகியே கேளாய்

(2) அங்கமிக நோவுது கொங்கைபசலை மேவுது
சங்கையற்றுப் போகுது சகியே கேளாய்

---

(3) அன்னம் மறைதலும், ஆதிசேடன் பாதலத்து உறைதலும், மன்மதன் ஒளிதலும், மின்னல் மேகத்து மறைதலும், குயிலஞ்சுதலும் முத்துரேகையின் எழிலுக்குத் தோற்றேயாம் என்றார். இது தற்குறிப்பேற்றம் என்னும் பொருளணி. கன்னல்-கரும்பு; இவண் கரும்புவில்; வன்னம்-அழகு.

25. மல்லிகை மாபுரி - சிக்கல்; தியங்குவது-கலங்குவது; இது மோகினி இயல்கண்டு முத்துரேகை வினவியதாம்.

(1) அசஞ்சலம் - கவலையில்லாமை; சஞ்சலம் - கவலை, வயணம் - வகை.

26. விரகம் - காமம்; சரசமொழி; இனிய மொழி -

(1) சங்கையற்று - கணக்கற்று; பசலை - பசலைநோய்,

(3) காமங்கலித் தெழுது சோமன் தழல்சுடுது
சாமஞ்சதி செய்குது சகியே கேளாய்

(4) தென்றல்தேறிக் காயுது மன்றல்மாறிப் பாயுது
என்றிரவு தோயுது சகியே கேளாய்.

### விருத்தம்

**27.** திங்களை முடியிற் சூடித் திகழ்வெண்ணெய் லிங்கர் மீதில்
துங்கவொய் யார துமோகத்ரி தமோ கினியுங் கொண்ட
சங்கையில் லாத மோகஞ் சகித்திடா வாறும் பின்னர்
அங்கவே தனைகள் எல்லாம் ஆற்றுவாள் சாற்று வாளே.

### வசனம்

'கேளுமம்மா என்னுயிர்ப் பாங்கியான சகியே, நீர் கண்டு கேட்ட அடையாளப்படி ஸ்ரீ நவநீதேசுவர சாமியின் பவனியைக் கண்டு மோகித்தது சரிதான். அதனால் எனக்கிருக்கும் தேக உபாதிகளை யெல்லாம் சொல்கிறேன் கேளுமம்மா.'

### தரு

**28.** அந்திப் பொழுதும் வந்துதே—என்றன் கைகள்
முந்தி வளைகள் சிந்துதே.

(1) கரும்புச் சிலைவ ளைப்பானே—மாரனெந்த
னிரும்பு யத்தைத் நுளைப்பானே.

---

(3) கலித்து-துள்ளி; சோமன்-நிலா ; தழல் சுடுது - தீப்போல் சுடுகிறது ; சாமம் - நள்ளிரவு.

(4) தேறி-மிகுந்து ; மன்றல் - மணம்; மாறிப் பாயுது - எதிரிட்டு முட்டுகிறது; என்று - கதிரோன்; இரவு தோயுது - இரவுப் பொழுதில் வெளிப்பட்டுச் சுடுகிறது. இவையெல்லாம் 'காம மிக்க கழிபடர்' மொழிகள்.

27. துங்க-உயர்ந்த; ஒய்யாரம் - செருக்கு; சங்கை இல்லாத - கணக்கிட முடியாத; ஆற்று வாள் சாற்றுவாள் - ஆற்றிக் கொள்ளுமாறு சொல் வாள்-;'துயராற்றும் வாயில் தோழமை' யாகலின் இவ்வாறுரைத்தார்.

28. (1) சிலை - வில்; மாரன் - மன்மதன்; எந்தன் - என்றன்; 'இரும் புயத்தைத் துளைப் பான்'; புயம்-தோள்.

(2) மாங்குயிலேகூவுதே—விரக மீறித்
தாங்காமலே தாவுதே.

(3) வாசனைப்புலி கொல்லுமே—தூதுக்குச் சென்ற
மூசல் வண்டென சொல்லுமே.

(4) என்னால் சகிக்கத் தள்ளுமோ—கொண்ட விரகம்
இத்தனை கோட்டி கொள்ளுமோ?

(5) முன்னால் அயன்வி தித்ததோ—வெண்ணெய் லிங்கரை
மோகித்த தென்ன புத்தியோ?

(6) ஆ! இது வெகு தொல்லையே—உன்னை அல்லாமல்
ஆர்துணை வேறில்லையே.

(7) பொய்மோகங் கொண்ட தல்லடி—வெண்ணெய் லிங்கரைப்
புகழ்ந்து தெரியச் சொல்லடி.

## கட்டளைக் கலிப்பா

29. நான்முகன் மடந்தை திருவைகிய
நற்சிகரைப் பதியணி வீதியில்
மேலுலகத் திருந்துவந் தேகுற
மெல்லியல் குறிமிக்க விளம்பினாள்
சாலமையல் கொண்டாயுன் தரமெலாம்
தாழ்விலாம லறிந்துரை செய்யவே
கோல மோகினியேஇங் கழைத்துயான்
கொண்டு வாறே னென்றுசகி கூறினாளே.

---

(2) விரகம்-காமத்துயர்.

(3) வாசனைப் புலி-மணம் என்னும் புலி; மூசல் வண்டு - மொய்க்கும் வண்டு.

(4) சகிக்க - பொறுக்க; கோட்டி - கிறுக்குத் தனம், பித்தும்.

(5) அயன்-நான்முகன்.

(6) அல்லடி-அல்ல அடி; தொகுத்தல்.

29. மடந்தை ;- மனைவி; திரு - திருமகள்; கல்வியும் செல்வமும் பூத்த திருநகர் சிக்கல் என்பதை 'நான்முகன்......பதி' என்றார். மிக்க மிக; சால - மிக; தரம்-விளையக் கூடியது. தேவ லோகக் குறத்தி என்றது மலைவாழ் குறத்தியை. மலை நாட்டை 'வானவர் நாடு' என்றதும், சேரரை' 'வானவர்' என்றதும் கருதுக.

### வசனம்

வாருமம்மா மோகினியே, நீர் மிகுந்த மோகத்தினால் சகிக்கப்படாத விரகப்படுகிற படியால் இந்தச் சிகரைநகர் வீதியில் தேவலோகக் குறத்திவந்து குறிசொன்னாள். அவளை அதி சலுதியில் அழைத்துவருகிறேனம்மா.

### விருத்தம்

**30.** அறைந்ததோர் முத்து ரேகை அன்புள சகியும் சென்று
அறந்தழை சிகரை வெற்பில் அணிமணி மாளி சூழ
நிறைந்தவீ தியினிற் கண்டு நிகழ்ந்தவை மொழியக் கேட்டுக்
சிறந்ததெய் வதஞ்சிந் தித்துத் திருக்குற வஞ்சி வந்தாள்.

### வசனம்

'கேளுமம்மா மோகினியே, ராச வீதியில் குறிசொல்லிக் கொண்டிருந்த தெய்வக் குறத்தியாரை அழைத்து வந்தேன். உமக்கு ஆக வேண்டியதுகளெல்லாம் கேட்டுத் தெரிந்து கொள்ளுமம்மா.'

### திரைத் தரு

**31.** சிங்கி வந்தாள்

(1) பங்கய வதனம் எங்கும் சொலிக்க
மங்கை யர்கள் கண்ணாற் கண்டு சலிக்கத்
தங்கு நூபுரங் கனொலி கலிக்க
அங்கை யிற்குறி யறைந்து பலிக்கச்
—சிங்கி வந்தாள்.

(2) கொண்டை இருளை ரவிகண்டு வொளிக்கக்
கெண்டை விழிகளைக் கண்டு குளிக்க
மன்றல் மலரளி நின்று களிக்கத்
தண்டைச் சதங்கை கீழ்கொண்டு நெளிக்கச்
—சிங்கி வந்தாள்.

---

30. வெற்பு-மலை, தெய்வதம் - தெய்வம், 'தெய்வத மடந்தையர்' கந்தபு. தெய்வயா (185).

31. (1) பங்கய வதனம்- தாமரை போன்ற முகம்; நூபுரம் - சிலம்பு; அங்கை-அழகிய கை; உள்ளங்கையுமாம்.

(2) இரவி-கதிரோன்; குளிக்க-மறைய; கீழ் கொண்டு - கீழிடத்தைத் தனக்கெனக் கொண்டு. இவை, தற்குறிப்பேற்ற அணிகள்.

## விருத்தம்

32. திங்களா வதனம் என்னத் திருநுதல் பிறையா என்னக்
கங்குலா சடிலம் என்னக் கார்முகம் புருவா என்னச்
செங்கையா பதுமம் என்னச் செவிக்குழை ஞாளிகமா
வென்னக்
கொங்கைக்கோங் கரும்பு நாணக் குறவஞ்சி தோணி
னாளே.

## சதி

33. தத்தாந்தித் தாந்தித் தத்தாந்தி தாந்தித்
தத்தாந்தித் தாந்தித் தத்தாந்தித்
ததித் தத்தாந்தித் தெத்தரி கிடதக தகதித்
தாதித் தெந்தரி கிடதக தகதெங் கிடதக
தாதித் தெந்தரி கிடதக தகதெங்கிடதக
தெங்கிடதக தளங்கு தகுதிகி தகததிங் கணத்தோம்

(1) தத்தாந்தி தாந்தித் தாந்த தகதெந் தரிகிட
தகதித் தாந்தி ததாந்தித் தத்தாந்தி
தத்திக்கிட தத்தித் திக்கிடதக தக்குதிக்கு
தத்திக்கிட தத்தித் திக்கிடதக தக்குதிக்கு
தித்தகத்திங் கணத்தோம்

## தத்தாங்கி சபதம்

34 தணத்தத் தணதண செனுத்த செனுசெனு
திமித்த கிணங்க சேகிணம் தத்தித் தாதா
தித்ததி ததாதரிதா தத்தித்த கதிகித கதக
ததிங் கணத் தோம்

(1) பங்கசா அனுபட்டிக கொட்டியாப் பனிச்சலுப்பின
தேவுடு
அங்கச சதகோடி கைன்னு அதிரூப தயாநிதி
மங்களா கரமைன வல்லி சமேத தேவசிகாமணி
சிங்கார வேலுனி கனின ஸ்ரீநவநீத லிங்கசலாமுரே.

---

32. வதனம் திங்களா, நுதல் பிறையா, சடிலம் (சடை) கங்குலா (இருளா), புருவம் கார் முகமா (வில்லா), கை பதுமமா (தாமரையா), செவி ஞாளிகமா (வள்ளையா) என்று ஐயுற்று வினவு மாறும் கொங்கைக்குக் கோங்கின் அரும்பு நாணு மாறும் குறவஞ்சி தோணினால் (தோன்றினால்) எனப் பொருத்திக் கொள்க. இது ஐயவணி.

33. சதி-தாள ஒத்து; தாளக்கட்டு என்பதுமாம்.

33-34. இவை குறவஞ்சி நடையினைத் தாள வொலி யிட்டுக் காட்டியது.

34. (1) தெலுங்குமொழிப் பாடல்.

## தரு

35. வந்தாள் சிங்காரக் குறவஞ்சி மனமகிழ்ந்(து)
அந்தாமரைத் தடஞ்சூழ் அழகுசிகரை நாட்டில்
—வந்தாள்.

(1) பந்து முலைகள் விம்மி மந்தர நிகரென்ன
நந்துங் கரக்கஅணி கந்தர மெதிரென்னச்
செந்தேன் அமிர்தமிகும் விந்தை அதரமென்னத்
தந்த முருந்தாமெனத் தளங்கு ததிங்கணத்
தோமென வந்தாள்.

(2) கச்சுமே கலையொடு கனக மணிகள் துன்ன
பச்சை மணியிழைத்த குச்சுகள் நிரைமின்ன
அச்ச மிடைஎனவே அளிகள் திருந்து பின்னத்
தச்செங் கிடதக செங்கிட தகதா தாதைதை
ததிங்கணத் தோமென—வந்தாள்.

(3) வளமிகு கரமதை வார்கழி மடல் நாணக்
களபநறு மணங்கை குவித்து வந்தெதிர் காண
அளக முகிலைவென் றாரத்தி கொண்டிசை பூணத்
தளிரிள மெய்தோணத் தளங்கு தகதிகி ததிங்
கணத்தோமென—வந்தாள்.

---

35. (1) நிகர்-ஒப்பு; நந்து - சங்கு; கரக்க-அஞ்சிமறைய; அணிகந்தரம் - அழகிய கழுத்து; அதரம் - இதழ்; தந்தம் முருந்தாம் - பற்கள் மயிலிறகின் அடியாம்.

(2) மேகலை - இடையணி; துன்ன-நெருங்க; குச்சுகள் நிரை - குஞ்சங்களின் தொகுதி; அச்சம் இடை எனவே - (நாம் அமர்ந்தால்) இடை தாங்காது என்னும் அச்சம்; பின்ன-தொடர.

(3) வார் கழிமடல் - மிக நீண்ட மடல்; கரத்திற்கு மடல் நாண, மணத்திற்கு எதிர்காண, அளகத்திற்கு (கூந்தலுக்கு) முகில் ஆரத்திகொண்டு இசைபூண வஞ்சி தோன்றினாள் என இயைத்துப் பொருள்கொள்க.

## அகவல்

**36.** பரிதிவந் துறையும் பால்மலை தனிலும்
அரிய நவமணி அணிமணிச் சிகரை
வைப்பினின் நடுவில் வைகுமா மேருக்
கொப்பாம் அழகில் உயர்ந்தமாசி கரை;
கங்குலைப் பொருதும் கார்நிரை யுறையும்
அங்குல வரையினும் அழகுமா சிகரை;
சக்கிர வாளம் தன்னினும் மிக்க
பக்குவ மான பளிங்குமா சிகரை;
திங்கள் தவழும் தென்மலை தனிலும்
செங்கம லத்திருச் சேர்திருச் சிகரை;
பொதியா சலமெனும் பொருப்பிலு மிக்க
அதிகமா மிந்தத் தவமிகும் சிகரை;
ஆழிசூழ் உலகில் அணிமலை எவற்றினும்
தாழ்விலா திந்தத் தழைவுறும் சிகரை;
கின்னரர் தேவர் கிம்புர டாதிகள்
பண்ணிசைத் தேத்தும் பாங்குள சிகரை;
அன்னமும் துயிலும்; ஆடிடும் மயிலும்
துன்னி நிறைந்து துலங்குமா சிகரை;
பன்னக வரசன் படியே ழின்கீழ்த்
தன்னில் இருந்து தாங்குமா சிகரை;
எத்தலங் களுமுள எழுவகைத் தோதமும்
முத்தி பெறுமிம் முதிர்ந்த சீர்ச்சிகரை;
காசி முதலாய்க் கன்னியீ றாகப்
பேசிடில் வீசம் பெரியமா சிகரை;
மாதவத் துயர்ந்த மாமுனி **விசிட்டர்**
பூத லத்தினுள் புண்ணியத் தலங்களைப்

---

36. 1. பரிதி-கதிரோன்; பால்மலை - ஒளி மிக்க மலை; 3. வைப்பு - உலகம்; 5. பொருதும்- ஒப்பாகும்; கார்நிரை - மேகக் கூட்டம்; 6. அம் குலவரை- அழகிய சிறந்த மலைகள், அவை: கயிலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏம கூடம், நீலமலை; கந்தமாதனம்; 7. சக்கரவாளம் - திக்குகளின் எல்லை வட்டம்; 9. தென்மலை -சோலைமலை; 11. பொதியாசலம் - பொதிகை மலை; 13. ஆழி - கடல்; 18. துன்னி - நெருங்கி; 19. பன்னக அரசன் - ஆதிசேடன்; படி - உல கம்; 21. தோதம் - (பிறவித்) துன்பமும்; 24. வீசம் - மாகாணி, பதினாறில் ஒரு பங்கு; மேலும் இவ்வாறே கூறுவார்(38).

பூசிக்க எண்ணிப் பொன்னகர் இழிந்து
மாசிலாத் திங்களில் மனமகிழ்ந் தேகி
எங்கணும் சென்று இயல்புடன் சூழ்ந்துதம்
அல்லது செல்ல அமர்ந்த காலையில்
மல்லிகா ரணிய மானவித் தலத்தில்
வானவர் அறியா வளமிகு பாலை
மாநதி தன்னில் மகிழ்வுடன் மூழ்கி
நீற தணிந்து நியம முடித்து
வேறிலாச் சித்தம் வியந்து முவந்தும்
பாலதிற் றிரண்ட பதமுறு வெண்ணெயை
மேலதாம் பீடம் மேவ வமைத்து
இலிங்கம தாக எழிலுருக் குறித்து
நலங்கொள் நானம் நறுமலர் தூவிப்
போற்றிப் புகழ்ந்து பொதுநடங் கண்டு
ஏத்தி இறைஞ்சி இணையடி பணிந்து
முற்றும் பூசை முடித்து மாமுனி
பற்றி எடுக்கப் பாதல முதலாய்ச்
சுற்றியே மூலம் துகளற நிற்கச்
சித்தம் மறந்து நிகைத்து மாமுனி
அத்த னேஎன்(று) அனுதினம் பணியும்
பத்திசேர் பழம்பதி பண்புள சிகரை;
பாலினு மென்மொழி பகலவன் திக்கில்
வேல்நெடுங் கண்ணி விளங்குறு சிகரை;

---

27. பொன்னகர் - அமராவதி; இழிந்து-இறங்கி; 30. அல்லது - பாவம்; 34. நியமம் - கடன்; 35. வேறிலாச் சித்தம் - ஒன்றுபட்ட உள்ளம்; 36-38. 'வெண்ணெய் லிங்கர்' என்னும் காரணம் குறித்தது. 39. நானம் - கத்தூரி; 43-44. 'சிக்கல்' என்னும் காரணம் குறித்தது. வெண்ணெய் லிங்கம் எடுத்துச் செல்ல வாராமல் சிக்கியமையால் 'சிக்கல்' எனப் பெயருண்டாயிற்று என்பது கதை. 44. மூலம் - லிங்கம்; துகளற - அசைவின்றி; 45. மாமுனி - வசிட்டர். 48. பகலவன் திக்கு - கிழக்குத் திசை.

பங்கயத் தடஞ்சூழ் பதிதனின் நாப்பண்
சிங்கார வேலர் சிறந்துறை சிகரை;
துல்லிய மாகத் தூயதென் பாலில்
மல்லிகை வைகும் மாமலைச் சிகரையில்
தெய்வ லோகத் திருநுதல் வல்லி
மைவளர் கண்ணி மாக்குற வஞ்சி,
எல்லை எங்கணும் இயல்புடன் சூழ்ந்து
மல்லிகா ரணிய மகிமையை அறிய
அட்டமா சித்தும் அரியமந் திரமும்
தொட்டியம் சல்லியம் தொகைவகை இல்லா
வேருடன் மூலியும் வித்தும் வேணுவுங்
காருட வகையும் கைதனில் அமையும்
வாடைப் பொடியும் வகைவகை மருந்தும்
கூடையும் கொண்டு குறித்திவந் தனளே.

**வசனம்**

'யாரம்மா நீ, எந்தத் தேசம்? என்ன சாதி? எங்கே வந்தாய்?'

'ஐயையே! ஐயையே! ஐயையே ஐயே! மோகினியம்மா, நீதான் கேளேன்.'

'நீயாம்மா-ஓயம்மா—ஓ கொம்மா—ஓ பங்காரு பொம்மா —என்னடியம்மா அது எனக்குத் தெரியவில்லை. ஓ லலிதா— ஓ செலியா — ஓல்ல நாவினவேயம்மா — என்னடியம்மா இதுவும் தெரிய வில்லை—அளி வேணி—சிகுரு போணி— விரி போணி — வினவேயம்மா.

'தமிழ் தெரிந்தால் சொல்லம்மா.'

'கஞ்ச ஹாலு சத்திர ஹாலு
வினவேயம்மா இதுவும் அதுவான்—காரியமில்லை வாலு கண்டி — கலுவ கண்டி — கம்பு கண்டி — வினவேயம்மா. யேதேச மண நாவுகதா— யீதேச முகாது—யாற் பயாறு தேச முலுன்று காது—தேவலோக மந்துண்டதே யம்மா.'

---

50 பங்கயத் தடம்-தாமரைப் பொய்கை; நாப்பண்-இடையே; 54 வல்லி-கொடிபோன்றவள்; 58. அட்டமாசித்து-எண்வகைச் சித்துகள்; அவை. அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பன; 59. தொட்டியம் சல்லியம் என்பவை வித்தைகள்; 60. மூலி-கிழங்கு; வேணு - மூங்கிற் கோல்; 61. காருடம் - அறுபத்து நான்கு கலைகளுள் ஒன்று; 62. வாடைப் பொடி - மணப்பொடி; 58-63. குற வஞ்சியின் ஏற்றமும் தோற்றமும் உரைத்தது.

'இன்னம் நூறுதரம் சொன்னாலும் தெரியாது தெரியும் பாஷையில் சொல்லம்மா.'

'எந்தத் தேசமென்று கேட்கிறாய் இந்தத் தேசமல்ல ஐம்பத்தாறு தேசமுமல்ல தேவலோகத்திலே இருக்கிறதடியம்மா.'

'ஆ! அப்படியா? நல்ல காரியந்தான் என்ன சாதி சொல்லம்மா.'

'என்ன சாதி யென்று கேட்கிறாய்; சின்னச் சாதியல்ல; ஈனச் சாதியல்ல; கெட்ட சாதியல்ல; மீனு திங்கிற சாதியல்ல; மானு திங்கிற சாதியல்ல; ஆடு திங்கிற சாதியல்ல; கோழி திங்கிற சாதியல்ல; கொழுத்த முனை திங்கிற குறச் சாதியம்மா.'

'அடடா! அப்படியா—நல்லதடியம்மா; ஆனால் நீ எங்கே வந்தாய் சொல்லம்மா?'

'பூலோகத்திலே இருக்கிற தலங்களெல்லாம் சுற்றிக் கொண்டு மல்லிகாரணிய மகிமை அறிய வந்தேனம்மா.'

## விருத்தம்

**37.** பவமெல்லாம் தொலைந்து நீங்கு பழம்பதிச் சிகரை வாழும்
நவநீத லிங்கர் வெற்பில் நலம்பெற வந்த மாதே
புனபூ தலத்தி லுள்ள புரவல ருயர்ந்தோர் போற்றித்
தவமிகு மிந்த வாசல் தழைவெலா முரைசெய் வாயே.

## வசனம்

'வாருமம்மா தெய்வக் குறத்தியாரே, இந்தத் தல மகாத்மியங்களையும், சன்னிதான வளப்பங்களையும் சொல்லுமம்மா.

'கேளுமம்மா மோகினியே, வாசல் வளப்பம் சொல்லென்று கேட்கிறீர் சொல்கிறேன்; கேளும்மா.

---

37. பவம் - பாவம்; புவனபூதலம் - உலகம்ஆகிய விரிந்த இடம்; தழைவு-வளப்பம்.

(1) தலமகாத்மியம் - தலத்தின் பெருமை;

### தரு — பைரவி — ஏகதாளம்

**38.** வாசலிது வாசலி தம்மே—வளமிகுந்த
வாசலிது வாசலி தம்மே.

(1) தேச மெல்லாம் புகழும் காசி தனிலதிகம்
வீச மெங்கள் வெண்ணெய் லிங்கேசர் கொலு
—விருக்கும் வாசலிது.

(2) வட்ட மான புவியில் மட்டுவே றுண்டோ இனி
அட்ட திக்கிலு முள்ள சிட்டர் முனிவர் பணி
— வாசலிது.

(3) மாலுக் கிளைய வல்லி பாலைப் பழித்த சொல்லி
வேலைக் கடிந்த வடிவேல் நெடுங்கண்ணி வளர்
—வாசலிது.

(4) மங்கை பாகத் திருவர் தங்க மஞ்ஞையின் மீது
எங்கும் உலாவி வரும் சிங்கார வேலனுறை
— வாசலிது.

(5) வாசலிது வாசலி தம்மே
வளர்ந்தோங்கும் வாசலி தம்மே
நேசமுடன் வசிட்ட முனியம்மே
நிதம் பணியும் வாசலி தம்மே.

(6) —நல்ல வாசலிது
செல்ல வாசலிது
பெரிய வாசலிது
அரிய வாசலிது
சுப வாசலிது
தவ வாசலிது
கல்யாண வாசலிதம்மே.

(7) சுபம் வாழி கல்யாணம் வாழி
மங்களம் வாழி நன்மை வாழி
யோக்கியம் வாழி பாக்கியம் வாழி
யோகம் வாழி போகம் வாழி
அயிசுவரியம் வாழியம்மே.

---

38. (2) மட்டு-ஒப்பு; அட்டம்-எட்டு; சிட்டர்-நல்லோர்.

(3) மாலுக்கு இளையவல்லி - வேல் நெடுங்கண்ணி, வல்லியும் சொல்லியுமாகிய கண்ணி.

(4) மஞ்ஞை- மயில்; மங்கை பாகத் |திருவர் என்பதைப் பாகத்து மங்கை இருவர் என மாறி இயைக்க, இருவர், வள்ளி தேவசேனையர்.

(5) நிதம் - நாள்தோறும்.

(7) போகம் - நுகர்வு, அனுபவிப்பு.
அயிசுவரியம் - செல்வம்.

### விருத்தம்

**39.** வாசலின் வளப்ப மெல்லாம் வகையுடன் உரைத்தமாதே
மாசிலா உனது சிந்தை மகிழ்வுடன் கிருபை கூர்ந்து
வாசமா முங்கள் தேச வரிசையும் ஊரும் பேரும்
நேசமாய் எனக்கிப் போது நிகழ்த்துவாய் நிகழ்த்து
வாயே.

### வசனம்

வாரும் அம்மா தெய்வக் குறத்தியாரே, வாசல் வளப்பஞ் சொன்னது கேட்டு மகா சந்தோச மாச்சுது. அதுபோல உங்கள் தேச வரிசையும் ஊரும் பேரும் சொல்லுமம்மா.

### தரு — மோகனம் — திரிசரம்

**40.** நிலைமை பெருமை பேரும்
நிகழ்த்து வேனானிப் போது
நீயே சிறந்து கேளடி—மடமானே.

(1) மலைகளில் மிகுதிரு மலைச்சிகரை யம்பதித்
தலைவர் வெண்ணெய் லிங்கேசர்
தயவை முயங்கி மயங்கிய மாதே—நிலைமை.

(2) வரம்பி லாதமலை வரம்பி லாததலம்
வரம்பி லாதநதி யானவை யெல்லாம்
நிரம்பத் தெரிந்த தல்லால்
நினைவாய்க் கேட்டது மெத்த
நிச்சயிக்க எண்ணினால்
நேருமோ கூறவும் வேறு படாமல்—நிலைமை.

---

39. மாசிலா - குற்றமில்லாத; நேசம்-அன்பு; தேசவரிசை - நாட்டுச் சிறப்பு.

40. மட மான் - இளைய மான்; மெல்லிய மானுமாம்

(1) தயவு-அருள்; முயங்கி-தழுவி; மயங்கிய-மையல் கொண்ட.

(2) வரம்பு இல்லாத - எல்லையில்லாத ; மெத்த - மிக, 'வேறுபடாமல் கூறவும் கூடுமோ' என இயைக்க.

### விருத்தம்

**41.** உறைதலம் ஊரும் பேரும் உண்மையும் உரைத்த மாதே
மறைபுகல் முனிவர் போற்றும் மாமலைச் சிகரை வாழும்
கறைமிடற றண்ணல் வெண்ணெய்க் கடவுள்தன் கொலுவின் முன்னர்க்
குறைவிலா உங்கள் சாதிக் குணமெல்லாம் உறைசெய் வாயே.

### வசனம்

'வாருமம்மா தெய்வக் குறத்தியாரே, நீர் உங்கள் குலமும் தலமும் ஊரும் பேரும் சொன்னது கேட்டு மகா சந்தோச மாச்சுது. இது போல உங்கள் சாதி முறைமைகள் எல்லாம் சொல்லுமம்மா.'

### தரு

**42.** எங்கள் குலமுறை இயம்புவனா னிப்போ(து)
இசைந்து கேளாயடி யம்மேயம் மம்மே.
திங்கள் முடியணியும் தேவர்கள் தேவன்
திருச்சிகரை யில்வாழும் தேனேமட மானே.

(1) பூனைக் குறவர்களைப் புவிதனில் விடுத்தோம்
பொருந்தாக் குறவரினம் பொருப்பினிற் றடுத்தோம்
ஆனை யுரியணிந்தோ னணிகுலம் அடுத்தோம்
அறுமுக னுக்குவள்ளி யமுதையும் கொடுத்தோம்
—எங்கள்.

(2) தினைமாவும் தேனுமுண்டு தெவிட்டியே களிப்போம்
தனுக்கொண்டு விலங்கெய்யத் தருக்களில் ஒளிப்போம்
நனையவிழ் நறுமலர்த் தடங்களில் குளிப்போம்
மனமகிழ்ந்து தரளமணி மருவினர்க் களிப்போம்
—எங்கள்.

---

41. கறைமிடற்று அண்ணல் - நீலகண்டர்.

42. (1) பொருப்பினில் தடுத்தோம்- மலையில் நிறுத்தினோம்; ஆனை உரி அணிந்தோன் - ஆனைத் தோல் போர்த்த சிவபெருமான்.

(2) நனை - அரும்பு; அவிழ் - மலர்ந்த; தடம் - நீர்நிலை; தரளம்-முத்து; மருவினர்க்கு- அடுத்து வந்தவர்க்கு.

(3) சங்கேமங் கலியமாய்ச் சரமதில் தொடுப்போம்
எங்குமுள சரிதையி யம்பியவர்க் கெடுப்போம்
துங்கவே லவர்செம்பொற் றுணைப்பதம் அடுப்போம்
மங்கைவள்ளி பெருமைதனை மகிழ்ந்துமே படிப்
—போம் எங்கள்.

(4) மலைமுலை மாதே யுன்றன் மலர்முகங் கண்டு
மலிந்துரைப்பேன் கேளென்றன் வார்த்தையைக்
கண்டு
சிலைநுத லேசெய்யுங் தொழில்களி தொண்டு
நிலைவல இனம்பல நிகழ்த்தவே றுண்டு—எங்கள்.

## கட்டளைக் கலிப்பா

43. மதிதவழு மருமலர்ச் சோலைசூழ்
மாமலைச் சிகரைப் பதிதனில்வாழ்

நிதிமறைப் பொருளாம் நவநீதர்பால்
நீடுமன்பு நிறைந்த மடந்தையே

விதிமுதல் சிட்டித்த விப்பூமியில்
விளங்குகின்ற விசேட மதாகிய

அதிகமா மணித்தேயங் களியாவும்நீ
ஆய்ந்துதேர்ந் தறைந்திட வேண்டுமால்.

## வசனம்

'வாருமம்மா தெய்வக் குறத்தியாரே, நீர்சாதி வளப்பஞ் சொன்னது கேட்டு மகா சந்தோசம் ஆச்சுது.' இனித் தேசங்க ளெல்லாம் இன்ன வென்று சொல்லுமம்மா.

---

(3) சரம் - மாலை; எடுப்போம் - புகழ்வோம்; துங்க - சிறந்த; துணைப்பதம் - இணையடிகள்.

(4) மலிந்து - மிகுதியாய்; சிலை நுதல்-விற்போலும் (புருவம் அமைந்த) நெற்றி; களிதொண்டு-களிப்பாகிய தொழில்.

43. நிதிமறைப் பொருள் என்பதை மறை நிதிப் பொருள் என மாறிக் கூட்டுக. விதிமுதல்-நான்முகன்; மணி - அழகு; அறைந்திட-கூற.

### தரு

**44.** நிறைமதி முகமுள்ள மாதே—நிருபர்
தேயமெலாங் கேளிப் போதே
நறையுலா மலர்ச்சோலை சூழ்சிக்கல் நாதர்
வெண்ணெய் லிங்கர் நாட்டில் மானே—நிறைமதி.

(1) அங்கம் கர்நட மராட விலாடம்
அரிய சீனங் கல்யாணங் கலிங்கம்
கொங்க மதங்கம் தெலுங்கம் விதர்ப்பம்
கொந்தளஞ் சிந்து குடாவு மிலாக்கா—நிறைமதி.

(2) கொச்சி கோசல மாளவம் சிந்து
கொல்லம் புலிந்தஞ் சாளுவ தேசம்
மச்சங் கோட மக்கந் திரிகூடம்
மாகத மாத்திரங் கேகயந் துளுவம்—நிறைமதி.

(3) சோனக திவாகர சாவக தேசஞ்
சூர தேயம் வங்காள முதலாய்
சானமலி சிங்கள மீழந்துலுக் காணம்
சங்க மதங்கமுந் தொட்டிய தேசம்—நிறைமதி.

(4) கண்ட தேய மெண்ணக் கணக்குக ளுண்டோ
கனகச் சிகரை நாட்டுக் கனிமொழி யேகேள்
மண்ட லாதிபன் **சிவாசிரா ரேந்திரன்** வாழும்
இந்த நாட்டு வளப்பம் பார்க்க வந்தேன்—நிறைமதி.

### விருத்தம்

**45.** அடிமுடி தெரியா நின்ற அண்ணலாம் வெண்ணெய் லிங்கர்
அடிபணிந் தமரரேத்தும் அழகுசூழ் சிகரை வெற்பில்
பிடிநடை யென்ன வந்த பேரெழிற் குறவர் மாதே
படிதனில் மலைக ளெல்லாம் பாங்குட னுரைசெய் வாயே.

---

44. நிருபர் - அரசர்; நறையுலாம் - மணம் பரவும்.

(1) கொந்தளம் சிந்து - கிளர்ச்சி ததும்பும்.

(3) சானம் - சாதிலிங்கம்;

(2)-(3) ஐம்பத்தாறு தேயங்கள் என்பவற்றுள் பலவும் இடம் பெற்றுள; அவற்றுள் விடு பெற்றனவும், வேறு கூறப் பெற்றனவும் உண்டு.

(4) கனகம் - பொன்;

45. 'அடிமுடி தெரியா நின்றார்' - அண்ணாமலையார்; படிதனில் - உலகில்.

### தரு

46. பூதலத்தி லுள்ள மலைகள் பெயரோதுவன் கேளடி
மாதே
மாதவர் பணிநவ நீதர் சிகரை வாழ்
—மாமணியே கண்மணியே மோகினியே—பூதல.

(1) சீத கந்த மகமேரு சிறந்த கந்தமா தனங்கரு டாத்திரி
கயிலை
மாதவன் மருவுமா பன்னகக் கிரியும் பவளமலையும்
இந்திர சயிலமு மறிவேன்—பூதல.

(2) நீல கிரியுடன் இந்திர கிரிநிலை கொள்பல பத்திர
கிரியுடன் தேவ
பால கிரியும் பனிச்சந் திரகிரியும் பரிய விந்தைகிரி
பகர்வேத கிரியே—பூதல.

(3) ஓதுஞ் சதுரகிரி சதகேச ராசல முயர்ந்த மந்த 'ராசல
மகேந்திர கிரி
சூத மலையும் சூரா சலஞ்சுத்த மேகமா விசால
முடனே- பூதல.

### விருத்தம்

47. மலைகளில் உயர்ந்த மேரு மலைதனை நிகர்க்கும்
சிக்கல்
மலைதனில் வாழும் எங்கள் மாவெண்ணெய் லிங்கர்
நாட்டில்
மலைமுலை மாதே யுன்றன் மனத்தினி லறிந்த கோல
மலைவள மின்ன தென்று வரிசையாய் உரைசெய்
வாயே

### வசனம்

'வாருமம்மா தெய்வக் குறத்தியாரே, நீர் மலைகளெல்லாம் சொன்னது கேட்டு மகா சந்தோச மாச்சுது. அப்படியே மலைகளின் வளப்பங்களையும் சொல்லுமம்மா.'

---

(1) சீத கந்தம் - குளிர்ச்சியும் மணமும் அமைந்த;

1-3. மேரு, தனம், அத்திரி, கிரி, சயிலம், அசலம் என்பவை எல்லாம் மலைகள்.

47. நிகர்க்கும் - ஒப்பாகும்; கோலம்-அழகு.

### தரு

48. மலைவளப் பங்களைச் சொல்வேனம்மே—
மலைவளப் பங்களைச் சொல்வேன்—
மலைவளப் பங்கள் சொல்வேன்.

(1) சிகரையில் வாழும் சிலைநுதலே உன்றன்
சித்தம் அறிவதற்கு —மலை

(2) கலைகவரி கத்தூரி கனநவ மணிகள்
விலையிலா தமிக்க வேய்முத்து முடைய—மலை.

(3) குலமதவா ரணங்கள் குளிக்கக் கயமுண்டு
அலைகடலெனவார்க்கும் அசுவங்க ளோவநேகம்
—மலை.

(4) நிலைபெறு யாளிசிங்கம் நிறைந்த தூறுகளும்
சிலைவரிப் புலிகளும் சேனைமிரு கமுமுள்ள
—மலை.

(5) சங்கமுத்து கரிமுத்து சாய்ந்த கதலிமுத்து
பங்கயமுத் துடன்பன்றி முத்தும் சாலி முத்துள்ள
—மலை.

(6) குங்குமப்பூ வக்கிராரங் குமிதகெந்தி யரிதாரம்
தங்ககிலுங் கற்பூரம் சந்தனமு முள்ள—மலை

(7) எங்குமைந் தலைநாகம் ஈனுமணிக ளநேகம்
துங்கதேவ தாரசோகம் துலங்குபது மராகம்—மலை.

---

48. (2) கலை-கலைமான்; கவரி-கவரிமா; வேய்-மூங்கில்.

(3) வாரணம் - யானை; கயம்- குளம்; அசுவங்கள் - குதிரைகள்.

(4) தூறுகள் - புதர்க்காடுகள்; சிலைவரிப் புலி - முழக்கமிடும் வரிப்புலிகள்; சேனை-தொகுதி.

(5) கரி-யானை; கதலி-வாழை; பங்கயம்-தாமரை; சாலி-நெல்.

(6) அக்கிராரம் - ஒருவகை வேர்; குமிதகெந்தி-தேக்கு; தங்கு அகில்-மணம் தங்கிய அகில்.

(7) சாத்தும் (சாற்றும்)-சொல்லும்; அட்டாங்க யோகம் - இமயம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன; போகம்-நுகர்ச்சி.

(8) சங்கமுனி வரநேகம் சாத்துமட் டாங்கயோகம்
சங்கங்க ளுண்டநேகம் சதுர்மறைய வர்போகம்—மலை.

(9) கொங்கலர் கொடியேலங் குலவுகுலைத் தக்கோலம்
எங்கட்குக் கந்தமூலம் எறிகதிரிந் திரநீலம்—மலை.

(10) வனமலை கள்தாவி வார்கட லொலிநீவித்
தினமுகில் மழைதூவித் திகழுந்தேவ சஞ்சீவி—மலை.

(11) நறுமலர் பாரிசாதம் நாரதனும் புருகீதம்
மறையவர் புகல்வேதம் மகிழ்துந் துமிநாதம்—மலை.

(12) திங்கள் தவழுமாடம் திகழ்நவ மணிக்கூடம்
மங்களஞ் சிறந்த பாடல் மாதுரிய ரம்பையாடல்
—மலை.

(13) செந்தேன் பொழியும் சோலை செறிந்தவர்க் கன்னசாலை
கந்தர்வ ராடும்லீலை கன்னல்வடி நீர்வேலை—மலை.

(14) மலையிழியும் பொன்வாரி மாமணிகொ ழிக்குமேரி
சிலையணிவே டர்சேரி சிறந்த ஞானங் கத்தூரி—மலை

(15) சங்கையில்லா மலர்தூவிச் சயனமன்னத் தின்தூவி
எங்குங்க மலவாவி எழில்சேர்லட் சுமிதேவி—மலை

(16) கதலிகற்ப கக்காவும் கன்னல்ப லாவு மாவும்
மதுமலர்ச் சோலைதூவு மாங்குயில் வரக் கூவும்—மலை

(17) செந்நெற்க திரமோகம் சிறந்துண்டு லாவும்யூகம்
பொன்னம்மெ ழுகநேகம் பொருகொம்பரக் கோசாகம்
—மலை

---

9. கொங்கு அலர்-மணம், பரவும் தக்கோலம்-ஒரு மணப் பொருள்.

10. முகில் தாவி நீவி, தூவி என இயைக்க நீவி-தடவி, குறைத்து.

11. துந்துமி-ஓர் இசைக் கருவி.

12. மாதுரியம்-இனிமை.

13. கன்னல் வடிநீர் - கரும்புச் சாறு; வேலை-கடல்.

15. சங்கை - கணக்கு. சயனம் - படுக்கை; தூவி-இறகு.

17. அமோகம் - மிகுதி; யூகம்-கருங்குரங்கு; பொரு கொம்பு-ஒன்றோடு ஒன்று மோதி வீழ்ந்த கொம்பு; சாகம்-வெள்ளாடு.

(18) பொன்னாடிது பெறாது பூவுலகத் திலேது!
சொன்ன திதுபோதாது சூட்சிகாணி யிப்போது—மலை.

(19) சொன்னதிது இன்னமுண்டு சோலைசூழு மெங்கள்நாடு
கன்னல்வளர் சிகரைக்கனிமொழியே|உன்னோடு—மலை.

## சந்த விருத்தம்

**49.** மலையையில் லாக்கியு மாறிநடித்து மதுரையி னரசாய்
அலைபுணரி யதுமேல் வலையது வீசியும் அணிமணி மாசிகரை
நிலைமைய தாகிய நிதிநவ நீதர்நிதம் தரும்சூழ் நாட்டில்
மலைவள முற்று மறைந்தது போனதி மாட்சியும் அறைவாயே.

## வசனம்

'ஓ யம்மா தெய்வக் குறத்தியாரே, நீர் மலைவளப்பஞ் சொன்னது கேட்டு மகா சந்தோசமாச்சுது அது போலப் பூமியிலுள்ள நதிவகைகளை யெல்லாம் சொல்லுமம்மா.'

## தரு

**50.** நதிவகை சொல்வேனம்மே—நாட்டிலிலுள்ள
நதிவகை சொல்வேனம்மே.

(1) நதிவகை சொல்வேனான் நளினச் சிகரை வெற்பில்
மதியணி நவநீதர் மகிழ்பெறு|மானே—நதி.

(2) கெங்கை யமுனை சரஸ்வதி யிவைமூன்றும்
கீண்டுமே புவியைத் தாண்டிப் பாதலமும்
செங்கண் மால்திரு விணையடி பணியும்
செகத்தில் மூழ்கினவர் சேர்பவ முனியும்—நதி.

---

(18) பொன்னாடு-தேவருலகு; இதுபெறாது-இவ் வளப்பம் பெறாது, சூட்சிகாணி-சுருக்கமாகக் காண்க.

49. மலையை வில்லாக்கியும் - மேருமலை மலையை வில்லாக்கியும்; இது முப்புர அழிப்பின் கதை; மாறி நடித்தும்-கால் மாறி நடித்தது; இது மதுரைத் திருவிளையாடல். புணரி-கடல்; மதுரையில் இறைவர் ஆட்சி புரிந்ததும், கடல் மேல் வலை வீசியதும் திருவிளையாடல் கதைகள்.

50. (2) கீண்டு - கிழித்து; பவம் முனியும்-பாவத்தைத் தொலைக்கும்.

(3) கெவுதமி பகிரதி கெண்டகி நதியும்
கேரள முதல்சில தேசங்கள் சூழும்
நவநதி களுமுண்டு நாடிமூழ் கினவர்பவம்
தொலைவது சொல்லப் பாந்தளா லாமோ—நதி

(4) தீர்த்தநதி கவுமோ தகிபிற பலையும்
திகழும்புவி யில்வெகு தேசங்கள் சூழும்
பார்த்த மனிதர் பவம்பயந்து நலிந்து
பரிதிமுன் பனிபோலப் பறக்குமே யம்மே—நதி

(5) கயிலைபவ னாசனி காளிந்தி மூன்றும்
கனகமணிப் புவியில் கனமாய் அறியும்
சயிலமுத லாயுள்ள சதிகள் சற்பனையும்
சகலமுந் தீர்க்கும் சாற்றஎன் னாலாமோ—நதி.

(6) சிந்து நடுபஞ்ச வடிபம்பை சீதை
சிறந்த கெவுரி விரசையுடன் சரயு
சந்திர பாவைமந் தாகினி நிவிதை
சங்க நதிமணி கர்ணியு மம்மே—நதி.

(7) நந்தினி வேகநதி துங்க பத்திரி
நல்ல அமிர்தவதி யனும் நதியும்
இந்திராணி கருடாத் திரியும் பவதி
எழில்சேர் ரூபா வதியுமுண் டம்மே—நதி.

(8) சொர்ண முகிகீர் வாணி கமலை
சோபா வதியும் பவானி யுடனே
வர்ணி மணிபத்ம நதியொடு கம்பை
வரிசை யென்னால்சொல்ல வாய்க்குமோ அம்மே
—நதி.

---

(3) பாந்தள்-பாம்பு; ஆதிசேடன்.

(4) பரிதி-கதிரோன்.

(5) சற்பனை - வஞ்சம் சாற்ற - சொல்ல; சயில முதலாயுள்ள - மலையளவாயுள்ள; சதி-மறைந்து செய்யும் கேடு; கீழறுப்பு.

## சந்த விருத்தம்

**51.** வானமிசை மேவுமணி மாசிகரை வாழும்
தேனவிர்போ துத்தெரியல் சூடுநவ நீதர்
பானமுத முவந்துவரு பண்ணுலகின் மின்னே
மானதிபு கன்றபடி மாதலமு ரைப்பாய்.

## வசனம்

'அம்மா தெய்வக் குறமாதே, நீர் நதிவகைகள் சொன்னது கேட்டு மகாசந்தோச மாச்சுது. அதுபோலப் பூமியிலுள்ள புண்ணியத் தலங்களையும் சொல்லுமம்மா'

## தரு

**52.** தேவர் வணங்கும் தெய்வத் தலமெல்லாம் உரைப்பேன்
தெளிந்து கேளடி அம்மே
நாவலர் புகழ்த்திருச் சிகரையில் வாழும்
நவநீதர் பதம்பணி நாயகமே—தேவர்.

(1) தேவபுரி வானபுரி வாஞ்சிபுரி யுந்திகழும்
கேதார மந்த்ரபுரி காஞ்சி
சேதுமா வெலிபுரி வர்ணபுரி சொர்ணபுரியும்
மகிழு மருணபுரி மதுரையு மம்மே— தேவர்.

(2) இந்த்ரபுரி நீலபுரி குமரியு மம்மே
எழில்துள சீவனஞ் சுவேத புரியே
சந்த்ரபுரி சோணபுரி தர்ம புரியும்
சக்கிர புரியுமறி வேனடி யம்மே—தேவர்.

(3) சவுரிதரு குந்தம் சேச புரியும்
சகனாதம் பிரம்மபுரி செழிக்கு மயோத்தி
பவனாசம் பழநிப்பதி யாயர் பாடி
பரமமுது குன்றமு மறிவேனான் அம்மே—தேவர்.

(4) அவுணபுரி பிரபல புரிகொல்லா புரியும்
அழகர் கோயில் வடமதுரை பூந்துருத்தி
அவினாசி தென்னரங்க மணிகுரு சேதரம்
ஆடுதுறை தென்காசி அறிவேனான் அம்மே—தேவர்

---

51. தேன்அவிர் போதுத் தெரியல்-தேன் ஒழுகும் பூமாலை; பானமுதம்-பாலமுதம்; எதுகை கருதித் திரிந்தது; மானதி - மாநதி; புகன்றபடி சொல்லியவாறு

(1) மாவெலிபுரி-மாவலிபுரம்.

(2) சுவேதபுரி - திருவெண்காடு.

(5) கடல்நாகை சென்னிமலை கழுக்குன்ற முடனே
கடவுள்சுப் பிரமணியங் கதிர்காமம் காசி
வடலாரூர் வண்டுவரை வளர்பஞ்ச நதமும்
வருதிருப் பழனமும் வரிசையாய் அறிவேன்—
தேவர்.

(6) திருப்புகலூர் பதரிவனம் திருக்குரு கூரும்
திருவனந்த சயனந் திருக்கடை யூரும்
திருக்கடந்தை களம்பூர் மருகலுங் குவளை
திருபுவன முதலாகத் தெரிசித்தேன் அம்மே—
தேவர்.

(7) ஆனைக்கா வுதிரி சிரபுரஞ் செந்தில்
அனந்த சயன மாவினன் குடிவயலூர்
சோனைக் காருமி ழுஞ்சோலை மயூரம்
சூழும் வலஞ்சுழியும் சுற்றினே னம்மே—தேவர்.

(8) அறிந்து சொன்னவி தடங்கலும் கிட்டி
அறைய வேண்டிய தின்னமள விரட்டி
முறிந்தவே யினில்மந்தி முத்துக ளுதிர்க்கும்
மோகனச் சிகரைவாழ் மொய்குழ லேகேள்—
தேவர்.

## சந்தவிருத்தம்

53. மேதிகள டைந்தகுள மீன்குலம்வெ ருண்டு
மாதிரவு டுக்களின் மருங்குலவி மீளும்
கோதில்சி கரைப்பதியில் வந்தகுற மாதே
சோதிபெறு வண்டநிலை சோர்வறவு ரைப்பாய்.

## வசனம்

'அம்மா தெய்வக் குறவர் குலத்திலக மாதே, தலங்களெல்லாம் சொன்னது கேட்டு மகா சந்தோசம் ஆச்சுது. அதுபோல அண்டகோள் நிலைகளையும் சொல்லுமம்மா.'

---

(5) பஞ்சநதம் - திருவையாறு.

(6) மயூரம் - திருமயிலாடுதுறை.

(7) இது அடங்கலும் - இவையெல்லாம்; கிட்டி - சென்று பார்த்து; இரட்டி - இரண்டு மடங்கு; வேய்-மூங்கில்.

53. மேதி-எருமை; மாதிர உடுக்கள் - விண் மீன்கள்; மருங்கு - பக்கம்; கோது இல் - குற்றம் இல்லாத; அண்டநிலை - அண்டங்களின் இயல்பு.

## தரு

**54.** அண்ட நிலமையெல்லாம் அறைகுவனான் இப்போது
அறிந்து கொள்ளடி அன்னமே
மண்டலத்தில் பூஞ்சோலை மாசிகரை யில்வாழு
மாமயி லேகுயிலே ஒயிலாக —அண்ட.

(1) மூலப் பகுதிதனில் முளைத்தது புந்தி;
முந்திய புந்தியில் முயன்றதைம் புலன்கள்;
கோலவா காசமுதல் குலவுபஞ்ச பூதங்கள்
ஞாலமீ றாக வந்த பிருதிவியின் கூறு—அண்ட.

(2) அண்டக்கன மோர்கோடி யகலம் ஐம்பது
ரெட்டியுண்டு யோசனை உயரமோ நூறுகோடி
புண்டரிகப் புத்தேள் பொருந்துமு லகமுதலாப்
புகழுமக லோகந்தவ லோகம் சிவலோகம்
—அண்ட.

(3) சுவலோகம் புவலோகம் சுவர்ணதேவ லோகம்
சுற்றுங் கதிர்மதி யொடு கால்சூழு
நவமண்ட லங்களும் குலமேகஞ் சேரும்
நலமான மண்டலம் முதலாம்புவி யளவு
—அண்ட

(4) மானிடர்கள் வாழும்பூ மண்டலமே மத்தி
மருங்கினிலெட் டுக்கண்டம் மருவநவ
கண்டமாய்
வானுயர் மணிமுடிமகமேரு நடுவதில்
வரிசையான குலவரை அதைச்சூழ நிற்கும்
—அண்ட.

---

54. அறைகுவன் - சொல்வேன்.

(1) புந்தி - புத்தி; பஞ்சபூதம் - மண், விண், தீ, நீர், காற்று; ஞாலம்-உலகம்; பிருதிவி-மண்.

(2) யோசனை - நான்கு கூப்பிடுதூரம்; புண்டரிகப் புத்தேள் - நான்முகன்.

(3) கால்-காற்று; நவமண்டலம்-ஆதித்தன், சோமன், அங்காரகன், புதன், பிருகற்பதி, சுக்கிரன், சனி, இராகு, கேது.

(4) நவகண்டம்: பரத கண்டம், குரு கண்டம், கிம்புருட கண்டம், இளாவிருத கண்டம், அருவருட கண்டம், கேதுமால கண்டம், இரமிய கண்டம், பத்திராசுவ கண்டம், இரணிய கண்டம்.

(5) நாலு நதிகளுடன் நான்குதருவு முண்டு
நந்தவனங் கள்நாலு நாற்றிசையு முண்டு
பால்நெய்மது தயிர்நீர் பாளிதமும் லவண
வேலைகளே ழிரட்டிவிரி தீவேழு முண்டு
—அண்ட.

(6) சொன்னநிலைக் குமப்பால் சொர்ணபுவியு முண்டு
சோர்விலா மல்வளைந்து சூழும்சக்கர வாளம்
அன்னகிரி யிற்பாதி ஆரிருள் மூடிநிற்கும்
அப்பாலப் பெரும்புறக் கடலதுவா கும்மே
—அண்ட.

(7) சூழல்வித மிதுவேசொன் னதுநிற்க வேறு
சுமக்கு மதலமுதலச் சுரிகனிட்ட மிறாக
ஏழுபா தலங்களும் இருக்குமொன்றின் கீழொன்றாய்
இசைந்தகெசங் களெட்டேந் திச்சுமந்து நிற்கும்
—அண்ட.

(8) ஆதிசேட னொடட்ட நாகமும் தாங்கும்
அடங்கலு மேசுமக்க ஆமையடி யிலுண்டு
பாதுகாக்கும் கூர்மாண்டர் பகருங்காலாக்னி ருத்ரர்
ஆதியான பரமவாட கரேரெட் சிக்கும்—அண்ட.

**விருத்தம்**

**55.** மல்லிகா ரணிய மென்றும் மதிதவழ் சிகரை என்றும்
சொல்லிய சிக்கல் வெற்பில் சுகம்பெற வந்த மாதே
எல்லொளிர் அண்டத் துள்ள எழிலெல்லாம் உரைத்த
வாறுன்
துல்லிய முடைய வித்தைத் தொகைகளும் உரைசெய்
வாயே.

---

(5) தரு - மரம்; பாளிதம் - கருப்பஞ்சாறு; லவணம் - உப்பு; வேலை - கடல்; இரட்டிவிரி- இருபங்கு விரிந்த. தீவு ஏழு-நாவல், இறலி, குசை, கிரவுஞ்சம், புட்கரம், தெங்கு, கமுகு.

(7) ஏழுபாதலம்-அதலம், விதலம், சுதலம், தராதலம், மகாதலம், இரசாதலம், பாதலம்; கெசங்கள்-யானைகள், திக்கு யானைகள்.

(8) அட்டநாகம்; வாசுகி, அனந்தன், தக்கன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன் கார்க்கோடகன் ; அடங்கலும் - அனைத்தும் ; கூர்மாண்டர் - ஓர் உருத்திரர்; பரம ஆடகர்- மேலோர்; ரட்சிக்கும் - காக்கும்.

55. எல்-கதிர்.

### வசனம்

'அம்மா அழகு குறவணங்கே, அண்ட நிலைமை சொன்னது கேட்டு மகாசந்தோசமாச்சுது. அதுபோல உமது அரிய வித்தைகளையும் சொல்லு மம்மா.'

### தரு

**56.** வித்தைகள் சொல்வேன் அம்மே
வித்தைகள் சொல்வேன் அம்மே
முத்தி மனிதர்க்கு நித்திய முந்தரும்
அத்தர் நவநீதர் சித்திரச் சிகரையில்—வித்தை.

(1) தம்பன மோகன வஞ்சனவுச்
சாடன மறிவேனான் அம்மே
பிம்பம தாய்மேக மின்னலைப் பற்றியோர்
பெண்ணென ஆக்குவேன் அம்மே—வித்தை.

(2) மத்த கெசத்தையும் பற்றியம் மனையாய்ச்
சுற்றி எறிவேனான் அம்மே
பத்துத் தலைராவ ணன்கதைக் கேட்கப்
பாரத நித்தம் முடிப்பேன்—வித்தை.

(3) பச்சைவில் லைப்பிடித் துச்சமில் லாமலே
பாணந் தொடுப்பேனான் அம்மே
பச்சிலை மூலிகை யால்மகா மேருவைப்
பந்தா யெடுத்தடிப்பேன் அம்மே—வித்தை.

(4) இரவைப் பகலாய்ப் பகலையிர வாக
இப்போது செய்வேனான் அம்மே
அரமணி மாலை அநேகமாய் வேணுமென்
றாலும் அளிப்பேன்காண் அம்மே—வித்தை.

---

56. (1) தம்பனம் - தம்பிக்கச் - செயலறச் செய்யும் வித்தை; மோகனம்-அறிவை மயக்குதல்; அஞ்சனம் - மந்திரம்; உச்சாடனம் - ஏவுதல்; பிம்பம்-வடிவம்.

(2) அம்மனை - அம்மானைக் காய்; இராவணன் கதை கேட்கப் பாரதம் முடித்தல் என்பது நிகழாதது-நிகழ்த்துதல்.

(3) பச்சைவில் - வானவில்; பாணம் - கணை.

(4) அரமணி - செம்மணி.

(5) கீரை விதையினில் ஏழு கடல்களின்
நீரை அடைப்பேனான் அம்மே
சூரசங் கார சுப்பிர மணியரை
மயிலேறி வரச்செய்வேன் அம்மே —வித்தை.

(6) பெண்ணையா ணாக்கவும் ஆணைப்பெண் ணாக்கவும்
பேத மறிவேன்நான் அம்மே
வெண்ணெய் தயிராகும் நெய்யும்வெண் ணெயாகும்
வேணதறி வேன்காண் அம்மே —வித்தை.

(7) ஊமை மலடிகள் பேசவும் கர்ப்பம்
உண்டாகச் செய்வேனான் அம்மே
காமனுங் கண்டு மயங்கக்கண் ணால்வெகு
காரியஞ் செய்வேன்காண் அம்மே —வித்தை.

(8) மாதவ ரோதிய ஞானமு மட்டாங்க
யோகம் அறிவேனான் அம்மே
வேதபு ராணமு மாகமம் இந்த்ர
சாலஅறி வேன்காண் அம்மே—வித்தை.

## விருத்தம்

57. சேல்களொடு வாளைகள் சிறந்தவயல் சூழும்
கோலவரை கொள்சிகரை பாலில்வரு மாதே
ஞாலமதி லுன்குறியை நண்ணினவர் பேரும்
சாலவவ ரீந்தபரி சவையெல்லாம் உரைப்பாய்.

## வசனம்

'அம்மா தெய்வக் குறத்தியாரே! அரிய வித்தைகள் சொன்னது கேட்டு மகா சந்தோச மாச்சுது. அதுபோல உமது குறி கேட்டவர்கள் பெயரும் அவர்கள் கொடுத்த வெகுமானமு மின்னவென்று சொல்லுமம்மா.'

---

(5) 'கீரை . . . அடைப்பேன்': 'கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்' குறுகத் தரித்த குறள்' என்பது போன்றது.

(6) வேணது - விரும்பியது.

(7) ஊமை பேசவும், மலடிகள் கர்ப்பம் உண்டாக என இயைக்க; நிரல் நிறையணி; காமன்-மன்மதன்.

57 (1) சேல் - கெண்டை மீன்; கோலம் - அழகு; சிகரைபால் - சிகரையில்; சால-மிக.

(2) வெகுமானம்-பரிசு.

### தரு

**58.** சேணுல கில்தெய்வ வாணிக்கே குறிசொன்னேன்
—அவள்
ஆணிப்பொன் னால்தந்த மாணிக்க மாலைபார்
மின்னே.

(1) இந்திரா ணிக்கொரு தந்திரம் விந்தையாய் உரைத்தேன்
—அவள்
நந்துமுத் தால்செய்த பந்துமுலைக் கச்சு நிறைத்தாள்.

(2) லச்சி மிக்கொரு பச்சிலை மூலிகை ஈந்தேன்—அவள்
பச்சை யிரத்தின மச்சக் கடையங்கள் வேய்ந்தாள்.

(3) பார்வ திக்கணி மோகமை அஞ்சனம் தீட்டினேன்—
அவள்
பருரத்தினத் தாவடம் கழுத்தில் மாட்டினாள்.

(4) வள்ளியம்மை உள்ளத்தில் உள்ளதை விடுத்தேன்—
அவள்
வெள்ளைக்கொக் கின்கண்டத் துள்ள மணிமாலை
கொடுத்தாள்.

(5) தெய்வயானை கருத்தை மெய்யாய் உரைத்தேன்—
அவள்
பையர வின்அடிச் செய்ய மணிவடம் பரித்தாள்.

(6) நாககன் னிக்கொரு மோகன பேதனங் காட்டினேன்—
புட்ப
ராக மணிஇழைத்த மோக வணிகளைப் பூட்டினாள்.

(7) ரம்பை மனதுக்குக் கெம்பீரங் கள்மிகச் சாத்தினேன்—
அவள்
அம்பொன் சரிகை யருகுமுத்துச் சேலை போர்த்தினாள்.

---

58. சேணுலகு-விண்ணுலகு; வாணி-கலைமகள்;
(1) நந்து - சங்கு.
(2) மச்சம் - பொன்; கடையம் - (கடகம்) கைவளை, வேய்ந்தாள் - அணிவித்தாள்.
(3) தாவடம் - தாழ்வடம் (சங்கிலி).
(5) பையரவு - படத்தையுடைய பாம்பு; பரித்தாள் - கொடுத்தாள்.
(6) மோகன பேதனம் - விரும்பத்தக்க பேதலிப்பு.
(7) சாத்தினேன் (சாற்றினேன்) - கூறினேன்.

## விருத்தம்

59. மேலுலக மாதிப்புவி மேவுமடவார்க்குச்
சாலமொழி மெய்க்குறிகள் சழக்கிலதுரைத்தாய்
ஞாலமதி லென்மனதில் நாடியதுரைத்தால்
கோலவணி தூசுபல கோடிகளை மீவேன்.

## வசனம்

'தெய்வக் குறவர் தையலர்க்கரசே, நீர் சொன்ன குறியுங் கன்னியர் நெறியுங் கேட்டு மகா சந்தோச மாச்சுது. அப்படியே என்லிதயத்துத் துன்னிய தின்னதென்று உரையுமம்மா.'

## தரு

60. சொல்லிய படிசெய்நான் சொல்லுங்குறி பொய்யாது
மல்லிய காரணி யத்தில் மருவிய மாதே—சொல்.

(1) பைம்பொன் மேடையின்மேல் பவழக்கால் நிறுத்திச்
செம்பொன் வளைபரப்பிச் செழுமுத்துப் பந்த
லிட்டுச் சொல்.

(2) சீதப் பன்னீர் தெளித்துச் சிறக்கவே கோலமிட்டு
வேதாகமப்படி விக்கினேசு வரனைப் பூசித்துச்
—சொல்.

(3) நீல மணியிழைந்த நித்திலப் பீடமிட்டுக்
கோல நவமணிப்பொன் கும்பமதன் மேல்வைத்துச்
—சொல்.

(4) முன்னே தூபமிட்டு முதிர்ந்ததேங் காயுடைத்துக்
கன்னல்ரசமும் பாகும் கனிவருக்கங் களும்வைத்துச்
—சொல்.

(5) கெந்தகத் தூரியுடன் கேதகி மலர்சாத்தி
மந்தாரை செண்பகமு மல்லிகைமுல் லைசாத்திச்
—சொல்.

(6) அதிரச முடன்வடை அன்னம்பா யசம்புட்டு
மதுரமான கறியன் மாநறுநெய் யும்விட்டுச்—சொல்.

---

59. சழக்கு இலது - குற்றமற்றது, பொய்க்காதது; தூசு - உடை.

(1) கால் - தூண்; வளை - கைவளை.

(3) நித்திலம் - முத்து; கும்பம்-குடம்.

(4) கன்னல் ரசம் - கரும்பஞ் சாறு.

(5) கேதகிமலர் - தாழைமலர்.

(6) புட்டு-பிட்டு.

(7) புள்ளிமயில் வேலர்க்கும் பொருந்தத்தேன் தினைமாவும்
வள்ளிமா துக்குமுத்து மாலை ரத்தினச் சேலைபூவும்—
சொல்.

(8) நித்திய கருமமுடித்து நிறைநாழிச் செந்நெல் வைத்து
சுத்திவந் தேபணிந்து சூடவாலாந் திருந்திச்—சொல்.

### விருத்தம்

61. நின்னயப் பொருளாம் சிக்கல் நிலைநவ நிதியைப்
போற்றும்
பொன்னகர்க் குறவ மாதே புகன்றவுன் மொழியின்
வாறே
என்னக முவந்து செய்தேன் இனியநீ தெய்வம் போற்றி
உன்னுமென் சிந்தை யுள்ள தொன்றொன்றாய்ச்
சொல்லு வாயே.

### வசனம்

'அம்மா அருந்தெய்வக் குறமடந்தையே, நீ சொல்லிய படி எல்லாம் செய்தேன். ஆதலால் என் மனத்தில் இருக்கிற ஒன்றும் ஒன்றாய்ச் சொல்லுமம்மா.'

### அகவல்

62. ஆதிகா மாட்சி அணிமந்த்ர சூட்சி
கோதில்மீ னாட்சி குமுதநீ லாட்சி
கோரமா தங்கி கொடுதிரி பங்கி
சூரமா நடாங்கி சுப்ரதீ பாங்கி
கரதல கபாலி யந்தரி சூலி
மரகத மாலி மார்த்தாண்ட நீலி
ஊர்தியணி யாளி உம்பர்க்கு மீளி
பூதவே தாளி புவனமா காளி
கானகெம் பீரி கந்திகௌ மாரி

---

(8) சுத்தி-சுற்றி.

61. நின்னயம் (நிர்ணயம்) - நிலைத்த; நவநிதி - நவநீதர்; புகன்ற - சொன்ன; உன்னும்- நினைக்கும்.

62. 2. கோதில் - குற்றமில்லாத; குமுதம்- அல்லி; 5. கபாலி - தலையோடுடையவள்; சூலி- சூலத்தையுடையவள்; 6. மாலி-மாலையணிந்தவள்; 7. உம்பர்-தேவர்.

மானினி சூரி மதுகரம் நாரி
பங்கய பாணி பரமகல் யாணி
துங்ககீர் வாணி தூய்மலர் வேணி
கொல்லிமலை யாயி கோரமா மாயி
சரவண பவனே சத்திவே லவனே
அறுமுகத் தவனே அணிமயில் குகனே
சத்துருசங் காரா சண்முக தீரா
முத்துவேல் வீரா மோகனா தாரா
நள்ளிருட் கோதாய் நாமவேல் விழியாய்
வள்ளிமா மயிலே வளர்மொழிக் குயிலே
தேவநா யகியே தேமலர் முகியே
பாவநா சனியே பகவன்மோ கினியே—
எனக்குமுன் குறியுரைக்கவா ஈஸ்வரியே வரமருள்.

### தரு

**68.** குறியான் இயம்பக் கேளம்மே—அம்மம்மே உன்கைக்
குறியான் இயம்பக் கேளம்மே
திரிலோக முந்தெரிந்த தெய்வக்குற வர்நாங்கள்
அறியாது துலகிலுண்டோ அழகுசிக ரைமாதே —குறி.

(1) கைக்குறி சொல்பவர் கண்டத்தில் சிலருண்டு
பொய்க்குறி சொல்லுவதும் பூனைக்குறச் சாதிகாண்
எக்குறி களும்நாங்கள் இலங்கநன்றா யறிவோமே
மெய்க்குறியே சொல்வோம் மேலுலகத்தில்
முதலாகக்—குறி.

(2) சிரமும் வதனமும் சீர்பெறு நுதலும்
கரமும் உரமும்மணி கண்டமும் தொனியும்
தரமும் குலமும்தளர் காட்சியும் தழைவும்
வரமும் திறமுந்தன் வரிசையும் கண்டு—குறி.

(3) பண்டுள செய்தியும் பரம்பரை முதலாய்க்
கண்டதும் கேட்டதும் கருத்தினில் வைப்பும்
உண்டதும் உடுத்ததும் உறக்கத்தி லுதிப்பும்
சென்றதும் இனிச்செயும் செய்கையும் தெரிந்து
—குறி.

---

(10) மதுகரம் - தேனீ. 12. வேணி-சடை.
(18) நாமம் - அச்சம்.
(1-13) சக்தியை அழைத்தது.
(14-17) முருகனை அழைத்தது.
(18-21) வள்ளி தேவசேனையரை அழைத்தது.
63. கண்டம் - உலகம்.
(2) உரம் - மார்பு.
(3) உறக்கத்தில் உதிப்பு-கனவும் அரற்றலும்.

### தரு

**64.** சங்கரேகை யொன்றும் ஈதம்மே சரஸ்வதி
செங்கையினிற் கண்டேனான் அம்மே.

(1) மச்சரேகை என்ப நீதம்மே மாணிக்கவல்லி
பச்சை வளைக் கையிலுண் டம்மே.

(2) அட்சய ரேகையீதே யம்மே நிச்சயமாக
லட்சுமி தேவிக்கீதே யம்மே.

(3) சங்கிலிப் பிணங்களீ தம்மே மங்கையர்க் கெல்லாம்
மங்கையர் குணங்களீ தம்மே.

(4) கமலே ரேகை ஈதேயம்மே சக்திகர
கமலத் தமர்ந்ததீ தம்மே.

(5) செய்யபத்ம ரேகையீ தம்மே தேவதேவன்மேல்
மையல் வந்த வகைதோ தம்மே.

### கலிப்பா

**65.** பாடல்களித் தளியிசைக்கும் பழனமிடை சூழ்சிகரை
ஆடரவக் கங்கணத்தார் அத்தர்நவ நீதர்வெற்பில்
ஏடவிழும் பூங்குழலாய் எழிற்குறவர் மாதேநான்
நாடுமவர் பேருரும் நன்கடையா ளமுமுரைப்பாய்.

### வசனம்

'அம்மா தேவக் குறவர் பாவையே, நீர் குறிசொன்னது கேட்டு மகா சந்தோசமாச்சுது. நான் இச்சித்த நாயகனுடைய பெயர் அடையாளங்களையும் சொல்லுமம்மா.'

### தரு

**66.** சரசுநதிக் கதிபனம்மே
சதுரரெட்டிக் குணத்தனம்மே,

(1) தேவமலர்க் காவனம்மே
திகழுமம் பொன் லோகனம்மே.

(2) வெள்ளிமலைத் தலைவனம்மே
வேங்கையுரிக் கலையனம்மே.

---

64. மாணிக்கவல்லி - உமையம்மை.
(1) தோது - வாய்ப்பு, நன்று.

65. கங்கணத்தார் - சிவபெருமாள்; கங்கணம் - மோதிரம்; ஏடு - இதழ்.

66. சதுர ரெட்டி - நான்கை இரண்டாக்கிய எட்டு.
(2) வேங்கையுரி - புலித்தோல்; கலை- உடை.

(3) பொன்மலைவிற் கையனம்மே
பொங்கழற்கண் மெய்யனம்மே.

(4) செவ்வான் நிறத்தனம்மே
சிறுத்ததுடிக் கரத்தனம்மே.

(5) மறைக்குமெட்டா வடிவனம்மே
மாலிடபக் கொடியனம்மே.

(6) தோற்றமி றிலையனம்மே
தொல்சிகரைத் தலைவனம்மே.

(7) பொங்கரவச் சடையனம்மே
பொருந்துமழுப் படையனம்மே.

(8) கங்கைமுடி யுடையனம்மே
கதம்ப தும்பைத் தொடையனம்மே.

(9) முச்சூலப் படையனம்மே
முப்புரத்தைத் துடையனம்மே.

(10) சக்தியணி நாதனம்மே
சமேதநவ நீதனம்மே.

(11) மையல்தந்தா னுனக்கம்மே
மகிழ்ந்துவந் தணைவனம்மே.

### சந்த விருத்தம்

**67.** ஆருமறி யாதவென தாந்திரிக மெல்லாம்
நேருரை நீகரத லாமலக மென்ன
மேருசிக ரைப்பதியில் மேவுநவ நீதர்
சேரவெனை யேவரும் செழும்பொழு தியம்பாய்.

### வசனம்

'அம்மா தெய்வக் குறவர் தையலே, நீர் அடையாளம் சொன்னது கேட்டு மகா சந்தோசமாச்சுது. அவர் எப்போது என்னை வந்து சேர்வார். அதைச் சொல்லுமம்மா?'

---

(1) அழற் கண் - நெற்றிக்கண்; மெய்யன்-உடலன்.
(2) மால் இடபம் - திருமாலாகிய இடபம் (காளை).
(4) தொடை-மாலை.
(5) துடையன் - துடைத்தவன், அழித்தவன்.
(6) சமேதம் - உடனாதல்.
(1-11) தலைவன் இயல் இயம்பல்
67. தாந்திரிகம் - வரலாறு; கரதல ஆமலகம்- உள்ளங்கை நெல்லிக் கனி.

## தரு

68. கெவுளி பலக்குதே யம்மா
கெவுளி பலக்குதே
நவநீத நாதரின் றுன்னை
நாடியணைவ ரென்று—கெவுளி.

(1) சித்தமென்ற பெண்ணுனக்கு
தூது சென்றதால்
அத்தர்நவ நீதருன்னை
அன்பாய்ச் சேருவரென்று—கெவுளி.

(2) மனம்புத்தி ஆங்காரம்
அந்தக் கரணமும்
மாறாமல் தூதிசென்றால்
மருவலாமிப் போதென்று—கெவுளி.

(3) இடகலை பிங்கலை
என்னும் இரண்டிலுமாய்
நடவும்வாசி சிக்கினால்
நாதனைக்காண் பாயென்று—கெவுளி.

(4) சுழிமுனை தனைநாட்டிச்
சொக்கித்தன் மயமானால்
வழியது வேதுரித
வாழ்வதைக் காணலா மென்று—கெவுளி.

## விருத்தம்

69. சிறுநிலா வணிந்த வேணிச் சிகரைவாழ் வெண்ணெய் லிங்கர்
நறுமலர்ப் பதத்தில் சிந்தை நாடினேன் என்று கண்டு
உறுதியாய் உரைத்த மாதே, உன்மனம் களிக்க விந்த
மறுவிலாப் பூணும் பட்டும் மாநிதி கைக்கொள் வாயே.

---

68. கெவுளி (கவுளி)-பல்லி; பலக்குது-ஒலிக்கிறது.

(1) சித்தம் என்ற பெண் - மனமாகிய பெண்.

(2) ஆங்காரம் - (அகங்காரம்) ஆணவம்; மருவலாம்-கூடலாம்.

(1) வாசி-காற்று.

(1-4) இவை உயிர் இறையை ஒன்றும் வகையை உரைத்தது.

69. பூண்-அணிகலம்.

### வசனம்

'வாருமம்மா தெய்வக் குறவர் மாதே, ஒருவராலும் அறிந்துரைக்க ஒண்ணாத எனது அந்தரங்கங்கள் எல்லாம் நீர் சரியாய்ச் சொன்னதால் இந்த வஸ்திரம் ஆபரணம் தனம் இவைகளைச் சந்தோசமாய் வாங்கிக் கொள்ளுமம்மா.'

### விருத்தம்

**70.** மோகினி யளித்த வெல்லாம் மோகமாய்க் குறத்தி வாங்கி
ஆகமு மகிழ்ச்சி பொங்க அமர்ந்திடு காலை தன்னில்
தாகமாய்ச் சிங்கி தன்னைத் தாரணி எங்கும் தேடி
வேகமாய்ச் சிகரை தன்னில் விரைந்துசிங் கனும்வந்
தானே.

### விருத்தம்

**71.** பருமணி உருத்தி ராட்சம் பாலையும் சங்கும் பூண்டும்
கருமுகில் என்னக் கொண்டை கட்டிவி சையைமுறுக்கி
இருநிறக் கச்சி றுக்கி எழில்தெய்வ லோகம் வாழும்
திருக்குற வஞ்சி தன்னைத் தேடிச்சிங் கனும்வந் தானே.

### தரு

**72.** சிங்கன் வந்தானே—ஒய்யாரச்
சிங்கன் வந்தானே.
சிங்கனும் வந்தானங் கமதாகப்
பங்கயச் சிகரை நாட்டிலே—சிங்கன்.

(1) சங்குமணி பவழந்திரளும்—சரி
செங்கழுநீர் மணிமுத்துகளும்
வங்கணமான இங்கித மாலை
தங்கிய மார்பி லிலங்க மகிழ்ந்து—சிங்கன்.

---

70. ஆகம் - மனம்; தாரணி (தரணி)-உலகம்.

71. இரு நிறம்-கருநிறம்.

72. அங்கமதாக - ஓர் உட்குறிப்போடு, அலங்காரத்தோடுமாம்.

(1) வங்கணம் - விருப்பம்; இங்கிதம் - இசைவு.

(2) வீசைகளிரண்டு முறுக்கியே—பல
பாசைகள் கண்டு வுறுக்கியே
வாசனைமிகப் பூசியே லெக்கில்
ஆசையிழுக்க நேசி யிச்சிக்க—சிங்கன்.

(3) தும்புருபோ லிசைபாடியே—தன்
சம்பிரம சிங்கியை நாடியே
வம்புடனே இடும்பைகள் பேசி
அம்புடனேசிலைக் கம்புகொண்டு—சிங்கன்.

## விருத்தம்

73. சிங்கியைத் தேடிக் காணாச் சிங்கனும் திகைத்து மிக்க
பங்கயச் சிகரை சூழும் பாலெலாம் பார்க்கு மெல்லை
இங்கிதக் குறத்தி யோடும் எழிற்குற வனையும் தேடி
வங்கணச் சிங்கன் வந்து வளமுடன் தோணி னானே.

## தரு

74. வங்கணச் சிங்கன் வந்தான்—சிங்கனை நாடி
வங்கணச் சிங்கன் வந்தான்.

(1) வங்கணச் சிங்கன் வந்தான்
வார்கடல் உலகில் எங்கும்
சங்கையில் லாமல் தேடித்
சலிப்புடன் மனமும் வாடி—வங்கணச்.

(2) கருக்கடை விண்டானே—அச்
செருக்குக் குறத்திமோகம்
சிரசில் ஏறிக் கொண்டதோ
அருக்காணித் தோழனைத் தேடி—வங்கணச்.

---

(2) உறுக்கி-அதட்டி; லெக்கில் (இலக்கில்)-இடத்தில்; நேசி - அன்புக்குரிய சிங்கியாகிய குறவஞ்சி.

(3) சிலைக்கம்பு-வில்.

73. பால் - பகுதி; சிங்கனையும் சிங்கியையும் காணாமல் தேடி வந்தான் வங்கணச் சிங்கன். வங்கணம் - நட்பு, அகத்துறையுள் வரும் தோழன் போல்வான் வங்கணச் சிங்கன் என்க.

74. (1) வார்கடல் - நெடிய கடல்.

(2) கருக்கடை - அக்கறை; விண்டான்-கூறினான்; அருக்காணி - அருமை.

(3) வலைகளை எடுத்தானோ காட்டினில் ஏகிச்
சிலைகளை விடுத்தானோ மலைகளை அடுத்தானோ
மாநிலந் தனில்வேறு நிலைகளைத் தொடுத்தானோ
நிசமறிகி லேனென்று— வங்கணச்.

(4) எந்த இடத்திற் சென்றானோ—சிங்கியைக்
கண்டு மந்தக் கோபமே கொண்டானோ
விந்தையான சிகரை வெண்ணெய் லிங்கர்
கந்த மல்லிகைக் காட்டில் நிற்பானோ என்று—
வங்கணச்.

### விருத்தம்

75. வந்தவங்க ணச்சிங்கனும் சிங்கனைத் தழுவி
இந்தலோகங் களெங்கணும் தேடினே னுன்னை
முந்தி வந்த சிங்கியை முயன்றுகண் டிலையா
விந்தையா தெனவினவி இருவரும் சேர்ந்தார்.

### விருத்தம்

76. இங்கிவர் இருவர் சிங்கி எங்கணும் தேடிக் காணார்
செங்கதிர் தவழ ஓங்கும் சிகரைசூழ் சோலை தன்னில்
தங்கிய பட்சி சாதி தனைக்கண்டு மோக மாகிச்
சிங்கியை மறந்து பக்கி சிக்கெனப் பிடிக்கின் றாரே.

### தரு

77. கண்ணி கொண்டு வாடா அய்யே—குத்தக்
கண்ணி கொண்டு வாடா.

(1) கண்ணி கொண்டு வாடா கண்ணப் பிடித்திப்போ
வெண்ணெயில் பொரித்துத் திண்ணலாம் பக்கிகள்—
கண்ணி.

(2) தேவச் சிகரையில் மேவும் திருட்டுப்பு
றாவுக ளுன்னுடன் கூவக்கேட் டாலோடும்—
கண்ணி.

---

(3) நிலைகள் - இடங்கள்; நிசம் - உண்மை.
(4) கந்தம் - மணம்.
76. பக்கி-பட்சி; பறவை.
77. கண்ணி - பறவை பிடிக்கும் முடிக்கயிறு.
(1) கண்ண (கண்ணை); திண்ணலாம்-தின்னலாம்.
(2) ஆலா-ஒரு பறவை.

(3) பாலைக் குளத்துக்கு மேலே பறந்திட்ட
ஆலாக் கூட்டமிதோ சாலையில் போகுது—கண்ணி.

(4) பறவச் சேரிக்கூடைக்குறவர் வலைகளை
அறவச்ச மாடப் புறவுகள் மேயுது—கண்ணி.

(5) கரிவேலித் தோப்பிலப் பெரிய மாவினில்
வரிசையாய் நின்ற அரிக்குரு விக்குக்—கண்ணி.

(6) ஒறத்தூரில் கண்ட சிறகி நாலஞ்சு
தறையில குந்தாமல் முறுமு றுக்குது—கண்ணி.

(7) வேருக் குடியினில் காரைச் செடியினில்
நாரை யிருந்துரே பாரையே இந்தாரே—கண்ணி.

(8) கரைய ரிப்பினில் அரைச மரத்திலப்
புரையி லிருந்த நரையான் வருகுது—கண்ணி.

(9) பனைமேட் டேரியில் நனைஞ்சு மூழ்கின
சினைத்தாரா யிதனை நினைத்துப் பார்த்தேநான்
—கண்ணி.

(10) சிங்கார வேல்புரத்தில் தங்கி யிருந்ததாம்
செங்கால் நாரையிரு தங்க விலையில்ல—கண்ணி.

(11) குத்தம் தெரிப்பில சுத்திச்சுத் திமேய்ந்த
மொத்தக்கூ ழைக்கடாப் பத்துப் பணம்பெறும்
—கண்ணி.

(12) சங்கமங் கலத்தில் புங்க மரத்தினில்
தொங்கக் கூடுகட்டுஞ் செங்காச் சிட்டோடுது
—கண்ணி.

(13) பறங்கிநல் லூரினில் கறங்குபோ லேதிரிந்து
உறங்காக் கருவாலி யிறங்குதிப் போதிங்கே
—கண்ணி.

---

(4) அறவச்ச - அறுமாறு வைத்த.

(6) சிறகி - ஒரு நீர்ப்பறவை; தறை - தரை; குந்தாமல் - உட்காராமல்; ஒறத்தூர் - உரத்தூர்.

(7) ரே - அடே, இந்தாரே - இந்தா அடே.

(8) புரை - பொந்து.

(12) புங்கு - புன்கு; செங்கா - செங்கால்,

(13) கறங்கு - காற்றாடி; கருவாலி (கதுவாலி) கௌதாரி.

### தரு

**78.** கெம்பரேக் கெம்பரேக்
கெம்பரேக் கெம்பரேக்—ஐயே

(1) சம்பிரமச் சிகரைநாட்டில் சனித்திபக் கிகள்மிக
எம்பிட்டால் போதுநமக்குக் கும்பிடுறேன் சும்மா
தம்பி—கெம்.

(2) நாரணப் பையர்வய லேரிக்கட் டளையினில்
நாரை வருகுது குருகுது முருகுது—கெம்.

(3) அப்பாப்பிள்ளை சேத்தியில் ஆவணியா குளத்து
வப்பிக் கொக்கு வாடுது கூடுது ஆடுது ஓடுது
—கெம்.

(4) அண்ணா மலைப்பிள்ளை ஆயக்காரன் கட்டளை
வன்னக்கிளி வாவுது கூவுது மேவுது போவுது-கெம்.

(5) பொன்னையா பிள்ளைவயல் பூலாங்குத்தில்
நேத்துப்
பின்னல் வலையறுத்த பீலிக்குக் காலிலே நூலிது
—கெம்.

### தரு

**79.** கூப்பிடர்ரே அய்யே அய்யய்யே
கூப்பிடர்ரே அய்யே

(1) கூப்பிட்டரே வாப்புதைத்திரு
தோப்பிலதே ஆப்பிடும் பக்கி—கூப்பி.

(2) மானம் பாடியுடன் சிச்சிலி
மாங்குயில் மேயுதே
கானங் கோழி காடை கவுதாரி
நாணத் தானுடன் நாரை சேருது—கூப்பி.

---

78. 'கெம்பரே' ஓர் இசைமெட்டு.
(1) சனித்த - தோன்றிய; எம்பிட்டால் - அகப்பட்டால்.
(2) கட்டளை - தொகுப்பான நிலம், பண்ணை.
(3) சேத்தி - சேர்ந்த நிலம்; வப்பி - நல்ல.
(4) வாவுது - தாவுது.
(5) குத்து - வயல்; நேத்து - நேற்று; பீலி-மயில்.
79. கூப்பிடர்ரே - கூப்பிடு அடே.
(1) வாய்புதைத்து - வாயைப் பொத்தி ; ஆப்பிடும்-அகப்படும்.
(2) மானம் பாடி - வானம்பாடி; நாணத் தான்-நாகணவாய்ப் புள் (மைனா).

(3) ஊர்க்குருவி பரந்து மடைக்கலாம்
ஊர்ந்து சூழ்ந் திருக்கே
சேக்கைவிட்டுப் பிறாக்கள் வருதுநீர்க்
காக்கை யோமெத்த வாக்கித் திங்கலாம்—கூப்பி.

(4) போத்துடனே யுள்ளான் மடையானும்
சேத்துமாட்டுங் கண்ணி வாத்துப் பறக்குது
சேத்தில் இறங்காமல் நேத்தி
மயில்கறி பாத்துத் திங்கலாம்—கூப்பி.

### தரு

80. பக்கிக் கறியுருசி யெல்லாம் பகரக் கேளடையே
அக்கணியும் கண்டரெங்கள் நவநீதர் நாட்டில்—பக்கிக்.

(1) கொக்குக்கறி குயிலின்கறி கொப்புத்தேனும் கைக்கும்
மிக்கவரா னாலும்தின்னு கண்டால் சும்மா மொக்கும்—பக்கிக்.

(2) ஆலாக்கறி அன்றில்கறி யார்க்கும்கிடைக் காது
வேலையமு துஞ்சலிக்கும் பாலுமிகக் கசக்கும்—பக்கிக்.

(3) மயிலின்கறி தின்றவர்க்கு மலையின் பலம் உண்டே
பயிலாய் காமப்பேயும் பாதியிரவில் தட்டி எழுப்பும்—பக்கிக்.

(4) சிச்சிலியின் கறிக்கியொரு பச்சிலையும் நிகரோ
பிச்செடுத்துத் தின்றவர்க்கு வச்சிரகாய மையே—பக்கிக்.

---

(4) பரந்து - பருந்து; அடைக்கலாம் - அடைக்கலான் குருவி; சேக்கை - கூடு; வாக்கி- வாட்டி.

(2) சேத்து - சேர்த்து; சேத்தில் - சேற்றில். நேத்தி - நேர்த்தி; பாத்துத் திங்கலாம் - பார்த்துத் தின்னலாம்.

80. பகர - சொல்ல; 'கேள் அட ஐயே' அக்கு - எலும்பு; கண்டர்-கழுத்தர்.

(1) கொப்பு - கொம்பு; மொக்கும் - நிரம்பத் தின்னுவர்.

(3) பயிலாய்-பயலே!

(4) வச்சிர காயம் - வச்சிரம் போன்ற வலிய உடல்.

### விருத்தம்

**81.** சிக்கிய பக்கி யெல்லாம் சேத்துமே வெவ்வே றாகச்
சிக்கத்தில் அடைத்த பின்னர்ச் சிங்கியை நினைத்துச் சிங்கன்
பக்குவ மாக ஆக்கிப் பகருவாள் எனக்கை யையயே
தக்கவள் அவளே என்று தயங்கியே தேடி னானே.

### தரு

**82.** சிங்கியைக் காணேனே—ஐயையயே நான்
சிங்கியைக் காணேனே.

(1) சிங்கியைக் காணேனே எங்கும்தேடி னேனே
பொங்கிக்கோ பத்தாலே தங்கிப்போ னாளே—சிங்கி.

(2) சும்மா சும்மா தொடுவாள் மாட்டேன் என்றால்
அம்மி அம்மி விடுவாள்
இம்மாத் திரமன மிரங்காமல் இருப்பாளோ
பம்மாத்துகள் செய்யும் பொம்மலாட் டக்காரச்
—சிங்கி.

(3) கிட்டிக்கிட்டி வருவாள் வேண்டா மென்றால்
கட்டிக் கட்டிச் சேருவாள்
பொட்டிட்டுக் கொண்டாலும் திட்டிவரு மென்பாள்
மட்டி லாதகாமத் துட்டிகட்டி கெட்டிச்—சிங்கி.

(4) தின்று பாத்து ருசியாய்க் கறிகளை
மென்று வாயில் தருவாள்
கொண்டு முலையைப் பிடித்துக் கொடுத்துமேல்
கொண்டு நின்று பண்டுகண்டு செய்யுங்குறச்—சிங்கி.

### தரு

**83.** சிங்கியைக் காட்டடையே—என்றன் குறச்
சிங்கியைக் காட்டடையே.

(1) மங்கை வசிய மருந்துடன் மூலிகை
செங்கையில் சேரச் சணத்தில் தருகிறேன்—சிங்கி.

---

81. சிக்கம் - கூடு; பகருவாள்-படைப்பாள்.

82. (2) அம்மி அம்மி - பிடித்துப் பிடித்து; இம்மாத்திரம் - இவ்வளவு; பம்மாத்து - ஏமாற்று.

(3) கிட்டி - நெருங்கி; திட்டி-கண்ணேறு; மட்டி - சிறுக்கி; கெட்டி - திறமைசாலி.

83. 'காட்டு அட ஐயே'

(2) ராச வசீகர மாம்நரிக் கொம்பும்
பூசு வாடையான புனுகுநான் தாறேன்—சிங்கி.

(3) லோக வசீகர மானவே ரும்சுக
போகக் குளிகையும் சுருக்கில் நான்தாறேன்—சிங்கி.

### தரு

84. சிங்கி வந்தாளே எங்கேடையே
அய்யையே அப்பையே என்றன்
சிங்கி வந்தாளே எங்கேடையே
அய்யையே எங்கேடையே—சிங்கி.

(1) சிங்கியும் வந்தாள் நங்கையர் மகிழ
பங்கயச் சிகரை அலங்கிறு நாட்டில்—சிங்கி.

(2) பாடளிக ளுலவு கொண்டை—நறைமிகுந்த
ஏடவிழ் பூவு மதிலுண்டே—சிங்கி.

(3) நானங் கத்தூரி வாசனை பூசிச் சாடைகள் பேசிச்
சோடு பிரிந்த பேடைய தெனவே—சிங்கி.

(4) அம்புலிக்கு மிகுவதனம் வடிமிகுந்த
அம்பே கண்களுக்கு நிதானம் புடைத்தெழுந்த
கும்ப முலைக்கும் செம்பொன் மலைக்கும்
அம்புச மொக்குக் கும்பகை யில்லாச்—சிங்கி.

(5) வால்வளைக் கேநிகர் கழுத்துஅணி மிகுந்த
பால்நிற மொக்குமே பல்முத்து அடிவயிறு
ஆலிலை ஒக்கும் அழகு காட்டும்
சேல்களும் வெட்கும் கால்களு முள்ள—சிங்கி.

---

(2) தாறேன் - தருகிறேன்.

84. அய்யய்யே, அப்பையே - வியப்பொலிகள், 'ஐயோ இவன் என்பதோர் அழியா அழகு' என்றார் கம்பர். 'எங்கே அட ஐயே.

(1) அலங்கிறு-அழகமைந்த.

(2) பாடு அளிகள் - பாடும் வண்டுகள்; ஏடு அவிழ்-இதழ் மலர்ந்த.

(3) சாடை - குறிப்பு; சோடு - இணை; பேடை - பெட்டை.

(4) அம்புலி - நிலவு; வடி-கூர்மை; அம்புசம் - தாமரை.

(5) வால்வளை - சங்கு; மின்னலென இயங்கலால் சேல்கள் வெட்கும்.

**வசனம்**

'அய்யே என்னடையே எங்கும் தேடினோமே சிங்கி இதோ இருக்கிறா ளடையே.'

**85.** தேவலோ கம்விட்டுத் திண்புவியி லேன்வந்தாய் சிங்கி
திருச்சிகரை நாதரைத் தெரிசிக்க வந்தேனான் சிங்கா.

(1) கற்பனை செய்தெனைத் தனித்துநீ வந்தாயே சிங்கி
சாதித்திரு டன்பிறர் மீதில்நம்பு வதுண்டோ சிங்கா.

(2) மானம்விட் டொருவன்பின் மயங்கிநீ வந்தாயே சிங்கி
மடியிற்கன முமில்லை வழியிற்பயமு மேதுசொல்லு சிங்கா.

(3) ஈனமில் லாக்குறச் சாதிக் கிழுக்குவைத்தாய் சிங்கி
இல்லாது பிறவா தள்ளாது குறையாது சிங்கா.

(4) கற்புனக் குக்குறைந்த காரண மேதடி சிங்கி
காட்டி லெரித்தகொக்கைக் கண்டொருத்தி சொன்னாளே சிங்கா.

(5) வடிமெழுகானகுடி வரிசையெலாங்கெடுத்தாய் சிங்கி
துடிதுடித்து மேயிந்தத் துடுக்கே எனைச் சொல் லுறாய் சிங்கா.

(6) குறித்துவந் ததுவேறே குறிபார்க்க வலைநீ சிங்கி
குத்தமுள்ள வர்மனங் குறைகுறிப்பா வெண்ணுஞ் சிங்கா.

(7) சிறுக்கிமனங்காணாமல் செடிகாத்தவன் போலாச்சே சிங்கி
சிவமறியு மென்சிந்தை சிறைகாப்ப தெவனடா சிங்கா.

---

(1) 'என்ன அட ஐயே'

85. கற்பனை - வஞ்சகம்; சாதித்திருடன் - பிறவித் திருடன்.

(4) 'காட்டில் எரித்த கொக்கு' என்றது 'கொக்கென்று நினைத்தனையோ கொங்கணவா?' என்னும் கற்புடையாள் கதை.

(5) வடிமெழுகான குடி - தூய்மையான குடி.

(6) அலை - அல்லை; குத்தம் - குற்றம்.

(7) சிறை காப்பது 'சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர் நிறை காக்கும் காப்பே தலை' திருக்.

(8) பொய்க்குப் பொருளுரைக்கப் பொருந்தினை நீமெத்தச் சிங்கி
புலிபசித் தால்புல்லைப் பொசிக்குமோ உலகத்தில் சிங்கா.

(9) கணவனென் றெண்ணாமல் கவடுசெய்து வந்தாயே சிங்கி
கள்ளனுடைய அச்சங் காடுகொள் ளாதடா சிங்கா.

(10) உன்மனத் தறியாமல் உரைத்தது பொறுத்தருள் சிங்கி
உபசாரம் போதுமுன் னுறவுநல் லுறவு சிங்கா.

(11) என்றன் மயல்தீர இரங்கி யெனைஅணைவாய் சிங்கி
இரதியும் மதனும்போல் எந்நாளும் வாழ்ந்திருப்போம் சிங்கா.

**முடிந்தது, முற்றும் - மங்களம்**

சுபமஸ்து

பரிதாபி வரு தை மீ 2உ புதவாரம் எழுதி முடிந்தது. இவை திருவாரூர் ஸ்கூல் மாஸ்டர்

சொக்கலிங்கம் பிள்ளையால் செய்யலாச்சுது.''

முற்றிற்று

---

(8) பொருள் - மெய்; 'பொய்யில் புலவன் பொருளுரை தேறாய் மணிமே. பொசுக்குமோ- தின்னுமோ.

(9) கவடு - பிளவு, வஞ்சகம்; 'கள்ளனுக்கு இருக்கும் அச்சம் காட்டுக்கு இல்லை' என்பது.

(10) உள்மனத்து - உன்மனத்துள்ளது; உப சாரம் - புகழுரை, புகழ்ச்சி.

(11) மதன்-மன்மதன்.

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி

(எண் செய்யுளெண்)


அடிமுடி 45
அண்ட 54
அந்திப்பொழுதும் 28
அறைந்ததோர் 30
அன்னைபெற் 16
ஆதிகாமாட்சி 62
ஆருமறி 67
இங்கிவர் 76
உறைதலம் 41
எங்கள் 42
எஞ்ஞானங் 6
எழுத்து 2
கண்ணி கொண்டு 77
காரணி 15
குறியான் 63
கூப்பிடர்ரே 79
கெம்பரேக் 78
கெவுளி 68
சங்கரேகை 64
சந்திரன் 17
சரசுநதிக் 66
சிக்கிய 81
சிங்கன் 72
சிங்கியைக்காட்டடையே 83
சிங்கியைக் காணேனே 82
சிங்கியைத் 73
சிங்கி வந்தாள் 31
சிங்கி வந்தாளே 84
சிறுநிலா 69
சீர்மா கரியின் 1
சீர்மிகு 11
சேணுலகில் 58
சேல்களொடு 57
சொல்லிய 60
தணத்தத் 34
தத்தாந்திக் 33
திங்களா 32
திங்களை 27
துரித யோகினியும் 10
தென்மலை 12
தென்றலைத் 19
தேவர் வணங்கும் 52
தேவலோகம் 85
தேனைத் திருடும் 4
நதிவகை 50
நான்முகன் 29
நான்முகனார் 22
நிலைமை 40
நிறைமதி 44
நின்னயப் 61
நேரேயெனை 20
பக்திக் 80
பங்கயா 8
பரிதிவந் 30
பருமணி 71
பவமெலாம் 37
பாடகளித் 65
பாவலர் 12
பூதலத்திலுள்ள 46
பொதுநடமாடப் 10
மதிநவழ் 13
மதிதவழு 43
மதிநதி 7
மதியுலாஞ் 5
மயில்நட 23
மருவளர் 25
மல்லிகா 55
மலைகளில் 47
மலையைவில் 49
மலைவளப் 48
மழலையை 3
மன்மத 21
முத்துரேகைச் 24
மேதிகள 53
மேலுலக 59
மோகினி 70
வங்கணச் 74
வந்தவங்க 75
வந்தாள் 35
வாசலிது 38
வாசலின் 39
வானமிசை 51
வித்தைகள் 56
விரகமிகப் 26
வேலையின் 9

மண்ணிப்படிக்கரை

# 4. நீலகண்டர் குறவஞ்சி நாடகம்

மண்ணிப்படிக்கரை

# நீலகண்டர் குறவஞ்சி நாடகம்

பதிப்பாசிரியர்,
கழக இலக்கியச் செம்மல்
**புலவர் இரா. இளங்குமரன்,**
திருநகர், மதுரை-6.

# MANNIPPADIKKARAI
# NEELAKANTAR KURAVANCHI NATAKAM

*By*

SWAMINATHA IYER

Mannippadikkarai is a village about 1 km away from Vazhkoliputtur, west of Vaitheeswaran Koil in Thanjavur District. Inscriptions in the village refer to this as Tiruppadikkarai in Rajaraja Nadu, a sub-division of Vrudha Raja Bayankara Valanadu. The village is also known by the names Adipuri and Vyagrapuri.

The presiding deity of the village is called Nilakanta referred to as Nilakantan Udaya Nayanar in inscriptions. Sundarar, the celebrated saivaite saint, called this village as Mannippadikkarai and has one hymn on the temple. The Siva Linga manifests itself in five forms called Nilakantar, Padikkarai Nayakar, Mahadevar, Paramesa and Mukthiswara. According to the local Sthalapurana these five forms were worshipped by Dharma, Arjuna, Bima, Nakula and Sahadeva, the Panchapandava brothers. Two forms of the Goddess are found in the temple. One is called Mangalanayaki and the other Amuthakaravalli. A Valampuri Ganesa and a dancing form of Ganesa are also found in the temple. The Dancing Ganesa is referred to in the Sthalapurana and has a separate chapter in it called 'Natana Vinayaga Padalam.' The sacred water sources go by the name Brahmathirtham, Manni Aru and Kollidam. That this temple was adored by the Panchapandava brothers, mentioned in the Sthalapurana, is repeated by referred to in this Kuravanchi. A number of episodes mentioned to in this text get clarified from the Sthalapurana of the temple. This celebrated Sthalapurana was composed by Meenakshisundaram Pillai, the great Tamil Scholar of Thiru Siarapuram and has been edited and published by Dr. U. V. Swaminatha Iyer in 1907.

It is learnt that the Kuravanchi was composed by one Swaminatha Iyer, son of Venkatesan, hailing from Adipuri. We

have seen earlier that the name Adipuri was given to Mannippadikkarai and so the composer seems to have been a native of the place. The Author refers to the Maratta ruler of Pratap Sing Raja, son of Thulaja Raja. The text is referred to as 'Neelakandar Kuravanchi Natakam'. Obviously this was composed for being enacted as a dance drama. The work is also referred to as 'Kurachintu' and 'Kurachandam'. The author of this work is a learned scholar deeply devoted to Neelakanta, the deity of that village and has drawn inspiration from hymns of Devaram Saints. From a verse in the text it is learnt that he received the patronage of a noble belonging to a family of Eyarkon Kalikkamar of fame and devotes considerable attention to the story of Eyarkon Kalikkama Nayanar and Manakkancharar in this work.

In the text interesting details for migrations of the Kurava families are listed by the Kuravanchi. The 'Kuravanchi's ability to read the future comes in for special treatment. Among the kuravas the poet mentions the sub-divisions like Uppukuravar, Punaikuravar, Nilakkuravar and Deiva Kuravar. The work also mentions that the relatives of the Kurathi, like her aunt, sister, sister-in-law and grand-mother are said to have read the fortunes of Seetha, Sathyabhama, Saraswathi, Indrani and Chandramathi of the Epics and Puranas. That the author was a student of Jivagachinthamani is learnt from a reference to the Suramanjari. Further, a number of accomplishments of the Kurathi are listed.

The poet refers to Pratap Sing Maharaja of the Rajalakula, hisson Thulaja Raja, Manoji Boopa Parasuramendra, Muthaiah, Rayarautha and Thanikaraya who are mentioned in the text. Also are found Alagappa, Subramania, Mayilerumpermal, Velayutham and Arumuga in the work. Another point, worthy of note, is the listing of temples on the northern and southern banks of the river Cauvery in the Chola country numbering over 190, in addition to other important places of sanctity.

**Dr. R. Nagaswamy,**
Director of Archeology Department.

## பொருளடக்கம்

பக்கம்


**ஆராய்ச்சி முன்னுரை**

*1. மண்ணிப்படிக்கரை, 1*

*2. நீலகண்டர் குறவஞ்சி நாடக நூலாசிரியர், 3*

*3. நீலகண்டர் குறவஞ்சி நாடகம், 5* .. 1

**மண்ணிப்படிக்கரை நீலகண்டர் குறவஞ்சி நாடகம் — மூலமும் குறிப்புரையும்** .. 13

*செய்யுள் முதற் குறிப்பு அகராதி* .. 87

# ஆராய்ச்சி முன்னுரை

## 1. மண்ணிப்படிக்கரை

மண்ணிப்படிக்கரை, தேவாரப் பாடல் பெற்ற திருக்கோயில்களுள் ஒன்று; அது **சுந்தரர்** திருப்பதிகம் ஒன்றனைப் பெற்றுள்ளது. காவிரிக்கு வடபால் அமைந்த திருக்கோயில்கள் அறுபத்து மூன்றனுள் முப்பதாவதாக மண்ணிப் படிக்கரை திகழ்கின்றது.

மண்ணிப்படிக்கரை என்னும் இப் பெயரால், இவ்வூர் மண்ணியாற்றங்கரையில் இருந்தது என்பது விளங்கும். ஆயினும் நெடுங்காலத்திற்கு முன்னரே ஆற்றின் போக்கு மாறியிருக்க வேண்டும்; 'ஊரை அழித்துவிடும் எனக் கருதி ஆற்றின் போக்கை மாற்றினர்' என்றும் கூறுவர். இப்பொழுது ஆற்றுக்கும் ஊருக்கும் இடைவெளி உண்மையாயிற்று.

சுந்தரர் தேவாரம் மண்ணிப்படிக்கரையைப் **பழ மண்ணிப் படிக்கரை** என்று வழங்குகின்றது. அவ்வூர் பழங்காலத்தில் இருப்பை (இலுப்பை) வனமாக இருந்தமையால் **இருப்பைப்பட்டு** என்றும் வழங்கப்பெற்றது. 'இலுப்பைப்பட்டு' என்பது அதன் திரிபே ஆகும்.

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த வைத்தீசுவரன் கோயிலுக்கு மேற்கே உள்ளது **மண்ணிப்பள்ளம்**. அப் பள்ளத்தில் இருந்து **வாழ்கொளி புத்தூ**ரைக் கடந்து 2 கி. மீ. தொலைவு சென்றால், மண்ணிப்படிக்கரையை அடையலாம். 'விருதராஜ பயங்கர வளநாட்டு, இராஜராஜ நாட்டுத் திருப்படிக்கரை' என்று **கல்வெட்டு**க் குறிக்கின்றது. இவ்வூர்க்கு **ஆதிபுரி, வியாக்கிரபுரம்** என்னும் பெயர்களும் உண்டு என்பது இக் குறவஞ்சி நூலால் விளங்குகின்றது. **மதூகவனம்** என்பது இதன் வடமொழிப் பெயர். மதூகம்-இருப்பை.

இறைவர் பெயர் 'நீலகண்டர்' என்பது. 'திருநீலமிடற்று எம்பிரான்' என்கிறார் சுந்தரர். 'திருநீலகண்டம் உடைய நாயனார்' என்று கல்வெட்டுக் குறிக்கின்றது. 'நேயமிகு கருணையினால் நீலகண்டே சுரனெனும் பேர்நிறுவி' யதை மண்ணிப்படிக்கரைப் புராணம் விரிக்கும் (நீலகண்டப்படலம்).

சிவலிங்கப் பெருமான் இங்கு ஐந்து திருவடிவங்களில் எழுந்தருளியுள்ளார். அவர்கள் **நீலகண்டேசர், படிக்கரை நாயகர், மகதேசர், பரமேசர், முத்தீசர்** என்று வழங்கப் பெறுகின்றனர். இவர்களை முறையே தருமன், அருச்சுனன், வீமன், நகுலன், சகாதேவன் என்னும் பாண்டவர் ஐவரும் வழிபட்டனர் எனப் புராணம் கூறுகின்றது. (பாண்டவர் பூசைப்படலம், 10-14).

இறைவி இரு திருவுருவங்களில் எழுந்தருளியுள்ளார். அவர்கள் **மங்கலநாயகி, அமுதகரவல்லி** என்பார். மூத்த பிள்ளையாரும் இரு வடிவில் காட்சியளிக்கின்றார். அவர்கள் **வலம்புரி விநாயகர், நடன விநாயகர்** என்பவர். நடனவிநாயகரைக் 'கூத்தாடும் புகர்முகக் களிறு' என்கிறது புராணம். இவர் கூத்தாடிய குறிப்பை 'நடன விநாயகப் படலம்' விளக்குகின்றது.

இங்குள்ள நன்னீர்த் துறைகள் மூன்று ; அவை; **பிரம தீர்த்தம், மண்ணியாறு, கொள்ளிடம்** என்பவை.

நான்முகன், இந்திரன், நளன், பாண்டவர் முதலியோர் இங்கு வழிபாடு செய்து நலம் பெற்றனர் என்று புராணம் கூறுகின்றது. பாண்டவர்கள் வழிபாடு செய்ததைப் பல இடங்களில் விரித்தும் சுருக்கியும் விளம்புகின்றது இக் குறவஞ்சி.

இக் குறவஞ்சி நூலின் செய்திகளை விளக்கமாக அறிந்து கொள்ள உதவுவது, மண்ணிப்படிக்கரைப் புராணமாகும். புராணச் செய்தியும் குறவஞ்சிச் செய்தியும் மாறுபடும் இடமும் உண்டு. ஆயினும், இப் புராணத் துணை இந் நூலாய்விற்கு இன்றியமையாதது.

மண்ணிப்படிக்கரைப் புராணத்தை இயற்றியவர் பெரும் பேராசிரியர் **திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை** அவர்கள் ஆவார். அதனை 1907-ல் அச்சிட்டுத் தமிழுலகுக்கு வழங்கி உதவியவர் டாக்டர் **உ.வே. சாமிநாதையர்** அவர்கள் ஆவார்.

## 2. நீலகண்டர் குறவஞ்சி நாடக நூலாசிரியர்

இக் குறவஞ்சி நூலாசிரியர் சாமிநாதையர் என்பர்; இவர் தந்தையார் வெங்கடேசன் என்பர்; இவர் ஊர் ஆதிபுரி. இச் செய்திகள்,

'புகழ்பெறும் **ஆதி புரிதனி**ல் விளங்கும்
மிகுதமிழ் அன்பினன் **வெங்கடே சன**ருள்
நலமிகு **சாமிநா தையன்** மகிழ்வாய்
இலகுசொற் குறவஞ்சி என்னுநா டகத்தைப்
பரிவுடன் உரைத்தேன், பைந்தமிழ் வாணர்
பெரிதென உகந்தென் பிழைபொறுத் தருள்வீர்'

என்று வரும் பாடற்பகுதியால் (10: 288-293) விளங்கும். பிற குறிப்புகள் இல்லை.

ஆதிபுரி என்பது மண்ணிப்படிக்கரை யாகலாம். எங்கும் நீராகிய ஊழியில் திட்டாகத் தோன்றியது மண்ணிப்படிக் கரை எனப் புராணம் வழங்குதலால், அதனை 'ஆதிபுரி' என்றனர் என்க. 'பிரளயநகர்' என்பதும் இக் கருத்துப் பற்றியே என்க.

'பிரதாபசிம்மராசன் தனயன் துளசிராசேந்திரன்' என்பவரைப் பல பாடல்களில் நூலாசிரியர் குறிப்பிடுகிறார் (10, 25, 33, 36). இவர் 'துளசாஜி' என்பார். மராட்டிய மன்னர் சிவாசி வழியில் தோன்றித் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த மன்னர்களுள் இவர் ஒருவர். இவர்க்கு மகப் பேறு வாய்க்கவில்லை என்றும் சரபோஜியைத் தத்து எடுத்துக் கொண்டார் என்றும் கூறுவர்.

'மருவுசீர்த் துளசி மன்னன் புத்திரன்
சரபோஜி என்னத் தகுமியற் பெயரினோன்'

என்று சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நாடகம் கூறும். இத் துளஜாஜி மன்னர் கி.பி. 1786-ல் இயற்கை எய்தினார் என வரலாறு கூறுகின்றது. இந் நூலாசிரியர் அவர் காலத்தில் வாழ்ந்தவர் ஆகலின் 18ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி இறுதிப்பகுதிகளில் வாழ்ந்தவர் என விளங்குகின்றது.

சரபோஜி மன்னர்மேல் பாடப்பெற்ற சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நாடகத்திற்கு இ ந்நாடகம் முற்பட்டதாகும். என்னெனின், சரபோஜி மன்னரின் வளர்ப்புத் தந்தையாரைப்

பற்றியது ஆதலால். இனி, மண்ணிப்படிக்கரைப் புராணத்திற்கு இக் குறவஞ்சி நாடகம் முற்பட்டதாகும். ஏனெனின், அப் புராணத்தை இயற்றிய திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் காலம் கி.பி. 1815-1875 ஆதலால், இவ்வகையால் இக் குறவஞ்சி மண்ணிப்படிக்கரைப் புராணத்திற்கும் முன்னையதாய்ச் சில கருத்துகளையும் பொருள்களையும் கதைக் குறிப்புகளையும் வழங்கியுள்ளது எனலாம். இதனை மண்ணிப் படிக்கரைப் புராணத்தில் வரும் திருநகரப் படலத்தையும் இந் நாடகத்தில் வரும் நெடிய அகவல் பாவையும் (10) ஒப்பிட்டுக் கண்டுகொள்க.

இவ்வாசிரியர் தம் பெயரை நயமுறநூலுடன் இணைத்துப் பாடாதிருந்திருப்பின் இவர் தம் பெயர்தானும் அறியக் கூடாமல் போயிருக்கும். இவர் தம் புலமையொடு கூடிய பண்பு நலம், 'பைந்தமிழ் வாணர், பெரிதென உவந்தென் பிழை பொறுத்தருள்வீர்' என்பதால் நன்கு விளங்கும். மற்றும், காப்புப் பகுதியில் இவர் பாடும் அவையடக்கப் பாடலாலும், விளங்கும். அது,

> 'திரையெறியும் எழுகடலைச் சிற்றெறும்பு நுகர்வது போல்
> சிந்தை கூர்ந்து
> தரைபுகழ உயருமண்ணிப் படிக்கரைநா யகர் நீல கண்டர் தம்மேல்
> உரைசெறிசெந் தமிழிசையால் குறவஞ்சி நாடகத்தை உரைத்தேன் பாரில்
> **பொருளறிசெந் தமிழ்வாணர் எனதுதமிழ்ப் புன்சொலெலாம்**
> **பொறுப்பர் தாமே.'**

என்பதாம். இதில் 'எழுகடலைச் சிற்றெறும்பு நுகர்வது போல்' என்பதனை, 'பாற்கடல் உற்றொரு பூசை முற்றவு நக்குபு புக்கென' என்னும் கம்பர் அவையடக்கக் கருத்தொடும் ஒப்பிட்டு மகிழத்தக்கதாம்.

இந் நூலாசிரியரின் முத்தமிழ்த் திறமும் இந் நூலால் அறியக் கிடத்தலை ஆங்காங்குக் கண்டுகொள்க.

## 3. நீலகண்டர் குறவஞ்சி நாடகம்

மண்ணிப்படிக்கரைப் பெருமான் நீலகண்டர்மேல் பாடப் பெற்ற குறவஞ்சி நாடகம் ஆதலால் இந் நூல் இப் பெயர் பெற்றது.

குறவஞ்சி நூல், நாடகம் தழுவியதும், இசைப்பாட லுடையதும், உரை விரவி வருவதும், பொதுமக்கள் பேசும் நடையை ஏற்று இயல்வதும் ஆகலின் **நாடகம்** என்று வழங்குவர். குறவஞ்சி நாடகங்கள் நாட்டிய நாடகங்களாக நடிக்கப் பெறுவதும் வழக்கில் உள்ளமை இதனை வலி யுறுத்தும்.

'வரிசைமிகப் பெருகுகுற வஞ்சி நாடகம்' (6)

'வரிசைபெறு தமிழ்க்குற வஞ்சி நாடகம்' (9)

'பூதலமெல் லாம்விளங்கு குறவஞ்சி நாடகம்' (4)

'உரைசெறிசெந் தமிழிசையால் குறவஞ்சி நாடகம்' (5)

'விருதுபல பெருகுபுகழ்க் குறவஞ்சி நாடகம்' (3)

என்று பல இடங்களில் **குறவஞ்சி நாடகம்** என்றே நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

'குமுதவித மமுதவிம்பக் குறவஞ்சி' (7)

என்றும், **குறச் சிந்து** (30:51) என்றும், **குறச் சந்தம்** (40) என்றும் இவர் குறிப்பிடுவன குறவஞ்சி இசைமேல் இவர்க் குள்ள ஈடுபாட்டைக் காட்டும்.

'பூண்ட மயலாட்குக் குறிபுகல் குறவஞ்சி'

என்பதால் குறவஞ்சி நாடக இலக்கணத்தைத் தொகுத்துக் கூறுகிறார். குறவஞ்சி நாடக இலக்கணத்தை விரித்துக் கூறு வார்போல, இந் நூலமைதியை இவர் எடுத்துரைக்கும் சீர்மை போற்றத் தக்கதாம் (10:254-285).

'திருமயில் அனையாள்; சித்தசன் மனையாள்;
துடிமிக வுடையாள்; துலங்கிய நடையாள்;
படிபுகழ் மண்ணிப் படிக்கரை நாதர்
வடிவது நோக்கி **மாமயல் தாக்கிச்**
சிலை**மதன் கணை**யால் சேணொளிர் **மதியால்**
மலைய**மா ருத**த்தால் மாங்**குயில்** ஒலியால்
ஆகமே மெலிந்தும் அன்னமருந் தாமல்
சோகம தாகிச் சொல்லிசை மறந்தும்

ஒளிமருங் குடையும் உபயமாங் கரத்திடு
வளைகளும் சோர வருத்தமு மாகித்
தாங்கரு மயலால் தளரு**மோ கினி**க்குப்
**பாங்கியும்** வந்து பரிவுடன் தேற்றி,
'அரிவை யேயுன தகமதின் வருத்தம்
பரிவுடன் சொல்'லெனப் பாங்கியும் கேட்கச்
'சகம்புகழ்ந் தேத்து திருநீல கண்டர்
உகந்தநற் பவனி **உலாவரக் கண்டு**
**விரகமா கினே**'னென விளம்பிடப் பாங்கியும்
பரிவுயர் மண்ணிப் படிக்கரை நாதர்
அருளுடன் வருவரென் றருங்குறி பார்க்க
வரைதனில் வளர்**குற வஞ்சியை அழைத்துப்**
பரிவுடன் **குறி**கள் பண்புடன் கேட்டு,
மலைக்குற வஞ்சி மனது குளிரப்
பல்கலை பூசணம் பாங்குடன் அளித்ததும்
திரம்பெறச் **சிங்கியைச் சிங்கனும்** தேடி
விரைந்து வந்ததும், விளைசெந்நெல் வயலில்
பெருங்**கண்ணி குத்திப்** பறவைகள் பிடித்ததும்
வங்கணச் சிங்கியை விளம்பெனப் புவனம்
எங்கணும் **தேடி இளைத்**தடை யாளம்
உரைத்ததும் பலபல **உச்சிதம் கொடுத்ததும்**
விருப்பமாம் சிங்கியை வீறுடன் சிங்கன்
இகலுடன் கண்டுபின் **ஏச லானதும்**
அகமகிழ்ந் திருவரும் **அன்புடன் சேர்ந்ததும்**'
என்பது அது.

மண்ணிப் படிக்கரையின் மேல் இவர் கொண்ட பற்றை,
'கன்னல் வயல்சூழும் மண்ணிப் படிக்கரை (55)
காராளர் உயரு மண்ணிப் படிக்கரை (36)
தரணியுளோர் புகழு மண்ணிப் படிக்கரை (13)
தரைபுகழ் மண்ணிப் படிக்கரை (14)
திருவளரு மண்ணிப் படிக்கரை (17)
தென்பரவு படிக்கரை (63)
நந்துலாவிய மண்ணிப் படிக்கரை (62)

நலமை சேர்புகழ் மண்ணிப் படிக்கரை (72)
பங்கயத் தடஞ்சூழ் மண்ணிப் படிக்கரை (76)
பங்கய மின்சேரும் மண்ணிப் படிக்கரை (64)
பதிமீது மிகுசீர்த்தி பரவுமண்ணிப் படிக்கரை (74)
பன்னுதமிழ்சேர்மண்ணிப் படிக்கரை (29)
பார்புகழ் மண்ணிப் படிக்கரை (30)
பைந்தமிழ் மண்ணிப் படிக்கரை (30)
பொன்னி நதிசூழ் மண்ணிப் படிக்கரை (55)
மட்டவிழ் சோலைசூழும் மண்ணிப் படிக்கரை (11)
மண்டலத் தில்உயர் மண்ணிப் படிக்கரை (52)
மண்ணிய புகழ்சேருந் தென்மண்ணிப் படிக்கரை (60)
மூவர்தமிழ் இலங்கும் படிக்கரை (64)
வம்புயர் சோலையும் அம்புய வாவிசூழ் மண்ணிப்
படிக்கரை (69)
வையம்புகழ் பாண்டு மைந்தர்கள் ஐவரும் பூசைசெய்யும்
மண்ணிப் படிக்கரை' (80)

என்று வியந்து வியந்து கூறும் விழுமிய மொழிகளால் விளங்கிக் கொள்ளலாம்.

நீலகண்டப் பெருமான்மேல் இவர் கொண்ட பற்று மிகப் பெரிது. அதனால்தானே குறவஞ்சி அவர்மேல் பாடுதற்குக் குறிக்கொண்டார். 'உக்கிரமாய் வருமிக்க விடத்தினை யுண்ட திருநீலகண்டர்' என்று நீலகண்டப் பெயர்க் காரணம் குறிக்கிறார் (70). அருள் விளக்கமே அந் நீலகண்டம் என்பதைக் 'கருணைகள் புரியும் கறைமிடற் றண்ணல்' என்கிறார் (10:118).

'கயிலைக் கிறைவர் காமனைக் காய்ந்தோர்
சயிலச் சிலையார் தடக்கையிற் கலையார்' (10:9-10)

என்றும்,

'முப்புரத் தவரை முறுவலால் வென்றோர்
ஒப்பிலா மதகயத் துரியினைத் தரித்தோர்' (10:67-68)

என்றும்,

'குந்திதன் மைந்தர் குருகுலத் தைவர்
சந்ததம் பூசை தாம்செய உவந்தோர்;
சொரிதமிழ்க் குவந்து சுந்தரர்க் காகப்
பரவைக்குத் தூது பரிவுடன் சென்றோர்' (10:59-62)

என்றும் இன்னவாறாகச் சுருக்கியும் பெருக்கியும் விரித்தும் நீலகண்டர் பெருமையை நிகழ்த்துகிறார். 'அமிர்தகர வல்லி பாகர், அன்பர் அகமேவு கருணைபுரி நீலகண்டர்' என்பன

முதலாக அவர் பாடல்தோறும் பகர்வன விரிந்துபட்டன ஆகலின் இஃவளவில் அமைவாம்.

'புலவரை இறந்த புகழ்' என்பதொரு வாய்பாடு சங்க நாளில் இருந்தது. பாடுவார் அறிவின் எல்லையைக் கடந்த புகழ் என்பது அதன் பொருள். 'விரிப்பின் அகலும்; தொகுப்பின் எஞ்சும்' என்பதும் சங்கச் சான்றோர் கூற்றே. இவ்வாசிரியர், 'ஒரு நாவால் சொல்ல அரிது; ஒரு நாளில் சொல்ல அரிது' என்னும் முறையால் சில செய்திகளைக் குறிக் கிறார்.

'நலமாமிம் மலைதோறும் நாங்கள் குடில் எடுத்தே
நயந்திருந்த வகைசொல்ல நாவாயிரம் வேண்டும்' (45)

'பாரினில் நான்கற்ற வித்தைசொல்ல வென்றால்—இரு
பத்து நாள்செலும்.' (53)

'குவலயத்தில் புண்ணியநதி மூன்றரைக் கோடியுண்டு
அவையெல்லாம் நானறிவேன்
நவிலவென்றால் அதுதான் நாலொன்பது நாள் செலும்' (49)

'வாகுயர் சத்த சாகரத்தில் அநேக தேசங்கள் உண்டு
வரியையாகச் சொலவெகு நாட்செலும்' (43)

என்பன அவற்றுள் சில.

தேவார ஆசிரியர் மூவர் மேலும் இவர் கொண்ட பற்று எல்லை கடந்ததாகும். 'மூவர் சொல்லும் தமிழ்க் காட்டுப் பள்ளி' என்றும் (51) 'மூவர் பாட்டியல்சேர் நெல்லிக்கா' என்றும் (51) கூறுகின்றார். மேலும் 'தேறுதமிழ் மூவர்' (25), 'துதிபெருகு மூவர்' (36), 'பண்ணிசையும் தமிழ் மூவர்' (81), 'தயவாய மூவர்' (14), 'மூவர் தமிழ் இலங்கும் படிக்கரை' (64) என்றெல்லாம் மூவரையும், மூவர் தமிழையும் சுட்டு கிறார்.

ஞானசம்பந்தரை,

'தருண வேதியற்காய்ச் சமணனை உதைத்தோர்' (10:11) என்பதால் குறிக்கிறார். சுந்தரரைச்,

'சொரிதமிழ்க் குவந்து சுந்தரர்க் காகப்
பரவைக்குத் தூது பரிவுடன் சென்றோர்' (10 : 61-2)

என்றும்,

'சுந்தரர்க் கேவ லாளரு மாகித்
தூதாக நடந்திடும் யோகி' (62)

என்றும் ஈரிடங்களில் குறிப்பிடுகிறார்.

சிறுத்தொண்டரையும், கண்ணப்பரையும் நினைவு கூர்கிறார் :

'சிறுத்தொண்டர் கறிக்குச் சிந்தையில் உகந்து
மறுத்தருள் புரிந்துயிர் வழங்குசங் கரனார்' (10:7-8)

இது சிறுத்தொண்டரைப் பற்றியது.

'தூயவனுக் கிறைச்சி எச்சில் கொடுத்தோம்' (38)

என்று குறத்தி தன் குடிப்பெருமை கூறுங்கால் வருவது கண்ணப்பரை நோக்கியதாம்.

இவ்வாசிரியர் ஏயர்கோன் கலிக்காம நாயனார் குடிவழியில் பேரன்பினர் என்பதும், அவ்வழியில் வந்த செல்வர் ஒருவரால் சிறப்புச் செய்யப்பெறும் பேறும் பெருவாழ்வும் பெற்றவர் என்பதும் உணரக் கிடக்கின்றது.

இறுதி வாழ்த்தில், 'குலவுபுகழ்த் தேரழுந்தூர் ஏயர்கோன்
கோத்திரம் வாழி வாழி'

என்கிறார். நீலகண்டர் உலா வரும்போது உடன் வருவாருள் ஒருவரைச் சுட்டி,

'குலபதி ஏயர் கோனார் கோத்திரத்
தானீக ராயன் தமிழறி தூயன்
மானா பரணனாம் வளர்குண சீலன்
மனமகிழ்ந்தருள் மைந்தர் களுடனே
தினம்தினம் போற்றும் திருநீல கண்டர்'

என்கிறார். இப் பகுதியில் இருபது அடிகளில் (10:162-166) ஏயர்கோன், மானக்கஞ்சாறர் வரலாறுகளை விளக்கி விரிக்கிறார். பெரிய புராணத்திற் காணாத செய்தியும் ஈங்குக் கூறப்பெற்றுள்ளது. ஏயர்கோன் மரபில் வந்த ஒரு வள்ளல் செய்த உதவியை உன்னியே இத்தகைய சிறப்பினை ஆசிரியர் தந்தாராதல் வேண்டும்.

எடுத்துக்கொண்ட பொருளை விரித்துச் சொல்லுதலில் இவர்க்குள்ள திறம், 293 அடிகளில் இவரியற்றியுள்ள ஆசிரியப் பாவால் (10) புலப்படும்.

இவர் நூலமைப்புத் திறம், நூலின் அமைப்பினைப் பதிகச் செய்தி போலக் கூறி அதன் விளக்கமாக நூலை அமைத்துச் செல்லுதலால் விளக்கமாகும்.

வண்ணனைத் திறம் நீலகண்டர் திருவுலாச் சிறப்புரைத்தல், தலைவியின் முடிமுதல் அடிவரை வனப்புரைத்தல், சிங்கியின் வருகை, சிங்கன் சிங்கியர் ஏசல் ஆகியவற்றால் வெளிப்படும்.

மங்கலச் சொல்லில் இவர்க்குள்ள நாட்டம் 'சீர்' என்று நூலைத் தொடங்கிச் 'சீராய்' என நூலை முற்றுவித்தலால் தெளிவாகும்.

குறவஞ்சி ஒவ்வொரு மலையில் இருந்தும் இன்ன இன்ன காரணத்தால் குடிபெயர்ந்து வந்தேம் என்று கூறுவதிலும், வித்தைத் திறம் கூறுவதிலும் சுவை பெருக்குகிறார்.

இவர் சொல்லும் வசனமும் வினாவுதலும் விடையுமாக அமைதல் புதுமையாகும்.

இவர் காவிரிக்கு வடகரைத் திருக்கோயில்கள், தென் கரைக் கோயில்கள் என்பவற்றை ஒன்றுவிடாமல் எண்ணுவது இந் நூற்குத் தனிச் சிறப்பாகும். அவற்றைச் சொல்லிச் 'சோணாட்டில் ஒருநூற்றுத் தொண்ணூறாகும் நற்றலம்' என்று தொடங்கி மற்றை நாட்டுத் தலங்களையும் திருமால் பதி களையும் எண்ணிக்கை அளவில் சுட்டி அமைகிறார் (51).

கைரேகை பார்த்தல், குறிகூறல் ஆகியவற்றில் இந் நூலா சிரியர்க்கு நல்ல திறம் உண்டு என்பது இந் நூலால் விளங்கு கின்றது.

'குறத்திபிள்ளை பெற்றிடவே குறவன் கழாயங்
குடிப்பான்' (40)
'பசு, ஊரெங்கும் மேய்ந்து உடையானிடஞ் சேராதோ?'
'வீறாப்புக் கண்டுனக்கு ஆறாமல் போச்சுதோ?'
'தன்னெஞ் சறியாமல் என்னபொய் தானுண்டு?'
'கையிற் கண்டதற்கு நெய்யிற்கை விடுவாரோ ?'
'ஆனை கட்டிச் சுளகால் மறைக்கிறாய்' (80)

என்பன இவர் பழமொழி, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றில் ஊன்றியிருந்து உரைப்பவர் என்பதை விளக்கும்.

குறவர்களுள் உப்புக்குறவர், பூனைக்குறவர், நிலக்குறவர், தெய்வக்குறவர் எனப் பல பிரிவுகளைக் குறிப்பிடுகிறார். தெய்வக்குறவர் குடியைச் சேர்ந்தவரே குறிகூறும் குறத்தியர் என அவர்கள் பெருமை பேச வைக்கிறார். பூனை, கொடி (காகம்) இவற்றின் தசை தின்னல் இழிவு என்பதும் (40), மண மாகி மறுமணம் புணர்தல் வசை என்பதும் (38) தெய்வக் குறத்தியர் கொள்கை என்பதை விளக்குகிறார்.

தெய்வக்குறத்தியர் இளமையிலே பிறை தொழுவர் என்றும் பின்னர், 'மகிழ்நனல்லால் பிறரின்பம் மனதிற் சற்றும் கொள்ளார்' என்றும் (38), 'புருசனிடம் விட்டுநிமைப் போதும் பக்கம் பிரியார்' என்றும் (40) இவர் குறிப்பன அக் குறநங்கையர் பெருமைச் செய்திகளாம்.

தெய்வக் குறத்தியின் மாமி, தங்கை, மச்சினி, பாட்டி, தமக்கை ஆகியோர் சீதை, சத்தியபாமை, சரசுவதி, இந்தி ராணி, சந்திரமதி ஆகியவர்களுக்குக் குறிசொன்னதாகக் குறிப்பிடுகிறாள். அவள் பாஞ்சாலிக்கும் சுரமஞ்சரிக்கும் குறி சொன்னாளாம். இதனைக் கூறுதலால் நூலாசிரியரின் சீவக சிந்தாமணிக் கவர்ச்சி வெளிப்படுகின்றது.

கைக்குறி, மெய்க்குறி, முகக்குறி இவற்றைப் பார்ப்ப துடன் தெய்வக் குறத்தி, சுளகில் ஒன்பது மணிகளைப் பரப்பி அவற்றில் மூன்றை எடுக்கச் செய்து, எடுத்த மணிகளைக் கொண்டு குறிகூறுதலும், நிலத்தில் ஒன்பது கோடுகள் வரைந்து அக் கோடுகளில் ஒன்றைத் தொடச் சொல்லி அதனைக் கொண்டு குறிகூறுதலும் குறிக்கிறார் (64).

அங்குல்லிய ரேகை, கங்கண ரேகை, சங்க ரேகை, தமருக ரேகை, தனரேகை, பதும ரேகை, பாக்கிய ரேகை, மச்ச ரேகை, வித்தியா ரேகை, என்னும் ரேகைகளையும் அவற்றின் பயன்களையும் விளக்குகிறார் (60). இத்திறத்தில் இணை யில்லாத் தெய்வக் குறத்தி கற்ற வித்தைகளையும் அடுக்கு கிறார். அவை : அக்கினித் தம்பனம் செய்தல், அண்டமுட்டப் பேருருக் கொள்ளல், அழலைக் கசக்கி நன்னீரைப் பிழிதல், இடியைக் கையில் பிடித்து அடிமடியில் வைத்தல், இந்திர சாலம் செய்தல், கடல் நீரை உறிஞ்சல், சந்திர சூரியரை நெற்றிப் பொட்டாக அணிதல், சாட்டை இல்லாமல் பம்பரம் ஆட்டல், திசையானைகளைக் குடத்துள் அடைத்தல், பரகாயப் பிரவேசம் செய்தல், பாம்பைப் பிடித்து அணியாகப் பூணல், புலியைப் பெண்ணாக்கல், மணலைக் கயிறாகத் திரித்தல், மலையை மணியணியாகக் கொள்ளல், மாருதத் தைப் பிசைந்து உண்டை ஆக்கல், மின்னலைச் சுருட்டிப் பெட்டிக்குள் வைத்தல், வாயுத்தம்பனம் செய்தல், விண் மீனை அம்மானையாடல் (63).

தெய்வக் குறத்திக்குத் தெய்வக்குறவன் இளைத்தவனா , அவன், ஆணைப் பெண்ணாக்கவும், இரவைப் பகலாக்கவும்?

கண் திட்டி கழிக்கவும், காய சித்தி ஆக்கவும், காயம் தீர்க்கவும், சொக்குப் பொடி போடவும், பசி போக்கவும், புலி வாயைக் கட்டவும், புனல் கடக்கவும், பேய் வாயைக் கட்டவும், மயலுறுத்தவும், வாத சித்தி ஆக்கவும் கைதேர்ந்தவன். சிங்கியைக் காட்டித் தந்தால் தன் தோழனுக்கு இந்த உச்சிதங்களையெல்லாம் தருவானாம் (77).

நூலாசிரியரால் போசலகுலேந்திரன் பிரதாபசிங்கு மாராசன் புதல்வன் துளசி ராசேந்திரன் (10, 25, 33, 36), மானோசிபூபன், பரசுராமேந்திரன், முத்தையன், இராயராவுத்தன், தானீகராயன் (10) என்போர் குறிப்பிடப் பெறுகின்றனர். அழகப்பன், அறுமுகன், சுப்பிரமணியன், மயிலேறும் பெருமாள், வேலாயுதம் என்பார் வாழ்த்தப் பெறுகின்றனர். சுத்தமல்லிப் பெருமக்களும், பரதம்பட்டுப் பெருமக்களும் நினைவுகூரப் பெறுகின்றனர் (10).

எடுத்துக்கொண்ட குறவஞ்சி நூலுக்கு ஏற்றபடி இசைப் பாடல்கள் மிளிர்கின்றன ; இயைபணி சிறக்கின்றது ; சந்த விருத்தங்கள் தவழ்கின்றன ; உவமை, உருவகம், உயர்வு நவிற்சி, தற்குறிப்பேற்றம், இல்பொருள், வெளிப்படை என்னும் நயங்கள் ஆங்காங்குச் சிறக்கின்றன.

இந்தா, ஏற்கை, கெம்பாரடையே, கொள்ளுது, தாராய், பக்கி, மேயுது, வருகுது, வாடே, வாறேன் என்பன போன்ற கொச்சை வழக்குகள் ஆளப் பெற்றுள. 'உன்றன் என்றன்' என்பவை 'உந்தன் எந்தன்' என்று ஆளப்பட்டிருப்பினும் திருத்தி அமைக்கப்பெற்றுள.

'இமைப்பொழுது' என்பதை 'நிமை' என அழகாக ஆள்கின்றார் (40,78). 'தமிழ்கள்' எனக் கூறி (80) முத்தமிழ்ப் பாகுபாட்டைச் சுட்டுகிறார். இச் சுட்டு, 'தமிழாவது வடவெழுத் தொரீஇ வந்த எழுத்தானே கட்டப்பட்ட வாக்கியக் கூறுகளும் இயலிசை நாடகங்களும் என்று சொல்லப்படாநின்ற மூன்று தமிழ்களும்' என்னும் அரும்பதவுரையாசிரியர் உரையை நினைவூட்டுகின்றதாம் (சிலப். 3:45).

புசித்து, புத்தகம் என்பவற்றின் மூலமான பொசிப்பு, பொத்தகம் என்பவற்றை ஆட்சி செய்கிறார். பிற நயங்களையெல்லாம் நூலில் கண்டு மகிழ்க.

தமிழ்த்தொண்டன்,
**இரா. இளங்குமரன்**
பதிப்பாசிரியன்.

செல்வம், மதுரை-6
22—7—80

மண்ணிப்படிக்கரை

# நீலகண்டர் குறவஞ்சி நாடகம்

## காப்பு

1. சீர்கொண்ட புவியில்மண்ணிப் படிக்கரையில் நிதம்விளங்கும்
செல்வர் கொன்றைத்
தார்கொண்ட மதிவேணி விமலர்திரு நீலகண்டர்
தன்மேல் அன்பாய்
வார்கொண்ட கும்பமுலை **குறவஞ்சி நாடக**த்தை
மகிழ்ந்து கூறக்
கார்கொண்ட சிந்துரமா முக**நிருத்த கணபதி**தாள்
காப்ப தாமே.

2. புகழ்மேவு பழமண்ணிப் படிக்கரைமா நகர்புரக்கும்
புனிதர் அன்பர்
அகமேவு கருணைபுரி திருநீல கண்டர்தம்மேல்
அன்பு கூர்ந்து
மிகவேசெந் தமிழாய்ந்து **குறவஞ்சி நாடக**த்தை
விரைந்து கூறக்
ககமேவு மான்மருகன் வலம்புரிஐங் கரன்சரணங்
காப்ப தாமே.

---

**அருங்குறிப்புரை**

1. புவி-உலகு; தார்-மாலை; வேணி-சடை; விமலர்-குற்றமற்றவர்; வார்-கச்சு; கார்-கருமை; சிந்துரமாமுகம்-யானைமுகம்; நிருத்த கணபதி-நடன விநாயகர், கூத்தாடும் பிள்ளையார் என்னும் தலத்து நாயகர்.

2. புரக்கும் - காக்கும்; ககமேவு மால் - கோதண்டம் என்னும் வில்லேந்திய திருமால். ககம்-அம்பு; இவண் வில்லுக்கு ஆகியது; இராமாவதாரத்துச் செய்தி இது. தலத்து விநாயகர் பெயர் 'வலம்புரி விநாயகர்' என்பது. 'வலம்புரிக் குஞ்சரம்' என்று மண்ணிப்படிக்கரைப் புராணம் கூறும்.

3. தருமன்முதல் ஐவர்செழு மலர்கொடனு தினமுமருச்
சனையே செய்யக்
கருணைபொழி விமலர்மண்ணிப் படிக்கரைநா யகர்நீல
கண்டர் மீது
விருதுபல பெருகுபுகழ்க் **குறவஞ்சி நாடகத்**தை
விளங்கக் கூற
அருள்பழனி மலையிலுறை அறுமுகவர் இணையடிகள்
காப்ப தாமே.

4. மாதவர்கள் விளங்குமண்ணிப் படிக்கரையி **லமிர்தகர
வல்லி** பாகர்
வேதமுதற் பொருளான திருநீல கண்டரெனும்
விமலர் மீது
பூதலமெல் லாம்விளங்கு **குறவஞ்சி நாடகத்**தைப்
புகழ்ந்து கூற
ஆதியயன் மால்மகவான் உமைவாணி கமலையயி
ராணி காப்பாம்.

5. திரையெறியும் எழுகடலைச் சிற்றெறும்பு நுகர்வதுபோல்
சிந்தை கூர்ந்து
தரைபுகழ உயருமண்ணிப் படிக்கரைநா யகர்நீல
கண்டர் தம்மேல்
உரைசெறி**செந்தமிழிசையால்குறவஞ்சிநாடக**த்தை
உரைத்தேன் பாரில்
பொருளறிசெந் தமிழ்வாணர் எனதுதமிழ்ப்
புன்சொலெலாம்
பொறுப்பர் தாமே.

---

3. விருது-வெற்றிச் சிறப்பு, பாண்டவர் அருச்சனை செய்தது இந் நூல் பத்தாம் பாடல் 32-52 அடிகளாலும் பிறவற்றாலும் விளங்கும்.

4. அமிர்தகரவல்லி-இறைவி பெயர்; மகவான்-இந்திரன்; உமை-பார்வதி; வாணி-கலைமகள்; கமலை-திருமகள்; அயிராணி-இந்திராணி.

5. அவையடக்கம், கடலைச் சிற்றெறும்பு நுகர்தல் என்னும் இது,

'ஓசை பெற்றுயர் பாற்கடல் உற்றொரு
பூசை முற்றவு நக்குபு புக்கென'

என்னும் கம்பர் வாக்கொடு கருதத்தக்கது.

## தோடையம்

6. திருவளரு மண்ணிப்படிக் கரைநகரில் விளங்கு
கருணைபொழி திருநீல கண்டர்தம் மீதில்
வரிசைமிகப் பெருகு**குற வஞ்சிநாட கங்**கூற
அருளுதிசை முகவனடி இணைகளவை துணையே.

7. அமுதகர வல்லிபாகர் அயனமரர் பணிபாதர்
கமலைவளர் மண்ணிப்படிக் கரைநாதர் மீது,
**குமுதவித மமுதவிம்பக் குறவஞ்சி** தனைப்பகர
விமலமயி லேறும்வடி வேலர்துணை யாமே.

8. பாண்டவர்கள் தவஞ்சேய்மண்ணிப் படிநாயகர்
சடையில்
நீண்டரவு தரித்ததிரு நீலகண்டர் மீது
**பூண்டமய லாட்குக்குறி புகல்குற வஞ்சி**கூற
வேண்டுவர முதவுசெஞ்சொல் விமலர்பதம்
துணையே.

9. பரசணியும் புயத்தர்மண்ணிப் படியார்மா லுக்குச்சக்
கரமுதவு திருநீல கண்டர்தம் மீதில்
**வரிசைபெறு தமிழ்க்குற வஞ்சிநா டகங்**கூறத்
திரமருவு வரமுதவு தேவர்துணை யாமே.

---

6. திசைமுகவன்-நான்முகன்.

7. குமுதம்-அல்லி; அமுத விம்பம்-அமுதின் வடிவம்; விமலம்-அழகு.

8. நீண்டரவு-நீண்ட அரவு; அகரம் தொகுத்தல், பூண்ட மயலாட்கு-மயல் பூண்டவளுக்கு; மயல்-காதல் மயக்கம்.

9. பரசு-மழு என்னும் படைக்கலம்; சிவபெருமான் திருமாலுக்குச் சக்கரம் உதவுதல்;
'சலமுடைய சலந்தரன்தன் உடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடி?
நலமுடைய நாரணன்தன் நயனமிடந் தரனடிக்கீழ்
அலராக இடஆழி அருளினன்காண் சாழலோ.'
-- திருவாசகம்.

## அகவல்

10. புகழ்பெறும் இயல்பு புரந்தருள் செல்வம்
மிகவுயர்ந் திலங்க விரிஞ்சன் மாதவன்
இந்திரன் முதலாம் இமையவர் போற்றச்
சிந்தைகூர்ந் தருள்புரி செயதர விமலர்,
விடையவர், இளமதி மின்னு சடையவர்,
வடதரு நீழலின் வைகிய சிவனார்,
சிறுத்தொண்டர் கறிக்குச் சிந்தையில் உகந்து
மறுத்தருள் புரிந்துயிர் வழங்குசங் கரனார்,
கயிலைக் கிறைவர் காமனைக் காய்ந்தோர்
சயிலச் சிலையார் தடக்கையிற் கலையார்
தருணவே தியற்காச் சமனனை உதைத்தோர்
மருவுயர் மதூரக வனந்தனில் உதித்தோர்
கதித்திடும் பிரளய காலமாஞ் சலத்தில்
துதித்திடும் வசிட்டர் சொல்லுயர் கவுசிகர்
ஐங்கரன் உமையாள் குமரன் கணங்கள்
பொங்கமாந் தோணியிற் புரந்திட இருந்து
விரைவுடன் நடத்தி விளங்கவே வந்து
திரடெனக் கரைசேர் மண்ணிப் படிக்கரை
உகந்திடங் கொண்ட உவகையால் ஐங்கரன்
மகிழ்ந்திட நின்று வானவர் துதிப்ப
நர்த்தனம் செய்தவி நாயக மூர்த்தியும்
மற்றிணை யில்லா மதூரகநீள் வனத்தில்
சதுமுகன் அளித்த தன்மைசேர் வதிட்டர்
கதிபெறத் தவஞ்செயக் காட்சியும் அளித்தோர்

---

10. (2) விரிஞ்சன்-நான்முகன்; மாதவன்-திருமால்; (5) விடை-காளை; (6) வடதரு-ஆலமரம். (7) சிறுத்தொண்டர் கறி-சிறுத்தொண்ட நாயனார் வழங்கும் பிள்ளைக்கறி; உகந்து-விரும்பி.
(8) மறுத்து-மீண்டும்.

9. காமன்-மன்மதன்; (10) சயிலம்-மலை (மேருமலை); சிலை-வில்; கலை-மான்; (11) தருண வேதியன்-இளைய வேதியன், ஞான சம்பந்தர். (12) மதூரகவனம் - இருப்பை வனம் (இருப்பை-இலுப்பை) மதூரகவனமாக இருந்த இடமே திருக்கோயில் ஆயிற்று என்பதை 'மண்ணிப்படிக்கரைப் புராண' மதூரகவனப் படலத்தால் அறியலாம். (14) கவுசிகர்-கௌசிகமுனிவர், (16-21) நர்த்தன விநாயகர் பெயர்க் காரணம் விளக்கியது. (23) சதுமுகன்-நான்முகன்; வதிட்டர்-வசிட்ட முனிவர்;

அந்தணன் பிரம கத்தியை நீக்க
வந்தருள் புரியும் மகாமிருத்தி கேசரும்
பரையிட மமர்ந்த பரசுரா மேசரும்
புரிசடை முடியார் புகழ்மக(ா) தீசரும்
நிரந்தர புவியில் நீடுமன் பருக்கு
வரந்தரு நல்ல மங்கைதன் னிடத்தில்
பண்ணவர் துதிக்கும் படிக்கரை நாதரும்
நண்ணிய பிரளய நகரில்வந் துதித்தோர்
தடமுயர் பாண்டவர் தமக்கிட ராய்ப்பணிக்
கொடியுடை வேந்தன் கூறிட முனிவன்
இயற்றிய வேள்வியில் எழுந்தொரு பூதம்
செயத்தொடு விடத்தைச் செங்கையிற் கொண்டு
குருகுலத் தைவர் குறித்துவந் திடாமல்
அருள்கொடு முயர்ந்துபா தலத்தில் வைப்பப்
பூதமவ் விடத்தைப் பொய்கையிற் கலந்து
மோதுகோ பத்தால் முனிதனை வதைப்பத்
தருமனோ டைவர் தாம்வந்து பொய்கைநீர்
பருகிட மூர்ச்சையாய்ப் படிந்திடத் துரோபதை
அரற்றிய பேரொலி அரன்செவி கேட்பத்
திரத்துடன் நந்திகே சுரன்தனை அனுப்ப

---

(25) மிருத்திகேசர்-சிவன்; மிருத்தியுஞ்சயன், மிருத்தி நாசகன் என்பனவும் சிவன் பெயர்; மிருத்தி - நஞ்சு. அந்தணன் வீரபாதன் என்பான், அவன் பாவம் போக்கியது (மண்ணிப்படிக்கரைப் புராணம்) மூடிகம் தெய்வரூபம் பெற்ற படலத்துக் காணும் செய்தியாம்.

(27) பரை-உமையம்மை; (32) பிரளய நகர்-மண்ணிப்படிக்கரை; (33) பணிக்கொடி வேந்தன்-பாம்புக் கொடியுடைய துரியோதனன்; (37) குறித்து-அடையாளம் கண்டு; (33-42) பாரதத்தில் நச்சுப் பொய்கைச் சருக்கத்துக் கண்ட கதை. இது, அக் கதையில் மாறுபாடுடையது. (34) முனிவன் - காளமுனிவன்; (44) நந்திகேசுரன் - நந்திதேவர், (42-50) நீர் பருகு முன்னரே அசரீரியாய் ஒலித்து, நச்சுநீரை அமுதநீர் ஆக்கி யருளியதாக மண்ணிப்படிக்கரைப் புராணம் கூறும்.

நந்திகே சுரனும் நவின்றிடு மொழியால்
சிந்தைகூர்ந் துமையைச் சீக்கிரம் அழைத்தே
அமுதமும் அருளி அனுப்பிட வுமையும்
விமலர்சொற் படியால் விரைந்தெழுந் தருளி
அருளுடன் பாண்டவர்க் களித்ததால் **அமுத**
**கரவல்லி** நாயகி கவுரியோர் பாகர்
விமலர் மாயநீர் நச்சுப் பொய்கையை
அமுதபுட் கரணி ஆகவே செய்தோர்
கிருத யுகந்தனில் கீத நாரதர்;
திரமுடன் பூசை செயுமகா தேவர்,
உரம்பெறு திரேதா யுகந்தனில் முகுந்தன்
திரம்பெறப் போற்றிசெய் சின்மைய ரூபர்,
பொன்னுல காளும் புரந்தரன் துவாபரந்
தன்னிலர்ச் சனைபுரி தாமரைச் சரணார்
குந்திதன் மைந்தர் குருகுலத் தைவர்
சந்ததம் பூசை தாம்செய உவந்தோர்,
சொரிதமிழ்க் குவந்து சுந்தரர்க் காகப்
பரவைக்குத் தூது பரிவுடன் சென்றோர்
வம்புறு பொன்னி மாநதி வடபால்
லிங்கம்வந் துதித்த வெம்புலிக் கலையார்
மூவர்கள் பணிந்து மொழிந்திடு செந்தமிழ்ப்
பாவினுக் குகந்த பராபரப் பொருளார்
முப்புரத் தவரை முறுவலால் வென்றோர்
ஒப்பிலா மதகயத் துரியினைத் தரித்தோர்,
பொலனுயர் கொடுமுடிப் பொன்னகர் கடந்து

---

(47-50) அமுதகரவல்லி என்னும் பெயர்க் காரணம்; (51-52) மண்ணிப்படிக்கரைப் புராண நச்சுப் பொய்கைப் படலச் செய்தி; (53-59) ஒவ்வோர் ஊழியிலும் பூசை செய்தோரை உரைத்தது, (61) சுந்தரர்-சுந்தரமூர்த்திநாயனார்; (62) பரவை-பரவை நாச்சியார், இறைவர் சுந்தரர்க்காகப் பரவையாரிடத்துத் தூது சென்றது பெரிய புராணத்துக் கண்டது. பரிவு-விருப்பு, அருள்.

(63) வம்புறு-புதுமையமைந்த; (64) லிங்கம்-நாகலிங்கம்; இது மண்ணிப்படிக்கரையைச் சார்ந்ததோர் தலம்; புலிக்கலை - புலித்தோல் ஆடை (65); செந்தமிழ்ப்பா-தேவாரம் (68); மதகயத்து உரி - மதயானைத் தோல்; இது கயாசுரனை இறைவன் அழித்த கதை.

நிலவொளி பெருகும் நெறியால் வரையிற்
குறுமுனி கடத்திற் கொணர்ந்தநீர் ஏகப்
பருவதத் துதித்துப் பார்தனைக் கிழித்தே
எழுபது யோசனை எழிலுடன் நீண்டு
முழுமணந் துதிக்க முத்தியங் கதிக்க
திரைகரை மோதித் தேசமெண் திசையோர்
இருதயங் குளிர இருபுறஞ் செந்நெல்
விளைந்தமுத் திரந்து மிகனில் லோரும்
வளம்பெறு பொன்னி மாநதிக் கிறைவர்
சோலைமுக் கனிகள் சொரிந்திடு தேறல்
காவினிற் பெருகிக் கழனிகள் பரவக்
கன்னல் செஞ்நெல் கதிர்பொலி முத்தை
அன்னநீள் முட்டையென் றடைகளைக் காத்து
நலம்பெற விளங்கும் நளினமின் கருணை
துலங்கிய புகழ்சேர் சோழநன் னாடர்
தங்கமால் வரையிற் றரித்திடும் உடுவெனப்
பொங்கொளி நவமணி பொருந்திய சிகரமும்
ஆடக வரைபோல் அணியணி யாக
நீடுகோ புரமும் நிரைநிரை யொளிருப்
மரகதத் தூணும் வச்சிரப் போதிகை

---

(71) குறுமுனி - அகத்தியர், குறுமுனிவரால் காவேரி பெருகியது;

> 'அமர முனிவன் அகத்தியன் தனாது
> கரகங் கவித்த காவிரிப் 'பாவை'
>
> —மணிமே. பதி. 11-2

(72) பருவதம்-மலை; (73) யோசனை-நான்கு கூப்பிடு தொலை என்னும் ஓரளவு; (74) துதிக்க-நிறைய; முத்தியம்-முத்து, கதித்தல்-தாவல்; (75) திரை-அலை; (77) மிகனில்லோர்-வறியர்; (78) பொன்னி-காவிரி.

(79) தேறல்-தேன்; (80) கழனி-வயல்; (81) கன்னல்-கரும்பு, (82) கரும்பும் நெல்லும் ஈன்ற முத்தை, அன்னம் தன் முட்டையென மயங்கி அடை காக்கும்; (83) நளினமின்-திருமகள்; (85) உடு-விண்மீன்; (87) ஆடகவரை-பொன் மலை, மேரு; (85) நகரமைப்பு.

உரமிகு நீல உத்திரக் கொடுங்கையும்
இலகுசித் திரத்தா யிரக்கால் மண்டபம்
புலனுயர் திருமதிட் புரிசை யோடெழும்
நலந்திகழ் மடவார் நடனமண் டபமும்
பலபொருள் வயிசியர் பரவுமா வணமும்
தகைமைசேர் பெருமை தழைத்த செங்குந்தர்
மிகுவுயர் சோபனம் மிகுந்திடு தெருவும்
ஏர்பெறு பொன்னுல கென்னவே விளங்கும்
பார்புகழ் மண்ணிப் படிக்கரை யூரர்
சொரிநறா வுகந்தளி சொல்லிசை முழங்கும்
மருவுய ரிதழி மாலிகா பரணர்
மண்கதி யாகிய வாசியு முடையவர்
கண்மதம் பொழியும் கடகரிக் கிறைவர்
வானவர் துதிப்ப மறைப்பொருள் விளக்கும்
ஞானமே மிகுந்த நந்திகே தனமாம்
கதிமண முவர்குடை கதித்திடு வீரம்
முதிர்திரைக் கடல்போல் முழங்கிடும் முரசோர்
பதுமன்மால் மகவான் பண்ணவர் முனிவர்
துதிசெய்து பணியும் துலங்குசெங் கோலார்
பாவலர் புகழ்மண்ணிப் படிக்கரை நாதர்
தேவாதி தேவர் திருநீல கண்டர்
போசல குலேந்திரன் புகழ்சோ ணாடன்
தேசுயர் **பிரதாப சிங்கமா ராசன்**
உளமகிழ் தனயன் உபயகு லோத்தமன்
**துளசிரா சேந்திரன்** தொழுமிரு சரணார்

---

(92) மதிட்புரிசை-(மதிள் புரிசை) கோட்டை; (94) ஆவணம் - கடைத்தெரு; (96) சோபனம் - நன்மை, மகிழ்ச்சி; (97) ஏர்-அழகு; பொன்னுலகு- தேவருலகு; (85-98) நகரமைப்பு. (99) நறா-தேன்; அளி-வண்டு, ஈ; (100) மருவுயர் இதழி-மணமிக்க கொன்றை; மாலிகாபரணர் - மாலையை அணிகலமாக உடையவர். (101) வாசி - வாழ்வு; கடகரி- மதயானை. (104) நந்தி கேதனம்-நந்திக் கொடி; (104-10) கொடியும் குடையும் வீரமும் முரசோரும் செங்கோலாரும் ஆகிய நாதர் திருநீலகண்டர். (107) பதுமன்-நான்முகன்; மகவான் - இந்திரன்; பண்ணவர்-தேவர்; (111) போசல குல இந்திரன்- போசல நாட்டினர் தலைவன்; (112) தேசு-ஒளி, புகழ்; மராட்டிய வேந்தன் சிவாசியின் வழியில் வந்து தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த வேந்தன் பிரதாப சிங்க மாராசன் என்பான். அவன் மைந்தன் துளசி ராசேந்திரன் என்பான்.

திடமத கரியடர் சிங்கவே றனையன்
அடையலர் கோடரன் அல்கிலாச் **சீகர**
**நரபதி** பணிந்து நாடொறும் போற்றக்
கருணைகள் புரியும் கறைமிடற் றண்ணல்
சேனா திபனாம் **சிகதரன்** என்னும்
**மானோசி பூபன்** வணங்கும்பொற் பாதர்
தரும சற்குணன் தயவுயர் சதுரன்
கருணையில் மிகுந்த கல்விமான் நிதியம்
பெருகுகா ராளன் பிள்ளைநா யகன்சொற்
**பரசுரா மேந்திரன்** பணிசெயும் விமலர்
கதிபெறுங் காரியம் காணிக்கா முதலோர்
துதிசெய்து பணியும் சோம சேகரர்
வருபுகழ்ச் **சுத்த மல்லிமா சனங்கள்**
**பரதம் பட்டெனும் பதிமகா சனங்கள்**
மற்றுமுண் டான மாசனஞ் சகலரும்
நித்தமும் பணிதிரு நீலகண் டேசர்
நிரந்தர மாக நேர்வழு வாமல்
தெரிந்தநற் பணிநீள் சிவமறை யவர்குலத்
தெழில்பெறு **முத்தைய னெனு**ங்குரு ராயன்
தொழுதருச் சனைபுரி சூலபா ணியராம்
பெருமைகள் மிகவும் பெருகுகா ராளர்
வரிசைநீள் குவளை மாலிகா பரணர்
அருளுடை யாளர் அறிவுயர் சிலர்
பாதலம் புகழ்மண்ணிப் படிக்கரை நாட்டவர்
நித்தமும் பணிசெயும் நீலகண் டேசர்
நற்றமிழ் சேர்பெண்ணை நாடன்வில் விசையன்
மண்டலம்புகழ் வரு**ராய ராவுத்த**
மிண்டனெப் போதும் மிகப்பணி சரணார்

---

(116) அடையலர்-பகைவர்; கோடரன்-கோடரி போல்வான், பகைவராம் மரத்தைச் சாய்க்கும் கோடரி போல்வான் என்றது உருவகம். அல்கு-குறைவு, சீகரம்-செழுமை; (121) சதுரன்-பண்பாளன்.

(125) காரியம் காணிக்கா-உள்படுகருமக் கண்காணிப்பாளர் என்னும் பதவிப் பெயருடைய ஒருவர்; (126) சோமசேகரர்-நிலவணிந்தவர், சிவபெருமான்; (127-8) சுத்தமல்லி, பரதம்பட்டு என்பவை ஊர்ப்பெயர்; (134) சூலபாணியர் - சூலத்தைக் கைபிற் கொண்டவர்.

விமலனார் கயிலையில் மிகவும் வருந்தி
உமையவள் தானும் ஓங்கா ரப்பொருள்
கூறெனக் கேட்டற் குணர்த்துசொல் மறந்து
வீறுடன் 'திரும்ப விளம்பு'மென் றளவில்
அரன்மனம் வெகுண்டு 'ஆ'வென் மொழிய
மரகதப் பசுவடி வாகியே உமையாள்
பாரினில் மிகுந்த பண்புடன் வரவே
சீருடன் மேய்ப்பத் **தேரழுந் தூரில்**
பூமரு வியமால் ஆயர்தன் வடிவாய்க்
கோமள மான குழலிசை யதனால்
நேயமாய் மேய்த்து நீணகர் புரக்கும்
**ஏயர்கோன் கலிக்காமன்** என்ன வேபுகழ்
**மானக்கஞ் சாறன்** மகள்தனை மணஞ்செயத்
தானிச் சையினால் தமருடன் வரவே
அரனெழுந் தருளி ஆயிழை கூந்தலை
விரைவுடன் கேட்க விருப்புடன் கொடுப்பத்
திருவுள மகிழ்ந்து தெரிவருங் காட்சி
புரிந்திட நன்மணம் புணர்ந்து பார்புகழ்
நிலைபெறுங் கீர்த்தி நீடுகா ராளர்
**குலபதி ஏயர் கோனார்** கோத்திரத்
**தானீக ராயன்** தமிழறி தூயன்
மானா பரணனாம் வளர்குண சீலன்
மனமகிழ்ந்தருள் மைந்தர்க ளுடனே
தினம்தினம் போற்றும் திருநீல கண்டர்
கருணைசேர் அமுத கரவல்லி பாகர்,
வரிசைசேர் படிக்கரை வளர்நீல கண்டர்
பரிவுடன் நவமணிப் பணிமிகத் தரித்துச்

---

*(143-154)* உமை இறைவனிடம் ஓங்காரப் பொருள்பற்றிக் கேட்க இறைவன் அருள, உமை அதனைச் செவிக் கொளாதிருந்து 'திரும்ப விளம்பும்' என, இறைவன் சினந்து 'ஆ' வென மொழிந்ததால் உமை, பசுவாய்ப் பிறந்ததும் திருமால் ஆயர் வடிவில் ஏயர்கோனாகப் பிறந்ததும் பெரிய புராணத்து 'ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராண'த்துக் காணாத செய்தி; *(150)* தேரழுந்தூர்-திருவழுந்தூர்; *(156)* தமர்-தம்மவர், சுற்றத்தார்; *(157)* 'அரன் எழுந்தருளி கேட்க கொடுப்ப — காட்சி புரிந்திட' என்பவை பெரிய புராணத்துக் காணும் செய்தி.

*(169)* பரிவு-விருப்பு; பணி-அணிகலம்.

சுரநதி இளம்பிறை துலங்கநீள் சடையில்
பலமலர் மல்லிகை மாண்புடன் திகழ
இலகுபொற் கலைகள் எழில்பெற வணிந்து
நலமிகு களப நானமே கமழக்
குலவுவெண் திரைக்கடல் குமிறொலி போலச்
சதிர்பெறு வாத்திய தாளமத் தளங்கள்
துதிபெறு தேவ துந்துபி பலவும்
கதிர்பெறு நவுரிஎக் காளபூ ரிகையும்
துதிபெற முழங்கத் தோகையர் நடிக்க
நந்திகே தனமும் நவமணிக் கவிகை
விந்தை விந்தையாய் விருதுக ளோடு
மேனகை கவரி மெய்ப்புடன் இரட்ட
கானவல் லவர்கள் கனிதமி ழோத,
ஒளிதிகழ் பந்தம் ஓரா யிரமேல்
வளமிகுந் தெழிற்பட வத்திபார் விளங்க
உருவசி யரம்பை திலோத்தமை மேனகை
திருமட வார்கள் சிந்துகள் பாட
வானவர் செழுமலர் மாரிகள் தூவ,
தானை பரிகலம் சகலரும் சூழ
பார்புகழ் மண்ணிப் படிக்கரை வீதியில்
ஏர்பெறு நீலகண் டேசரன் புடனே
தினகர வுதையம்போல் திரள்நவ மணியணி
கனகதண் டிகைமேற் கதித்திடப் பவனி
வந்திடக் கண்டு மாதர்கள் கோடி
சிந்தையின் மகிழ்ந்து செயலுடன் தொடரும்
அருமையில் **ஒருத்தி** அதிரூப வஞ்சி
விரகமே மிகுந்து விளங்குமின் கொழுந்து
கொம்புறாச் செழுந்தேன் கோதிலாக் கரும்பு
அம்பரத் துதியர் அதிரச வமுதம்

---

(170) சுரநதி - வானகங்கை; (173) களபம், நானம்-மணப்பொருள்கள் (177) நவுரி, எக்காளம், பூரிகை - இசைக்கருவிகள்.

(182) கான வல்லவர் -இசை வல்லார்; (184) வத்தி-பத்தி; (188) தானை பரிகலம்-படைகளும் பரிவாரத்தினரும்; (191) தினகரன் - கதிரோன்; உதையம்-உதயம்; (195-202) நீலகண்டர் உலாக் கண்ட ஓரிளம் பெண் வண்ணனை; (196) விரகம்-காதல் வேட்கை 'கொம்புறாச் செழுந்தேன்,' 'கோதிலாக் கரும்பு,' 'கட்டுறா நறுமலர்,' 'கலைந்திடா இனியமான்,' 'மலையகம் தெரிந்திடாத் தென்றல்' என்பவை 'வெளிப்படை'. (197) கோது-சக்கை; (198) அம்பரத்துதியர்-தேவர்.

கட்டுறா நறுமலர் கலைந்திடா இளியமான்
திட்டயா மலையகம் தெரிந்திடாத் தென்றல்
கோதையர் தயக்கெலாய் குலதெய்வம் போலப்
பூதலத் துதித்த பொன்னுரு வனையாள்
மைம்முகில் காரிருள் மதுகரம் குளிர்ந்த
சைவலம் போன்ற தாதுதிர் குழலாள்,
பூநிமிர் மாரன்விற் போற்புரு வத்தாள்;
தேனுயர் கமலச் செவ்வரி தான்படர்ந்
திலகு கூர்ங்கணை எழில்வரி யகல்விடம்
வலையிடைப் படுமொரு மான்பிணை விழியாள்;
வள்ளைநேர் காதாள்; வளரெட்பூ நாசியாள்;
தெள்ளுகண் ணாடிபோல் திகழ்கபோ லத்தாள்;
இந்திர கோபத்தை இலங்குகிஞ் சுகத்தைச்
சுந்தரப் பவளந் தொண்டை துகிரை
வென்றிடு மிதழாள் விளங்குவெண் டரளம்
மன்றல்சேர் முருந்து வளர்முல்லை நகையாள்;
கரும்பின் கட்டியைக் கதித்திடு சுவையை
அருந்து செந்தேனை அலைகடல் அமுதைப்
பாகினை வென்ற பண்புசேர் மொழியாள்;
பூகம்வெண் சங்கைப் போன்றிடு மிடறாள்;
கஞ்சன முகையோ கரியின் தந்தமோ
செஞ்சிலை மாரன் சிரத்தணி முடியோ
சதிர்பெறும் வட்டோ சக்கர வாளமோ
நிதிநகர் கந்துக நேமியோ குடமோ
விந்தைசேர் மதன்ரதி விளங்குகூ டாரமோ
வந்திவண் தங்கி வயங்குவ தென்னச்

---

(200) மலையகம் - பொதியமலை; (201) கோதையர்-மகளிர்; (202) பொன்னுரு-திருமகள் வடிவம்; (203) மதுகரம்-வண்டின் தொகுதி; (204) சைவலம்-பாசி; (205) மாரன்வில்-மன்மதன் கரும்பு வில்; (206) கமலச் செவ்வரி-தாமரை மலரிதழில்-அமைந்த சிவந்தவரி; (207)-8 கணை, வரி (வண்டு), விடம், மான் விழி அனைய கண்; (209) வள்ளை-வள்ளைக் கொடி; (210) கபோலம்-கன்னம்; (211) கிஞ்சுகம்-முண்முருக்கம்பூ; (212) துகிர்-பவழம், (213) தரளம்-முத்து; (214) முருந்து-மயிலிறகின் அடி; நகை-பல்.
(218) பூகம் - பாக்குமரம்; (219) கஞ்சனமுகை-தாமரை மொட்டு; கரி-யானை; (224) வயங்குவது-விளங்குவது;

சந்தன குங்கும மிஞ்சு கதம்ப
குழம்பு திமிர்ந்து மணங்கள் பொருந்தி
அடர்ந்து விளங்கு சுணங்கு படர்ந்து
வடங்கள் புனைந்து வளர்ந்து வெதும்பி
வட்ட மிட்டபொற் குவட்டுமா முலையாள்
திகிரிநேர் புயத்தாள் திரள்வண் டணிசரி
மிகவொளிர் முன்கையாள்; விளங்குபங் கயம்போல்
இலங்கிய அகங்கையாள்; எழில்சுக நாசிபோல்
துலங்குகூ ருகிராள் துணைக்கணை யாழி
தினகரோ தையம்போல் திகழ்ந்தொளி செய்யும்
நிரைபெறு பயற்ற நெற்றெனும் விரலாள்;
வடதளிர் போன்ற வயிற்றினாள் ஆடவ
ருடமனம் சுழித்துவாங் கொளிர்மலர் உந்தியாள்;
துடியெனப் பிடியெனத் துலங்குமின் னிழையெனக்
கொடியெனும் இடையாள்; குலவி நிமிர்ந்தெழும்
பன்னகத் தொளிரும் படமென விளங்கும்
பொன்னால வட்டம் போன்ற அல்குலாள்
போந்திடு மோகப் புணரியை மிகவும்
நீந்திடு தெப்பம் நிரைத்தபொற் கதலி
யெனுமிரு தொடையாள், எழில்கவிக் குலத்தை
மனமிக வாட்ட வருமுழந் தாளாள்;
ஒளிர்வரால் இணைபோல் உயர்மதன் தூணிபோல்
வளமிகு கணைக்கால்; வரிசைசேர் ஆடவர்
சிந்தையை நிறுக்கும் திராசெனும் பரட்டாள்;
சந்ததம் மன்மதன் தடமணி மகுடச்
சிரமிக வருடிச் சிவந்தபிஞ் சதுபோல்
புரிமத கலைவரை பொத்தகம் போல
விரலொடு பதிநகம் விளங்குசந் திரன்போல்
பரிவுடன் நடமிடு பங்கயச் சரணாள்;

---

(229) பொற்குவடு-பொன்மலை, (230) திகிரி-மூங்கில்; வண்டு சரி-வளையல்கள்; (231) பங்கயம்-தாமரை; (236) தினகரோதையம் - கதிர்எழுச்சி; (236) வடதளிர் - ஆலந்தளிரிலை; (237) சுழித்து-முறித்து. (238) துடி-உடுக்கு; பிடி-பெண்யானை; மின்இழை-மின்னல் கீற்று; (240) பன்னகம்-பாம்பு; (241) ஆலவட்டம்-விசிறி; (242) புணரி-கடல்; (243) தெப்பம்-மிதப்பு; நிரைத்த - ஒழுங்காக அமைத்த; (246) மதன்-மன்மதன்; தூணி-அம்புக் கூடு; (248) பரடு-கால்படம்; (249) சந்ததம்-நாள்தோறும்; (251) மத கலைவரை பொத்தகம்-மன்மத கலை வரையப் பெற்ற நூல்.

திருமயி லனையாள்; சித்தசன் மனையாள்;
துடிமிக வுடையாள் துலங்கிய நடையாள்
படிபுகழ் மண்ணிப் படிக்கரை நாதர்
வடிவது நோக்கி மாமயல் தாக்கிச்
சிலைமதன் கணையால் சேணொளிர் மதியால்
மலையமா ருதத்தால் மாங்குயில் ஒலியால்
ஆகமே மெலிந்தும் அன்னமருந் தாமல்
சோகம தாகிச் சொல்லிசை மறந்தும்
ஒளிமருங் குடையும் உபயமாங் கரத்திடு
வளைகளும் சோர வருந்தமு மாகித்
தாங்கரு மயலால் தளரு**மோகினி**க்குப்
**பாங்கி**யும் வந்து பரிவுடன் தேற்றி
அரிவை யேயுன தகமதின் வருத்தம்
பரிவுடன் சொல்லெனப் பாங்கியும் கேட்கச்
சகம்புகழ்ந் தேத்து திருநீல கண்டர்
உகந்தநற் பவனி உலாவரக் கண்டு
விரகமா கினேனென விளம்பிடப் பாங்கியும்
பரிவுயர் மண்ணிப் படிக்கரை நாதர்
அருளுடன் வருவரென் றருங்குறி பார்க்க
வரைதனில் வளர்**குற வஞ்சி**யை யழைத்துப்
பரிவுடன் குறிகள் பண்புடன் கேட்டு
மலைக்குற வஞ்சி மனது குளிரப்
பல்கலை பூசணம் பாங்குடன் அளித்ததும்
திரம்பெறச் **சிங்கி**யைச் **சிங்கனும்** தேடி
விரைந்து வந்ததும் விளைசெந்நெல் வயலில்
பெருங்கண்ணி குத்திப் பறவைகள் பிடித்ததும்
வங்கணச் சிங்கியை வளம்பெறப் புவனம்
எங்கணும் தேடி இளைத்தடை யாளம்
உரைத்ததும் பலபல உச்சிதம் கொடுத்ததும்
விருப்பமாஞ் சிங்கியை வீறுடன் சிங்கன்
இகலுடன் கண்டுபின் ஏச லானதும்

---

*(254)* சித்தசன்-மன்மதன்; *(203-254)* மயல் கொண்ட மகளின் வடிவ வண்ணனை முடிமுதல் அடி வரை (கேசாதி பாதம்); *(255-85)* இக் குற வஞ்சி நூலின் இயல்முறை வரன்முறை; *(260)* ஆகம்-உடல், *(262)* உபயம்-இரண்டு *273)* வரை-மலை; *(276)* பூசணம்-அணிகலம். *(280)* வங்கணம்-நட்பு, காதல்; *(282)* உச்சிதம் - உயர்ந்த கொடை; *(284)* இகல்-மாறுபாடு.

அகம்மகிழ்ந் திருவரும் அன்புடன் சேர்ந்ததும்
பொங்கம தாகப் புவியுளோர் துதிக்க
இங்கிதம் பெருக எழில்பெறத் தமிழால்
புகழ்பெறும் **ஆதி புரி**தனில் விளங்கும்
மிகுதமி ழுன்பினன் **வெங்கடே சன**ருள்
நலமிகு **சாமிநா தையன்** மகிழ்வாய்
இலகுசொற் **குறவஞ்சி** என்னு**நா டகத்**தைப்
பரிவுடன் உரைத்தேன்; பைந்தமிழ் வாணர்.
பெரிதென உகந்தென் பிழைபொறுத் தருள்வீர்.

### விருத்தம்

**11.** அட்டதிக் கிலங்கு பாண்டவ ரைவர்கள் பூசை செய்யும்
மட்டவிழ் சோலை சூழும் மணிப்படிக் கரையில் நாளும்
சிட்டர்கள் பணிசெய் பாதர் திருநீல கண்டர் வாசல்
**கட்டியங் காரன்** வந்து களரியில் தோணி னானே.

### தரு

**12.** கதிர்மணி பிரம்பு கொண்டு—வாசற்
கட்டியக் காரனும் வந்தானே
நிதமண்ணிப் படிக்கரை யிலத்—திரு
நீல கண்டரைக் கொண்டாடி—கதிர்மணி.

(அ) தலையினில் குல்லாவும் தரித்துச்—சகலாத்
தங்கியும் சல்லடமும் விளங்க
இலகியமெய்ப் பணிகள் குலுங்க—மிக
எச்சரிக்கை பராக்கென்று—கதிர்மணி.

(ஆ) கற்றவர்கள் துதிசெய்யும்—அமுத
கரவல்லி யெனுமுமை பாகர்
நித்தமும் படிக்கரை யிலத்—திரு
நீல கண்டரைப் போற்றிசெய்தே—கதிர்மணி.

---

287. இங்கிதம் - இனிமை.

11. மட்டு - தேன்; கட்டியங்காரன்-உலாவெழுச்சி கூறுவோன்; களரி-களம், அரங்கம்.

12. (அ) சகலாத்து அங்கி-கம்பளித்துண்டு; சல்லடம்-சட்டை; பணிகள்-அணிகலங்கள்.

(இ) மருமலர் நின்ற சோலை—வளர்
மண்ணிப் படிக்கரை தன்னிலுயர்
அருள்நீல கண்டர் மீதில்—பேர்
ஆசை மோகினி வரவு சொல்லி—கதிர்மணி.

**வசனம்**

அதிரூப லாவண்ணிய யௌவனாதிசய சோபித கனக பூசனாலங்காரமாக, களபகுங்கும கஸ்தூரி சந்தன வாடைகள் திமிர்ந்து, மல்லிகை முல்லை மருமலர் கொழுந்து சாதி செண்பகமலர் வாடைகள் யோசனை கமழ் களப புளகித லளித பயோதரங் குலுங்க, வெற்றி முரசு வரிசை சல்லரி பூரிகை நாகசுரம் எக்காள முதலாகிய சமுத்திர கோஷ்டம் போல் முழங்க, சங்கீத வித்தியா விநோத வீணை வல்லவர் இசை ராக நாதங்கள் பாட, அதிரூப மோகன வனிதையர் அபிநய பரதநாட்டியம் புரிய, ஆடகப் பிரதிமைபோல் வனிதையர் இருமருங்கும் வெண்கவரி பணிமாற சோடசக் கிரண பூரண சந்திரோதையம் போலச் பூசக்கர வாளக் குடை நிழற்ற, மந்த மாருத சுகந்த கலாப மயிலிற கால வட்டம் அரிவையர் விசிற, வாலிப சுந்தர மங்கையர் சொர்ண களாஞ்சியேந்த, தமனிய சோபித மாதர்கள் சிவு பாக்கு வெள்ளடை யுதவ, அதிவித சல்லாபமாக இருகையிலும் அம்மானை கழங்கு எதிர்எறிந்து ஆடிப் பாடித் திருமகளுலாவு மண்ணிப்படிக்கரைத் திருநீலகண்டர் மீதில் மனதடங்கா அதிமோகமாகிப் பிடியன மென்ன, ஒயிலாக அதிரூப **மோகனாங்கி** கொலுவுக்கு வருகிறாள். எச்சரிக்கை பராக்கு.

---

(இ) மருமலர்-நறுமலர்.

வசனம்: சமுத்திர கோஷ்டம்-கடல் முழக்கம், ஆடகப்பிரதிமை-பொற்பாவை; சோடசக் கிரணம்-பதினாறு கலை (நிரம்பிய); கலாபம்-தோகை; களாஞ்சி-எச்சிற் படிக்கம். வெள்ளடை-வெற்றிலை.

## விருத்தம்

**13.** தரணியுளோர் புகழுமண்ணிப் படிக்கரையில் நிதம்விளங்கு
சடில ரன்பர்க்
கருள்புரியும் திருநீல கண்டர்வரு பவனிகண்டு
காதல் பூண்ட
தருணவடி வுயர்தரள மொளிருநகை முகமிலங்கத்
தழைப்ப வாரிச்
சொருகுகுழல் நறைகமழ அதிரூப மோகினியும்
தோன்றி னாளே.

## தரு

**14.** விரக மோகினியும் வந்தாள்—மேனகை போல
விரக மோகினியும் வந்தாள்.

(அ) தரைபுகழ் மண்ணிப் படிக்கரையில் நிதம்விளங்கும்
திருநீல கண்டர் ஒயிலாய்வரு பவனி கண்டு
திருகணி லாகுடன் பரதவித நடன துரித
சரண பரிபுர ஒலிதர மிக—விரக.

(ஆ) அடருமெய்ப் பணிதுலங்க அங்கையில்—வச்சிரக்
கடையம்போல் சரிவளை குலுங்க—கமலவன்னம்
நடைகண் டஞ்சி மனமலுங்க—நல்மாதங்கத்
தொடுமுலை நிகர்நிகரென் றிலங்க—குளிர்காவினில்
கொஞ்சு கிளிகள்மொழிக் கஞ்சி வனம்புகவே
செஞ்சிலம் பொலிசெய் வஞ்சி யிடைதுவள—விரக.

(இ) முல்லைமல் லிகைமலர் சூட்டி—முத்துமுத்தாக
நல்லிசை வீணைதனை மீட்டி—நாட்டந் தனிலும்
வல்லமை இளைஞருயிர் வாட்டி—மாமயல் பூட்டிச்
சொல்லி இங்கித சுகம்பா ராட்டி—சுரதமிகு
தோகையர் குலதெய்வ மாகுமிவ ளெனவும்
நாகரிக வைபோக மதாய்மிக—விரக.

---

13. சடிலர்-சடையர்: தருணம் - இளமை; தருணி என்பது ஒரு பெண்பருவம், அது பதினாறு தொடங்கி முப்பது வயதுமட்டும் ஆகும்; நகை-பல்; நறை-மணம்.

14. (அ) சரணம்-அடி; பரிபுரம் - சிலம்பு. (ஆ) மாதங்கம்-யானை; 'கடாஅக் களிற்றின்மேல் கட்படாம்'-திருக். நிகர்-ஒப்பு; வஞ்சி-கொடி.

(இ) நாட்டம் - கண்; சுரதம் - புணர்ச்சி வேட்கை.

(ஈ) சுருதிப் பொருளெனும் பிரகாசர்—துலங்கமுத
கரவல்லி மருவுசர் வேசர்—கதிக்கும்படிக்
கரையில் விளங்கு கிரீசர்—கமலன்பணி
சரணர் அன்பர்களுல் லாசர்—தயவாயமூவர்
தண்டமிழ்ச் சொல்மகிழ் கொண்டவர்—அருவிடம்
உண்டவர் திருநீல கண்டரை மருவ—விரக.

## தரு (வேறு)

15. மையல் சகிக்கு தில்லையே—என்சாமியை
வரச்சொல்லு வாரில்லையே

(அ) துய்யபுகழ்ப் பாண்டவர் தொழுமணிப் படிக்கரை
அய்யர்திரு நீலகண்டர் மீதில்நான் கொண்ட—மையல்.

(ஆ) வருசையு பணிகள் துலங்க உயரு மத்தமா தங்கமேல்
இலங்கத்
தெருவில் வருபவனிச் சிங்காரந் தனைநோக்கி
இருவிழி கண்டென்றன் மனம்வருந்தி—மையல்.

(இ) வீணில் பருவம் போகுதே—நான்தான் கொண்ட
விரகங் கடல்போல் ஆகுதே;
பூணும் பணியிகழ்ந்து புரியுஞ்—செயல்மறந்து
நீணிலந்தனில் பெண்கள் நிந்தனைக் கிடமாகி—மையல்.

(ஈ) ஆசை கொள்வதும் தொல்லையே—இதைஒருவர்
அறிந்தால் மிகவும் சள்ளையே
நேசமாகிய திருநீல கண்டர் மனத்தில்
யோசனை அறியாமல் உளமகிழ்ந்தே—கொண்ட
மையல் சகிக்கு தில்லையே—மையல்

## விருத்தம்

16. சுந்தமலர் இதழியணி புரிசடையார் திருநீல கண்டர் மீதில்
சந்ததமும் மனத்தடங்கா மயல்மோக னாங்கிமனம்
தளரும் வேளை
செந்தழல்போல் பொறிசிதறிக் கொழுந்துவிட்டுப்
பரந்துகுண திசையிற் பாரில்
அந்தகாரப் படலந்துரந் தொளிர்சந்த்ர பானுத யமாகி
னானே.

---

(ஈ) சுருதி-வேதம்; கிரீசர்-கிரி ஈசர்; கமலன்-நான்முகன்.

15. சகிக்குது-பொறுக்குது.

(ஈ) சள்ளை-துன்பம், தொல்லை.

16. இதழி-கொன்றை; அந்தகாரம்-இருள்; துரந்து-ஓட்டி.

## வெண்ணிலாத் தரு

17. பொங்குபாற் கடல்பிறந்து செங்கனல் போலெழுந்தாய்
[—வெண்ணிலாவே—விரக
மங்கையரைக் காய்ந்தன்றோ உன்னங்கத்தில்
களங்கமுற்றாய்—வெண்ணிலாவே

(அ) தேவகுரு மின்பொருட்டால் மேவுகலை
நீகுறைந்தாய்—வெண்ணிலாவே—அந்தப்
பாழ்வினையை எண்ணாமல் தாவிக் கனல்
நீவிக்காய்ந்தாய்—வெண்ணிலாவே

(ஆ) காரிகை யுடனுதித்த காரியமெல் லாய்மறந்து—
வெண்ணிலாவே—கடுங்
கூரிய விடம்போலவே பேரிருளிற் காயவந்தாய்—
வெண்ணிலாவே

(இ) திருவளரு மண்ணிப்படிக் கரையில்திரு நீலகண்டர்
—வெண்ணிலாவே—என்மேல்
பரிவாய்மலர் அணையில்வந்து மருவிச்சேர்ந்தால்
என்செய்வாய்—வெண்ணிலாவே.

## கலித்துறை

18. நிலமீதில் பாண்டவர்போற் றிசெய்யுந்திரு நீலகண்டர்
நலமேவு பேரெழில்நோக் கியமோக மின்னாள்மிகவும்
கலைமாம தியனலால் மதிவாடுங் கருத்துகந்து
சிலைமாரன் முல்லைக்கணை தூவியமர் செய்தானே.

## மன்மதன் தரு

19. கரும்பைச் சிலைவளைத்துச் சுரும்புநா ணேற்றியே—
மன்மதா
ஒருகன்னி தன்மீதில் மன்னிச்சமர் செய்தாயே—
மன்மதா

---

17. அங்கத்தில் களங்கம்-வளர்தல், தேய்தல், இல்லையாதல்.

(அ) தேவகுருமின் - வியாழன் மனையாள்; கனல் நீவி-தீயை இறைத்து; (ஆ) காரிகை-திருமகள்.

18. மதி-திங்களும் அறிவும்; சிலை மாரன்-(கரும்பு) வில்லையுடைய மன்மதன்.

19. சுரும்பு - வண்டு; மன்னி - தொடர்ந்து; சமர்-போர்;

(அ) கானங் குயில்கடல் மேளம் முழங்கவே—மன்மதா
மீனங்கட்டி சுகமேறி அட்டகாசஞ் செய்தாய்
—மன்மதா

(ஆ) கொங்கை யிலக்காக ஐங்கணை நாலெய்தாய்
—மன்மதா உன்
அங்கத்தைப் போலென்றன் அங்கத்தை வாட்டாதே
—மன்மதா

(இ) மண்ணிப் படிக்கரை அண்ண லெனைச்சேர்ந்தால்
—மன்மதா
கண்ணழ லாலுன்னை விண்ணேற்று விப்பன்பார்
—மன்மதா.

## விருத்தம்

20. பைந்தமிழ்க் குகந்த மண்ணிப் படிக்கரை நாதர் மீதில்
சிந்தையில் மிகமால் பூண்டு செயல்தரு மோக வாங்கி
சந்திரன் கனலால் மாரன் சரத்தினால் தளரும் வேளை
செந்தமிழ்ப் பொதிய மேருத் தென்றல்வந் துற்ற
தன்றே.

## தென்றல் தரு

21. மருமலர்ச் சோலையில் தென்றலே—மெத்தப்
பொருபுலி போலப் பாய்ந்தாய் தென்றலே.

(அ) சொருகு குழலுனக்குத் தென்றலே—மணந்
திருசந் தனவனமோ தென்றலே.

(ஆ) தென்மலை மேலுறை தென்றலே—இரு
பொன்முலை மேலுற்றாய் தென்றலே

(இ) சொன்மண மேவிய தென்றலே—மெய்யில்
நன்மணம் நீவினாய் தென்றலே.

(ஈ) பருவ மல்லவுனக்குத் தென்றலே—மண்ணிப்
படிக்கரை நாயகர் தென்றலே.

(உ) மருவி மணம்புரிந்தால் தென்றலே—உன்னை
வாசுகிக் கிரைசெய்வேன் தென்றலே.

---

(அ) மீனம்-மீனக்கொடி ; சுகம் - கிளியாகிய தேர்.

(ஆ) ஐங்கணை - தாமரை, மா, அசோகு, முல்லை, நீலம்; நால் என்றது மரணத்துயர் தரும் ஒன்று நீங்கிய நான்கு கணை, 'மன்மதன் அங்கம் (உடல்) எரியுண்டதுபோல்.'

20. மால்-மையல், மயக்கம்; சரம்-அம்பு.

21. வாசுகி-பாம்பு.

## கட்டளைக் கலிப்பா

22. மன்றல்சேர் கொன்றை வேணியர் மாலையன்
வணங்கு மண்ணிப் படிக்கரை நாயகர்
நன்றிசேர் பேரில் நோக்கி மனதினில்
நாடியா சைகொளும் மோக னாங்கியும்
தென்றல் மாரன் கணைமதி யாலுமே
தேகம் வாடி மனந்தளர் வேளையில்
வென்றி சேர்மலர்க் காவினில் கோகிலம்
விரைந்து கூவ வருந்தின ளாகமே.

## குயில் தரு

23. ஞாயமல்ல உனக்கிது மாவிற் கருங்குயிலே
நேயர்திரு நீலகண்டர் நேசங்கொண் டெனைவருத்த
—ஞாய.

(அ) என்மனதில் வருத்தமுங்கண் டுன்மனதில் மகிழ்ச்சி கொண்டு
வன்மஞ்செய்து கூவுவது தன்மமல்ல குயிலே—ஞாய.

(ஆ) மாவிலிளந் தளிரருந்தி நாவிலுறுங் கடிகமழ்ந்தென்
ஆவிதளர்ந் திடமிகுந்து கூவுறாய் குயிலே—ஞாய.

(இ) பூவுலகிற் காகமுனை யாவலுடன் அணைத்ததுவென்
பாவமல்ல வோவுகந்து கூவுறாய் குயிலே—ஞாய.

(ஈ) சித்தனவர் வருத்தும் புத்திதனை மிகமறந்து
மெத்தவும் என்மீதில் வருத்தம்விடக் கூவுவாய்—
ஞாய.

(உ) நித்தர்திரு நீலகண்டர் மெத்தவும்என் மீதினிலே
சித்தம் வைத்துவரக் கூவுவாய் முத்துவண்ணக்
குயிலே—ஞாய.

---

22. கோகிலம்-குயில்.

23. (அ) வன்மம்-வன்மனம்; தன்மம்-தருமம், (ஆ) கடி-மணம்; (ஈ) சித்தனவர்-என்மனத் திருக்கும் நாதர்; (உ) முத்து வண்ணம்-அழகிய வண்ணம்.

## விருத்தம்

**24.** முதுமறையின் இசைமுழங்கும் படிக்கரைநா யகர்மீது
மோக னாங்கி
மதியனலால் மதன்கணையால் மாங்குயிலால்
தென்றலினால் வருந்தும் வேளை
இதமறிந்து தெரிந்துரைக்கும் வகைமிகுந்து செயலாற்று
மினிய பாங்கி
விதமறிந்த நடைதுலங்க விளங்குமணி யணிதுலங்க
விரும்பி வந்தாள்.

## தரு

**25.** சீருயர் சடைமுடியில் திங்கள் துலங்க—மிகு
திக்கிலுயர் அன்பர்க்கருள் முக்கண் இலங்க
காரெனும் விடமணிந்த கண்டம் நிறக்கத்—துடி
கலைசூலம் பரசும்அங் கையில் சிறக்க

(அ) மெய்யில் லாபரணம் மெத்தவு மின்ன—மதி
வெம்புலி யுடையுமெய்யில் வெண்ணீறு மன்ன
துய்ய வச்சிராரத் தொங்கல் ஒளிர—மிகு
சுந்தர நுதலினிற் கத்தூரி மிளிர

(ஆ) மல்லிகை முல்லைஇதழி மாலை தழங்க—எழு
வாரிபோலத் தேவதுந்துபி வாத்திய முழங்க
மெல்திலோத் தமைரம்பை மேனகை யாட—இசை
வீணைதும் புருநாரதர் மெய்ப்பாகப் பாட.

(இ) மங்களமா வெண்கவரி வானோ ரசைப்ப—உயர்
மாமதிபோல்குடையால வட்ட மிசைப்ப
பங்கயன் மால்மகேசன் பணிந்து போற்ற—நல்ல
மந்திரமா முனிவரிரு பக்கம்நின் றேத்த

---

24. இதம்-இனிமை, உரிமை.

25. கலை-மான்; பரசு-மழு.

(அ) தொங்கல் - மாலை; சுந்தரம் - அழகு; (ஆ) தழங்க-அசைய; வாரி-கடல்; மெய்ப்பாக-செவ்விதாக; (இ) மகேசன்-இந்திரன்; முனிவர்-பதஞ்சலி முனிவரும்; வியாக்கிர பாதர் என்னும் புலிக்கால் முனிவரும்.

(ஈ) தேறுதமிழ் மூவர்தமிழ் செப்பித் துதிக்கப்—பல
திக்கெலா மிடபக்கொடி சீராய்க் கதிக்க
வீறுவாகு வாகன மீதில் ஐங்கரன்—மயில்
மீதில்குகன் வரப்பக்க மெங்கும் புங்கவர்

(உ) மன்னவன் **பிரதாப சிங்கு மாராசன்**—அருள்
மாதுசேர் **துளசி ராசன்** போற்றி வரவும்
மின்னுபுகழ் தளகர்த்தர் மிகுசே னைகள்—திரள்
வெம்புலி தானடர் யானைகள் பெருக
வானமலர் போல நடந்தெழில் கொஞ்சும்
வஞ்சணப் பாங்கியும் தோன்றி னாளே.

## தரு

**26.** இங்கிதப் பாங்கி வந்தாள்—இந்திராணியைப் போல
இங்கிதப் பாங்கி வந்தாள்.
கங்காளர் திருநீல கண்டர் மேலாசை கொண்ட
சிங்கார மோகினி சிந்தை குளிரமிகும்—இங்கிதப்.

(அ) ஒருகையில் மலர்ச்செண்டு பிடித்துக்
—கைந்நொடித்து
உல்லாசப் பதம்படித்து—மிகநடித்துச்
சரசவிதம்பா ராட்டித்—தம்புரு வீணை மீட்டி
வரிசைப் பணிகள் பூட்டி—மல்லிகை மலர்சூட்டி
—இங்கிதப்.

(உ) இருமுலைக் குவடி லங்க—மெய்துலங்க
இளைஞர் மனது மயங்கச்—சொல்விளங்க
அரிவைப் பருவ வஞ்சி—அஞ்சுகம் போலக்கொஞ்சிச்
சரச விதங்கள் மிஞ்சித்—தருசுகவர பஞ்சி
—இங்கிதப்.

---

(ஈ) தேறு தமிழ் மூவர் தமிழ்-தேன் போலும் இனிய மூவர் தேவாரம்; இடபம்-காளை; ஆகு-எலி; புங்கவர்-தேவர்.

26. கங்காளர்-எலும்பு மாலையணிந்த சிவனார்.

(அ) பதம்-தாளம்.

(உ) குவடு-மலை; அரிவைப் பருவம்-மகளிர் ஏழு பருவங்களுள் ஒன்று, 25 வயதுடையவள்; அஞ்சுகம்-கிளி;

## விருத்தம்

**27.** கந்தமிகு செங்குவளை கொன்றையணி திருநீல
கண்டர் நாட்டில்
சந்திரவ தனந்திகழ அலங்கிருதம் துரந்தரிகத்
தையல் என்னப்
பந்துமுலை குன்றமென மிகுந்திடையொ சிந்துடலம்
பசந்து சோரச்
சிந்தைதனி லிந்தயல் வந்தவகை என்றனுடன்
செப்பு வாயே.

## வசனம்

'வாராய் மோகனாங்கி, உன்மனோ வருத்தம் இன்ன தென்று சொல்ல வேணும் பெண்ணே.'

'சொல்லுறேன் கேளடி சகியே!'

## தரு

**28.** நீதிசேர் மணியங் காணிக்கர் நெருங்கப்—புகழ்
நீடு காராளர் வணங்கியே நிற்க மருங்கு,
மாதவர் மறையோர் வேத வாத்தியம் கதிக்க—சிவ
மாமறையோர் மங்கலம் வாகாய்த் துதிக்க

(அ) சித்திர மாநவ ரத்தினச் சிவிகை மீதில்—எங்கள்
திருநீல கண்டர் மகிழ்சேர் மாலைப் போதில்
நித்தமுயர் படிக்கரை வீதி தன்னில்—வரு
நேர்த்திகண் டாசை கொண்டேன் நினைவினி
லுன்னி

(ஆ) மன்மதன் கணையி னாலும்வான் மதியாலும்
——இள
மாவிற் குயிலாலும் மந்தமா ருதத்தாலும்
என்மனம் வருந்தும் வகையெல்லா முரைத்தேன்
—இதற்
கேற்றவகை பார்த்துரையாய் என்றன் சகியே.

---

27. அரிகத் தையல்-பகைவர் மகளிர்.

28. வாகாய்-வாய்ப்பாக.

(அ) உன்னி-நினைத்து.

### கலிப்பா

**29.** பன்னுதமிழ் சேர்மண்ணிப் படிக்கரையின் நாயகனார்
மன்னுமெழிற் பவனிகண்டு மால்கொளுமோ கிளியே கேள்;
இன்னிலத்திற் பெண்கள்மனத் திசைந்தகுறி தெரிந் துரைக்கும்
நன்னயஞ்சேர் குறத்திதனை நானழைத்து வருவ னென்றாள்.

### அகவல்

**30.** சீர்பெறு கமலச் செந்திரு வளரும்
பார்புகழ் மண்ணிப் படிக்கரை மேவும்
நிமலசரு வேசர் நீள்நதிச் சடையர்
தமனிய மார்பன் சதுமுகன் மிகுந்த
வடிவனம் பன்றியா வான்புவி தேடி
அடிமுடி காணா அரும்பொருட் கடவுள்
கருணைசேர் அமுத கரவல்லி பாகர்
சுரமதி விண்ணவர் தொழுமிகு சரணார்
மருநீள் வெண்டலை மாலையும் தரித்த
திருநீல கண்டர் செயல்மிக விளங்கும்
வல்லியம் கோளரி மதகரி சுடரும்
கொல்லியம் பொருப்பிற் குலவிய மயில்போல்
சதிர்பெறு சீதளச் சந்திரோ தயம்போல்,
மதுமலர்ச் சுரிகுழல் வாகுடன் முடித்துத்
துதிபெறு சந்திர சூரியப் பிரபை
அதிசய மதாணி அணியினை அணிந்து
சிலைநுதற் சுட்டியும் சிந்துரப் பொட்டுடன்
கலைவேல் இணைவிழிக் கஞ்சன மெழுதி
வள்ளைநேர் காதில் வச்சிரத் தோட்டுடன்

---

29. பன்னுதல்-(புகழ்ந்து) கூடுதல்; இன்னிலம்-இந்நிலம்.

30. (4) தமனியம்-பொன்; மார்பன்-திருமால்; தமனிய மார்பன் பன்றியா, சதுமுகன் அனமா என மாறியியைக்க. இஃது எதிர் நிரல் நிறை.

(6) மார்பன் அடியும், சதுமுகன் முடியும் காணா என இயைத்து முறை நிரல் நிறையாக்குக; (9) மருநீள் - மணம் பரவும்; (11) வல்லியம் - புலி; கோளரி-சிங்கம்; (12) பொருப்பு - மலை; (14) சுரிகுழல்-சுருள் கூந்தல்; (15) பிரபை-ஒளி; (16) மதாணி-பதக்கம்.

தெள்ளிமை யாய்மேற் செவியன்னக் கொப்பும்
பருத்த முத்தப் பவழத் தொங்கலும்
தரித்தொளி மூக்கில் தரளமூக் குத்தியும்,
முல்லைமெல் லரும்பென முருந்துறழ் நகையும்
சொல்லிசை பெருகும் சுகநிகர் வசனமும்
பூகனே(ர்) கழுத்திற் பொன்னா பரணமும்
மோகன மாலை முதிர்சங் கட்டிகைக்
கற்பதித் தொளிரும் கனத்தமுத் தாரமும்
அற்புதப் பதக்கம் அணிசரப் பணியும்
கருமணி நட்டுவக் காலிவால் மணியும்
பெருவெண் குன்றியும் பித்தளைக் கண்டையும்
தடமுலைக் குடத்திற் றரித்தபொற் கச்சுடன்
துடிபெறு கரத்தில் சூடகம் சரியும்
வளம்பெறு சங்கு வளையுடன் பவளம்
விளங்குகை வந்தி மெல்வளை யுடனே
சங்குமோ திரங்கள் தளதளென் றிலங்க
மங்கள கரமா மருங்கிற்பட் டுடையும்
ஒட்டியா ணத்துடன் ஒளிருதர தாரம்
கட்டியிங் கிதமாம் கதிர்மணிச் சிலம்பும்
பதத்தினிற் கொலுசும் பாடகம் சதங்கையும்
கதித்தணி மெட்டி கலின்கலின் கலீரென
இலகுநுண் மருங்குல் இடுக்கிய பெட்டியும்
குலவுசொல் மாத்திரைக் கோலுங்கைப் பிடித்துத்
தோளினிற் கட்டிய தொட்டிலிற் பாலனும்
வேளை மூன்று மிகத்தெரிந் துரைக்கும்
பெருமைசேர் நடைக்குப் பிடியனந் தொடர
பரிவுசேர் மொழிக்குப் பைங்கிளி நாண
கோதையர் தமக்கெலாம் குலதெய்வம் போலச்
சோதிசேர் மாடம் துலங்கவே யடரும்
பைந்தமிழ் சேர்மண்ணிப் படிக்கரை வீதியில்
விந்தையாய்ச் செயஞ்செய மென்னவே புகழ்ந்து
திருமகள் போற்**குறச் சிந்து**கள் பாடி
வரிசையாய் மலைக்குற வஞ்சிவந் தனளே.

---

(20) தெள்ளிமையாய்-தெளிவாய்; (22) தரளம்-முத்து; (23) முருந்து உறழ்-மயில் இறகின் அடியை ஒத்த; (24) சுகம் நிகர்-கிளிபோன்ற; (25) புகனே [ர்]-கமுகு போன்ற; (26) மோகனம்-கவர்ச்சி; சங்கு அட்டிகை; (32) சரி-வளையல்; (37) உதர தாரம்-வயிற்றை இறுக்கிக்கட்டும் ஒரணி; (41) மருங்குல் - இடை; (45) பிடியனம் - பெட்டையன்னம்.

## சரணு

31. சரணு சரணு சரணு
பரிபுர கிண்கிணீதர—சரணு

(அ) மூசிக வாகனா சரணு
லம்போ தரனே சரணு
விக்கின விநாயகா சரணு—சரணு சரணு

(ஆ) பார்வதி புத்திர சண்முக சரணு
தாருக பஞ்சனா சரணு
கேகய வாகனா சரணு சரணு

(இ) சத்திதா குகா சரணு
சரவண பவா சரணு
சரமுனி செவிதரா—சரணு சரணு

(ஈ) பன்னக பூசணா சரணு
மண்ணிப் படிக்கரை நாயகா சரணு
நீலகண் டேசுரா—சரணு சரணு

## தரு

32. வஞ்சி வந்தாள்
வஞ்சி ரஞ்சித மிஞ்சி இசைபயில்
அஞ்சுகமெனக் கொஞ்சியே
பஞ்ச சரமதன் கெஞ்சித் தொடரவும்
கஞ்ச மலர்வளர் வஞ்சிபோல-வஞ்சி வந்தாள்.

(அ) மேரு நிகர்த்த தனபார மிலங்க
முத்தார மணிந்து சிங்காரமாய்
சீருவ கேயூர் சங்குடன் தாரமணிந்து
வித்தாரமாய்—வஞ்சி வந்தாள்.

---

31. சரணு-அடைக்கலம்; வணக்கம்; பரிபுரம்-சிலம்பு; இவண், கழல்; கிண்கிணி - கால் அணிகளுள் ஒன்று, தர-தரித்தவன்.

(அ) மூசிகம்-எலி; லம்போதரன்-பெருவயிறன் (விநாயகன்) 'மத்தள வயிறன்'-திருப்புகழ். (ஆ) தாருக பஞ்சனா-தாருகாசுரனைக் கொன்றவன், முருகன்; கேகயம்-மயில், (ஈ) பன்னகம்-பாம்பு.

32. (அ) கேயூர்-கேயூரமென்னும் தோளணி; தாரம்-சந்தனம்.

(ஆ) சுட்டியு முலைக்கெட்டியும் கால்மெட்டியும்—குறப்
பொட்டியும் தொட்டியொரு புறங்கட்டி—அதிலொரு
துட்டி யிருந்து குதட்டவே—வஞ்சி வந்தாள்.

(இ) சூட்டி மலர்ப்பணி பூட்டிச் சரகம் பாராட்டிக்
குறிசொலு மேட்டியாய்க் கோட்டி மதன கிரீட்டி
இளைஞரை வாட்டிச் சோழநன் நாட்டிலே—வஞ்சி
வந்தாள்.

(ஈ) தரைக்கு மண்ணிப்படிக் கரைக்கு ளுயருமன் பருக்கு
—நிதமருள்
உருத்திரர் நிருத்தர் நீலகண்டரைப் புகழ்ந்துமால்
பெருக்கு மோகினிக் கிரக்கமாங்குற—வஞ்சி வந்தாள்.

## தரு (வேறு)

33. வஞ்சி வந்தாளய்யா—சிங்காரக்குற
வஞ்சி வந்தாளய்யா

(அ) பஞ்சவர்கள் பூசைநிதம் செய்திரு நீலகண்டர்
பொன்சரண் இணைகளை வாழ்த்தி அஞ்சுகம்போல்
கொஞ்சிவளர்
பூசனை யாருந் **துளசி**யெனும் மகா
**ராசன்** விளங்கு சோழ தேசங்கள் புகழ—வஞ்சி.

(ஆ) சொல்லுங் குறிகளில் மேட்டி-சுந்தரத் திலகந் தீட்டி
சல்லாப விதம்பா ராட்டிச் சர்வா பரணங்கள் பூட்டி
தரிகிட திமிகிட தக்கிணக் கிணத் தலாங்கு
தகத்திங்கிண தோமென—வஞ்சி.

(இ) இங்கித சுரத வாரி—ஏழேழ் தேசசஞ் சாரி
துங்க மதன்கைக் கடாரி—தோகைகுல தெய்வ நாரி
தோடி முகாரிகள் பாடிப் பரதநடம் ஆடித்
தெய்வ ரம்பை வேடிக் கையாவும் கூடி—வஞ்சி.

(ஈ) மலரிதழி அணிவேதர்—மண்ணிப் படிக்கரை நாதர்
நலநாடு மோகினிக் கிப்போது—நலக்குறிகள்
தெரிந்தோதும்
நாகரிக வைபோக பதாக மிகு
தோகைமார் கள்மன தாகமே குளிராக—வஞ்சி.

---

(ஆ) பொட்டி-பெட்டி; தொட்டி-தொட்டில்; துட்டி-துட்டித் தனமுடைய பிள்ளை; குதட்டல்-குதப்புதல்; (இ) மலர் சூட்டி, பணி பூட்டி என இயைக்க; மேட்டி-மேட்டிமை; கோட்டி-மையல் உரையாட்டி; மதன கிரீட்டி-காம விளையாட்டி; (ஈ) நிருத்தர்-கூத்தாடுபவர், சிவன்.

33. (ஆ) சுந்தரம்-அழகு, (இ) வாரி-கடல். கடாரி-கட்டாரி என்னும் கருவி.

## (வேறு)

**34.** மலைக்குற வஞ்சி வந்தாளே—எய்யும்
சிலைக்கா மனைவென்ற திருநீல கண்டர் நாட்டில்—
மலைக்.

(அ) ஒருகையில் மலர்ச்செண்டு பிடித்து—மிகுந்
துல்லாசப் பதம்படித் தொயிலாக நடித்து
மருமலர்ச் சுரிகுழல் முடித்து—நல
மாகவே வஞ்சிமது வளமாகக் குடித்து—மலைக்.

(ஆ) உலகில் மங்கையர்க்கு விசுவாசி—மனத்
துதிக்குங் குறிகள்தெரிந் துரைக்கும்பிர யாசி
கலவை பரிமளங்கள் பூசி—இளங்
கன்னியர் தம்மனங் களிகூரப் பேசி—மலைக்.

(இ) குடமுலை மருமலர்ச் செண்டு—இசை
கொஞ்சு வசனம்ருசி கொண்டகற் கண்டு
வடிவுறு வயதுபனி ரெண்டு—செய
வாலிபர் மயங்கவே மருந்துகள் கொண்டு—மலைக்

(ஈ) படிதனில் அன்பற்கு நேசர்—மண்ணிப்
படிக்கரை தனிலென்றும் பரிவுடன் வாசர்
நடனர்திரு நீலகண் டேசர்—தனை
நாடுமோ இனிக்கன்பு நலகுமுல் லாசர்—மலைக்.

### வசனம்

'வாராய் குறமாதே, என்னுட சகியான **அதிமோக னாங்கி** மனதினில் வேண்டுங் குறிபார்த்துச் சொல்ல வர வேணும் பெண்ணே.'

'ஆனால், அப்படியே வருகிறேனடி யம்மே!'

### விருத்தம்

**35.** தேசமே புகழும் வேதர் திருநீல கண்டர் மீது
ஆசைமோ கினிக்கன் பாக அம்புயத் திருமின் போல
வீசிய களபம் பூசி வேல்முரு கரைக்கொண் டாடி
வாசலின் வளமை கூறி மலைக்குற வஞ்சி வந்தாள்.

---

34. (இ) வசனம் ருசிகொண்ட கற்கண்டு-சொல் சுவையுடைய கற்கண்டு போன்றது.

35. அம்புயத் திருமின் - திருமகள்.

## வாசல் தரு

36. வாசலிது வாசலிது—சுப
மங்களஞ்சேர் வாசலிது அம்மே

(அ) மகதேவர் வாசலிது—நறுந்
தேசுயரும் வாசலிது.
நவமணிகள் அணிநலங்கள்—மிகச்
சிறந்திருக்கும் வாசலிது.

(ஆ) பொன்னிலங்கும் வாசலிது—நற்
புகழ்விளங்கும் வாசலிது.
அன்னக்கொடி சொன்னக்கொடி—எங்கும்
அசைந்தாடும் வாசலிது.

(இ) வானவனு மாலயனும்—என்றும்
வணங்குமிந்த வாசலிது.
நேசமதாய் வந்தமரர்—வந்து
நிறைந்துபணி வாசலிது.

(ஈ) துதிபெருகு மூவர்தமிழ்—இசை
சொல்லி நிற்கும் வாசலிது.
கதிபெருகுந் தவமுனிவர்—வந்து
காத்துநிற்கும் வாசலிது.

(உ) தவமறையோர் நால்வேத—ஒலி
தாமுழங்கும் வாசலிது.
புவியிலுள்ள சிவனடியார்—மிகப்
போற்றிநிற்கும் வாசலிது.

(ஊ) துடிபெருகுந் தருமவீம—னருச்
சுனனகுலன் சகாதேவன்.
அடைவுடனே நிதம் பூசை—செயும்
அலங்கார வாசலிது.

(எ) வேழமுகன் சண்முகனும்—மிக
விளையாடும் வாசலிது.
ஆழிதனைத் திருமாலுக்—குகந்
தருளுமிந்த வாசலிது.

---

36. (அ) தேசு-ஒளி; (ஆ) அன்னக்கொடி-சோறு வழங்குவார் அதற்கு அடையாளமாக எடுத்த கொடி; சொன்னக்கொடி - பொன்னும் பொருளும் வழங்குவோர் அதற்கு அடையாள மாக எடுத்த கொடி; (இ) 'இந்த வாசலிது' இந்த இது என்பவை வழுவாயினும் இசைப் பாடல் கருதிக் கொள்க, பிறவு மிவ்வாறே.

(ஏ) ஆரணங்கள் புகழ்ந்தேத்தும்—மலை
யரையன்மகள் எனவிளங்கும்
காரணியாம் அமுதகர—வல்லி
கருணையுடன் எழுவகையாம்

(ஐ) பாரிலுள்ள உயிர்களுக்கும்—இரு
படிநெற்கொண்டு நிதநிதமும்
சீருடனே படியளக்கும்—புகழ்
சேர்ந்திருக்கும் வாசலிது.

(ஒ) இந்துரவி நிதம்நடக்க—உயர்ந்
திலங்கி நிற்கும் வாசலிது.
நந்திசண்டன் மாகாளர்—காக்கும்
நாகரிக வாசலிது.

(ஓ) கன்னியுமை தருமமுத—புட்
கரணியுள வாசலிது.
சொன்னலமாம் கவிவலார்கள்—தமிழ்
சொல்லிநிற்கும் வாசலிது.

(ஔ) மன்னவர்கோன் **பிரதாப—சிங்கு**
மகராசன் தருசுதனாம்
பன்னுதமிழ்த் **துளசேந்திரன்**—வந்து
பணிந்துநிற்கும் வாசலிது.

(க) காராளர் உயருமண்ணிப்—படிக்
கரையிலுள்ள சனங்களெல்லாம்
நேராகப் போற்றிசெயும்—வளம்
நீடுமிந்த வாசலிது.

(கா) தானமுயர் பரிகலமும்—மிகத்
தழைத்திருக்கும் வாசலிது.
ஞானமிகு திருநீல—கண்ட
நாதர்வரும் வாசலிது.

**கலிப்பா**

**37.** சீதளச்சந் திரவதனச் செந்திருவே யிவ்வுலகில்
கோதைய ருக்கெல்லாங் குலவுதெய்வக் குறமாதே
மாதுவளர் செம்பொன்மணி வாசல்வள முரைத்தாயுன்
சாதிதனை யின்ன தென்று தயவுடனே சொல்லுவையே.

---

(ஏ) ஆரணம்-வேதம்; எழுவகையாம் பார்-மேலேழு கீழ் ஏழு எனப்பெறும் உலகம்; (ஒ) இந்து ரவி-திங்களும் ஞாயிறும்; (ஔ) சுதன்-மகன்; (கா) பரிகலம்-உண்கலம்.

### வசனம்

'வாராய் குறமாதே, வாசல் வளமை சொன்னது கேட்டு மகா சந்தோச மாச்சுது. உன்றனுட சாதிதனைச் சொல்ல வேணும் பெண்ணே!'

'ஆனால், எங்கள் சாதி சொல்லுகிறேன் கேளடியம்மே!'

### தரு

38. சாதி நல்ல சாதி யெங்கள் சாதி
சதுர்வேதர் மண்ணிப்படிக் கரையின்
விமலர் நாட்டில் அணங்கே—சாதி நல்ல.

(அ) கானிலுப்புக் குறவர் நாங்க ளல்ல—பூனை
காகந்தின்று கூடைமுறங் கட்டுங்குற மல்ல;
மான மில்லா நிலக்குறவ ரல்ல—மண
மாகிமறு மணம்புணரும் வசைக்குறவ ரல்ல—சாதிநல்ல.

(ஆ) மாயவனும் எங்கள்வேடந் தொடுத்தார்—வள்ளி
மாமிகுறக் கூடையுங்கை மாத்திரைக்கோ லெடுத்தாள்
தூயவனுக் கிறைச்சியெச்சிற் கொடுத்தோம்—இந்தத்
தொல்புவியில் குறவர்நட்பும் சூதுவஞ்சம் விடுத்தோம்
—சாதிநல்ல.

(இ) இளவயதில் சிறுபிறையைப் பணிவோம்—கானில்
ஏனமுத்தும் ஆனைமுத்தும் இந்துமுத்தும் அணிவோம்
வளரிறைவன் தனைப்பணியத் துணிவோம்—கொண்ட
மகிழ்நனல்லால் பிறரின்பம் மனதிற்சற்றுங்
கெணியோம்—சாதிநல்ல.

(ஈ) வள்ளியம்மை எங்கள்குலம் புகுந்தாள்—வேங்கை
மரமாகி வேலவனார் மணஞ்செய்ய உகந்தோம்
தெள்ளிசையாய் வருகருமந் தெரிந்தேநான்
சொல்லுவதாம்
தேன்மொழி கேள்நாங்கள் தெய்வக்குறச் சாதி
—சாதி நல்ல.

---

38. (ஆ) இறைச்சி எச்சிற் கொடுத்தோம் என்றது கண்ணப்பர் வரலாற்றை உட்கொண்டது. 'ஊனமுது உகந்த ஐயர்' என்றார் சேக்கிழார். 'எச்சில்' என்றது பதம் பார்த்ததை; (இ) மணங் கொண்ட மகளிர் பிறை தொழார் ஆகலின்' இள வயதில் சிறுபிறையைப் பணிவோம்' என்றாள். கெணியோம்-எண்ணியும் பாரோம் (கணியோம்); ஏனமுத்து-பன்றிக் கொம்பில் விளையும் முத்து.

### கலிப்பா

39. மாதமிர்த கரவல்லி வளருமண்ணிப் படிக்கரையில்
நாதர்திரு நீலகண்டர் நலமுயருஞ் சோணாட்டில்
சாதிதனில் மேலான சாதியென்றாய் தண்குறிஞ்சிக்
கோதையரே யுங்களுட குலவளமை சொல்லுவையே.

### வசனம்

'வாராய் குறமாதே, உன்னுடைய சாதி, சகல குறச் சாதிக்கு மேலான சாதி என்றது கேட்டுச் சந்தோசமாச்சுது. இன்னமும் உங்களுடைய சாதிவளமை யெல்லாஞ் சொல்ல வேணும் பெண்ணே!'

'ஆனால், எங்கள் சாதிவளஞ் சொல்லுகிறேன் கேளடி யம்மே!'

### சாதி வளத் தரு

40. வஞ்சியே நீசொல்லக் கேளாய்—மெத்த
வண்மையால் குறச்சாதி வளமை யெல்லாம்
கஞ்சனு மால்தவம் செய்மண்ணி—படிக்
கரைநாதர் திருநீல கண்டர் நாட்டில்—வஞ்சியே.

(அ) நித்தமலை நற்சுனையின் நன்னீரிற் குளிப்போம்
நிலம்பரவித் தினைவிதைத்து நிரைதேனைத் தெளிப்போம்
பத்தியாய்வேல் முருகவரைப் பணிந்துமனங் களிப்போம்
பசித்தவர்க்குத் தினைமாவைப் பரிவாயுகந் தளிப்போம்—வஞ்சியே.

(ஆ) தந்தியின்வெண் கொம்பைநட்டுத் தழையிற்குடில் எடுப்போம்
தாவும்புலி சிங்கம்யாளி தம்முனின்று தடுப்போம்
விந்தைவிந்தை யாய்மருங்கில் வெண்செம்பட்டும் உடுப்போம்
விரும்புங்கள் ளொன்றுக்கிரண்டு வேய்முத்தளந்து கொடுப்போம்—வஞ்சியே.

---

40. கஞ்சன்-நான்முகன்; (அ) நிரை-ஒழுங்கும்.
(ஆ) தந்தி - யானை; ஒன்றுக்கு இரண்டு - ஒரு பங்குக்கு இரண்டு பங்கு.

(இ) குறத்திபிள்ளை பெற்றிடவே குறவன்கழாயங்
குடிப்பான்
கோதையர்க்குத் தங்கக்காசு கொடுத்துமண
முடிப்போம்
திறத்துடனே மலைமுழைஞ்சில் தேனெடுத்து
வடிப்போம்
தேவகன்னி யைவணங்கிச் சிங்கிநடித் துடிப்போம்
—வஞ்சியே.

(ஈ) ஏனற்புனத் திலிதண்மேல் ஏறிக்கவண் எறிவோம்
நிகழ்காலம் செல்காலம் எதிர்காலம் அறிவோம்
பூனைகொடி யின்தசையைப் பொசிக்கமனம் குறியோம்
புருசனிடம் விட்டுநிமைப் போதும்பக்கம் பிரியோம்
—வஞ்சியே.

(உ) சங்குசக் கரங்குன்றிவெண் டரளவடம் பூட்டுவோம்
தயவாய்க்குறி சொல்லிச்செயத் தம்பமிக நாட்டுவோம்
கொங்கையிற்பொற் கச்சணிந்து குறச்சந்தம்பா
ராட்டுவோம்
கோதையர்முன் னங்கையில்வை குமைந்தனைக்
காட்டுவோம்—வஞ்சியே.

(ஊ) வச்சிரமணிக் குறக்கூடை மாத்திரைக்கோல் கொண்டு
வள்ளியம்மை யைநினைந்து வணங்கிக்குறி கண்டு
மெச்சுபுவ னத்திரையமும் விளங்கச்சொல்வோம்
செண்டு
மென்முலையாய் சாதிவள மெத்தமெத்த உண்டு
—வஞ்சியே.

## வெண்பா

41. வீறுபெற வேயெமக்கு மெய்யாயுன் சாதிவளங்
கூறுங் குறிஞ்சிக் குறமாதே—யூறுவிட
நாகதரர் நீலகண்ட நாயகர்சோ ணாட்டுவளம்
வாகுடனே தானுரைசெய் வாய்.

---

(இ) கழாயம் - கசாயம் ; முழைஞ்சில் - குகையில் ; சிங்கி - இரு முழங்கைகளையும் விலாவில் தட்டிக் கொண்டு ஆடும் ஒருவகை ஆட்டம்.

(ஈ) ஏனல் - தினை ; இதண் - பரண் ; நிமை - இமை ; கொடி - காகம்.

(உ) செயத் தம்பம் - வெற்றித் தூண்.

(ஊ) திரையம் - மூன்று ; என்றது முக்காலமும்.

41. ஊறுவிட நாகதரர்-(விடம் ஊறு நாகதரர்)- நஞ்சு ஊறும் பாம்பை அணிந்தவர். வாகுடன் - ஒழுங்குடன்.

### வசனம்

'வாராய் குறமாதே, உன் சாதி வளமை சொன்னதுபோல் உன்றன் நாட்டுவளம் சொல்லடி பெண்ணே!'

'நாட்டு வளமல்லோ கேட்கிறாயம்மே. ஆனால் சொல்கிறேன் கேளடியம்மே!'

### நாட்டுவளமைத் தரு

42. மெய்யாக நானுரைப்பேன்—மயல்
மிஞ்சிய மோகன வஞ்சியே கேள்
மைப்போ லுயர்நீல—கண்டர்
மண்ணிப் படிக்கரைதன் வளமை—மெய்யாக.

(அ) சோலை முக்கனி யடர்ந்து—தேன்
சொரியத் தடங்கள் பெருகிப்—பல
கால்தொறும் பரந்து வயல்பாய
கன்னலுடன் செழுஞ்செந்நெல் மிக—மெய்யாக.

(ஆ) வெண்டர ளந்தான் பொழிந்து—நில
வெங்கு மெறிப்பவே செங்குமுதம்
கண்டுமுகை தானலரும்—குளிர்
காவில் வளம்பெற மாவினிலே—மெய்யாக.

(இ) குயில்கூவ மயிலாடும்—அளி
கூடி யிரைந்திசை பாடும்
நயமான வாவிகளில் சங்கு—உயர்
நந்தயர்ந்து தரளஞ் சொரியும்—மெய்யாக.

(ஈ) வாழை பூகம் விண்ணவற்கும்—ஆல
வட்டங் கவரி யிரட்டவொளிர்
சூழுமணி மேடை யின்மேல்—மதி
தோயு மிடைதனில் மேயுமுகில்—மெய்யாக.

---

42. மை - மேகம்; கருமேகம் போலும் கண்டத்தர்.

(அ) தடம் - குளம்.

(இ) அளி - வண்டு, தேனீ; வாவி-குளம்; நந்து-நத்தை; தரளம் - முத்து.

(உ) மாமறையோர் வீதிகளும்—மத
வாரண வெண்பரி வீரர்களும்
கோமள......................

[இதற்குமேல், ஒழுங்குபடுத்த இயலா வண்ணம் சில அடிகள் சிதைவுபட்டுள்ளன. அவற்றில் நடம்புரி மண்டபம், தேர்த்தெரு, அன்ன சத்திரம், ஆயிரக்கால் மண்டபம், மதில், சுற்றுப் பிராகாரம், பாண்டவர் நீலகண்டரை வழிபடுதல், நச்சுப் பொய்கை அமுதமாதல் ஆகியவை குறிக்கப் பெற்றமை அறியக் கிடக்கிறது.]

(ஊ) மாலயன் விண்ணோர்கள் நிதம்—பணி
மண்ணிப் படிக்கரையில் திரு
நீலகண்ட ரெந்நாளு முயர்—புகழ்
நீடுஞ் சோணாடெந்தம் நாடம்மே.

### வசனம்

'வாராய் குறமாதே, நாட்டுவளமை சொன்னது கேட்டு மெத்தவும் சந்தோசமாச்சுது. நீ சஞ்சாரம் பண்ணி வந்த தேசங்களெல்லாம் சொல்ல வேணும் பெண்ணே.'

'அப்படியே சொல்லுறேன் கேளடியம்மே.'

### தேசத் தரு

43. நேசப்ரகாச நீடிய தேசமேதெரிந் துரைப்பேன்
வாசநீடு வாரிச மேலுறை ராசமோகினியே கேள்

(அ) அங்க தேசங் கலிங்க தேசங் குலிங்க மீழந் தெலுங்கமும்
அச்சி யாரியங் கச்சி கேகயம் அருண நீடு திராவிடம்
கொங்கு கோசலம் வங்க மாகதம் தக்கணம் நேபாளம்
குச்சர மச்ச தேசமுங் கொச்சி மேல்மலை யாளம்

(ஆ) கருநட தேச மராட தேசம் விராட நிடதம் புகழடர்
கராட மலாட சோனகந்திரி கூடம் காம்போசம் குடகம்
குருநாடு குருகுமேவு சவுராட்ரம் குந்தள கொங்கணமும்
கொல்லஞ் சாளுவம் வல்ல மாளவம் பல்லவ வான்மீகம்.

---

43. வாரிசம் - தாமரை மலர்

(இ) சிங்கள முயர்கங் கணமுஞ் சொல்மதங்க மொட்டியம் பாண்டி
செப்ப மாகிய பப்பரம் விகற்பம் கீசகம் சிந்து
கங்கையுந் தென்னி லங்கையும் புவியெங்க ணுஞ்சுற்றித் திரிந்தேன்
காசிதனில் மீசுரம் சோழ தேச மாகையால் வந்தேன்.

(ஈ) சீருயர்பல தாருவும் காவேரி மாநதி நீடும்
செந்நெ லும்பல கன்னலும் மலர்ப்பொன்னு லாவிய நாடு
நாரணன் வெள்ளை வாரணன் மலராரணன் பணிந்தேத்தும்
ஞால மீது திரிசூல ராந்திரு நீலகண்டர் தம்மீது.

(உ) நாக ரீகம தாகவே மயல்மோக னாங்கியே கேளாய்
நாசி யாகவே தேச மானதைத் தேசமாகவே யுரைத்தேன்
வாகுயர் சத்த சாகரத்தி லநேக தேசங்க ளுண்டு
வகையாய்ச் சொலவெகு நாட்செலும் சுகமாக அறிவாய்.

### கலித்துறை

44. உதிக்கின்ற பூரணசந்தி ரோதையம்போ லுயர்வடிவம்
கதிக்கின்ற குறவஞ்சி கவிவாணர் தம்செஞ்சொற்
பதிக்கின்ற தேசங்கள் யாவுந்தெரிந்து பகர்ந்ததுபோல்
துதிக்கும்புகழ் அண்டகோள வளமையைச் சொல்லுவையே.

### வசனம்

'அகோ வாராய் குறவஞ்சியே, நீ அறிந்து சஞ்சாரம் பண்ணி வந்த தேசங்களெல்லாம் சொன்னது கேட்டு மெத்தவும் சந்தோசமாச்சுது. இன்னமும் அண்டகோள லெட்சணமெல்லாம் சொல்லவேணும் பெண்ணே.'

'அண்டகோள லெட்சணமல்லோ கேட்கிறாய் அம்மே! ஆனால் சொல்லுறேன் கேளடியம்மே.'

---

(ஈ) தாரு - தரு, மரம்; வெள்ளைவாரணன் - இந்திரன்; மலராரணன் - நான்முகன்; ஞாலம் - உலகம்.

(உ) நாசி - உயிர்; தேசம் - நாடு; தேசமாக - ஒளியுடையதாக.

## அண்டகோளத் தரு

45. ஒண்டொடியே அண்டகோளத் துண்மைசொலக்
கேளாய்

ஓரண்டம் ஐம்பதுகோடி யோசனையாம் உயரம்;
அண்டமேற் பாதிபுவி யதற்குளே பாதி
அகலமைம் பதுகோடி யாகும்யோ சனைதான்;
மண்டுபுனற் கடலேழு வளம்பெறுதீ வேழப்பால்
வச்சிரநிலமப் பாற்சக்கர வாளகிரி யம்மே
கண்டசக்கர வாளத்துக் கப்பாலந்த காரம்
கனயிருட்கப் பாலப்பிற கடவீரேழ் கோடி.

(அ) செந்திருவே மேலேழு கீழேழு லோகம்
செகமதனை தாங்கியாதி சேடனிற்ப னம்மே
அந்தச்சே டனைத்தாங்கி ஆமையொன் றிருக்கும்
ஆமையின் பெருமைதனை அளவிடப்போ தாது
சொந்தமாமிப் புவிவேந்தன் சுவாயம்பு மனுவாம்
சுவாயம்பு வங்கிசமதிலச் சுதரெழுவர் அம்மே
மைந்தர்தமக் கேதீவை வளம்பெறவே யளித்தான்;
வளர்சம்புத் தீவினுட வளமைசொலக் கேளாய்.

(ஆ) நீடுசம்புத் தீவளவு லட்சம்யோ சனைதான்
நிலைபெறவே உலகாண்ட நிருபன்தனக் கேதான்
தேடுபுகழ் சேரொன்பான் சிறுவர்தமைப் பயின்றான்
திரமாக நவகண்டஞ் செய்தளித்தான் அவர்க்கே;
நாடுமிப் புவிதனக்கு நடுவில்மகா மேரு
நன்மேரு வுயரமது லட்சம்யோ சனைதான்;
ஈடுபெரும் வைகுண்டம் இலங்குமனோ வதியாம்
எழில்பரம கயிலாயம் எனுமூன்று சிகரம்

---

45. (அ) வங்கிசம் - வமிசம்; சுதர் - மக்கள். தீவினுட - தீவினுடைய.

(ஆ) நிருபன் - அரசன்; பயின்றான் - அடுத்தடுத்துப் பெற்றான்.

(இ) அதிலொன்றிற் கொடுமுடிமுன் னூற்றுமுப்பத்
தாறாம் ;
அம்மூன்றிற் கொடுமுடிகள் ஆயிரத்தெட் டம்மே
இதன்மேற்கிஞ் சுமாசக்கரம் இருக்குங்கார் வடிவாய்;
இதைநடத்து தற்குத்துருவன் இருப்பன்சிரஞ் சீவி ;
நிதிமேரு வின்கிழக்கு நிற்குமந்த ரந்தான்
நீள்மேரு முடிதன்னில் நிறைந்தபாற் குளமாம்
துதிசேரும் அந்நநந்த வனமொன்றாம் அதனில்
சூதவிருட்சம் நெடிதாகத் துலங்குமடி யம்மே.

(ஈ) வாகுடன் தெட்சணத்தில் மேருபரு வதந்தான்
மலையதனில் தேன்பொய்கை வளசயித்ர வனந்தான்
தோகையே சம்புவிருட்சம் துலங்கிநிற்கும் குடக்கில்
துலங்குசுப ராசுமலை துளங்குமிட்சுப் பொய்கை
நாகரிக மானவைப்பி ராசவன முடனே
நறைபெருகு நீபவிருட்சம் நலமாக இருக்கும்
கோகநகை யேவடக்கில் குமுதமலை யதனுள்
குலவுசருவ தோபத்திரக் குளிர்வனமொன் றம்மே.

(உ) பூமாதே அமுதபுட் கரணியொன் றிருக்கும்
புகழ்பெருகு வடவிருட்சம் பொருந்திநிற்கு மம்மே
பாமாதே மேற்குக்கந்த மாதனபர் வதந்தான்
பண்பாக அதன்குடக்குப் பத்திரர்சுவ கண்டம்
தேமேவு குழலாய்வட திசையினீல கிரியும்
தெற்கில்ரமி கண்டம்வட திக்கில்பகி ரதியாம்
காமேவு மிரண்மியகண்டம் வச்சிரச்சிங் கிவரைக்
கப்பாலுத் தரகுரு கண்டமப்பால் கடலாம்.

---

(இ) சூதம் - மா.

(ஈ) குடக்கு - மேற்கு; சம்பு விருட்சம் - நாவல் மரம்; நீபவிருட்சம் - கடப்பமரம்; கோகநகையே - திருமகள் போன்றவளே ; சருவதோபத்திரம் - பெருங்குமிழ்.

(உ) புட்கரணி - பொய்கை; வடவிருட்சம் - ஆலமரம். 'வச்சிரச்சிங்கி வரைக்கு அப்பால் உத்தர குரு கண்டம்.'

(ஊ) தென்புறத்தில் சிவேதமலை தெற்கிரண்மய கண்டம்
தெட்சணத்தில் இமகூடம் திகழ்ந்துநிற்கு தென்பார் ;
இன்பமிகு கிம்புருட கண்டமிதடுத்த தெற்கில்
இமயகிரி தெட்சணத்தி லேபரத கண்டம் ;
அன்புடன்கேள் அட்டகிரி அளவாயிர யோசனை
அகலமிரண் டாயிரயோ சனையதாம் அம்மே
ஒன்பதாயி ரம்யோசனை யோர்கண்ட விபுலம்
உயரிமயத் தீசானத் தொளிருங்கயி லாயம்.

(எ) வரிசைஇம யம்நிடதம் விந்தமொடு மந்த
மாமேரு விமகூடம் வளர்கந்த மாதனம்
திரமாகச் சத்தகிரி இதுவாகுஞ் சொலக்கேள்
சீர்பாதா ரனெட்டும் செல்வியொன்றும் பயின்றான் ;
உரமான அவனொன்ப தாயிரம்யோ சனையை
உயர்புதல்வற் கதைப்பகிர்ந் துண்மையாய் அளித்தான்
அருளாக வேதெற்கில் ஆயிரம்யோச சனைதான்
அதுகுமரிக் கண்டமிது வாகுமடி யம்மே.

(ஏ) கோதையே ! இம்மலையில் குடியெடுத்து நாங்கள்
குடியிருந்த வண்மைதனைக் கூறக்கேள் அம்மே !
ஆதிவட கிரியில்குடில் அமைத்துச்சின் னாளிருந்தோம்
அன்றுசிவன் சிலைவளைத் ததுகண்டு பிரிந்தோம் ;
சோதிகயி லையிற்குடில் தொடுந்திருந்தோம் தசக்கிரிபன்
துணிந்தெடுத்த விசைகண்டு துறைந்தனமவ் வரையை;
மாதரசே நாங்கள்கோ வர்த்தனம்வந் தடுத்தோம்
மால்குடையாய்க் கரத்தெடுத்த வன்மைகள் கண்டோம்.

---

(ஊ) சிவேதம் (சுவேதம்) - வெள்ளி; இரண்மயம்- பொன். அட்டகிரி - எட்டுமலைகள் ; ஈசானம் - வடகிழக்கு.

(எ) பயின்றான் - பெற்றெடுத்தான்.

(ஏ-ஐ) ஒவ்வொரு மலையிலும் குடியிருந்து அகன்ற காரணம் உரைத்தது.

(ஏ) வடகிரி - மேருமலை ; சிவன் சிலை வளைத்தது - முப்புர அழிப்பின் போது ; தசக்கிரிபன்- இராவணன் ; கயிலாய மலையை இராவணன் எடுத்தது ; கோவர்த்தன மலை ஆயர் குலத்தைக் காத்தற்காகக் கண்ணனால் எடுக்கப் பெற்றது.

(ஐ) மைந்நாக பருவதத்தில் வந்துகுடில் தொடுத்தோம்
வாசவனுக் கஞ்சிக்கடல் வைகியதை விடுத்தோம்;
மெய்ந்நாகம் நீடிவளர் விந்தியத்திற் றடுத்தோம்
மேதினியிற் குறுமுனிவன் மிதித்தழுந்த விடுத்தோம்
தெய்வசன ரருணகிரி சேர்ந்துகுடி லெடுத்தோம்
செந்தழலின் வகைகண்டு திடவரையை விடுத்தோம்
சைவநிறை காளத்தி தன்னில் வந்து தரித்தோம்
சந்தவதன் குரோதத்தால் தடவரையை நிகழ்த்தோம்.

(ஒ) நலமாமிம் மலைதோறும் நாங்கள்குடில் எடுத்தே
நயந்திருந்த வகைசொல்ல நாவாயிரம் வேண்டும்
பலதேசம் புகழுமண்ணிப் படிக்கரையில் நிதமும்
பஞ்சபாண்ட வர்வணங்கும் பதசரோ ருகராம்
கலைமேவு திருநீலகண்டர் தமக்காசை கொண்ட
கன்னியே அண்டத்தின் கனவளமை பலவும்
நிலவரமா கவுமிந்த நீணிலங்கள் புகழ
நின்றுடனே உரைசெய்தேன் நீயறிவாய் அம்மே.

### கொச்சகம்

**46**. இழைவகிர்ந்த நுண்ணிடைதான் ஏந்துதனந் தாங்காமல்,
குழையருடந் திசைபயிலும் கோகிலமாம் குறமாதே!
மழைவுறுநல் லண்டகோள வளமுரைத்தாய் நேரியெனும்
செழுமலையின் அதிசயங்கள் செப்புவாய்நீ தெரிந்தே.

### வசனம்

'வாராய் குறமாதே, அண்டகோள வளமை சொன்னது கேட்டு மிகுதியும் சந்தோசமாச்சுது. இன்னமும் நேரிமாமலையிலுள்ள அதிசயங்களெல்லாம் சொல்லவேணும் பெண்ணே.'

'ஆனால் சொல்லுகிறேன் கேளடியம்மே.'

---

(ஐ) வாசவன் - இந்திரன்; இந்திரன் வச்சிரப் படைக்கு அஞ்சி மைந்நாகம் கடலுள் மறைந்தது; குறுமுனிவன் - அகத்தியன்; விந்தியமலையைக் காலால் மிதித்து அகத்தியர் அழுத்தியது; அருணகிரி-அண்ணாமலை, அது தீப்பிழம்பாக நின்றது; காளத்தி மலை - கண்ணப்பனார் கண்ணைப் பறித்துக் கொண்டது; நிகழ்த்தோம் - கூறோம்.

(ஒ) பதசரோருகர் - தாமரை போன்ற திருவடியினர்.

46. இழை வகிர்ந்த - நூலிழையை இரண்டாகப் பிளந்த; குழையருள் தந்து - குழைகின்ற அருளைத் தந்து, கோகிலம் - குயில்; மழைவுறு - இன்பமமைந்த.

## மலைவளத் தரு

47. நேரிமலை வளமை சொல்ல நீகேளாய் அம்மே
பாரில்பலர் பணியுமண்ணிப் படிக்கரைநா யகர்நாட்டில்

(அ) அண்டகோளம் உருவியதற் கப்பாலும் தோணும்
வண்டுறையும் இறால்கண்டு மதிவெருவி நாணும்
கொண்டலடுக் கடுக்காகக் குவவும்படி காணும்
தண்டருவி புவிமடந்தை முத்தாரம் பூணும்
—நேரிமலை.

(ஆ) சிங்கவியாக்கி ரதம்யானை தேனுவுமொன்றாய் மேயும்
பொங்குகனி மலரிரசம் பொழிந்துநதி பாயும்
தங்கொளிசெம் மணிநெருப்புத் தானேற்றிக் காயும்
மங்குலுறை மலர்த்தருவும் மாதர்மேற் பேயும்
—நேரிமலை.

(இ) மலரவன்மா லிந்திரனும் மாதவர்கள்முத லாகக்
குலவுமம ரோகன்மகிழ் தொண்டுபுரி யோகம்
இலகுசுனை யருவிகளும் இருக்குமங்க நேகம்
தலமுயர்யா சகர்க்குநவ ரத்தினமருள்வோம் தியாகம்
—நேரிமலை.

(ஈ) சந்தருவி யில்தென்றல் தான்குலவும் குலுங்க ;
ஐந்தலைநா கங்களத்தில் அருந்துமண மிலங்க ;
சுந்தரமா முலகில்மிகு துல்லியமெனத் துலங்கும்
சந்திரசூ ரியரிரதந் தரித்துமிக மலங்கும் —நேரிமலை.

(உ) கற்பதரு விற்சுற்றிக் காமவல்லி படரும்
நற்பவளம் சாதிக்காய் லவங்கத்தரு வடரும்
அற்புதமங் கையர்நடைகண் டன்பாகப்பிடி தொடரும்
மற்கவிகள் நவமணியை மகிழ்ந்துகாலால் இடரும்
—நேரிமலை.

---

(அ) இறால் - தேன் அடை ; தண்டருவி - தண்ணருவி.

(ஆ) வியாக்கிரதம் - புலி; தேனு - பசு, காமதேனு ; மங்குல் - மேகம்; பேயும் - பெய்யும்.

(இ) அமரோகன் - இந்திரன்.

(ஈ) சந்தருவி - அழகிய அருவி ; சந்தனக் காவினின்று வரும் அருவியுமாம்; மலங்கும் - கலங்கும், தடுமாறும்.

(உ) அடரும் - நெருங்கும்; மற்கவிகள் - வலிய குரங்குகள்.

(ஊ) கொண்டல்முர சறையக்குளிர் காவில்மயில் நடிக்கும்
வண்டினங்கள் மதுவையுண்டு வாகாயிசை படிக்கும்
விண்டலத்தின் மீனைப்பல மென்னமந்தி பிடிக்கும்
மண்டுமத கயமிகுந்து மதுவையுண்டு துடிக்கும்
—நேரிமலை.

(எ) யாக்ரபாத சிங்கவதன பட்சிசக்கர வாகம்
நோக்கரிய செங்கிளிபொன் னுருவான வநேகம்
தேக்குபுகழ் படிக்கரையில் திருநீலகண்டர் நாட்டில்
பாக்கியமின்னே மலையின்வளம் பகர்ந்தேனன் பாக
—நேரிமலை.

## விருத்தம்

48. அதிரூப ரமணீக மிகநீடு மிளமூர லமுத விம்ப
மதிபோலு மிசைபாடி மயில்போலு நடைமேவிய
வஞ்சி யேநீ
நிதிசேரு மலைமீது மிருகசாதி வளம்யாவும் நிசஞ்சொன்
னாற்போற்
துதிநீடு புவிமீதி லதிவெக நதியாவும் சொல்லு வாயே.

## வசனம்

'வாராய் குறமாதே, நீமலைவளம் சொன்னது கேட்டு மெத்தவும் சந்தோசமாச்சுது; இந்தப் பூமண்டலத்திலேயுள்ள புண்ணியமான நதிகளெல்லாம் சொல்ல வேணும் பெண்ணே.'

'அப்படியே சொல்கிறேன் கேளடியம்மே.'

## நதித் தரு

49. மங்கையரே நானறிந்த புண்ணியமா நதியானவெலாம்
சொல்லுவேன்
திங்கள் வேணியர் புகழ்சேர் மண்ணிப் படிக்கரைத்
திருநீல கண்டர்தம் சோணாட்டில்—மங்கையரே.

---

(ஊ) பலம் - பழம்; மதகயம் - யானை.

(எ) யாக்கிரபாத பட்சி - புலிக்கால் பறவை; சிங்கவதனப் பட்சி-சிங்கமுகப் பறவை; சக்கரவாகம்-சக்கரவாகப் பறவை.

48. அதிரூபம் - பேரழகு; இரமணீகம் - இரம்யம் (விருப்பம்); இளமூரல் - இள முறுவல்.

(அ) கங்கைநதி கிருஷ்ணவேணி மணிகர்ணிகை
சகசோதி நர்மதை
துங்கபத்ரை பவானிபற் குணிகாயத்ரி
சொர்ணமுகி பிரயாகை—மங்கையரே.

(ஆ) சிந்தேழுறு பரத்துவாசு வைகைசி வேதநதி
விமலை வஞ்சனி
நந்திசரயு வாரணாசி கோதாவரி நளினிபினாகி
காவேரியும்—மங்கையரே

(இ) குவலயத்தில் புண்ணியநதி மூன்றரைக் கோடியுண்
டவையெல்லாம் நானறிவேன்
நவில வென்றால் அதுதான் நாலொன்பது
நாள்செல்லும்—மங்கையரே.

### கட்டளைக் கலிப்பா

50. கனமுலைத் தனந்தாங்கா திடையெனக்
காலில்நூ புரமோலமிட் டார்ப்பவும்
அனமென நடந்தொய்யா ரமாகிய
அஞ்சுகமென் னுமின்சொற் குறமின்னே
மனமுகந் திடப்பார்மேல் நதியெல்லாம்
வளமையாக உரைத்தனை மிக்கவே
கனசிவ நலமாய தலமுள்ளவை
கண்டுசேவித்து வந்தது சொல்லுவாய்.

### வசனம்

'வாராய் குறமாதே, நீ யாடிவந்த மகா நதிகளெல்லாம் சொன்னது கேட்டு மகா சந்தோச மாச்சுது. இன்னமும் நீ கண்டு சேவித்துவந்த சிவதலம் விஷ்ணுதலங்களெல்லாம் சொல்லவேணும் பெண்ணே.'

'அப்படியே சொல்கிறேன் கேளடியம்மே.'

---

49. (அ) சகசோதி - சரசுவதி.

(ஆ) சிந்தெழு - ஏழு சிந்து; சிவேதநதி - சுவேத நதி (வெள்ளாறு).

50. நூபுரம் - சிலம்பு; மனமுகந்திட - மனம் விரும்ப.

## தேவ தலத் தரு

51. அன்னமே கேளடி மன்னு சிவதலம்
தன்னை மகிழ்ந்துரை செய்வேன்—மிகுந்
தின்னிலம் போற்றிய மண்ணிப்படிக் கரையீசர்
நீல கண்டர் நாட்டில்—அன்னமே.

(அ) தில்லைநகர் திருவேட்களம் நெல்வாயில்
தென்மாலை யூர்கலிக்கா மூர்—திரு
முல்லைவாயி லுமயேந்தி ரப்பள்ளி
முதல்வன் திருப்பெரு மணமும்
பல்லவனீச் சுரம்பட்டினஞ் சாய்க்காடும்
பண்பார்திரு வெண்காடும்—மூவர்
சொல்லுந்தமிழ்க் காட்டுப்பள்ளி குருகாவூர்
சோலை சூழும் கோலக்காவும்

(ஆ) கண்ணார் கோயிற் றிருநின்றி யூரும்
குறுக்கையெதிர் கொள்பாடி புன்கூர்—செழும்
பண்ணார் மணஞ்சேரி அன்னி யூரும்
கருப்பறியலூர் குரக்குக் காவும்
விண்ணோர் பணிபிரமா புரமும்நீடூர்
வேளூரும் வாழ்கொளி புத்தூர்—திரு
**மண்ணிப் படிக்கரை** ஓமாம் புலியூர்
வளருங் கடம்பூர் முள்ளூரும்

---

(அ) தென்பாலை - திருக்கழிப்பாலை ; திருப்பெருமணம் - திருநல்லூர்ப் பெருமணம் ; பட்டினம் பல்லவனீச்சரம் - காவிரிப்பூம்பட்டினம் பல்லவனீச்சுரம் ; பட்டினம் சாய்க்காடு - காவிரிப்பூம்பட்டினம் சாய்க்காடு ; காட்டுப் பள்ளி - கீழைத் திருக்காட்டுப் பள்ளி. இதுமுதல் 'ஈ' வரை காவிரியின் வடகரைத் திருக்கோயில்களைக் கூறுகிறார்.

(ஆ) வேளூர் - வேள்விக்குடி ; முள்ளூர் - திருக்கானாட்டு முள்ளூர்.

(இ) பந்தனூர் பாடிசேய்ஞலூர் நாரை கடைமுடி
பதங்குடியும் கோடிகா—நற்ப
னந்தாளுடன் கஞ்சனூரும் திருவின்னம்பர்
தேவன்குடி செஞ்சொல்
சுந்தரர் போற்றுதிரு மங்கலக்குடி சொற்றமிழ்க்
கொட்டையூர் வியலூர்—மலர்ச்
செந்திரு மேவும் விசைய மங்கையும்
திருவை காவூர் திருப்பழனம்

(ஈ) நீடு புறம்பயம் பஞ்சநதம் பழூர்
மழபாடி நெய்த்தானம்—சிவ
னாடு வடகுரங் காடுதுறை திருவாலந்
துறைபெரும் புலியூர்
வாடைகமழ் கானூர் மாந்துறை பாற்றுறை
காவை பைஞ்ஞீலி உம்பர்
நாடாச் சிராமம் திருவீங்கோய் ஏர் **பொன்னி
நதிக்கு வடக்கிவை** யம்மே.

(உ) நலஞ்சேர் போக்கி கடம்பந்துறை நறும்பராய்த்துறை
நற்குடி உறையூர்—சொல்
இலங்குமூக் கீசுரம் சிராப்பள்ளி எறும்பி
யூருடன் நெடுங்களமும்
பொலஞ்சேர் மேலைக் காட்டுப் பள்ளி யாலம்பொழில்
பூந்துருத்தி கண்டியூரும்—விண்
டலம்புகழ் சோற்றுத் துறைபுள்ள மங்கைத்
திட்டையும் திருவேதி குடியும்

---

(இ) பந்தனூர் - பந்தணை நல்லூர்; பாடி - ஆப்பாடி ; நாரை - நாரையூர் ; தேவன் குடி - திருந்து தேவன்குடி ; விசைய மங்கை - கோவந்தபுத்தூர் ; கொட்டையூர் - கோடீச்சுரம்.

(ஈ) பஞ்சநதம் - ஐயாறு ; ஆலந்துறை-அன்பில்; புலியூர் - திருப்பெரும்புலியூர் ; காவை - திருவானைக்கா ; ஆச்சிராமம் - திருப்பாச்சில் ஆச்சிராமம் ; பொன்னி - காவிரி ; காவிரிக்கு வடபால் 63 தலங்களையும் குறித்தார்.

(உ) போக்கி - வாட்போக்கி ; உறையூர் - திருமூக்கீச்சுரம் ; ஆலம் பொழில் - தென்பரம்பைக்குடி ; கண்டியூர் - வீரட்டம் ; திட்டை - தென் திட்டைக்குடி ; புள்ளமங்கை-ஆலந்துறை ; இதுமுதல் காவிரித் தென்பால் தலங்கள் கூறுகிறார்.

(ஊ) சக்கரப் பள்ளி பாலைத் துறைநல்லூர்
தண்கருகாவூர் ஆவூர்—நல்
மிக்க வடதளியும் பழையாறை வித்தகர்
வாழ்சத்தி முத்தம்
சொக்கர்பட் டீச்சுரமும் திருவலஞ் சுழிகுடந்தை
கீழைக் கோட்டம்—ஐந்
தக்கார்காப் பாரோண முடன்குரங்
காடுதுறை இடமருதூர்

(எ) நீலக் குடிவைகல் நாகே சுரம்திரு
நித்தர் வளர்நகர் நல்லம் — மலர்ச்
சோலைசூழ் திருக்கோ ழம்பியம் ஆவடு
துறையும் அழகார் துருத்தி
சூலத்தர் வாண்மாடக் கோயில் மயிலாடு
துறையுடன் தேரழுந் தூரும் — எழு
ஞாலத்துள் மிக்க கருப்பறியலூர் நன்னீர்ப்
பள்ளி இளநகரும்

(ஏ) செம்பொன் பள்ளி தலைச்சங்காடும் ஆக்கூர்
திருக்கடவூர் வலம்புரமும் — தேவர்
நம்பும் வீரட்டம் வேட்டக் குடியும்
நள்ளாறு தென்றெளிச் சேரி
அம்பலத் தருமபுரமுந் திருக்கோட்
டாறுபெருந் திருக்கோயில் — அடர்
சம்புமா காளம்திரு மீயச்சூர் திலதைப்பதி
திருப்பாம் புரமும்

---

(ஊ) ஆவூர் - பசுபதீச்சுரம் ; வடதளி - திருப் பழையாறை வடதளி ; குடந்தை - குடமூக்கு ; ஐ - அழகு; காப்பாரோணம்-திருக்குடந்தைக் காரோணம்; குரங்காடு துறை - தென் குரங்காடு துறை.

(எ) திருவைகல் - மாடக்கோயில் ; அழகார் துருத்தி - திருத் துருத்தி; திருப்பறியலூர் - வீரட்டம்; நன்னீர்ப் பள்ளி - நனிபள்ளி.

(ஏ) ஆக்கூர் - தான்தோன்றி மாடம்; கடவூர் வீரட்டம் - கடவூர் மயானம் ; மீயச்சூர் - இளங் கோயில்.

(ஐ) அன்னியூர் வீழி மிழலை கொட்டிடை
அழகார் புத்தூர் பெருந்துறை — புகழ்
மன்னு திருநறையூர்ச் சித்தீ சுரந்திரு
வாஞ்சியஞ் சிறுகுடி பனையூர்
நன்னிலம் கருக்குடி நாதர் சிவபுரம்
ராமன தீச்சுரம் பயற்றூர் — பசும்
பொன்னுயிர் கொண்டீச் சுரங்க லையனூர்
புகலூர் திருவிற் குடியும்

(ஒ) வர்த்தமா னீச்சுரம் செங்காட் டங்குடி
மருகல் சிக்கல் சாத்தமங்கை — அன்பர்
நற்றமிழ் சேரும் தேவூர் கீழ்வேளூர்
நாகைக் காரோண முக்கூடல்
பற்றாரூர் மூலட்டானம் அறனெறிப்
பரவையுண் மண்டளி நான்கும் — நடனத்தர்
மற்பெரு வேளூர் தலையாலங்காடு
திருவிளமர் கரவீரமும்

(ஓ) நாலூர் குடவாயில் சேறை அவளிவ
ணல்லூர் பெரும்பாழி புகலூர் — புவி
மேலாந் திருவரதை பூவனூர் — திரு
வெண்ணிப்பதி சிற்றேம முசாத்தானம்
பாலா மிடும்பா வனம் திருவிரும் பூளை
பருதிநியமம் தென்களர் வெண்டுறை — பெரு
மாலாங் கடுவாய்க் கரைப்புத்தூர் தண்டலை
நீணெறி திருப்பே ரெயிலும்

---

(ஐ) கொட்டிடை - திருக்கருவிலிக் கொட்டிட்டை; பெருந்துறை - திருப்பேணுபெருந்துறை.

(ஒ) வர்த்தமானீச்சுரம் - திருப்புகலூர்; சாத்தமங்கை - அயவந்தி; முக்கூடல் - திருப்பள்ளியின் முக்கூடல்; பற்று ஆரூர் மூலட்டானம்; பற்று ஆரூர் அறனெறி பற்று ஆரூர் பரவையுண் மண்டளி.

(ஓ) நாலூர் - நாலூர் மயானம்; சேறை - திருச்சேறைச் செந்நெறி; பெரும்பாழி புகலூர் புவி மேலாம் திருவரதை - திருவரதைப் பெரும்பாழி.

(ஔ) கோட்டூர் அன்பர்சொலும் பாதாளீ சுரமும்
திருக்கடி குளந்தெங்கூர் கொள்ளம் பூதூர்
நாட்டியத் தான்குடி யேற்ற கொள்ளிக்காடு
நற்காறாயில் கன்றாப்பூர் மூவர்
பாட்டியல்சேர் நெல்லிக்காவும் அகத்தியான்
பள்ளி திருமறைக் காடும்—என்றும்
நீட்டுபுகழ்க் கச்சினம் வலிவலம் திருவாமூர்
நெடுங்கோளிலி கோடிக் குழகம்

க. சோணாட்டி **லொருநூற்றுத் தொண்ணூ றாகும்**
நற்றலம் மூவர் பாடல்;
ஈணாட்டில் **இரண்டு** மலை நாட்டி **லொன்று**;
கொங்**கேழு**;
பாண்டி **பதினாலு**; செல்வ
வாணாடாம் நடுநாட்டிற் பதி**யறு நான்கு**;
வடக்**கிலைந்து**; துளு**வொன் றாகும்**;
நீணிலம் போற்றுதொண்டை நாட்**டாறைந்தும்**;
நீள்திருப்பதி **நூற்றெட்டும்** அம்மே.

## விருத்தம்

**52.** அண்டர்பதி மாலயணும் அனுதினமும் போற்றுசர
ணார விந்தர்
மண்டலத்தி லுயர்மண்ணிப் படிக்கரைநா தரைவணங்கும்
வஞ்சி யேநீ
கண்டுதொழும்சிவதலமும் மால்தலமும் உரைத்ததுபோற்
கருணை கூர்ந்து
பண்டுமனத் தறிந்துகற்ற சித்திரவித்தை யுள்ளவெல்லாம்
பகரு வாயே.

---

(ஔ) கச்சினம் - திருக்கச்சனம்; திருவாமூர் - திருவாய்மூர்.

க. காவிரிக்கு வடக்கிலும் தெற்கிலுமாகச் சோழநாட்டுத் தலங்கள் 190; ஈழநாட்டில் 2; மலை நாட்டில் 1; கொங்கு நாட்டில் 7; பாண்டிநாட்டில் 14; நடுநாட்டில் 24; வடநாட்டில் 5; துளுநாட்டில் 1; தொண்டைநாட்டில் 30 என்றார். நடுநாட்டில் 22 என்றும், தொண்டை நாட்டில் 32 என்றும் கூறு வர். இவர் சோணாட்டுத் தலங்களை மட்டும் ஒன்று விடாமல் கூறினார். 'நீள் திருப்பதி நூற்றெட்டு' என்று கூறியது திருமால் தலங்களை.

52. சிவதலமும் மால்தலமும் என்றது உரைத்ததையும் எண்ணியதையும் குறித்ததாம்.

## 34. தலைவி வினவுதல்

### விருத்தம்

தேசதுலாவிய அன்பர கத்திடைத் திவ்வியமா யுறைவோன்
மாசதிலாத பொய்யாத மொழீசர்நல் வரைவரு குறமாதே
நேசமதாமுன் னினங்களும் உங்கள்தம் நேர்மையும்
வாய்மையுமே
வாசமதாகிய நாடுமந் நாட்டுள வண்மையும் நவில்வாயே.

## 35. குறத்தி நாட்டு வளம் கூறுதல்

''நானறிந்த நாட்டுவளப்பம் சொல்லென்றல்லோ கேட்கிறாய், ஆனால், சொல்லுகிறேன் கேளடியம்மே.''

### நாட்டுப்பதம்

நாடு மெங்கள் நாட்டில்
நாகரிகமுஞ் சொல்ல வாராய்—அளி
பாடுஞ் சோலைப் பொய்கைப்பாகைப்
பதியில் வரும் பாவையே (நாடுமெங்கள்)

1. கழிமரங் கலைக்கொம்பு கரிக்கொம்பு
மாக அமைச்சு—மேலே
கதித்த ஆமை யோட்டினா லேமறைய
மூடி வைச்சு
மெழுகினாற் சுவர்செய்து மாணிக்க
முத்தைப் பதிச்சு—புழுகால்
மெழுகித் தீற்றிக் கோலமிட்
டிருக்கும் எங்கள் குச்சு. (நாடுமெங்கள்)

2. காடுஞ் செடியு மாகக்கலந்
திருக்கும் எங்கள் தேசம்—புலி
காட்டானை சிங்கங் கரடி
யுடன் நாங்கள் வாசம்
ஆடுமாடு போலெண்ணு வோமதைப்
பாரோம்சங் கோசம்—மந்திரம்
அவிழ்த்த முடுக் கெங்களுக் குங்களுக்
கதுபிர யாசம் (நாடுமெங்கள்)

---

34. தேசது - ஒளி; தேஜஸ் - ஒளி, வரை - மலை.

(உ) கூரழலைக் கசக்கிநன் னீராகப் பிழிவேன்—அண்ட
கோள்துலங்க வேவிசுவ ரூபங் கொளுவேன்
பாரினில்நான் கற்றவித்தை சொல்லவென்றால்—இரு
பத்துநாட் செல்லுமண்ணிப் படிக்கரை மின்னே.

## விருத்தம்

54. கன்னல்கனி தன்னிலுயர் இன்னமுது துன்னியகற்
கண்டு போலும்
மன்னுமிசை பன்னுகுயில் அன்னநடை யுன்னுகுற
வஞ்சி மாதே
நன்னயம தென்னவுயர் சின்னங்களா மென்னும்வித்தை
நவின்றாய் இன்ன
தன்னமையாய் முன்னுமுன் கன்னியர்க்குச் சொன்னகுறி
தனைச்சொல் வாயே.

## வசனம்

'அகோ வாராய் குறமாதே, நீ கற்ற வித்தைகளெல்லாம் சொன்னது கேட்டு மிகவும் சந்தோசமாச்சுது. ஆனால் முன் பெண்களுக்குக் குறிசொன்னதற்கு அவர்கள் கொடுத்த வெகுமதிகளும் சொல்லவேணும் பெண்ணே.'

'முன்னம் நாங்கள் சொன்ன குறியல்லோ கேட்கிறாய் சொல்லுறேன், கேளடியம்மே.'

## தரு

55. அன்னமே கேளெல்றன் முன்னோர்கள் மாதர்க்குச்
சொன்ன குறிதனை உரைப்பேன்—செழுங்
கன்னல் வயல்சூழும் மண்ணிப் படிக்கரை
அண்ணல் மீதாசை மோகினியே.

(அ) பூமலர்ச் சீதைக் கிராமர் வருவரென்றேன்
மாமி தெரிந்துகுறி சொன்னாள்—அவள்
கோமே தகப்பணி ராமக்குச்சரிச் சேலை
கால்மெட்டி பொன்னோலை கொடுத்தாள்.

(ஆ) சத்திய பாமைக்குக் கிஷ்ணன் வரஎங்கள்
தங்கை தெரிந்துகுறி சொன்னாள்—அவள்
சித்த மகிழ்வாகி ரத்தினப் பதக்கமும்
கொத்துச் சரப்பணி கொடுத்தாள்.

---

(2) விசுவரூபம் - பேருரு.

54. பன்னுகுயில் - பாடுங்குயில்; சின்னம் - அடையாளம்; தன்னமை - தன்மை.

(இ) செஞ்சொற் சரசோதிக்குக் கஞ்சன் வருவானன்
றிஞ்சொல் மச்சினி குறிசொன்னாள்—அப
ரஞ்சிக்குப் பட்டிபஞ்ச வண்ணப் பட்டும்
விஞ்சை மாத்திரைக் கோலும் கொடுத்தாள்.

(ஈ) ஆணிக்கை யாயவச்சிர பாணி வர, அயி
ராணிக்கு மென்பாட்டி சொன்னாள்—மனம்
பூணிக்கை யாய்நவ மாணிக்கந் தனிரு
தூணிப் பதக்கமவள் கொடுத்தாள்.

(உ) சந்திர மதிக்கரிச் சந்திரன் வருவ
னென்றென் றமக்கைகுறி சொன்னாள்—அவள்
சிந்தை மகிழ்ந்து பொன்னகையு முதர
பந்தனங் கைவந்து கொடுத்தாள்.

(ஊ) சீருயர் பாஞ்சாலத் துரோபதைக் கைவர்கள்
சேருவரென்று நான்சொன்னேன்—முத்
தாரங் கேயூரம் சிங்கார மாகுமுட்
டார மகிழ்ந்தவள் கொடுத்தாள்.

(எ) செஞ்சொ லுயர்சுர மஞ்சரிக்குச் சீவகன்
சேருவா னென்று சொன்னேன்—ஒளி
கொஞ்சு பரிபுரமுஞ் சதங்கை தங்க
மிஞ்சி கொலுசவள் கொடுத்தாள்.

(ஏ) வங்கண மாகவே கொங்கண தேசத்துப்
பெண்களுக் குக்குறி சொன்னேன்—பச்சைக்
கங்கணமும் வச்சிரத் தொங்க லுடனிரு
கொங்கைக் கணிகச்சுங் கொடுத்தாள்.

(ஐ) தாட்டிமையாய் இந்த நாட்டினிற் பெண்களுக்கு
மேட்டிமை யாய்க்குறி சொன்னேன்—அவர்
வீட்டுக்கு வீடள்ளிப் போட்டது பவளக்
காட்டு வராகனோர் கோடி.

---

(இ) சரசோதி - சரசுவதி ; கஞ்சன் - நான்முகன்; இஞ்சொல் - இன்சொல்.

(ஈ) வச்சிரபாணி - இந்திரன் ; மனம்பூணி - மனங்கொண்டு.

(ஊ) முட்டாரம் - முட்டாக்கு.

(ஓ) பொன்னி நதிசூழ் மண்ணிப் படிக்கரை
யண்ணல் வரைவளர் மானே—மகிழ்ந்
தின்னில மீது கன்னியர்க் குக்குறி
சொன்ன தெண்ணத் தொலையாதே.

### விருத்தம்

**56.** செங்கமல மங்கைவடி வந்திகழு மின்பமிகு
செந்தே னின்சொற்
பொங்கியருள் மிஞ்சுகுற வஞ்சிமின்னே ரஞ்சிதமாம்
புவியின் மீதே
மங்கையர்க்கு முன்குறிப கர்ந்தவய ணந்தெரிந்தே
மகிழ்ச்சி கூர்ந்தேன்
இங்கிதமி குந்தென்னை நன்குறி தெரிந்துவப்ப
இயம்பு வாயே.

### வசனம்

'அகோ வாராய் குறமாதே, பார்மீதில் பெண்களுக்கு முன்குறிகள் சொன்னதும் அவர்கள் கொடுத்த வத்திர பூச ணாதிகளும் கேட்டுச் சந்தோச மாச்சுது. இனிமேல் என் மனத்திலே நினைத்த குறிதெரிந்து சொல்ல வேணும் பெண்ணே.'

'அப்படியே உன் மனத்திலே நினைத்த குறிசொல்ல வேண்டியதற்குத் தெய்வ வணக்கம் செய்ய வேண்டியது சொல்கிறேன். கேளடியம்மே.'

### தரு

**57.** மின்னரசே செய்யும்வகை தன்னையான் சொல்வேன்
—புகழ்
மண்ணிப்படிக் கரைநாதர் தன்னாட்டில் மின்னே.

(அ) செங்கரும்பைக் கால்நிறுத்திச் சிங்காரமாகச்—சுப
மங்களமாம் பந்தலிட்டு மாவிலை கட்டி
குங்குமத்தால் மெழுகிவெண் கோலமு மிட்டு —ஒளித்
தங்கமணிச் சிங்காதனந் தானொன் றமைத்து.

(ஆ) அத்திமுக வனைமகிழ்ந் தன்பாக வைத்து — நவ
ரத்தின மணிமாலை நன்றாகச் சூட்டி—
சுற்றிமணி விளக்கேற்றித் தூபமமைத்து — மனம்
பத்தியாய்த் தேங்காய் வாழைப்பழம் வெல்லம்

---

56. வயணம் - செய்தி ; வரலாறு.

(இ) முக்கிய மாய்ப்படைத் தாணிமுத்தைச் சொரிந்து—மன
மெய்க்கவே பொற்கும்பமதின் மேலொன்று வைத்துத்
தக்கதிரு வம்பிகைக்கும் சரசோதிக்கும்—நல
மிக்கபாற் பொங்கலிட்டு வேண்டிப் பூசைசெய்.

(ஈ) வள்ளிவே லவற்குத் தினைமாவுங் கொடுவா—மனந்
தெள்ளிமையாக் காட்டேறிக்குச்சேவ லஞ்சுதரத்
துள்ளுமர வக்கன்னி மார்க்குத் துலங்கவைத்துப்-பூசை
கொள்ளுமுக்கிர வீரனுக்குக் கோழிபத்து நேர

(உ) உச்சிதக் கறுப்பனுக் கொன்பதுபானை பொங்கல்-கருங்
கச்சைகருங் குட்டிபத்துக் கைவா ளொன்றுவை
இச்சையாம் பகவதிக் கின்பமாம் பொங்கலிடு—மிகு
லச்சணமாம் காத்தவ ராயனுக் கும்மே.

(ஊ) ஆடுரெண்டு பன்றியொன்று மஞ்சு சேவலும்—மது
நீடு மொன்பது குடத்தில் நிரப்பியேவை
நாடிக்குறப் பெட்டிக்கு நானாழி முத்துவை—குறி
தேடு மாத்திரைக் கோலுக்குத் தெட்சணைவை.

(எ) பரிவாய்க் குலதெய் வத்துக்குப் பத்துப்—பொன்
விரைவாகப் பெண்தேவதைக்குச் சேலை யொன்றுவை
அருளுடனே தேவர்பதம் அன்பாகப் போற்றி—நீயும்
திரமாக வேகனக சிங்கா தனத்திரு.

### வசனம்

'அகோ வாராய் மோகனாங்கி, காவேரி நீராடி, கனக வத்திர பூசணாலங் கிருதமாக வந்து சகல தேவதைகளுக்கும் பிரார்த்தனை பண்ணிக் கனக சிங்காதனத்தின் பேரிலே வந்திருடியம்மே.'

'அப்படியே செய்கிறேனடி குறத்தி.'

---

(ஈ) கொடுவா - கொண்டுவா ; அரவக் கன்னிமார் - நாககன்னியர் ; உக்கிர வீரன் - வீரபத்திரன்.

## அகவல்

**58.** திருமரு மகனே சிந்துர முகனே
வருகுண பதியே மகாகண பதியே
சிவசிவ அரனே திரிசூல தரனே
தவளமெய்ந் நீற்றாய் தாண்டவக் கூத்தாய்
தாமரைக் கண்ணா தன்முகில் வண்ணா
பூமகள் வாசனே பொன்னரங் கேசனே
பன்னக தாரி பகவதி சூலி
கன்னியா குமரி கவுரிகாட் டேறி
கஞ்சிகா மாட்சி கருணைமீ னாட்சி
மஞ்சுறை வேணி வாக்கருள் வாணி
மங்கள முகுந்தன் மார்மிசை யுகந்த
பங்கயத் திருவே பசும்பொனி னுருவே
மயிடசங் காரி வளர்முத்து மாரி
சயிலவுத் தண்டி சவுரிசா முண்டி
உலகினில் மெய்யா உனைக்காட் டய்யா
இலகுவே தாளி பேற்றமா காளி
அழகிய கூத்தா அய்யனாம் சாத்தா
எழில்சத்த மாதா இகல்சட்டை நாதா
வாயுவின் மைந்தா மகாஅனு மந்தா
சேயருட் சித்தா செயவீர பத்ரா
வரிசைகள் சிறப்பா மாவையிற் கறுப்பா
தேவநா யகனே சிறந்ததா யகனே
கோவலன் மருகா கூர்வேல் முருகா
துள்ளும யூரா சூரசங் காரா
வள்ளிதன் காந்தா வரைவளர் வேந்தா
சிவனருள் மகனே செந்தியிற் குகனே
கவுரிதன் பாலா கடம்பணி சீலா
மிகமனங் களிக்க மேதினி துதிக்க
நேர்த்திய தாக நின்செய லாக
மாத்திரைக் கோலில் வந்துமுன் நிற்பாய்.

---

58. (1) சிந்துரம் - யானை; (7) பன்னகம் - பாம்பு; தாரி-தரித்தவன்; (13) மயிடம் - மயிடாசுரன்.

23. கோவலன் - திருமால்; மயூரம் - மயில்.

## விருத்தம்

59. சொன்னலம் பெருகும் இன்சொற் சுரதமோ கினியே கேளாய்
என்னுட தேவர்க் கெல்லாம் இசைந்துநான் வருந்திக் கொண்டேன்
உன்னுட மனதில் வேண்டும் உயர்குறி தனையான் சொல்வேன்
நன்னய மாக உன்றன் நலினமா மலர்க்கை காட்டாய்.

## வசனம்

'வாராய் மோகனாங்கி, உன்னுடைய மனதினில் நினைந்த குறிதோணும் படிக்கு என்னுடைய தேவரை யெல்லாம் வருந்தினேன். விரைவுடன் நீயுமுன் மலர்க் கையைக் காட்டடியம்மே.'

'அப்படியே கைபார்த்துச் சொல்லடி குறத்தி.'

## தரு

60. அருள்சேர்மலர்த் திருவேவள்ளி யம்மைதனைப் பணிந்தே
திரமாகவந் திருந்தேயுன்றன் செங்கைதனைக் காட்டாய்
பரிவாகவும் வடிவேலரைப் பணிந்தேகுறி சொல்வேன்
விரைவாயுன செங்கைகளை மெய்யாகவே காட்டாய்.

(அ) அதிகநவ நிதியங்களை அளையுமிந்தக் கரங்காண்
சதிராகவே பலபூசணந் தரிக்குமிந்தக் கரங்காண்
துதிசேர்தமிழ் வலர்க்கேநிதி சொரியுமிது கரங்காண்
பதிமே லெங்கள் முருகேசனைப் பணியுமிந்தக் கரங்காண்.

(ஆ) அணிபூண்மட மயிலேஉன்றன் அங்கைச்சிவப் பாலும்
இணையாயமை பயற்றுநெற்றென இவைதோற்றுத லாலும்
துணையாம்இறை தனிமேலிறை தோற்றும்வளத் தாலும்
குணமாஞ்சுக ரிசிபோலமை கூராருகி ராலும்

---

59. வருந்தி - வேண்டி.

60. (அ) அளையும் - புரளவிடும், திரட்டும்; தமிழ்வலர் - கவிஞர்.

(ஆ) இறைதனில்மேல் இறை - வரிமேல் வரி; சுகரிசி-சுகமுனிவர் (கிளிவடிவ முனிவர்); உகிர்-நகம்.

(இ) பலரேகைகள் தாமும்செழும் பவளக்கொடி போலும்
நலமாயிருப் பதனால்கிரி ராசபுத்திரி நீகாண்
நிலைமைபெற இனியுன்கர ரேகைக்குள பலன்கள்
சொலுவேனுன் மனத்தின்படி தொகுத்தேமனக்
குறிப்பால்.

(ஈ) பதுமவரை இதனாலட்ட பாக்கியமிக வுண்டாம்
விதமாமச்ச ரேகைமிக விளங்கியிருப் பதனால்
இதமாகவே பிறையாயிரத் தேற்றமாய்வாழ்ந் திருப்பை
மதிபோலதம ருகரேகையின் வகையாற்சுகம் பெறுவை.

(உ) கனமாந்தன ரேகையிது கண்டேன்மகிழ் கொண்டேன்
தினமேதன தானியப்பொருள் சேரும்மிக அம்மே
அனமேயிது வித்யாவரி யதனாற்புவி மீது
தனும்வீணையின் இசைச்சாகரம் தறுவாதனம்
வேய்வை.

(ஊ) இயல்சேருமங் குல்லியரேகை இதனாலதி சயங்கேள்!
நயவாங்கிச புரவிசெம்பொன் நரவாகனம் பெறுவை;
கயலார்விழி மானேயிது தான்கங்கண ரேகை
தயவாய்மனத் தியைந்தபுரு சனையோமணம் புணர்வை.

(எ) சங்கரேகை இதனாற்பந்து சனங்கள்தழைத் தோங்கும்;
பொங்கமாயிது பாக்கியரேகை பொருந்தியிருப் பதனால்
மங்களகர மாகவிரு மைந்தர்தமைப் பெறுவை;
தங்கமேயுன் செங்கையின்பலன் தனைக்கண்டுநான்
சொன்னேன்.

---

(இ) கிரி ராச புத்திரி-பார்வதி.

(ஈ) பிறை ஆயிரத்து ஏற்றம் - ஆயிரம் திங்கள் கால அளவுக்கு மேலாக; என்பது எண்பது அகவை தாண்டி; தமருகம்-ஓரிசைக் கருவி;

(உ) வித்யாவரி-வித்தியா ரேகை: தனுவீணை - உடலாகிய வீணை; இசைச் சாகரம் - இசையாகிய கடல் ; தறுவாதனம் - குறையாவளம் ; வேய்வை- அடைவாய்.

(ஊ) அங்குலிரேகை - விரல்நுனி ரேகை; நய வாங்கிசம்-நன்மக்கள்; புரவி-குதிரை; நரவாகனம் — மனித வாகனம்.

(ஏ) வளமாய்க்குறி கேட்குந்தன மயில்வண்மையி னாலும்
ஒளிர்மூன்றாம் பிறைபோல்நுதல் உருவம்மத னாலும்
நளினமலர் விழிசெவ்வரி நலமையத னாலும்
தளவமுகை இளமூரல்கள் அதரங்கனி யாலும்

(ஐ) வள்ளைநிகர் குழையின்வடி வாலும்மங்க போலம்
ஒள்ளியகண் ணாடிபோலமை வுகந்தசெய லாலும்
வெள்ளைச்சங் கதுபோலிசை மேவுங்கழுத் தாலும்
தெள்ளமுதக் குடமாமுலைச் சிங்காரம தாலும்

(ஓ) தொடிசேர்புயம் திகரியெனத் தோற்றும் வளத்தாலும்
வடமென்தளிர் உதரத்தியல் பாலுமுந்திச் சுழியும்
கொடிநுண்ணிழை மருங்குந்தமி குலவல்குலின் இயல்பும்
படிவந்திகழ் கதலித்துடைப் பாங்காமியல் பாலும்

(ஒ) காலிமதன் தூணியெனும் கணைக்காற் சிறப்பாலும்
தாளந்தரா சென்னும்பற டந்தமுள தாலும்
நீளுமொளி பெறுசெம்பஞ் சென்னுமலர்ப் பதமும்
வாளிபோல் விழிமாதேமலை மகளாகுநீ யம்மே.

(ஔ) மெத்தவதி சயமாமனம் விரும்பும்புரு சனையே
நித்யமணம் புணர்வாயிது நிசமேயுன்கை பலமே
முத்தெனும்நகை மின்னேயின்னம் மொழிவேனொரு குறிதான்
சுத்தமாமிடப் புறத்தில்எழும் துடிப்புமறி யம்மே.

(க) இன்னமுமுன் மனத்தில்நினைத் திருக்குங்குறி சொல்வேன்
அன்னமேவலக் கெவுளி சொல்லு ததனால்பலன் கண்டேன்
மன்னியபுகழ் சேருந்தென் மண்ணிப்படிக் கரையில்
மின்னுந்திரு நீலகண்டர்மேல் ஆசைகொண்டனை அம்மே.

---

(ஏ) தனமயில் - தனத்தையுடைய மயில் (இல்பொருள் உவமை); நலமை - நன்மை; தளவமுகை - முல்லையரும்பு; அதரம் - இதழ்.

(ஐ) கபோலம் - கன்னம்; இசை - புகழ்; திகிரி-மூங்கில்; உதரம் - வயிறு; தமிகுலவு - தனித்து விளங்கும்.

(ஒ) காளமதன் - கரிய மன்மதன்; வாளி-அம்பு; மலைமகள் - பார்வதி; பறள் - பன்றிக்குட்டி.

(ஔ) மகளிர்க்கு இடந்துடித்தல் நலம் என்பது வழக்கு.

(க) கெவுளி - பல்லி.

## விருத்தம்

61. மதிதமிழ் நேரி வெற்பின் வளர்குற வஞ்சி மாதே
துதிபெற எனது நெஞ்சத் தோற்றமே யுரைத்தாய் இன்மை
கதிபெற வருந்திக் கொண்ட காதல்நா யகனுக் குள்ள
அதிசய வடிவ மெல்லாம் அறிந்திட உரைசெய் வாயே.

## வசனம்

'வாராய் குறமாதே, நீ கைக்குறி மெய்க்குறி பார்த்து என் மனத்தில் நினைத்திருந்தபடி நிசமாகச் சொன்னது கேட்டு மகா சந்தோசமாச்சுது. இன்னமும் நான் வருந்திக் கொண்ட நாயகனுக்குள்ள குண அதிசய வடிவமெல்லாம் சொல்லவேணும் பெண்ணே.'

'ஆனால் அப்படியே சொல்லுகிறேன்; கேளடியம்மே.'

## தரு

62. மங்கையே உன்றனுக் குள்ள
வடிவமெல்லாம் உரைசெய்யக் கேளாய்
கங்கை திங்களணியும் சடையார்
காமனைவென்ற பால லோசனர்
செங்கதிர் மதிபோ லொளிர்கண்ணர்
திரிபுரத்தை எரித்த நகையார்
அங்கைமான் மழுவணிசெந் தீயர்
ஆடரவைப் பூணாரம் அணிந்தோர்

(அ) மாலயன் அறியாத் திருப்பாதர்
மங்கையோர் பாகம்வைத் தாடுநாதர்
கோலமாக வெண்ணீறணி மெய்யர்
குஞ்சரத் துரிபோர்த்திடு துய்யர்
ஆலமுண்ட கறைமிடற் றீசர்
அன்பர்நெஞ்சத் தகலாத வாசர்
காலன்மெய் பொடியாக்கிய வேதர்
காளி தன்னுடனே ஆடுசங் கீதர்.

---

61. நெஞ்சத்தோற்றமே - மனத்துத் தோன்றுவதே.

62. உன்றனுக்கு - உன்னைக் கவர்ந்தவர்க்கு; பால லோசனர் - நெற்றிக்கண்ணர், சிவன்.

(அ) குஞ்சரம் - யானை; உரி - தோல்.

(ஆ) சுந்தரற் கேவலாளரு மாகித்
தூதாக நடந்திடும் யோகி
சிந்தை கூர்ந்து கண்ணர்ச் சனைசெய்யத்
திருமாலுக் காழி யன்றருள் மெய்யர்
நந்து லாவிய மண்ணிப் படிக்கரை
நாய கர்திரு நீல கண்டேசர்
விந்தை யாகவரு பவனி கண்டு
மெத்தமன தாசையே கொண்டாய்.

## கொச்சகம்

**63.** பொன்பரவு நேரிவரைப் பூங்கொடியே யென்றனக்கு
அன்புடனே சொன்னவடை யாளமெலாம் தானிசமே
தென்பரவு படிக்கரையில் திருநீல கண்டரெனை
இன்பமுட னேமருவ எப்போவரு வர்சொல்லாய்.

## வசனம்

'வாராய் குறமாதே, நான் ஆசை கொண்ட நாயகனுக்குள்ள குணாதிசய அடையாளம் நிசமாகச் சொன்னது கேட்டு மெத்தவும் சந்தோசமாச்சுது. அவர் எப்போ வருவார் சொல்லும் பெண்ணே.'

'ஆனால், அப்படியே சொல்லுறேன்; கேளடியம்மே.'

## தரு

**64.** மங்கையரே உந்தம்மன மகிழ்ச்சிபெற வேதான்
இங்கிதம தாயுரைப்பேன் இயல்பாகக் கேளாய்
பங்கயமின் சேருமண்ணிப் படிக்கரையினித மேவும்
கங்கையணி திருநீல கண்டர்வர வறிந்து

(அ) இங்கிதமாங் குறவள்ளி பங்கில்வளர் முருகேசர்
செங்கமலத் தாளிணை வணங்கிக்கரம் குவித்தே
பொங்கமாய்நின் குலத்துச்சுப மங்கைவந்து காணுது
சங்குமுத்து வன்னச் சேலையுங்கொடுவா விரைவாய்

---

(ஆ) சுந்தரர்-சுந்தரமூர்த்திநாயனார். ஏவலாளர்-பரவையாரிடம் தூதுசென்றவர்; நந்து-சங்கு.

63. தென் பரவு-வண்டு இசைக்கும்.

64. (ஆ) குறித்துக் கோடி-குறித்துக் கொள்க.

(ஆ) சித்திரப்பொன் முறத்தில்நவ ரத்தினத்தைப்
பரப்பிப்
பத்தியுடன் மூன்றினைக் குறித்துக் கோடி யம்மே
பத்தியுடன் நீகுறித்த ரத்தினத்தின் மூன்றினைக்
கேள்
முத்துப்பச்சை மாணிக்கம் நினைத்தேடி யம்மே.

(இ) முத்தினை முன்மனத்தில் நினைத்தபடி யாலும்
கர்த்தர்திரு நீலகண்டர் சித்தம்வைத்து மணப்பார்
வெற்றிபெறு பச்சையின் பலத்தைச் சொலக்
கேளாய்
வித்தகர்மெய் வரிசைகள் கொடுத்துவர விடுவார்.

(ஈ) கோலவொளிர் மாணிகத்தி னாலும்வரும் பலன்
கேள்
நீலகண்டர் மனமகிழ வரலுமுனை நாடிச்
சேலைமரு மாலைமண வோலைகொண் டேதான்
சீலமணம் கூறியின மாலையிட வருவார்.

(உ) விரைசேருங் குழல்மாதே பரிவாகக் கேளாய்
முருகேசர் வள்ளியம்மை யருளாலும் உனக்கே
திரமாகத் தினமூன்றில் புரிவார்நன் மணந்தான்
அரிதாகி நல்வசனம் வரும்பாரின் நேரம்.

(ஊ) உரைவாய்மை தவறாது அருளாக நீதான்
தரைமீதுநவகோட்டில் ஒருகோட்டைத்தொடுவாய்
நிரையாக நீதொட்ட வரையாலு மெங்கள்
திருநீல கண்டர்மணந் திடுவார்நிச் சயமே.

(எ) சசிரோகணி யைப்போலும் சதுமுகன் வாணி
போலும்
சசியுமிந் திரனுமருந்ததி வசிட்டர் போலும்
தசரதர் தருராமர் சீதையைப் போலும்
இசைமேவு மூவர்தமிழ் இலங்கும்படிக் கரையில்

---

(ஈ) இனமாலை-தொகுதியான மாலை; (உ) நல்வசனம் வரும் பார் இந்நேரம்- இந்நேரம் நல்ல செய்தி வரும்; (ஊ) நவகோடு-ஒன்பதுகோடு; (எ) சசி ரோகணி - நிலவும், ரோகிணியும்; சசி-இந்திராணி.

2. கங்கைக் குஞ்சசி மங்கைக் குங்கண்டு
செங்கைக் குள்குறி சொன்னேன்
தங்கண மும்வெடு பொன்பணமும் அந்தச்
செணமே எனக்க ளித்தாள்.

3. மாகத தேசத்திற் தோகைய ரானவர்க்
காக முடன்குறி சொன்னேன்
வயிர மணியுஞ் சரப்பணி யும்எனக்
கணியும் படியவர் தந்தார்.

4. கோசல தேசத்து ராசமின் னாருக்கு
நேச முடன்குறி சொன்னேன் — குறிக்
கூடையும் பட்டின் ஆடையும் பூசல்
ஆடையு மெனக்க ளித்தார்.

## 53. குறத்தி தலைவியைக் கேட்டல்

வாசர்தென் பாகையில் ஈசர்நன் னாட்டுறை
ராச மின்னே சொல்லக் கேளாய் — வெகு
மான முன்கையில் நானு மேபெறத்
தானே வந்தேனடி யம்மே.

## 54. குறத்தி குறி சொல்லுதல்

### வசனம்

''அப்படியே சந்தோஷமாச்சுது. எனக்குக் குறி சொல்லடி குறத்தி.''

''ஆனால் சொல்லுகிறேன், கேளடி அம்மே.''

### குறி சொல்லுகிற அகவல்

நல்லது குறிதான் நானுனக் கன்பாய்ச்
சொல்லுகிறேன், இங்கே சுத்தமாய் மெழுகு ;
நாலுமூ லையிலே நற்பவ ளத்தால்
காலுமே நாட்டிக் கைவளை பரப்பு;

---

52. ராவுராக்கு - கழுத்திலணியும் அணிவகை; சிந்தாக்கு - அட்டிகை; வாக்கு - சொல்வன்மை.

(2) சசிமங்கை - இந்திராணி

(3) மாகததேசம் - மகத தேசம்

(4) ராச மின்னார் - அரச குலப் பெண்டிர்.

### தரு

**67.** துங்க நீடுநதி தங்குவேணி யரிலங்கு நீலகண்டர்
சோணாட்டில்
அங்கை வாருந் தோளிற் பொங்கு கண்ணிகோடன்
ஆர்ப்பரித்துச்—சிங்கன் வந்தானே.

(அ) தொள்ளக்கா திலங்கச் சில்லைக் கோலுங்கொண்டு
கள்ளு மயக்கத்துடன் கண்மருட்டி
வெள்ளைநீ றணிந்துதுள்ளு மீசையுடன்
வேடிக்கை யாய்ச்சிங்கன் வந்தானே.

(ஆ) தலையில் கொக்கிறகும் இடையிற் சல்லடமும்
தரித்துச் சினத்து மிகத்தாவித் தாவி
நலம தாகப் பக்கிபிடிக்கப் படிக்கரையில்
நாதர் வயலிற் சிங்கன் வந்தானே.

(இ) பாலலோசனர் திருநீல கண்டர் மண்ணிப்
படிக்கரை வயலில் அடுக்க டுக்காய்க்
கோலிமேயும் பக்கி யோலங்கண்டு மெள்ளக்
கூனிக் கூனிச் சிங்கன் வந்தானே.

### தரு

**68.** மேயிது அய்யே—பறவைகள்
மேயிது அய்யே.

(அ) தூயருயர் கயிலாயர், கயிலாயர் அடியவர்
நேயரை யவர்பூசை செய்யு மத்தர்
மாயன் பணிபாதர் பாயுங் கலையணி
சேயர் நீலகண்டர் நாயகர் பண்ணையில்—மேயிது.

---

67. அங்கை வாருந்தோள்-அழகிய நீண்ட கைத்தோளில்; கண்ணி-பறவை பிடிக்கும் கண்ணி.

(அ) தொள்ளக்காது (தொள்ளைக் காது) துளையுடைய காது; சில்லை-சிறிய; (ஆ) பக்கி-பறவை; (இ) கோலி-போறுக்கி; ஓலம்-ஒலி, இரைச்சல்.

68. (அ) அத்தர் - சிவபெருமான்; பாயுங் கலை-புலித் தோலாடை; சேயர்-செந்நிறமானவர்.

(ஆ) விண்ணவர் தாமரைக் கண்ணன் அயன்பணி
மண்ணிப் படிக்கரை அண்ணல் வயலிலே
வண்ணவண்ணப் பக்கி எண்ணிக்கை யில்லாமல்
பண்ணை பண்ணையாக நன்றாயிரைகொத்தி—மேயிது.

(இ) கொக்குட னாரை குருகினம் அன்றிலும்
கூழைக் கடாவெள்ளைத் தாராசெந் நாரையொரு
மிக்கலை நெருக்கிக் கொத்தி மொக்கிக்
கக்கிக் கக்கிக் கிக்கிக் கிக்கியென்று—மேயுது.

## தரு

69. கெம்பாற டய்யே—பொறுபொறு
கெம்பாற டய்யே

(அ) வம்புயர் சோலையும் அம்புய வாவிசூழ்
மண்ணிப் படிக்கரை அண்ணல் வயல்தனில்
செம்பசு வாலைப் பிடித்துப் பதுங்கியே
சீராய்க் கருங்கண்ணி நேராய்க் குத்திவாறேன்
—கெம்பாற.

(ஆ) தேவி யமுதகர வல்லி பாகர்
திருநீல கண்டர் செழிக்கும் வயலிலே
தாவிப் பறவைகள் கண்ணிக் கெதிராகத்
தத்தித் தத்தி மெத்தக் கிட்டிவருகுது—கெம்பாற.

## வசனம்

'செங்கால் நாரை, பவளக்கால் நாரை, செந்தாரா, கருந்தாரா, வெள்ளைக் கொக்கு, கருங்கொக்கு, சில்லக் குருவி, கானாங்கோழி பக்கித் திரள் கூடி மேயுது; கண்ணி குத்தி வருகிறேன் கெம்பாறே.'

---

(ஆ) பண்ணை-கூட்டம்; (இ) குருகு-நாரை, இது வெண்ணிற நாரை; மொக்கி-தின்று.

69. கெம்பாற டய்யே - கெம்பாறு அட அய்யே; கெம்பாறு - ஆடாமல் அசையாமல் அமைந்திரு; (அ) வம்பு-புதுவளம்; கண்ணி குத்து வார் பசுவொடு மறைந்து போய்க் கடமை புரிதல் இன்றும் வழக்கமே. இதற்கென ஒரு மாட்டை ஓட்டிக் கொண்டு போதலும் கண்கூடே.

### தரு

70. உக்கிரமாய் வருமிக்க விடத்தினை
உண்டதிரு நீலகண்டர் வயலிலே
மொக்கிக்கடாக் கொக்குபக்கித் திரளென்கண்ணிக்குள்
சிக்கியே சிறகடிக் கொள்ளுது.

### வசனம்

'பக்கித் திரளெல்லாம் கண்ணிக்குள் சிக்கிச் சிறகடிக்
கொள்ளுது; பாரடே அய்யே பாரடே.'
'புரிசடை யாளர் திருநீல கண்டர்
புரக்கும் வயலில் ஒருக்காலே
பக்கித் திரள்கள் சிக்கிற்றுப் பொசிக்கச் சமைத்திடும்
சிங்கியைக் காணேன் எங்கே போனாளோ.'

### தரு

71. தேடுவோம் வாடே ஐயே—என் சிங்கியைத்
தேடுவோம் வாடே ஐயே.

### கட்டளைக் கலிப்பா

72. இலகிளம் பிறைசூடிய வேணியர்,
இக்குவேளை எரித்திடு லோசனர்
நலமைசேர் புகழ்மண்ணிப் படிக்கரை
நாதர்மேவு தென்சோழநன் னாட்டிலே
குலவிய பக்கித்திரள் வேட்டை யாடியே
கொக்கரித்து நடந்தே வெறிச்சிங்கன்
திலக வாணுதல் மோகனச் சிங்கியைத்
தேடிவந்தனன் தேசங்க ளெங்குமே.

### வசனம்

'அடே வாடா அய்யே, படிக்கரை வயலில் பிடிச்ச பக்கித் திரளைச் சமைச்சுப் பொசிக்கச் தருஞ் சிங்கியைக் காணேன்; தேடுவோம் வாடா அய்யே.'

---

70. உக்கிரமாய்-கடுவிரைவாய்; சிறகடிக் கொள்ளுதல் - கண்ணிக்குள் பட்டு, வெளியேறத் துடித்தல்.

72. இக்குவேள்-கரும்பு வில்லாளியாகிய மன்மதன்; லோசனம்-கண்; திலக வாள்நுதல்-பொட்டிட்ட ஒளியுடைய நெற்றி.
(வசனம்) பொசிக்க-புசிக்க.

### தரு

73. தேடி எங்கணும் காணேன் அய்யே—என்சிங்கிதனைத்
தேடி எங்கணும் காணேன் அய்யே.

(அ) தேடினேன் குடந்தை மழபாடியும்
அரிய லூர்தனுக் கோடியும்
மதுரை மூங்கில் பாடியும் ஆப்பாடியுமே—தேடி

(ஆ) காசியும் கோகர்ண வந்தவாசியும்
பேரூரும் அவிநாசியும் வந்த வாசியும்
போசியும் கன்னோசி முதல்—தேடி.

(இ) பேட்டை முதலான தஞ்சைக் கோட்டையும்
இந்திர புரமுமாற் கோட்டையும்
மாகாரை நாட்டையும் செங்கோட்டையும்—தேடி.

(ஈ) கொச்சி மலையாளம் ஈழம் யச்சிய தேசம்
விதர்ப்பம் உச்சயினி கோசலமுடன் கச்சி
மகத குச்சரம் இக்கரை யொட்டியமும்—தேடி.

### கலிப்பா

74. பதிமீது மிகுசீர்த்தி பரவுபண்ணிப் படிக்கரையில்
துதிசேரு நீலகண்டர் துலங்கிவளர் சோணாட்டில்
சதிராகத் தேடிமனந் தளர்ந்துவரும் சிங்காவுன்
அதிமோக மானவஞ்சிக் கடையாளம் சொல்லுவையே.

### வசனம்

'அடவாடா சிங்கா, உன்னுடைய சிங்கியைத் தேசமெல்லாம் சுற்றித் தேடி வந்தாயல்லோ. அவள் கறுப்போ சிவப்போ? குட்டையோ நெட்டையோ? இளமையோ வயசோ? அவளுக்குள்ள அடையாளம் சொல்லு பிள்ளாய்!'

'அடையாளமல்லோ கேட்கிறாய் அய்யே! சொல்லுறேன் கேளடே அய்யே.'

---

74. பதிமீது-உலகில்; சதிர்-முழுதும்; அக்கறையுமாம்.

75. சிங்கிக் கடையாளம் சொல்வேன்—என்
சிங்கிக் கடையாளம் சொல்வேன்
இங்கித வாணி பங்கய பாணி
மங்கை இந்திராணி பொங்கணி வேணி—சிங்கிக்.

(அ) நாட்டில் இளைஞரை வாட்டி மயக்குவாள்—சுகம்
காட்டி மயல்பூட்டி இலங்குப ரஞ்சி—மெத்த
மேட்டிமைக் காரி பாட்டிசை கூறித்
தாட்டிக மீறி நீட்டொயி லேறி—சிங்கிக்.

(ஆ) இன்னில மீதினிற் கன்னியர்க்குக் குறிசொல்வாள்
—செழுங்
கன்றை சிலைமதன் தன்னைக் கலவியில் வெல்வாள்
—மலர்
அன்ன நடையாள் பின்னற் சடையாள்
கன்னித் துடையாள் மின்னொத்த இடையாள்—
சிங்கிக்.

(இ) விந்தை மிகுந்து குவிந்து பரந்த முலையாள்—நல்ல
சுந்தர மாநுண் மருங்கிற் சந்திரகாவிக் கலையாள்
—நுதற்
சிந்துர நாரி பைந்தமிழ் வாரி,
தந்திரக் காரி மிகுந்தஒய் யாரி—சிங்கிக்.

(ஈ) விண்ணவர் கோன்மலர்க் கண்ணன் அயன்பணி
துய்யர்—புகழ்
மண்ணிப் படிக்கரைவாழ் நீலகண்டர் நாட்டய்யே
—தங்கக்
கிண்ண முலையாள் எண்ணெண் கலையாள்
பெண்ணுக்கு மிக்காள்என் கண்ணுக்குள் நிற்கிறாள்
—சிங்கிக்.

---

75. இங்கித வாணி-விரும்பத்தக்க கலைமகள் போன்றவள்; பங்கய வாணி - திருமகள் போன்றவள்; இந்திராணி-இந்திராணி போன்றவள்; வேணி-சடையினள்.

(அ) தாட்டிகம்-செருக்கு, வீறாப்பு; ஒயில்-ஒய்யாரம்; (ஆ) இன்னிலம் - இந்நிலம்; கன்னி-வாழைத் தண்டு; (இ) கலை-உடை; வாரி-கடல்.

## விருத்தம்

76. பங்கயத் தடஞ்சூழ் மண்ணிப் படிக்கரை நாதர்
நாட்டில்
அங்கசன் ரதியாம் சிங்கிக் கடையாளம் சொன்ன
சிங்கா
செங்கரும் பதமும் பாகு தேன்மொழிச் சிங்கி தன்னை
இங்கித மாகச் சொன்னால் என்னஉச் சிதம்நீ தாராய்.

## வசனம்

'அடே வாடா சிங்கா, உன்னுடைய சிங்கிக்குள்ள அடையாளம் சொன்ன தெல்லாம் உள்ளதே சரி; அந்தச் சிங்கி இருக்கிற இடம் சொன்னால் என்ன உச்சிதம் தருகிறுய் பிள்ளாய்.'

'என்னுடைய சிங்கி இருக்கிற இடம் சொன்னால் நல்ல நல்ல உச்சிதம் தருகிறேன் அய்யே.'

## தரு

77. உச்சிதம் தருவேனான் அய்யே—உனக்குநல்ல
உச்சிதம் தருவேனான் அய்யே
லச்சணமாம் பாண்டுமைந்தர் நாடோறும் பூசனைசெய்
—பஞ்
சாட்சரர் நீலகண்டர்தம் அன்புச் சோணாட்டில்—
உச்சிதம்.

(அ) காயசித்தி யாகு மூலிகை யுடனே—பர
காயப் பிரவேசம் செய்வகை மிகுந்து—மன
நேய மாக வாதம் செயும் பச்சிலையும்—மிக
மாயச் சொக்குப் பொடியும் பலபேயும்
வாய்க்கட்டும்—உச்சிதம்.

---

76. செங்கரும்பதம் - செங்கரும்புக் கட்டி ; உச்சிதம்-உயர்ந்த கொடை.

77. பஞ்சாட்சரம் - ஐந்தெழுத்து; அது 'நமசிவய'

(அ) காயசித்தி-உடலைத் திடமாக வைத்திருக்கும் மருந்து; பரகாயப் பிரவேசம்-கூடு விட்டுக் கூடுபாய்தல்; வாதம் செயும் பச்சிலை-வாக்கு வன்மையாக்கும் மருந்து; சொக்குப் பொடி-மயக்கும் பொடி.

(ஆ) குண்டுடன் அம்புகள் விலக்கும் ஒருநிமையில்
மண்டு புனல்கடக்க மருந்து தங்கச்
செண்டு முலை மாதர்மயல்கொண்டு வந்துசேர நல்ல
உண்டையும் பகலிலூடு கண்டிட மூலிகைபல—
உச்சிதம்.

(இ) வெட்டிய காயம் பொருதவும் வெம்புலியின்வாய்க்
கட்டுடன் அக்கினித் தம்பமும் கருத்துடன்
இட்டமாகிய அஞ்சனம் சட்ட புழுகுடன் பச்சை
வெட்டுச் சந்தனமும் கண்திட்டி மணிகள் பலவும்
—உச்சிதம்.

(ஈ) நண்ணு பசியில்லா திடவும் நற்புருசனைப்
பெண்ணாகச் செய்யவும் மூலிகையுயர்
மண்ணிப் படிக்கரைவளர் அண்ணல் திருநீலகண்டர்
பண்ணிறையும் நாட்டவரே, வண்ணமுலைச்
சிங்கியெங்கே—உச்சிதம்.

## விருத்தம்

78. பரிவுடன் அன்பர் போற்றும் படிக்கரை நாதர்
நாட்டில்
வருமதச் சிங்கா வேண்டும் வகைவகை உசிதம் தந்தாய்
பெருகுமெய்ப் பணிது லங்கப் பிடியனம் போல்ந டந்து
இருமுலை குலுங்கக் கொஞ்சி இந்தாவுன் சிங்கி
வந்தாள்.

## வசனம்

'அடா வாடா சிங்கா; நீ சொன்னபடிக்கு வேண்டிய உச்சித மெல்லாம் தந்தாயல்லோ; உன்னுடைய சிங்கி இந்தா வந்தாள், பாரும் பிள்ளாய்.'

---

(ஆ) குண்டு-கருமருந்துக் குண்டு; நிமை-இமைப்பொழுது; புனல் கடக்க-நீர்மேல் நடக்க; ஊடுகண்டிட-மறைத்து வைக்கப் பெற்றதை ஊடு துளைத்துக் காண; (இ) பொருத-பொருந்த, ஆற.

## ஏசல் தரு

**79.** இந்நேரம் என்னைவிட் டெங்கே நீபோனாய் சிங்கி—நான்
ஏற்கையாய் மாதர்கை பார்க்கப் போனேனடா சிங்கா.

(அ) உன்னைக்கா ணாமலே இந்நிலஞ் சுற்றினேன் சிங்கி—பசு
ஊரெங்கு மேய்ந்துடையானிடஞ் சேராதோ சிங்கா.

(ஆ) மெத்தப் பசப்பில் பிலுக்கிக் குலுக்குறாய் சிங்கி—என்றன்
வீறாப்புக் கண்டுனக் காறாமல் போச்சுதோ சிங்கா.

(இ) சந்தேகந் தோணு துன்ற னிடத்திற் சிங்கி—பாரில்
தன்னெஞ் சறியாமல் என்னபொய் தானுண்டு சிங்கா.

(ஈ) கையிற் கண்டதற்கு நெய்யிற்கை விடுவாரோ சிங்கி—ஏதும்
கண்ணிற் காணாமலே பெண்ணோரஞ் சொல்லாதே சிங்கா.

(உ) ஆனை கட்டிச் சுளகால் மறைக்கிறாய் சிங்கி—இந்த
ஆழமும் நீச்சும் அறிந்தது தானல்லவோ சிங்கா.

(ஊ) கொண்டையிற் சங்கம்பழங் கோத்து விட்டதார் சிங்கி—இளங்
கோதையர் மெச்சிக் கொடுத்த முத்துத் தொங்கல் சிங்கா.

(எ) நெற்றியி லேகரிப் பொட்டிட்ட தாரடி சிங்கி—இந்த
நீணிலத் திற்பெண்கள் தானிட்ட சவ்வாது சிங்கா.

(ஏ) காதி லுலக்கைப்பூண் கட்டி விட்டதார் சிங்கி—சில
கன்னியர்கள் தந்த பொன்னோலை தானடா சிங்கா.

(ஐ) மூக்கில் பல்லி முட்டை தூக்கி விட்டதார் சிங்கி—செய
மோகமின் னார்தந்த முத்துமூக் குத்திதான் சிங்கா.

---

79. ஏற்கை-இயற்கை.

(ஈ) 'நெய்யிற் கை விடுவார்'-குற்றம் சாட்டப் பெற்றோர் அக் குற்றம் செய்திலர் என்பதனை மெய்ப்பிக்கச் சுடு நெய்யிற் கைவிடல் என்னும் ஒரு வழக்குப் பற்றியது. பெண்ணோரம்-பெண்ணுக்குக் கேடுண்டாக ஒரு பக்கம் சார்ந்து சொல்லுதல்; 'மண்ணோரம் நின்று பெண்ணோரம் சொல்லாதே' என்பது பழமொழி. (ஊ) இதுமுதல் சிங்கி பெற்று வந்த அணிகலம் முதலியவற்றைப் புதிதாகக் கண்ட சிங்கன் வினாவும் சிங்கி விடையும்.

(ஐ) குண்டு மணியைக் கழுத்தில்கோத் திட்டதார் சிங்கி—நல்ல
கோதையர் தந்த பவளக் குடமணி சிங்கா.

(ஒ) கொங்கையிற் கொட்டாணி கோத்துக் கட்டினதார் சிங்கி—இக்
குவலயப் பெண்கள் கொடுத்த முலைக்கச்சு சிங்கா.

(ஓ) காவிக் கலைவந்த ஓவிய மேதடி சிங்கி—பாரில்
காதல்மின் னார்தந்த மாதுளம் பூப்பட்டுச் சிங்கா.

(ஔ) காலில்வெண் சுண்ணாம்புக் கோல மிட்டதார் சிங்கி—இளங்
கன்னியர் கள்தந்த பொன்னந்தைப் பாடகம் சிங்கா.

(க) மதிக்கப் பணிகள் கதிக்கக் கொடுத்ததார் சிங்கி—இந்த
வய்ய முள்ளோர் புகழ்மண்ணிப் படிக்கரை நாட்டில்

(கா) கதிக்கும் தமிழ்கள் துதிக்கும்திரு நீலகண்டர் மீது
காதல் மோகினி ஆதரவாய்க் குறிகேட்டு

(கி) ஒட்டியாணம் வச்சிரச் சுட்டிமுத் தட்டிகை பதக்கம் —மிகுந்
துச்சித மாகிப் பச்சிலைத் தொங்கல் பொற்கடையம்

(கீ) மெட்டி நவமணிக் கொத்துச் சரப்பணி முதலாய—உயர்
வீதி வன்னப் பட்டு மாதிரபாகச் சேலை ரவிக்கை

(கு) வெண்கலையுடன் ஆணிமுத் தளந்து கொடுத்தாள்—மன
மெய்ப்பா யுனக்குக் கறுப்புரு மாலைக் குல்லாவும்

(கூ) இங்கிதமாய்ப் பச்சைக் கொங்கணி கையரி வாளும்
இடைக்கேற்ற கருங்கச்சை நெற்றிப் பூசணம் பலவும்

---

(ஒ) கொட்டாணி-தேங்காய்க் கொட்டாங் கச்சி (சிரட்டை); குவலயம்-உலகம்; (ஔ) அந்தை-காலணி; அந்தைப் பாடகம் - காலணியாகிய பாடகம்; (க) பணிகள்-அணிகலங்கள்; கதிக்க-சிறப்பாக; வய்யம்-வையம் (உலகம்); (கா) 'தமிழ்கள்'-இயல், இசை, நாடகம் முக்கூறுகளை-யுடைமையின் தமிழ்கள் எனப் பன்மையால் கூறி னார்; (கீ) 'வீதி' 'சேலை' - இவை சேலை வகைகள். (கூ) கொங்கணி-ஓலைப் பாயால் செய் யப்பெற்ற மழை மறைகூடு.

(கெ) தந்தனள் சிந்தை யுகந்து மிகுந்திட வரிசை வாங்கிச்
சந்தோச மாகவே வந்தே னடாவெறிச் சிங்கா.

(கே) பாரி லுனக்கெதி ராரு மில்லையடி சிங்கி—அந்தப்
பட்ச மறியாமல் சர்ச்சைதான் செய்தாயே சிங்கா.

(கை) மெத்த வுனைச்சொன்ன குற்றம் பொறுத்தருள் சிங்கி—என்றன்
மீதில் எண்ணிய சந்தேகம் விடுத்தருள் சிங்கா.

(கொ) உன்றன் பேராசை தந்து மயக்குதே சிங்கி—மிகுந்
துச்சித மாகவே பட்சமாய்ச் சேருவை சிங்கா.

(கோ) வையம் புகழ்பாண்டு மைந்தர்கள் ஐவரும் பூசை—செய்யும்
மண்ணிப் படிக்கரை வாழும் திருநீல கண்டர்

(கௌ) பெய்யுங் கருணை பெருகிய சோழநன் னாட்டில்—மெத்தப்
பேறுடன் கூடியே வீறுடன் வாழ்வோம் சிங்கா.

(ச) இராமனும் சீதையும் சோமனும் ரோகணிபோலும்—சிலைக்
காமன் ரதிபோலும் நாமிருவோர் கூடி வாழ்வோம்.

(சா) மங்கள மாகவே மண்ணிப் படிக்கரை தன்னில்—நித்தம்
வாழ்திரு நீலகண்டேசர் திருவுளத் தாலே

(சி) தங்க வரைநிகர் கொங்கை குழையவே கூடி—மிகு
சிங்கார மாகத் தினம்தினம் வாழ்வோம் சீராய்.

---

(கெ) வெறி-காதல்.

(ச) சோமன்-திங்கள்; (சி) தங்க வரை-பொன்மலை.

## சோபனம்

**80.** சோபனம் சோபனமே

(அ) நற்றவர்கள் நாதருக்கு நல்லமங்கை பாகருக்குப்
பத்தர்பணி பாதருக்குச் சோபனம் சோபனமே.

(ஆ) வியாக்கிரபுர வாசருக்கு விளங்குசரு வேசருக்குப்
பாக்கியமிகு நேசருக்குச் சோபனம் சோபனமே.

(இ) பண்ணிசையுந் தமிழ்மூவர் பகரிசையி னொலிமீறும்
மண்ணிக்கரை நாதருக்குச் சோபனம் சோபனமே.

(ஈ) அங்கசனைக் காய்ந்தவர்க்கும் அமுதகர வல்லியெனும்
மங்கையொரு பங்கருக்கும் சோபனம் சோபனமே.

## மங்களம்

**81.** மங்களம் செயமங்களம்

(அ) கங்கையணி வேணியர்க்குக் கயிலாய வாசருக்கு
மங்கையொரு பாகருக்கு—மங்களம்.

(ஆ) காளியுடன் நடம்புரிந்த கங்காள ரூபருக்கு
வாளரவந் தரித்தவர்க்கு—மங்களம்.

(இ) திரமாகப் பாண்டவர்கள் பூசைசெயும் வியாக்ரபுரம்
வருநீல கண்டருக்கு—மங்களம்.

(ஈ) மருநீள் கொன்றைச் சடையார்க்கு—மங்களம்
மண்ணிப் படிக்கரை நாதருக்கு—மங்களம்

மண்ணிப்படிக்கரை நீலகண்டர் குறவஞ்சி ஆராய்ச்சி முன்னுரை, அருங்குறிப்புரை ஆகியவற்றுடன் முற்றும்.

---

81. சோபனம்-நன்மை, வாழ்த்து.

(ஆ) வியாக்கிரபுரம் - புலியூர், சிதம்பரம். ஆனால் இவண் மண்ணிப்படிக்கரை என்பது—'மங்களப் பாடலால்' அறியப் பெறும். (ஈ) அங்கசன்- மன்மதன்.

(ஆ) கங்காளரூபர் - என்பணிந்த வடிவினர்; வாள்அரவம்-ஒளியுடைய பாம்பு.

## வாழ்த்து

நலமுயரும் படிக்கரை நாயகர் அருளால்வைத்ய
நாதன் வாழி!

குலவுபுகழ்த் தேரழுந்தூர் ஏயர்கோன் கோத்திரம்
வாழி வாழி!

புலமுயரும் அழகப்பன் அறுமுகன்சுப் பிரமணியன்
என்றும் வாழி

தலமுயரும் மயிலேறு பெருமாள்வே லாயுதம்
வாழி வாழி.*

---

*உதிரி ஏடொன்றில் கண்ட வாழ்த்து இது. இந் நூலாசிரியர் ஏயர்கோன் கலிக்காமர் நாயனாரை முன்னும் புகழ்ந்துள்ளார் (10). இவரைப் புரந்தவர்கள் வைத்தியநாதன் அழகப்பன் முதலியவர்கள் ஆகலாம்.

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி

## [எண் - செய்யுளெண்]


| | | | |
|---|---|---|---|
| அட்டதிக் | 11 | சீர்பெறு | 30 |
| அண்டர்பதி | 52 | சீருயர் | 25 |
| அதிரூப | 48 | செங்கமல | 56 |
| அமுதகர | 7 | சொன்னலம் | 59 |
| அருள்சேர் | 60 | சோபனம் | 80 |
| அன்னமே கேளடி | 51 | ஞாயமல்ல | 23 |
| அன்னமே கேளென் | 55 | தரணியுளோர் | 13 |
| இங்கிதப்பாங்கி | 26 | தருமன் முதல் | 3 |
| இந்நேரம் | 79 | திருமரு | 58 |
| இலகிளம் | 72 | திருவளரு | 6 |
| இழைவகிர்ந்த | 46 | திரையெறியும் | 5 |
| உக்கிரமாய் | 70 | துங்க நீடு | 67 |
| உச்சிதம் | 77 | தேசமே | 35 |
| உதிக்கின்ற | 44 | தேடி | 73 |
| ஒண்டொடியே | 45 | தேடுவோம் | 71 |
| கங்கை நதி | 66 | நிலமீதில் | 18 |
| கதிர்மணி | 12 | நீடுங்குறி | 65 |
| கந்தமலர் | 16 | நீதிசேர் | 28 |
| கந்தமிழு | 27 | நேசப்ரகாச | 43 |
| கரும்பைச் | 19 | நேரிமலை | 47 |
| கன்னல்கனி | 54 | பங்கபயத் | 76 |
| கனமுலைத் | 50 | பதிமீது | 74 |
| கெம்பாற | 69 | பரசணியும் | 9 |
| சரணு | 31 | பரிவுடன் | 78 |
| சாதிநல்ல | 38 | பன்னுதமிழ் | 29 |
| சிங்கிக் கடையாளம் | 72 | பாண்டவர்கள் | 8 |
| சீதளச்சந் | 37 | புகழ்பெறும் | 10 |
| சீர்கொண்ட | 1 | புகழ்மேவு | 2 |

| | |
|---|---|
| பைந்தமிழ் | 20 |
| பொங்குபாற் | 17 |
| பொன்பரவு | 63 |
| மங்களம் | 82 |
| மங்கையரே | 49 |
| மங்கையரே உந்தம்மன | 64 |
| மங்கையே | 62 |
| மதிதமிழ் | 61 |
| மருமலர்ச | 21 |
| மலைக்குர | 34 |
| மன்றல் சேர் | 22 |
| மாதமிர்த | 39 |
| மாதவர்கள் | 4 |
| மின்னரசே | 57 |
| முதுமறையின் | 24 |
| மெத்தக்கற்ற | 53 |
| மெய்யாக | 42 |
| மேயிது | 68 |
| மையல் | 15 |
| வஞ்சியே | 40 |
| வஞ்சி வந்தாள் | 32 |
| வஞ்சி வந்தாளய்யா | 33 |
| வாசலிது | 36 |
| விரகமோகினி | 14 |
| வீறுபெற | 41 |